
நீக்கமற
நிறைந்தவளே
சுபஸ்ரீ கிருஷ்ணவேணி
நீக்கமற நிறைந்தவளே ★ சுபஸ்ரீ கிருஷ்ணவேணி
நீக்கமற
நிறைந்தவளே
சுபஸ்ரீ கிருஷ்ணவேணி
முதல்தரமான குடும்ப நாவல்

# முன்னுரை

அன்பு வாசக நெஞ்சங்களுக்கு,

வணக்கம்!

எங்களின் அடுத்த படைப்பான, 'நீக்கமற நிறைந்தவளே!' மூலம் உங்களை மீண்டும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி!

எங்களுடைய எழுத்திற்கு உற்சாகமும், வரவேற்பும், ஆக்கப் பூர்வமான கருத்தும் அளிக்கும் அத்தனை அன்பான வாசகர்களுக்கும், எங்களின் குடும்பத்தார்க்கும், நண்பர்களுக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றிகள்.

அமெரிக்க பின்னணியில் கதை எழுதும்படி எங்களுக்கு அன்பு கோரிக்கை வைத்த எங்கள் தோழி ஆர்த்திக்கு நன்றி.

உங்களது கருத்துகளையும், விமர்சனங்களையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். எங்களது மின்னஞ்சல் skv.sriveni@gmail.com

எங்களுக்கு மேன்மேலும் ஊக்கமும் உற்சாகமும் அளித்து வரும் அருணோதயம் அருணன் ஐயா அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக!

என்றும் அன்புடன்,

சுபஸ்ரீ-கிருஷ்ணவேணி

# நீக்கமற நிறைந்தவளே!

## 1



ஆத்திச்சூடி இளம்பிறை அணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியன்
கருநிறங் கொண்டு பாற்கடல்மிசைக் கிடப்போன்
முகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப் பல மதத்தினர்
உருவகத்தாலே உணர்ந்து உணராது
பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே அதனியல் ஒளியுறும் அறிவாம்
அதனிலே கண்டார் அல்லலை அகற்றினார்
அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவாம்

பாரதியாரின் கவிதைத் தொகுப்பிலிருந்த வாழ்த்துப் பாடலை ரசித்துக் கொண்டிருந்த ரிஷிவர்மனின் முகம்

மலர்ந்ததோடு, அக்கவிதையை உடனே ராதிகாவிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலும் அவனுக்குப் பிறந்தது.

ராதிகா என்ற பெயரை நினைக்கும்போதே அவனுக்கு எப்பொழுதும் உற்சாகம் தான்! அவனது வாழ்க்கைக்கு வசந்தம் சேர்க்க வந்தவள் அவள்.

அதுவும் குடும்பம் என்ற ஒன்றையே வெறுத்துப் போய்விட்ட நிலையிலிருந்தவனை அன்பு எனும் அஸ்திரத்தை மட்டுமே கொண்டு அந்நிலையிலிருந்து மீட்டவள்.

அவர்களுக்குத் திருமணமாகி இன்னமும் ஒரு மாதம் கூட பூர்த்தியடையவில்லை என்றாலும், 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என்பது போன்று ஒரு யுகம் முழுவதும் காண்பிக்க வேண்டிய நேசம் மொத்தத் தையும், ராதிகா - ரிஷி இருவரும் ஒருவர் மீது மற் றொருவர் பொழிந்து கொண்டிருந்தனர்.

வாரத்தில் உள்ள ஏழு நாட்களில் மற்ற தினங்கள் சதா வேலை, வேலை என்று காலில் சக்கரத்தைக் கட்டிக் கொண்டு சுழன்று வருபவன், ஞாயிறன்று மட்டும் தனிப்பட்ட பொழுதுபோக்கு மற்றும் நண்பர்கள் என்று நேரத்தைச் செலவிட்டாலும், அந்நாளில் பெரும்பான்மை யான நேரம் தன் மனைவி ராதிகாவுடன் மட்டும் கழிக்க விரும்புவான்.

குளியலறைக் கதவு திறக்கும் ஓசைக் கேட்ட போதும் கையிலிருந்த புத்தகத்திலிருந்து பார்வையை விலக் காமல் அவன் வீற்றிருக்க, ''அவ்வளவு மும்முரமா என்ன படிக்கிறீங்க, ரிஷி?'' என்று தன் ஈர கூந்தலைத் துவட்டியபடியே ஆர்வமுடன் வினவினாள் ராதிகா.



''அங்கே புத்தக அலமாரியிலிருந்த பாரதியார் கவிதைத் தொகுப்பு எடுத்து படிக்க ஆரம்பிச்சேன். ரதி. ஐ அம் லைகிங் இட் சோ மச்'' என்று மனநிறைவுடன் அவன் சொல்லி முடிக்கும் பொழுது, அவனது தலையில் வலிக்காமல் செல்லமாக குட்டு ஒன்றை வைத்திருந்தாள் அவனது மனைவி.

அதற்கான காரணம் புரிந்தவனாக, ''ஊப்ஸ்! சாரி! சாரி! டக்குன்னு இங்கிலீஷ் தான் வருது. எனக்கு ரொம்ப பிடிச்சிருக்குன்னு சொல்லியிருக்கணும். இல்ல, ரதி?'' என சற்று முன் ஆங்கிலத்தில் சொன்ன வரிக்கான தமி ழாக்கத்தைக் கொடுத்து திருத்தமும் செய்து கொண்டான்.

''உங்கள் தேச மொழி அடிக்கடி வர்றதில் எந்தத் தவறுமில்லை ரிஷி. இப்போ ஒரு வருஷமா தானே நீங்க தமிழ் சரளமா பேச, எழுத, படிக்க கத்துக்கறதில் தீவிரமா இருக்கீங்க? பாருங்க... பாரதியார் கவிதையெல்லாம் தானா வாசிக்கறீங்க; அதன் அர்த்தம் புரிஞ்சு ரசிக்க றீங்க!'' என்று அவனைச் சிலாகித்தவள், பாராட்டும் வித மாக கணவனின் கன்னத்தில் மென்மையாகத் தட்டிக் கொடுத்தாள்.

அவளது மிருதுவான உள்ளங்கையைத் தன் கன்னத் தில் வைத்து அழுத்திக் கொண்டவன் சில கணங்கள் மனைவியையே இமைக்காமல் ரசித்தான்.

கணவனின் கன்னத்தில் வளர்ந்திருந்த இரண்டு நாட்கள் தாடியின் சொரசொரப்பு அவளுக்கு ஒருவித குறு குறுப்பை ஏற்படுத்தினாலும் அது அவளது உள்ளத்திற்கு பிடித்தமானதாகவே இருந்தது.

ராதிகாவின் அக அழகை புரிந்ததினாலோ என்னவோ, எப்பொழுதுமே அவனுடைய கண்களுக்கு அவள் பேரழகியாகத் தான் தெரிவாள்.

சில சமயங்களில் விளையாட்டாக அவளிடமே, ''நீ அழகா இருப்பதனால் நான் உன்னைக் காதலிக்கி றேனா? நான் காதலிப்பதால் நீ அழகா இருக்கியா?'' என வம்பு செய்வான்.

அவனது ஆசை மனைவியும் சிரித்தபடியே, ''எதுக்கு இந்த ஐஸ் வைக்கறீங்க?'' என்று அழகு காட்டினாலும், அவளது வலப்பக்கம் நெற்றியோரமிருக்கும் சின்ன தழும்பைக் கூட ஆசையுடன் ரசிப்பான் ரிஷிவர்மன்.

ஈரப்பதத்துடனிருந்த அவளது கூந்தலைக் கைகளைக் கொண்டு அலைந்தபடியே, ''அந்தப் பாராட்டெல்லாம் உன்னைத் தான் சேரணும், ரதி. மொழி தெரியாமல் தட்டுத் தடுமாறிப் பேசிட்டு இருந்த எனக்கு, தமிழை அடிப்படையிலிருந்து சொல்லிக் கொடுத்ததே நீ தானே?'' என்றான் ஆத்மார்த்தமாக.

ஒரு வருடத்திற்கு முன்பு அமெரிக்காவிலிருக்கும் தன் குடும்பத்தை விட்டு வெளியேறி, இந்தத் தேசத்திற்கு வந்த பொழுது பழக்கப்படாத வாழ்க்கைச் சூழல், புது மனிதர்கள், நெருங்கிய நண்பன் யக்னேஷோடு கூட்டுச் சேர்ந்து முதலீடு செய்து தொடங்கப்பட்ட தொழிலின் வளர்ச்சி மற்றும் இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தது போன்று சரளமாகப் பேச வராத தமிழ் மொழி எனத் திண்டாடிப் போனான் அவன்.

ஆனாலும் அவனது மனதில் எல்லாவற்றையும் சமா ளித்து மீண்டு விடலாம் என்ற மலையளவு நம்பிக்கை!

அந்த நம்பிக்கை தானோ என்னவோ அவனது வாழ்க் கையின் கசப்பானப் பக்கங்களை அசைப்போட வைக் காமல் வருங்காலத்தை சுவாரஸ்யத்துடன் எதிர்நோக்க வைத்தது.



அதனாலேயே ஒரு சின்னக் குழந்தைக்கு இருக்கும் ஆர்வத்தைப் போன்று புது விஷயங்கள் அனைத்தை யுமே ஆர்வமுடன் கற்றுக் கொண்டான்.

அப்படி புது விஷயங்களைக் கற்றுக் கொள்ளும் தேட லில், பழைய வாழ்க்கையை ஒதுக்கவும் முயன்றான்.

நியூஜெர்ஸியில் அமைந்திருக்கும் புகழ்பெற்ற உண வகத்தின் முதன்மை சமையற்கலை வல்லுனராகப் பணியாற்றியவன் ரிஷிவர்மன்.

அமெரிக்கன், இந்தியன், மெக்ஸிகன், ஏஷியன், கிரேக்க மற்றும் இத்தாலியன் என்று உலக சமையல்கள் அனைத்தும் அவனுக்கு அத்துப்படி.

ஆனால் அவன் சென்னைக்கு வந்த பிறகுதான், இந்திய உணவு வகைகளில் வட இந்திய சமையல், தென் னிந்திய சமையல் தவிர ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்துவம் வாய்ந்த பிராந்திய சமையல்களைப் பற்றியே அவனுக்குத் தெரிய வந்தது.

உணவகங்களில் அரிதாகக் கிடைக்கும் தென்னிந்திய பாரம்பரிய உணவு வகைகளைப் பற்றி வாடிக்கையாளர் ஒருவர் மூலம் கேள்விப்பட்டவன், அந்த உணவு வகை களின் செய்முறைகளைக் கற்றுக் கொள்வதற்காக முயற்சி மேற்கொண்டபோது அவனுக்கு அறிமுகமானதுதான், 'கல்யாண சமையல் மெஸ்.'

பாட்டி மரகதமும், பேத்தி ராதிகாவும் இணைந்து பொறுப்பேற்று நடத்துவது இந்த மெஸ்.

ராதிகாவின் தாய் சிறு வயதிலேயே உடல்நலக் குறைவால் இறந்துவிட, அவளது தந்தை ராஜசேகர் தான் ராதிகாவிற்குத் தாயுமானவனாக இருந்து அவளை வளர்த்து வந்தார்.

ஆனால் உற்றார் உறவினர்களோ தனியாளாகப் பெண் குழந்தையை வளர்ப்பதிலுள்ள நடைமுறை சிரமங் களைச் சொல்லவும், சொந்த ஊரில் யாரும் ஆதரவற் றிருந்த ஒன்றுவிட்ட சித்தி மரகதத்தைத் துணைக்கு தன்னுடனேயே வரவழைத்துக் கொண்டார்.

மரகதமும் ராஜசேகரைத் தன் சொந்த மகனாகவும், ராதிகாவை மகன் வழி பேத்தியாகவும் ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு உறுதுணையாக இருந்ததோடு ஒரு குடும்பமாகவே மூவரும் வாழ்ந்து வந்தார்கள்.

தனக்குக் கீழே பத்து ஆட்களை வைத்துக் கொண்டு கல்யாண மற்றும் விசேஷ வீடுகளுக்கு சமையல் செய்து கொடுத்து வருமானம் ஈட்டி வந்தார் ராஜசேகர்.

நாளடைவில் தங்களின் வசதிக்காக வாடிக்கையாளர்கள் பலர் கல்யாண வீடுகளின் சமையல் பொறுப்பை மொத்த மாக காண்ட்ராக்டர்களின் பொறுப்பில் விட்டுவிட, ராஜசேகரும் கல்யாண காண்ட்ராக்ட் எடுத்து தொழிலை விரிவுபடுத்த எண்ணி அதன் முயற்சிகளில் இறங்கினார்.

சென்னையின் விரிவாக்கத்தில் அவர்களிருந்த போரூர் பகுதியும் நன்கு வளர்ச்சியடைந்திருக்க, அவ ருக்கு காண்ட்ராக்ட் வாய்ப்புகளும் அதிகமாகவே கிடைத்து, நல்ல நிலைக்கு முன்னேறிக் கொண்டிருந்தபோது ராஜ சேகரின் ஆயுட்காலமும் முடிவுக்கு வந்தது.

அந்தக் குடும்பத்தின் ஆணிவேராய் இருந்த ராஜசேகர் மறைந்ததும் காண்ட்ராக்ட் வேலையைத் தொடராமல் அதே பகுதியிலேயே, 'கல்யாண சமையல் மெஸ்' ஒன்றைத் தொடங்கி கடந்த மூன்று வருடங்களாக மரகதமும், ராதிகாவும் திறம்பட நடத்தி வருகிறார்கள்.



மற்ற உணவகத்தில் கிடைப்பது போன்ற வழக்கமான உணவுகளையே வாடிக்கையாளர்களுக்கு அளிக்காமல், வாரத்தில் ஐந்து நாட்களும் ஒவ்வொரு மாவட்ட பாரம் பரிய உணவுகளைத் தயாரித்து வழங்க, மக்களிடையே அதற்கு பெரும் வரவேற்பும் கிடைக்கப் பெற்றது.

இந்த மெஸ்ஸை தங்கள் சக்திக்கு உட்பட்டு சிறிய அளவில் நடத்துவதால் முதல் இருநூறு வாடிக்கை யாளர்களுக்கு மட்டுமே பிரத்யேக உணவை வழங்கு வார்கள்.

குறைந்த விலை, நிறைந்த தரம் இவற்றுடன் முதல் இருநூறு வாடிக்கையாளர்களுக்கு மட்டும் தான் சிறப்பு உணவு வகைகள் எனும்போது இந்த மெஸ் தயாரிக்கும் உணவுகளுக்கான தேவை அதிகரித்தது.

குறிப்பிட்ட நேரத்திற்குள், 'நான், நீ என்று போட்டிப் போட்டுக் கொண்டு இருநூறு டோக்கன்களும் காலி யாகிவிட, அதற்கு மேல் பிந்தி வரும் வாடிக்கையாளர் களுக்கு கலவை சாதம் மட்டும்தான்.

தந்தையுடன் வேலை பார்த்தவர்களில் மூன்று பேரை அந்த மெஸ்ஸில் உதவிக்காக வேலைக்கு அமர்த்தி யிருந்தார்கள். மற்றபடி மூன்று பெண்கள் வீட்டோடு தங்கி வேலைப் பார்த்தனர்.

பாட்டியின் வளர்ப்பில் வளர்ந்ததினாலோ என்னவோ ராதிகாவின் உலகம் பள்ளி, கல்லூரி மற்றும் வீடு என்று குறுகியதாகவே இருந்தது.

கல்லூரியிலிருந்து ஐந்து நிமிடங்கள் தாமதமாக வந் தாலே வாசலுக்கு வந்து பேத்திக்காக காத்திருந்து தவ மிருப்பார் மரகதம்.

ராதிகா இரண்டாம் ஆண்டு 'நியூட்ரீஷியன் அண்ட் டயடிக்ஸ்' பயிலும் காலக் கட்டத்தில் ராஜசேகரின் மரணம் ஏற்பட்டிருக்க, அதனைத் தொடர்ந்த மூன்று வருடங்களும் முன்பிருந்ததை விட கூடுதல் பொறுப்பு மற்றும் கவனத்துடன் பேத்தியைப் பார்த்துக் கொண்டார் மரகதம்.

அத்தோடு ராதிகாவும் வெளியே பழக்கமில்லாத இடங்களுக்குத் தனியாகச் செல்ல விரும்புவதில்லை.

ரிஷிவர்மன் சில பாரம்பரிய உணவு முறைகளின் செய்முறையைப் பற்றி மரகதத்திடம் கேட்டு அறிந்து கொள்வதற்காக மெஸ் பக்கம் வந்து செல்ல, ராதிகா - ரிஷி இருவருக்குமான அறிமுகம் நடந்தது.

தொடக்கத்தில் மரகதம் - ரிஷிவர்மன் இருவருக்கு மான சம்பாஷணையை மொழி பெயர்க்கும் வேலையை ஏற்ற ராதிகா, நாளடைவில் ரிஷிவர்மனுக்கு தமிழ் மொழியைக் கற்பிக்கும் ஆசானாகவும் மாறினாள்.

இப்பொழுது ரிஷியும் அதைத்தான் குறிப்பிட்டு பேச, ''அடடா! விட்டால் இன்றைக்கு முழுக்க நாம ரெண்டு பேரும் ஒருத்தரையொருத்தர் பாராட்டிகிட்டே இருப் போம் போல?'' என்று அவள் சொல்லி முடிக்கும் போதே ரிஷிவர்மனின் அலைபேசி ஒலித்தது.

திரையில் ஒளிர்ந்த வெளிநாட்டு எண்ணைப் பார்த் ததும் அவனது முகம் பூவாய் மலர, ''ஹாய், தருண்!'' என அழைப்பையெடுத்தான்.

நண்பர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் குசலம் விசாரித்து முடித்ததும், ''ஸ்கைப்பில் பேசலாமா, ரிஷி?'' என கணினி வாயிலான உரையாடலுக்கு வரச் சொன் னான் தருண்.



ரிஷி, ''நெட் கனெக்ட் ஆகுதான்னு தெரியலை. ஏதாவது பிரச்னையிருந்தால் மறுபடியும் நானே உன் செல்லுக்குக் கூப்பிடறேன். யக்னேஷ் இன்றைக்கு வெளியே போறதா சொன்னான். அதனாலே அவன் வர மாட்டான்'' என்ற விவரங்களைச் சொல்லிவிட்டு அழைப்பைத் துண்டித்தான்.

ரிஷிவர்மன், தருண் மற்றும் யக்னேஷ் மூவரும் சிறுவயதிலிருந்தே நெருங்கிய தோழர்கள்.

மூவருக்கும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான ரசனை என்பதாலேயே, மூவரும் ஹோட்டல் சார்ந்த தொழிலில் தான் விருப்பமாய் இருந்தனர். ஆனால் மூவரும் வெவ்வேறு பிரிவுகளில் சிறந்து விளங்கினர்.

ரிஷிவர்மன் சமையல் கலையில் நிபுணத்துவம் பெற்றிருந்தவன் என்றால், தருண் ஹோட்டல் நிர்வாகம் செய்யும் பொறுப்பில் சிறந்து விளங்குபவன். யக்னேஷ் ஹோட்டல் மேலாண்மை மற்றும் வர்த்தகத் துறையில் வெற்றியை நிலை நாட்டுபவன்.

ரிஷிவர்மனும், யக்னேஷும் கூட்டாகச் சேர்ந்து சென்னையில் பன்னாட்டு உணவகத்தின் franchise எடுத்து சென்னையில் லாபகரமாக நடத்தி வருகிறார்கள்.

அந்த உணவகத்தின் பெரும்பான்மையான முதலீடு ரிஷிவர்மனின் தரப்பிலிருந்து வந்திருந்தாலும் அதன் மேலாண்மை பொறுப்பையேற்று நடத்தும் பங்குதார ராக யக்னேஷ் விளங்கினான்.

நண்பர்களிருவரும் முதலீட்டுக்கேற்ப மாதாந்திர லாப தொகையைப் பிரித்தெடுத்துக் கொண்டனர்.

மூவரும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது இணைய தளம், தொலைதொடர்பு மூலம் உரையாடுவது

வழக்கமான ஒன்று. ஆனால் அவர்களது உரையாடலில் தப்பித் தவறிக் கூட தமிழ் சொல் இடம் பெறாது.

தனக்கான வேலைகளை செய்வதில் ராதிகா ஈடுபட்டிருக்க, மடிகணினியை உயிர்ப்பித்து ஸ்கைப் மூலம் அமெரிக்காவிலிருக்கும் நண்பன் தருணை தொடர்பு கொண்டான் ரிஷிவர்மன்.

''என்னடா புது மாப்பிள்ளை! இன்றைக்கு உன்னைப் பிடிக்க முடியாது... ஹனிமூன் எங்கேயாவது போய் இருப்பேன்னு நினைச்சுட்டு இருந்தேன். அதிசயமா ஒய்வா இருக்கே?''

''ம். அந்த ப்ளான் எல்லாம் இருக்குடா. ஆனால் அதைவிட முக்கியமா ராதிகாவுக்கு பாஸ்போர்ட், விசா எல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டியதா இருந்தது. அந்த வேலையெல்லாம் ரெண்டு நாளுக்கு முன்னாடி தான் முடிஞ்சது'' என்ற விளக்கம் சொன்ன ரிஷி.

''அதுவரையில் சென்னையில் தான் எங்களுக்கு ஹனிமூன்...'' எனச் சொல்லி குறும்பான புன்னகையொன்றை சிந்தினான்.

''நான் அங்கே கல்யாணத்திற்கு வந்த போதே பாஸ் போர்ட், விசா எல்லாம் ஏற்பாடு செய்தாச்சுன்னு சொன்னியேடா?''

''கல்யாணத்திற்கு முன்னாடியே பாஸ்போர்ட் அப்ளை செய்தாச்சு, தருண். கல்யாணத்திற்கு அப்புறம் தான் ராதிகாவிற்கு விசா இன்டர்வ்யூ இருந்தது. அதற்கான டாகுமென்ட்ஸ் எல்லாம் ஏற்பாடு செய்து முடிச்சோம்.''

''ரிஷி! நான் கேட்கணும்னே இருந்தேன். ராதிகாவுக்கு எதுக்கு விசா எடுக்கறே? நீ அமெரிக்க குடிமகன் என்றால் அவங்களுக்கு விசா தேவையில்லை. இல்ல? நேரடியா க்ரீன் கார்ட் அப்ளை செய்ய வேண்டியது தானே?'' அமெரிக்க வழக்கு மொழி ஆங்கிலத்தில் கேள்வியெழுப்பினான் தருண்.

க்ரீன் கார்ட் என்பது அமெரிக்காவில் நிரந்தரமாக தங்குவதற்கான அரசாங்க அனுமதி.

''ய்யா! செய்யணும்டா. ஆனால் அதற்குக் கொஞ்சம் டைம் எடுக்குமில்ல? அதற்குள் அமெரிக்காவிற்கு வர வேண்டிய சூழல் இருந்தால் பாஸ்போர்ட், விசா எல்லாம் இருக்கணுமே, தருண்? கல்யாணத்திற்கு முன்னாடி என்றால் ஃபியான்ஸி விசா எடுக்கலாம். ராதிகாவுக்கு கல்யாணத்துக்கு அப்புறம் தான் விசா இன்டர்வியூவே வந்தது. அதனால் அவளுக்கு டூரிஸ்ட் விசா தான் அப்ளை செய்து எடுத்தோம்.''

''நல்லது தான்டா. எப்படியும் க்ரீன் கார்ட் வந்துட்டால் விசா தேவையிருக்காதே! அவசர ஆத்திரத்துக்கு வரணும்னா டூரிஸ்ட் விசா போதும்'' என நண்பனின் சமயோசித யோசனைக்குப் பாராட்டு தெரிவித்தான் தருண்.

''ம். எஸ். அதனால் தான். அப்புறம் சொல்லு, தருண்! நீ வேலைப் பார்க்கிற ஸ்தாபனம் மூலமா ஏதோ க்ரூஸ் அஸைன்மென்ட் வந்தாலும் வரும்னு சொல்லிட்டு இருந்தே, இல்ல? என்னாச்சு?''

''வரும், ரிஷி! காத்திட்டு இருக்கேன். பாஸிடிவ்வா வந்தால் இன்னமும் ஒரு மாசத்தில் கிளம்ப வேண்டியதாயிருக்கும். உனக்குக் கட்டாயம் சொல்றேன்'' என மகிழ்வுடனே நண்பனிடத்தில் பகிர்ந்தான்.

மேலும் சில நிமிடங்கள் வெப்காமில் ரிஷியை மட்டுமே பார்த்து உரையாடிக் கொண்டிருந்தவன்,

''ராதிகா எப்படியிருக்காங்க? எங்கே ஆளைக் காணோம்?'' என விசாரித்தான்.

''உள்ளே ஏதோ வேலையா இருக்க மாதிரியிருக்கு. என்ன விஷயம்? என்கிட்டே சொல்ல மாட்டியா?''

''உன்னைப் பற்றி ஏதாவது ராதிகாவிடம் போட்டுக் கொடுக்கலாம்னு பார்த்தேன்'' என்றவனை அவநம்பிக்கையுடன் ரிஷி பார்வையிட, அதற்கு மேல் மழுப்ப விரும்பாமல் சற்று மெல்லிய குரலில், ''எப்போ இங்கே நியூஜெர்ஸிக்கு வர்றீங்கன்னு கேட்கலாம்னு...'' என இழுத்தான்.

அந்தப் பேச்சு பிடிக்காமல், ''ஏன்டா இப்போ உனக்கு இந்தக் கேள்வி? நான் நிம்மதியா இருக்கிறது பிடிக்கலையா? இதுக்காக தான ராதிகாவோட பாஸ்போர்ட், விசா என்று விசாரிச்சியா?'' என்று ரிஷி குரலை உயர்த்த, உள்ளறையில் போட்டது போட்டபடி விட்டு விட்டு துரிதமாக வெளியே வந்து கணவனைப் பார்த்தாள் ராதிகா.

ரிஷியின் ஆக்ரோஷமான முகத்தைக் கண்ட ராதிகாவின் முகம் பதட்டத்தில் வெளிறத் தொடங்க, கணினியில் தருண் பேசிய வார்த்தைகள் தெளிவாக அவளது காதுகளை எட்டியது.

''இதுக்காக தான்... இதுக்காக தான் உன்னிடம் சொல்லாமல் தவிர்த்தேன். கோபப்படாதே, ரிஷி! என்ன தான் மனக்கசப்பா இருந்தாலும் அப்பா, அம்மா, தம்பி... என்று இந்த உறவெல்லாம் இல்லாமல் போயிடுமா? அவங்களைப் பார்க்கவே கஷ்டமா இருக்கு'' வேதனையுடன் நண்பனுக்குப் புரிய வைக்க விளக்கினான்.



தருண் சொன்ன கடைசி வரியை மட்டும் பிடித்துக் கொண்ட ரிஷி, ''நீ அங்கே போய் பார்க்காதேன்னு சொல்லியிருக்கேனா இல்லையா? நான் சொன்னதையும் மீறி நீ போயிருக்கே, இல்ல?'' என்று பல்லைக் கடித்தான்.

''நிறுத்துடா. என்கிட்டே பிரச்சனை பண்ணாதே! நான் சொல்றதைக் கொஞ்சம் கேளு! போன வாரம் நம்ம ஷர்மா வீட்டில் நடந்த பார்ட்டியில் உங்க அப்பா, அம்மாவைப் பார்த்தேன். ஆள் பார்க்கவே எப்படி ஒடிஞ்சு போயிட்டாங்க தெரியுமா? உன்னைப் பற்றிக் கூட கேட்டாங்க...''

வேண்டா வெறுப்பாக, ''இதென்ன புது விஷயமா, தருண்? அவங்க தான் உனக்கும், யக்னேஷுக்கும் மாறி மாறி போன் செய்துட்டு தானே இருக்காங்க?'' என அலுப்புடன் சலித்துக் கொண்டான்.

''திருப்பித் திருப்பி ஒரே கேள்வியைக் கேட்கிறாங்க என்றால் உங்க அம்மா, அப்பாக்கு நாங்க சொல்றது மேல் நம்பிக்கையில்லைன்னு அர்த்தம்!''

''அப்புறம் இன்னொரு விஷயம். அவங்க என்னுடைய அம்மா கிடையாது, தருண். அவங்க கேட்கும்போது நீ என்ன சொன்னே?''

''இதென்ன கேள்வி?'' எனப் பொரிந்தவன், ''உன்னைப் பற்றி தான் அவங்களிடம் ஒன்றும் சொல்லக் கூடாதுன்னு சொல்லியிருக்கியே? அப்புறம் என்ன? எதுவுமே சொல்லாமல் மௌனமா தான் இருந்தேன்'' என்று கடுப்படித்தான்.

''.........''

''எந்தப் பிரச்சனையா இருந்தாலும் பேசி தீர்த்துக் கலாமே, ரிஷி?''

''.........''

''நீ அவங்களிடம் பேச வேண்டாம்; நீ எங்கேயிருக் கேன்னு கூடச் சொல்ல வேண்டாம்; ஆனால் உன் கல் யாண போட்டோஸ் அவங்களுக்கு அனுப்பி வைக்க லாம் இல்லையா? நீ நல்லாயிருக்கன்னு தெரிஞ்சால் கூட சந்தோஷப்படுவாங்கடா'' என யோசனை தந்தான்.

''நாம பேசறதுக்கு வேறே ஏதாவது இருக்கா?''

''ஒன்று சொல்லட்டுமா? யூ.எஸ்-க்கு ராதிகாவை அழைச்சுட்டு வந்து இங்கே எல்லாருக்கும் காண்பிக்கணும் என்று உனக்கு உள்ளூர ஆசையிருக்க தான் செய்யுது. நீ என்ன மறுத்தாலும் உண்மை இது தான். அப்படியில் லாட்டி நீ எதுக்குடா இத்தனை வேக வேகமா ராதிகா வுக்கு பாஸ்போர்ட், டூரிஸ்ட் விசா எல்லாம் ஏற்பாடு செய்து வைச்சிருக்கே? க்ரீன் கார்ட் வரும்போது வரட்டும்னு பொறுமையா இருக்க வேண்டியதுதானே?'' என நண் பனை மடக்கினான்.

கசப்பான புன்னகை ஒன்றை உதிர்த்தவன், ''ஓ! நீ அப்படி நினைச்சால் நான் எதுவும் செய்ய முடியாது. ஆனால் என் மனைவிக்கு எதுக்காக வேக வேகமா இதெல்லாம் ஏற்பாடு செய்தேன்னு எனக்குத் தெரியும். வக்கீல்கிட்டே க்ரீன் கார்ட் பற்றி பேசினேன். அவர் தான் ஆலோசனை சொன்னார். 'க்ரீன் கார்ட் ப்ராசஸ் பண் ணும்போது மெடிக்கல் செக் அப் செய்றதுக்கு சில சம யங்களில் இன்டர்நேஷனல் மெடிக்கல் ரிப்போர்ட்ஸ்-ஐ ஏற்றுக்காமல் நேரில் வர சொல்லுவாங்க. பார்த்துக் கோங்க'ன்னு சொன்னார். இதைத் தவிர எந்த ஆசையும்



என் மனசில் இல்லை தருண்!'' என்றான் திட்டவட்ட மாக.

மேலும் சில கணங்கள் ரிஷி எதுவும் பேசாமல் அமைதியாகவே இருக்கவும், இதற்கு மேல் அவனிடம் பேசிப் பயனில்லை என்பது தருணுக்கு தெள்ளத் தெளி வாகப் புரிந்தது.

அம்மா - அப்பா - தம்பி என்று எத்தனை அன்பாக... பாசமாக வளைய வந்தவன் இந்த ரிஷிவர்மன்?

அவன் மனதில் ஏற்பட்ட ரணம் ஆறாத வடுவாக மாறியிருக்க, தன்னால் முடிந்த வரையில் தோழனை மீண்டும் அவன் குடும்பத்தினருடன் ஒன்று சேர்க்க முயன்றான் தருண்.

ஆனால் ஒவ்வொரு முயற்சியும் விழலுக்கு இறைத்த நீரானது தான் மிச்சம்!

நண்பன் விடைபெற்றுக் கொள்ளும் வரையில் ஒருவித வலியுடன், முகத்தைக் கல்லாக்கிக் கொண்டு அமர்ந்திருந்தான் ரிஷி.

ராதிகாவுடன் சேர்ந்து கூட்டணி அமைத்தால் தன் னுடைய முயற்சிகளுக்கு கட்டாயம் வெற்றி கிட்டும் என்பது தருணுடைய எண்ணம். ஆனால் பாவம் ராதிகா வின் முயற்சிகளுக்கும் எந்த பலனுமிருக்கவில்லை என்பது அவன் அறிந்திருக்கவில்லை!

## 2



நண்பன் தருண் படேலிடம் பேசி முடித்து அலை பேசியை வைத்த ரிஷிவர்மன், உள்ளங்கையை

வெறித்துக் கொண்டு அமைதியாக அமர்ந்திருக்க, அவனருகில் வந்த ராதிகா அவனது அடர்ந்த சிகையில் கைகளை விட்டு அலைந்தபடியே மௌனமாக நின்றாள்.

மனைவியின் இடுப்பைச் சுற்றி வளைத்தவன் அவளது வயிற்றிலேயே அவனது முகத்தை அழுத்திக் கொள்ள, பேச்சற்ற மௌனத்தில் ஆறுதலாக ரிஷிவர்மன் தலையைக் கோதி கொடுத்தபடி அமைதியாக நின்றாள் அவள்.

சில நிமிடங்கள் கழித்து மெல்ல தலையை நிமிர்த்தியவன், ''தருண் மேலே நான் ரொம்ப கோபப்பட்டுட்டேனா, ராதிகா?'' என்றான் வருத்தத்துடன்.

இது தான் அவளது ரிஷிவர்மன்!

அவனைத் தெரிந்த இந்த ஒரு வருடத்தில், யாரிடமும் அவன் கடிந்து ஒரு வார்த்தை பேசி அவள் அறியாள். அப்படியே இப்படித் தப்பித் தவறிப் பேசி விட்டாலும் அதற்காக ஒரு நாள் முழுதும் வருந்துவான்.

மற்றவர்களின் மனம் நோகாமல் நடந்து கொள்ள நினைக்கும் அதே சமயம் தன்னை யாரும் ஒரு சொல் தவறாகவோ, குறைவாகவோ பேசிவிட்டாலும்... பேசியதாக நினைத்தாலும் பொறுக்காதவன்!

அது தானே இப்பொழுது அவனது பிரச்சனையே!

அவனருகில் அமர்ந்தவள், ''தருண் அண்ணா உங்க பிரண்ட் தானே? புரிஞ்சுக்குவார்'' என்று விட்டு, அவனது கோபம் சற்று தணியும் வரை பேசாதிருந்தாள்.

பின் மெதுவாக, ''நீங்க ஏன் அவர் சொல்றபடி செய்யக் கூடாது, ரிஷி? குறைந்தபட்சம் அவங்க கூட போனிலாவது பேசலாம் இல்லையா?'' என்று வினவினாள்.



''எனக்கு அவங்களைப் பார்க்கவோ... பேசவோ பிடிக்கலை!'' என்றவன் மிகுந்த வலியோடு, ''ஹ்ம்ம்... ஆஃப்டர் ஆல் ஷி இஸ் ஒன்லி மை ஸ்டெப் மாம், நாட் மை பர்த் மாம், ரைட்?'' எனப் பெருமூச்செறிந்தான்.

உணர்ச்சி வசப்பட்டால் ரிஷிக்கு ஆங்கிலமே இயல்பாக வரும். இப்பொழுது அப்படியே ஆங்கிலத்தில் குமுறியவனைத் தடுக்காது அமைதியாக அவனது வேதனைக்கு வடிகாலாக மட்டுமே இருந்தவள், அவனது முதுகை வருடியபடியே அமைதிக் காத்தாள்.

சிறிது நேரம் கழித்து, ''பழசையே நினைச்சுட்டு இருக்காதீங்க, ரிஷி. என்ன நடந்ததுன்னு முழுசாவும் பார்க்கலைன்னு நீங்க சொல்லி இருக்கீங்க. என்ன நடந்ததோ? அங்கே அவங்களுக்கு என்ன சூழ்நிலையோ?'' என்று எப்போதும் போல் இப்போதும் அவனைச் சமாதானப்படுத்த முனைந்தாள்.

அவளிடமிருந்து விலகி அமர்ந்தவன், ''ப்ச்! நீயும் தருண் கூட சேர்ந்துகிட்டு அவனை மாதிரியே பேசாதே, ரதி! உனக்குத் தெரியாது! அம்...'' என்று வேகத்துடன் ஆரம்பித்தவன்,

பேச்சைத் தொடராமல் பாதியிலேயே நிறுத்திவிட்டு சிறிது சலிப்புடன், ''சித்தி விருந்தாளிகளிடம் என்ன சொன்னாங்க தெரியுமா?'' என எரிச்சலுடன் வினவினான்.

ரிஷியின் வாய் வார்த்தையாக இதை பலமுறை அவள் கேட்டிருக்கிறாள். ஒவ்வொரு முறையுமே அவனது குற்றம் சாட்டும் குரலில் கோபத்துடன் ஆதங்கமும் சேர்ந்தே வெளிப்படும்.

இப்பொழுதும் அப்படியே!

''என் தம்பி அர்ஜுன் ஒரு பெண்ணைக் காதலிச்சான். அவங்க கல்யாணம் செய்துக்கவும் தயாரா இருந்தாங்க. எனக்காக அவங்க எதுக்காக காத்திருக்கணும்? வேண்டா மென்று நினைச்சு, எனக்கு எப்போ கல்யாணம் செய் துக்கணும்னு தோணுதோ அப்போ திருமணம் செய்துக் கிறதா வீட்டில் சொல்லியிருந்தேன்.''

''.....''

''ஆனால் அங்கே விருந்தாளிகளிடம், 'ரிஷிக்கு கல்யாணத்தில் விருப்பமேயில்லை. இப்படியே இருந்துட தான் பிடிச்சிருக்காம்'ன்னு சித்தி சொல்றாங்க. நான் சொல்லாததை எதுக்கு சித்தியா வந்தவங்களிடம் சொல் லிட்டு இருக்காங்கன்னு நான் குழம்பும் போதே, ஏதோ கேள்விக்கு, 'ஆமாம் எனக்கு ஒரு பையன் தான்!' என்று சொல்றாங்க.''

''....''

''... நான் அவங்களை என் அம்மாவா தான் எப்போதும் நினைச்சிருந்தேன். ஆனால், அவங்க இப்படிச் சொன்ன போது எவ்வளவு கஷ்டமாய் இருந்தது தெரியுமா?''

''அவங்களும் உங்களை மகன் மாதிரி தானே பார்த்துக் கிட்டாங்க? அப்படிச் சொன்னதுக்கு ஏதாவது காரண மிருந்திருக்கலாம் இல்லையா?''

''ம்ஹ்ம்ம்! காரணமும் உடனே வந்தது, ராதிகா. சொத்தெல்லாம் அர்ஜுனுக்கும், வரப் போகிற மருமகள் ஆஷாவுக்கும்-னு சொல்லுங்கன்னு எதிரிலிருந்தவங்க கேட்டதுக்கு, ஆமோதிக்கிற மாதிரி சிரிக்கிறாங்க'' என விவரங்களைப் பகிர்ந்தவன்,

தொடர்ந்து, ''சித்தி பேசும் போது அதற்கு மறுப்பாக என் அப்பாவும், தம்பியும் எதுவுமே பேசலை. தெரியுமா?'' என்றான் ஆதங்கத்துடன்.



''அவங்க ரெண்டு பேரும் உங்க சித்தி பேசறதைக் கேட்கலையா இருக்கும்ப்பா'' என முடிந்த வரையில் தன் புகுந்த வீட்டினரைத் தாங்கிப் பிடித்தாள் ராதிகா.

ஏற்கனவே கோபத்தில் இருப்பவனின் கோபத்தைத் தணிப்பது தான் தன் கடமை என்று நினைத்தாள் அவள்.

''நானும் அந்த மாதிரி நினைச்சு தான் என் மனசை தேற்ற நினைச்சேன். ஆனால் உண்மை வேற மாதிரி யிருக்கும் போது என்னையே நான் ஏமாற்றியிருக்க விரும்பலை...''

''........''

''அமெரிக்க அம்மா - அப்பாவே தங்களோட பசங் களுக்கு கல்யாண வயசு வந்ததும், 'எப்போ கல்யாணம் செய்துக்கப் போறே?' என்று பிள்ளைங்களைக் கேட்க ஆரம்பிச்சுடுவாங்க. இந்திய வம்சாவழி பற்றிக் கேட்கவே வேண்டாம்! பசங்க வேற எப்படியாவது போயிடுவாங் களோ என்ற பயம் பாதி... அக்கறை மீதின்னு, 'எப்போ கல்யாணம்? எப்போ கல்யாணம்?' என்று அரிச்சு எடுத் துடுவாங்க.''

''......''

''அவர்கள் என்னைச் சுமந்துப் பெற்றிருந்தால் என்னைப் பற்றிய அக்கறை இருந்திருக்கும். நான் யாரோ தானே? அப்பா, எப்போதுமே சித்தி எது சொன்னாலும் வாய் திறக்க மாட்டார். அதனாலே அவங்களோட ஆசை பையன் அர்ஜுனுக்கு மட்டும் கல்யாணம் செய்து பார்த்து, சொத்தைக் கொடுக்கட்டும். யாருக்கு வேணும் அவங்களும், அவங்களுடைய சொத்தும்!?'' என்றான் கோபமாக.

''உங்களுடைய யூகத்தில் மட்டும் பேச வேண்டாம், ரிஷி!''

விரக்தி புன்னகையுடன், ''யூகமா? அதெல்லாமில்லை, ரதி. நான் வீட்டை விட்டுக் கிளம்பி வந்து கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆகப் போகுது. இந்த ஒரு வருஷத்தில் ரிஷி, யக்னேஷ்கிட்டே என்னைப் பற்றி விசாரிச்சால் மட்டும் போதுமா? நான் யக்னேஷ் கூட சேர்ந்து பிசினஸ் பண்ணேறேன்னு அவங்களுக்கு நல்லாவே தெரியும். அப்போ சென்னையில் இருப்பதற்கான வாய்ப்பு ஜாஸ்தின்னு என்னைத் தேடி இங்கே நேரிலேயே வந்திருக்க வேண்டியது தானே? ஏன் வரலை? அவங்க வரவும் மாட்டாங்க...'' என ஏமாற்றத்துடனும், எரிச்சலுடனும் சொன்னான்.

''அப்போ அவங்க நேரில் தேடி வரட்டும் என்று தான் காத்துட்டு இருக்கீங்களா?'' என்று ராதிகா கேட்கும் பொழுதே,

ரிஷி மறுப்பாய்த் தலையசைக்க, ''சரி... சரி! மண்டையை வேகமா ஆட்டாதீங்க!'' என்றுவிட்டு, ''ரிஷி! நீங்க நியூஜெர்ஸியில் இருந்து கிளம்பியதுக்கான காரணத்தையும், உங்க மன வருத்தத்தையும் லெட்டர் மூலமா லண்டனிலிருந்து தானே போஸ்ட் செய்தீங்க? உங்களைத் தேடறவங்களை சுத்த விடணும்னு தானே இந்த வேலை? அப்புறம் அவங்க லண்டனில் தேடாமல் இங்கேயா வந்து தேடுவாங்க? அவங்களும் உங்களைத் தொடர்பு கொள்ள முடியாதபடி வேலி போட்டுட்டீங்க. அவங்க என்ன தான் செய்வாங்க?'' என்று கணவன் வீட்டினருக்காக வாதம் செய்தாள்.

''அது அவங்களைச் சுத்த விடறதுக்காகன்னும் சொல்லலாம் தான்...'' என்று ராகம் பாடியவன், ''நான் இந்தியாவுக்குக் கிளம்பி வரும் பொழுது வேலை விஷயமா லண்டனில் நாலு நாள் தங்க வேண்டியிருந்தது. அதனால் தான் அங்கிருந்து போஸ்ட் பண்ணினேன்'' என்றவனின் குரலில் 'இதற்கு மேல் இந்த விவகாரத்தைப் பற்றிப் பேச வேண்டாமே?' என்ற கோரிக்கை இருந்தது.



அவர்களும், அவர்கள் உறவும் வேண்டாமென்று ரிஷி மனதார நினைத்திருந்தால், அவன் இத்தனை கோபப்பட வேண்டிய அவசியமில்லை.

அவனுடைய சித்தி - அதாவது ரிஷிவர்மனைப் பெற்ற தாய் இறந்ததும், அவனது தந்தை ராமநாதனின் இரண்டாவது மனைவி சுதா - அவரது மகன் அர்ஜுனின் நிச்சயதார்த்த விழாவில் ரிஷியின் திருமணத்தைப் பற்றி சொன்னதற்கோ... இல்லை... அதன் பின்பு சொத்து பற்றிக் கேட்டதற்கு மறுப்பாக ஒன்றும் மறுமொழி கூறாமல் புன்னகைத்தபடி நின்றதற்கோ ரிஷிவர்மனின் மனம் ஒடிந்து போக வேண்டியதில்லை.

தனக்கு அவர்கள் திருமணம் செய்து வைக்கவில்லை என்றோ இல்லை அவர்களின் சொத்து இவனுக்கு கிடைக்காமல் போய் விடுமோவென்றோ காரணத்திற்காக அவன் வருத்தப்படவில்லை என ராதிகாவும் அறிந்து தான் இருந்தாள்.

அப்படி வருத்தப்படுபவனாய் இருந்திருந்தால், ரிஷிவர்மனை விட ஆறு வயது இளையவன் அர்ஜுன் ஒரு பெண்ணை விரும்புகிறான் எனத் தெரிந்ததும், அவனுக்கு முதலில் திருமணம் செய்து வைக்கும்படி சொல்லியிருக்க மாட்டான்; அர்ஜுனின் திருமண நிச்சயத்தில் சந்தோஷமாகக் கலந்து கொண்டிருக்க மாட்டான்; வேலைகளை முன்னிருந்து செய்திருக்க மாட்டான்.

அவனின் ஆதங்கம்... அந்த அக்கறை கூட அவர்களுக்கு இல்லையே என்று புரிந்ததில் தான்.

தன் பிள்ளை என்ற அக்கறையும் பாசமும் இருந்திருந்தால் அவர்களால் அப்படி பேசியிருக்க முடியுமா என்பது தான் அவனது கேள்வி!

எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டவனால், 'ஆமாம்! ஒரு பையன் தான்!' என்று சித்தி சொன்னதற்கு தந்தை மற்றும் தம்பியினிடத்திலிருந்து வந்த மௌனத்தைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

ஒரு சிறு மறுப்பையாவது எதிர்பார்த்தவனுக்கு அவர்களின் மௌனம் பெரிய சாட்டையடியாக இருந்தது.

''சித்திக்கு உங்க மேலே பாசமில்லாமல் இருந்திருந்தால் அது எல்லா விதத்திலும் எதிரொலிச்சிருக்கும், ரிஷி. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு தான் நிலைக்கும். அதைப் புரிஞ்சுக்கோங்க.''

''ரொம்ப தான் உனக்கு அவங்க மேலே பாசம்! அவங்க சார்பாகவே பேசாதே, ராதிகா. இல்லை... எங்களுக்கு ரெண்டு பசங்க என்று சொல்ல முடியாத அளவிற்கு அப்படியென்ன சூழ்நிலை வந்திருக்கப் போகுது? அதோட ஆரம்பத்திலிருந்து நடந்ததையெல்லாம் நினைச்சுப் பார்த்தால், நான் தான் ஏமாளியாகவே இருந்திருக்கேன். விடு! இதைப் பற்றி நாம மேலும் பேச வேண்டாம்'' என்று முடித்தான்.

அப்படியும் மனம் தாளாமல், ''நான் அவங்களை என் சொந்த அம்மாவா தான் நினைச்சிருந்தேன், ரதி. ஆனால், பணம், காசு, சொத்து ஒருத்தங்களை எப்படி மாற்ற முடியுமென்று அன்றைக்குத் தான் தெரிஞ்சுக்கிட்டேன். அதான் அவங்க சொத்தும் வேண்டாம்...



ஒன்றும் வேண்டாம் என்று, அவங்க முகத்திலேயே விழிக்கக் கூடாதுன்னு கிளம்பி வந்தாச்சு'' என்றான் மெல்லிய குரலில்.

''நீங்க கிளம்பி வந்தாலும் அவங்க அப்படியே விட்டுடலையே, ரிஷி? தருண், யக்னேஷ்கிட்டே விசாரிக்கிறாங்க. உங்க சொந்தத்தில் ஒரு தாத்தா இங்கே சென்னையில் இருக்காரே... அவரே நேரில் வந்து யக்னேஷ் கடையில் விசாரிச்சாரே? நீங்க நியூஜெர்ஸியில் வேலை செய்த இடத்தில் எதுவும் உங்களுக்கு வெளிநாடு அஸைன்மென்ட் இருக்கான்னு கேட்டு இருக்காங்க. உங்களை பாரமா நினைச்சிருந்தால் உங்களைத் தேட எதுக்கு இத்தனை முயற்சி எடுக்கப் போறாங்க?''

''வேண்டாம், ரதி. நான் வீட்டை விட்டுக் கிளம்பி வர்ற அளவுக்கு நான் ஹர்ட் ஆகியிருக்கேன். நீங்க எலலாரும் சேர்ந்து என்னை அங்கே போ - போ என்று துரத்தாதீங்க.''

அவனது வருத்தம் பொறுக்காமல் அவனைத் தன் மடியில் சாய்த்துக் கொண்ட ராதிகா, ''நான் ஏன் உங்களைத் துரத்தப் போறேன்? எனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?'' என்று கேட்டுக் குனிந்து கணவனின் கன்னத்தில் முத்தமிட்டவள்,

''ஏன் தெரியுமா உங்க வீட்டவங்க மேலே எனக்கு அப்படியொரு பாசம்? அவங்களாலே தானே நீங்க இங்கே இந்தியாவிற்கு என்னிடம் வந்தீங்க? அதான்.''

''.....''

''அதோட நான் ரொம்பவுமே சந்தோஷமா இருக்கேன், ரிஷி. அதே மாதிரி எல்லோரும் சந்தோஷமா இருக்கணும் என்ற நினைப்பும் வேற'' என்று புன்னகைத்தாள்.

அத்தனை நேரமிருந்த இறுக்கம் தளர்ந்து, ''ஐ லவ் யூ, ரதி!'' என்று சொல்லி அவள் வயிற்றில் முத்தமிட்டவன்,

ராதிகாவின் மென்னகை தவழும் முகத்தைப் பார்த்து, ''இதுக்கு மட்டும் ஒரு பதிலையும் சொல்லிடாதே!'' என்று சிணுங்கிக் கொண்டான்.

நகைப்பையே அவனுக்குப் பதிலாகத் தந்தவள், ''ஒரு நிமிஷம்... வந்துடறேன்'' என்றபடியே உள்ளறைக்கு விரைந்தாள்.

திரும்பி வந்து, தன்னருகில் அமர்ந்தவளின் கரங்களில், எம்பிராய்டரி வேலை செய்த அறிகுறியோடு இவனது சிகப்பு நிற டி-ஷர்ட் இருந்ததைக் கண்டு, ஆர்வமுடன் அதை வாங்கி பார்த்த ரிஷிவர்மனின் கண்கள் வியப்பிலும் மகிழ்ச்சியிலும் விரிந்தது.

அந்தச் சட்டையின் மார்பு புறத்தில், நீல நிறத்தில், 'R' என்ற ஆங்கில எழுத்து முன்னும் பின்னும் அழகுற எம்பிராய்டரி செய்யப்பட்டிருந்ததைப் பார்த்து, ''ஹே! நம்ம ரெண்டு பேரோட முதல் எழுத்து! இதை தான் எடுக்கப் போனியா?'' என்று மகிழ்ச்சியுடன் கூறினான்.

''ஆனால், இதென்ன? ரெண்டு 'R'-உம் ஒன்றை ஒன்று முறைச்சுகிட்டு முதுகைக் காண்பிச்சுக்கிட்டு இருக்க மாதிரி இருக்கு? ம்ஹூம்! நான் ஒத்துக்க மாட்டேன். நம்மை மாதிரி ரெண்டும், எப்பவும் ஒன்றை ஒன்று பார்த்துக்கிட்டே தான் இருக்கணும்'' என்று கண் சிமிட்டி சிரித்தான்.

''அய்யே! ரொம்ப தான்!'' என்று பொய்யாகச் சலித்துக் கொண்டவளின் மடியில் மறுபடியும் படுத்துக் கொண்டு,



''அதெல்லாம் முடியாது! எப்பவும் அது ரெண்டும் பார்த்துக்கிட்டு இருக்க மாதிரி மாற்று!'' என்று சிறு குழந்தையாய் அடம் பிடிப்பவனை உதட்டில் சிரிப்போடும், கண்ணில் காதலோடும் பார்த்திருந்தாள் அவனது மனைவி.

''சரியான அடம்!'' என்ற செல்லக் கொஞ்சலுடன் குனிந்து அவனது மூக்கின் நுனியில் முத்தமிட்டவளின் ஈரக் கூந்தல், ரிஷிவர்மனின் முகத்தில் பட்டு உரசவும்,

உள்ளிழுத்த மூச்சோடு அந்த வாசத்தை முகர்ந்தவன், ''என்ன தான் போட்டு குளிப்பியோடா! உன்னிடமிருந்து வரும் வாசமே சம்திங் ஸ்பெஷல் தான்!'' என ரசித்துக் கூறியவாறே எழுந்து அவளது சங்கு கழுத்தில் முகம் புதைத்தான்.

கணவனின் இதழ்கள் அவளது கழுத்தில் குறுகுறுப்பூட்ட, மெல்ல சிரித்தவள், ''பாட்டியைப் பார்க்கப் போகணும், ரிஷி! கிளம்பலாமா?'' என்று கிசுகிசுப்பாகக் கேட்டது அவளது செவிகளையே எட்டாத பொழுது, மயக்கத்திலிருந்த ரிஷிவர்மனின் செவிகளை எங்கே எட்டியிருக்கப் போகிறது?

அவர்களின் கல்யாண சமையல் மெஸ்ஸூம், பாட்டியும் பேத்தியும் வசிக்கும் இடமும் ஒரே கட்டிடத்தில் இருந்ததால், பாட்டி மரகதம் இவர்களுக்குத் திருமணமானதும், தம்பதிகள் இருவரையும் ரிஷிவர்மனின் குடியிருப்பிலேயே தனி குடித்தனம் ஆரம்பிக்கும்படி வற்புறுத்தியிருந்தார்.

''நானும், எனக்கு துணையா இன்னமும் மூணு பேரும் இங்கே இருக்க இடத்தில், புதுசா கல்யாணமானவங்களும் இருந்தால்... அது அத்தனை சரியா இருக்காதுப்பா.

உனக்கும் இருக்க இடமில்லைன்னா பரவாயில்லை இதோ... இங்கே ரெண்டு தெரு தள்ளியிருக்கு உன் வீடு. அப்புறம் என்ன? அங்கேயிருந்து இங்கே வரப் போக ராதிகாவிற்கு ஒன்றும் சிரமம் இருக்காது'' என்று பல் வேறு காரணங்களைக் கூறி, சிறியவர்களைச் சரி கட்டியிருந்தார்.

அவர்களும் அதற்கு ஒரு வழியாகச் சம்மதித்திருந் தனர். வார இறுதி நாளில் காலை வேலையை முடித்து விட்டு, பாட்டியிடம் போவது அவர்களின் வழக்கம்.

அதையே இப்பொழுது ராதிகா கூறவும், ''ம்ம்... போகலாம்'' என்று வாய் வார்த்தையாக சொன்னவன், உட்கார்ந்த இடத்திலிருந்து எழும்புவதற்கு கூட எந்த அவசரமும் காட்டினானில்லை.

மெல்ல அவனின் உதடுகள், ராதிகாவின் செவி மடல், கன்னம், தாடை என்று மெல்ல மெல்ல முன் னேற, அவளுக்குமே தான் என்ன சொல்லிக் கொண் டிருந்தோமென சுத்தமாக மறந்து போனது.

கணவனின் அணைப்பில் மெல்ல மெல்ல தன் வசமிழந்து கொண்டிருந்தவளின் நாசியை, உள்ளே இருந்து வந்த பாலின் வாசம் நினைவுலகத்திற்கு மீட்க, ''ஐயோ! அடுப்பில் பால் வைச்சுட்டு வந்திருந்தேன்...'' என்றபடியே எழுந்து ஓடினாள்.

''ஆஃப்டர் ஆல்... பால்... அது எனக்கு வில்லனா வந்துடுச்சே?'' என்று கேலி செய்தபடியே மனைவியைப் பின் தொடர்ந்தவன், அவளைப் பின்னாலிருந்து அணைத் தான்.

அடுப்பைச் சுருக்கி வைத்துவிட்டு, ''அடடா... கொஞ்ச நேரம் சும்மா இருங்கப்பா!'' என்றவாறே தன்



இடுப்பைச் சுற்றியிருந்த அவனது கைகளை விலக்கப் பார்த்தவள், அது முடியாது போகவும், ''ஸ்டவ் இஸ் ஹாட்!'' என்று அவனை மாதிரியே சொல்லிக் காட்ட,

''மீ டூ! அண்ட் சோ ஆர் யூ, ஹாட்டி!'' என்று அவன் தாடையை அவளது தோளில் வைத்து அழுத்தி குழைந்து கொஞ்சியவன், கைகளை முன் புறம் நீட்டி அடுப்பை அணைத்துவிட்டு, தீயணைப்பு படையினர் பாதிக்கப்பட்டவரைத் தோள்களில் தூக்கிச் செல்வது போன்று, அவன் இடப்புறத் தோளில் ராதிகாவை அலேக்காக சுமந்தவாறே படுக்கை அறையை நோக்கிச் சென்றான்.

''ஹே ரிஷி! ரிஷி! என்ன செய்யறீங்க?'' ஆச்சரியத் தில் கூவியவளை அவன் சிறிதும் சட்டை செய்யவில்லை.

''இது கூடத் தெரியலையா? இதைத் தான், 'ஃபயர் மேன்'ஸ் லிஃப்ட்' என்று சொல்வாங்க. நெருப்பில் பாதிக்கப்பட்டவங்களை இப்படித் தான் அவங்க தூக்கிகிட்டு போய் காப்பாற்றுவாங்க'' என அவள் கேட்க வருவது புரியாதது போன்றே விளக்கினான்.

''அது தெரியாதா எனக்கு? இப்போ எதுக்கு என்று தான் கேட்டேன்'' என்றவளைத் தொப்பென்று படுக் கையில் போட்டவனும் அவளருகில் விழுந்து,

''உனக்கு செயல் விளக்கம் கொடுக்கலை என்றால் ஒன்றும் புரியவே மாட்டேங்குதுன்னு கொஞ்ச நாளா கவே எனக்குச் சந்தேகம் இருந்தது. அது இப்போ தீர்ந்தது'' என்று ரகசிய குரலில் அவளைச் சீண்டியவன் அவளது முகத்தில் ஒற்றை விரலால் கோலம் வரையலானான்.

தன் உதட்டோரம் மெல்ல ஊர்ந்து வந்த அவனது விரலைப் பல் படாமல் கடித்தவள், ''உங்க ஊரில் இதை,

'ஃபயர்மேன்'ஸ் லிஃப்ட்' என்று சொல்வாங்களா? எங்க ஊரில் குட்டி அரிசி மூட்டையை இப்படித் தான் தோளில் தூக்குவாங்க'' என்றாள் சிரிப்புடன்.

''தலைகீழா தொங்கிட்டு வந்தாலும், உன் குசும்பு போகுதா பாரு? நீ அரிசி மூட்டையில்லை. காட்டன்... அதை என்னன்னு சொல்வீங்க?'' என்று சந்தேகம் கேட்டவனுக்கு, ''பஞ்சு!'' என்று சிரிப்பின் ஊடேயே பதிலளித்தாள் அவள்.

''ஆங்... அது தான் நீ! பஞ்சு மூட்டை! எனக்கே எனக்கான பஞ்சு மூட்டை!'' என்று கொஞ்சி,

இயற்கையிலேயே சிவந்த அவள் உதட்டைப் பெரு விரலால் மெல்ல வருடியவாறே, ''ஐ லவ் யூ, ஸ்வீட் ஹார்ட்!'' என்று அவன் உருக, அவன் கழுத்தில் தன் கரங்களை மாலையாய்க் கோர்த்து அவனைத் தன்னோடு சேர்த்து இறுக்கினாள் ராதிகா.

மனைவியின் அணைப்பில் கட்டுண்ட ரிஷிவர்மன், அவளைத் தன் மீது இழுத்துப் போட்டுக் கொண்டு, அவளது கன்னக் கதுப்பை வலிக்காமல் மெல்ல நிமிண்டியவாறே, ''நான் ஒரு நாளைக்கு எத்தனை தடவை, ''ஐ லவ் யூ' சொல்றேன்? நீ ஒரு தடவை யாவது திரும்பச் சொல்றியா, ரதி?'' என்றான் ஏக்கத் துடன்.

ரிஷிவர்மனின் மார்பில் படுத்துக் கொண்டு, முகத்தை மட்டும் நிமிர்த்தியவள், ''வார்த்தையால் அதைச் சொல்லிட்டே இருந்தால் தானா, ரிஷி? எனக்காவது செயல் விளக்கம் கொடுத்தால் புரியுது. ஆனால், உங்களுக்கு நான் எத்தனை முறை அதைச் செயல் விளக்கமா செய்து காட்டினாலும் புரிய மாட்டேங்குதே, கண்ணா!''



என்று கொஞ்சியவள் அவனது தொண்டைக் குழியில் இதழ் பதித்தாள்.

''ம்க்கும்! இதேது, நான் எங்க ஊரில் சொல்லியிருந் தால், பதிலுக்கு ஒரு நூறு, 'ஐ லவ் யூ!' கிடைச்சு இருக்கும். இங்கே... உன் வாயிலிருந்து அந்த வார்த் தையைப் பிடுங்கறதுக்குள்ள?'' எனச் சலிப்புடன் கூறி, தன் கன்னத்தை வருடிக் கொண்டிருந்த அவளது விரலை ரிஷி கடிக்க,

புருவத்தைச் சுருக்கி யோசிப்பது போன்ற பாவனை செய்தவள், ''எனக்கு உங்க கஷ்டம் புரியாமல் இல்லை. ரிஷி வேணும்னா இப்படிச் செய்யுங்களேன். உங்க ஊரில் இருக்க யாரிடமாவது இதைச் சொல்லி பாருங்களேன்'' என்று சிரிக்காமல் சொல்லி குறும்பாகப் புன்னகைத்தாள்.

''நான் சொல்ல மாட்டேன் என்ற நம்பிக்கையில் தானே சொல்றே? இரு... இதுக்காகவே... 'நீ யாருன்னே தெரியாதுன்னு' உன்னிடம் சொல்லிட்டு, வேற யாரிடமாவது போய், 'ஐ லவ் யூ!' என்று நான் சொல் லலை...'' என்று அவன் சொல்லி முடிப்பதற்குள், பதறியடித்து அவனது வாயை அவசரமாக மூடியவளின் விழிகள் நீரில் பளபளத்தது.

''ஹே! ரதி! வாட் இஸ் திஸ்? ஐ வாஸ் ஜஸ்ட் டீஸிங் யு, ஸ்வீட் ஹார்ட்!''

''நோ! எதில் விளையாடறதுன்னு இல்லையா, ரிஷி?'' என்று ராதிகா கோபமாகக் கூற,

''நீயும் அதே தானே சொன்னே?'' என நேரம் காலம் தெரியாமல் நியாயமாகப் பேசியவனை முறைத்துப் பார்த்தாள் அவள்.

''நான் சொல்வேன். நீங்க சொல்லக் கூடாது!'' என்று அழுத்தத்துடனும் லேசாகப் பிசிர் தட்டிய குரலுடனும் கூறியவளைச் சமாதானப்படுத்தும் முகமாக,

''சொல்றதெல்லாம் உண்மையாகிடுமாடா?'' என்று கேட்டபடியே மனைவியைத் தன் மீது இழுத்துப் போட்டுக் கொண்டவன், வார்த்தை மூலமாகவும், செயல் மூலமாகவும் அவனது காதலை மீண்டுமொரு முறை அவளுக்கு வெளிப்படுத்தலானான்.

## 3



அன்று மதியத்திற்கு மேல் மெஸ்ஸிற்குக் கிளம்பி வந்திருந்த ராதிகா, மதிய உணவு பாத்திரங்களை ஒதுக்கி வைத்துக் கொண்டிருந்தபடியே, ''பாட்டி! நாளையிலிருந்து நான் மறுபடியும் மெஸ் பக்கம் வர ஆரம்பிச்சுடுவேன். உங்களுடைய ஒரு மாசம் கெடு முடிஞ்சுது. நீங்க இனிமேல் என்னை ஒன்றும் சொல்லக் கூடாது! சொல்லிட்டேன்!'' என்று அடுத்த அறையிலிருந்து பாட்டி மரகதத்திடம் அதிகாரமாகக் கூறிக் கொண்டிருந்தாள்.

ராதிகாவின் திருமணம் முடிந்து ஒரு மாதத்திற்கு, அவள் மெஸ் பக்கம், 'இந்த வேலை செய்கிறேன்; 'அந்த வேலை செய்கிறேன்' என்று வரவே கூடாது எனக் கண்டிப்பான உத்தரவு போட்டிருந்தார் மரகதம்.

பாட்டியின் உத்தரவுக்கு உட்பட்டு ராதிகாவும் கடந்த மாத காலம் மெஸ் பக்கம் வராமல் இருந்தாள் என்று



சொல்வதைவிட, அவளுக்குமே விசா தொடர்பான நேர்முகத் தேர்வு, அதற்கான கோப்புகளைத் தயார் செய்தல், வீட்டை ஒழுங்கு படுத்த வேண்டிய வேலைகள் என்று நிறைய பணிகள் முடிக்க வேண்டியிருந்தன என்பதுதான் உண்மை.

தன் மனைவிக்கு உதவி புரிந்தவாறே, ''நான் ஏதாவது சொல்லலாமா... கூடாதா, ரதி?'' என்று மிகவும் ரகசியக் குரலில் கேட்டு, தன்னை அப்பாவியாகக் காட்டிக் கொண்ட ரிஷி, அவன் விலா எலும்பில் ஒரு இடியையும் அவளிடமிருந்து பரிசாகப் பெற்றுக் கொண்டான்.

''பாட்டி! இங்கே பாருங்க... உங்க பேத்தி என்னை அடிக்கிறாள்!'' வேண்டுமென்றே அவனுடைய குரலை உயர்த்தி ராதிகாவை மரகதத்திடம் போட்டுக் கொடுக்க,

''இதென்ன பழக்கம், ராதிகா?'' என்று பேத்தியைக் கண்டித்த வண்ணம் அடுத்த அறையிலிருந்து வெளிப்பட்டார் பெரியவர்.

கையிலிருந்த கரண்டியைத் தூக்கிக் காட்டிய ராதிகா, ''அவர் மேல் இந்தக் கரண்டி இப்படித் தெரியாமல் பட்டுடுச்சு, பாட்டி'' என்றபடியே மாதிரிக்கு அவனது முதுகில் வலிக்காமல் ரெண்டு அடி கொடுத்தாள்.

இருவரின் சேஷ்டைகளைக் கவனித்த பாட்டி புன்னகைத்தபடியே, ''ரெண்டும் ஒண்ணாங் க்ளாஸ் படிக்கிற பிள்ளைங்க மாதிரி சண்டை பிடிக்கிறதைப் பாரு!'' தலையில் அடித்தபடி அடுத்த அறைக்குத் திரும்ப எத்தனித்தவரை,

''பாட்டி! இருங்க!'' என்று நிறுத்தியவன், ''நம்ம மெஸ்ஸில் இந்தப் பாத்திரம் தேய்க்கிறதுக்கு டிஷ் வாஷர் மெஷின் வாங்கிப் போட்டால் என்ன, பாட்டி?

வேலையும் குறையும். அதோட சுகாதாரமாகவும் இருக்கும்'' என அறிவுறுத்தினான்.

ரிஷிவர்மன், பாட்டியிடம் பாரம்பரிய சமையல் முறைகளைக் கற்றுக் கொண்ட அதே சமயத்தில், இந்தக் கல்யாண சமையல் மெஸ் விரிவாக்கத்திற்கும், நவீன மயமாக்குவதற்கும் பல அறிவுரைகள் வழங்கியதோடு அதை நடைமுறைப்படுத்தவும் பெருமளவு உதவிகள் புரிந்திருக்கின்றான்.

கணக்கு வழக்கு மற்றும் பில் போடுவதற்காக இரண்டு கணினிகளைக் கொண்டு வந்ததோடு, பணி புரிபவர் களுக்கு அதற்கான அடிப்படைப் பயிற்சிகளையும் அவனே அளித்தான்.

இந்த உணவகத்திற்கான இணைய தளம் தொடங்கி, மெஸ் வாடிக்கையாளர்கள் டோக்கன்களை க்ரெடிட் மற்றும் டெபிட் கார்டுகளைக் கொண்டு வலைத்தளம் வாயிலாகவே முன்பதிவு செய்யவும் ஏற்பாடு செய்திருந் தவன், வாடிக்கையாளர் அவர்களின் கிரெடிட் கார்ட் எண்களை உபயோகப்படுத்தி அலைபேசி வாயிலாக குறுஞ்செய்தி அனுப்பி முன் பதிவு செய்து கொள்ளவும் வசதி ஏற்படுத்தியிருந்தான்.

வாடிக்கையாளர்கள் மெஸ்ஸில் செலவு செய்யும் ஒவ்வொரு இரண்டாயிரம் ரூபாய்க்கும் சின்ன பரிசு பொருட்கள் அல்லது சலுகைகள் வழங்கப்பட்டு ஊக்கு விக்கப்பட்டனர்.

உணவகத்தில் பெரும்பான்மையான நேரங்களில் பெண்கள் மட்டுமே பணியில் இருப்பதால், பாதுகாப்பு கருதி கண்காணிப்பு கேமராக்களை (closed circuit television) இரண்டு இடங்களில் பொருத்துமாறு பரிந்துரைத் தான்.



அத்துடன் நில்லாது, 'தான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்' என்ற சொற்றொடருக்கேற்ப அவன் கற்றுக் கொண்ட பாரம்பரிய பதார்த்தங்களுக்கான செய்முறை விளக்கங்களைப் புத்தகமாக வெளியிடுவதற் கான முயற்சி மேற்கொண்டு ஒரு பதிப்பகத்திடம் அதற்கான ஒப்பந்தமும் செய்து வைத்திருக்கின்றான்.

ரிஷிவர்மனின் ஆலோசனைகளை முதலில் கேட்ட பொழுது, பழமைகளில் ஊறியிருந்த மரகதம், ''என்ன உபயோகமிருக்கப் போகுது, ரிஷி இதெல்லாம் சாத் தியமா? காசு வீணாகுமே?'' என்றெல்லாம் தயக்கம் காட்டினார்.

ராதிகாவும், ரிஷியுடன் கூட்டணி அமைத்துக் கொண்டு நவீன மயமாக்குதலின் நன்மைகளை எடுத்துச் சொல் லவும், அரை மனதோடு சம்மதம் தெரிவித்திருந்த மரகதத் திற்கு அவனது யோசனைகளை நடைமுறைப் படுத்திய பிறகே அதன் பயன்பாடு முழுவதும் விளங்கியது.

முன்பெல்லாம் நேரில் வருபவர்களில் சில பேர் கடன் கேட்பதும் உண்டு. அத்துடன் வானிலை மோச மான நாட்களில் உணவு டோக்கன் தீருமோ... தீராதோ என்று மனக்கவலை மரகதத்திற்கு இருந்து கொண்டே யிருக்கும்.

இப்பொழுது இது போன்ற சங்கடங்களுக்கு வாய்ப்பே யில்லாமல் போகவும், ரிஷியின் முயற்சிகளுக்கு மனமார நன்றி தெரிவித்ததோடு தன் பாராட்டையும் பதிவு செய்தார் அவர்.

ரிஷியைப் பற்றி நன்கு தெரிந்தவர் என்பதாலும் மற்றும் அவன் ஒரு விஷயம் சொன்னால் சரியாக இருக்கும் என்பதாலேயே இப்பொழுது அவன் பாத்திரம் தேய்ப்பதற்கு, 'இயந்திரம் வாங்கலாம்' என்று சொல் லவும் அதிர்ச்சியடையாமல் செவிமடுத்தார்.

''நீயும், ராதிகாவும் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வாங் கப்பா. கடுகு, உளுந்து சமாச்சாரத்தைத் தவிர எனக் கென்ன தெரியும்?''

''என்ன, பாட்டி? கல்யாண சமையல் மெஸ் உடைய மேனேஜிங் டைரக்டர் நீங்க. இப்படிச் சொல்லிட்டீங்க?'' என்று ரிஷி முறையிட, கூச்சத்தோடு கூடிய புன்ன கையை மட்டும் விடையாய்க் கொடுத்தார் மூத்தவர்.

ராதிகா, ''கரண்ட் பிரச்சனை தான் ரொம்ப அதிகமா இருக்கே, ரிஷி? அதோட கம்ப்யூட்டர், பாதுகாப்பு கேமரா எல்லாம் இயங்கறதுக்கு இன்வர்டர் பேட்டரி போதும். ஆனால் டிஷ் வாஷர்க்கு ஜெனரேட்டர் தேவைப் படுமே? ஏற்கனவே கரண்ட் பில் வேற கமர்ஷியல் இடம்னு எக்கச்சக்கமா வருது. இதில் டிஷ் வாஷர்... கஷ்டம் இல்லையா?'' என்று அவன் சொன்ன ஆலோ சனையின் சாதக - பாதகங்களை எடுத்துரைத்தாள்.

''தட்ஸ் எ வேலிட் பாயிண்ட்!'' என்று உடனேயே ஆமோதித்த ரிஷி, ''சூரிய சக்தியை நல்லவிதமா உபயோகிக்கிறதுக்கு ஏதாவது ஏற்பாடு செய்யணும், ரதி. அப்போ தான் கரண்ட் தட்டுப்பாட்டை சமாளிக்க அரசாங்கத்தை மட்டுமே நம்பியிருக்க வேண்டாம்'' என அவன் கருத்தைச் சொல்லி முடிக்கும்போதே அவனது அலைபேசி ஒலித்தது.

அலைபேசியின் திரையில், 'யக்னேஷ் கோஷ்' என்ற பெயர் ஒளிர, ரிஷியின் இதழ்களில் புன்னகை மலர்ந்தது.



ரிஷிவர்மனின் இளம்பிராயத்திலிருந்து, தருண அவனுக்கு வலது கரம் என்றால், யக்னேஷ் இடது கரம். யக்னேஷின் அப்பா ஒரு பெங்காலி, ஆனால் அவனது தாய் பிறந்து வளர்ந்தது எல்லாம் சென்னை.

யக்னேஷ் தன் குடும்ப சூழ்நிலை மற்றும் பொருளா தார நிலை காரணமாக, அமெரிக்காவிலிருந்து சென் னைக்கு ஐந்தாண்டுகளுக்கு முன்பே நிரந்தரமாக வந்து குடியேறி விட்டான்.

பொருளாதார இக்கட்டில், யக்னேஷிற்கு உற்ற தோழ மைகள் இருவரும் தங்களால் முடிந்த எதிர்பார்ப்பில்லாத உதவிகளை செய்தனர் என்றாலும், ரிஷி ஒரு படி மேலே சென்று, நண்பனுக்கு அவனது விருப்பப்படியே மூன்று வருடங்களுக்கு முன்பு, சென்னையில் பன்னாட்டு உணவகம் ஒன்றின் franchise எடுத்து தொடங்க, முதலீட்டின் மூன்று கோடியில் இரண்டு கோடியைக் கொடுத்து நிதியுதவி செய்திருந்தான்.

பண உதவியை ஏற்றுக்கொண்ட யக்னேஷ், நண்ப னிடம் உணவகத்தின் வரவு - செலவு கணக்குகளை ஒப்படைப்பதோடு முதலீட்டிற்கு ஈடாக லாபத்தின் பகுதியைக் கொடுப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந் தான்.

தன் நண்பனின் பொருளாதாரச் சூழல் மேம்படும் பட்சத்தில், தன்னுடைய முதலீட்டின் ஐம்பது சத விகிதத்தை... அதாவது ஒரு கோடி ரூபாய்க்கான பங்கை, தான் யக்னேஷுக்கே விற்று விடுவதாக வாக்குறுதி அளித்திருந்தான் ரிஷிவர்மன்.

தன்னுடைய குடும்பத்தினர் மீது கொண்ட அதிருப்தி யில், கிடைத்த ஏமாற்றத்தில் அவர்களிடமிருந்து

ஒதுங்கி, முற்றிலுமாக விலகி, 'எங்காவது கண் காணா மல் சென்று விடலாம்' என்று முடிவுக்கு அவன் வந்த பொழுது, அவனது மனம் 'சென்னை' என்ற இடத்திற்குத் தான் முன்னுரிமை அளித்தது.

உற்ற நண்பன் யக்னேஷ் மற்றும் அவனுடன் கூட்டு சேர்ந்து தொடங்கியிருந்த தொழில் என யோசித்து சென்னைக்குப் பயணப்பட்டான்.

எந்தவித முன்னறிவிப்புமின்றி வந்து நின்ற நண்ப னுக்கு ஆறுதல் தந்ததோடு, அவன் வசதியாக தங்கு வதற்குத் தேவையான ஏற்பாட்டையும் முகம் கோணா மல் செய்து கொடுத்தான் யக்னேஷ்.

இக்கட்டு நேரத்தில் நண்பர்களிருவருமே ஒருவருக் கொருவர் உதவி செய்து கொண்டது அவர்களின் நட்பை நன்கு பலப்படுத்தியது.

தற்பொழுது மறுமுனையில் யக்னேஷ் சொல்வதைக் கேட்ட பிறகு, ''இல்லைடா! நான் வீட்டில் இல்லை. இங்கே மெஸ் வரைக்கும் வந்திருக்கேன்'' என்றான் ரிஷி.

''....''

''ஓ! அப்படியா? நீ அக்கவுண்ட்ஸை எல்லாம் அப் டேட் பண்ணி ஃபைலை எனக்கு ஷேர் செய்துடு. நான் இன்றைக்கு நைட் பார்க்கிறேன்.''

''....''

''ஓகே டா! நீ அடுத்த வாரம் யூ.எஸ். கிளம்பறியா? அங்கிருக்கிற வீடு செட்டில்மெண்ட் டீலிங்க்ஸ் பேசி முடிக்கிற வரையில் எங்கே தங்க போறே?''

''....''

''ஓ! ஓகே! உன் சிஸ்டர் அங்கே நியூயார்க்கில் தானே இருக்காங்க?''



''....''

''நோ ப்ராப்ளம்! இங்கே உன் அப்பாவுடன் சேர்ந்து ரெஸ்டாரண்டைப் பார்த்துக்கிறேன். என் சம்பந்தப்பட்ட வங்க யாராவது உன்னைப் பார்த்தால் வழக்கம் போல ரிஷி இருக்கிற இடம் தெரியாதுன்னே சொல்லு.''

''.....''

''ஹே! ஒரு நிமிஷம்! அங்கே தருணை மீட் பண்ற பிளான் இருக்கு இல்ல உனக்கு? எதுக்கும் அவன் ஊரில் இருக்கானான்னு ஒரு வார்த்தைக் கேட்டுக்கோ'' என நண்பனுடன் தன் உரையாடலை முடித்தான்.

பாத்திரங்களைத் துலக்கி வைத்து கைகளைச் சுத்தம் செய்த ராதிகா, ''யாரு, ரிஷி? நம்ம யக்னேஷா போனில் பேசினது?'' என்று விசாரிக்க ஆமோதிப்பாகத் தலை யசைத்தான் அவளது ஆருயிர் கணவன்.

''உன்கிட்டே கேட்கணும்னே நினைச்சேன்'' என்ற பீடிகையோடு, ''என்ன நீ? யக்னேஷை மட்டும் அவன் பேரு சொல்லி கூப்பிடறே? தருணை மட்டும் தருண் அண்ணா-ன்னு கூப்பிடறே?'' என விசாரித்தான்.

''எல்லாத்துக்கும் ஒரு கேள்வி வந்துட்டே இருக்குமே உங்களுக்கு?'' எனக் கேலி செய்து விட்டு,

''பார்க்கிறவங்களை எல்லாம், 'அண்ணா'ன்னு கூப் பிடணும் என்றால்... யக்னேஷை மட்டுமில்லை... உங் களையும் தான் அண்ணான்னு கூப்பிடணும். கூப்பிட் டிருக்கணுமோ?'' எனத் தலையைச் சரித்து வினவிய வளை குறுக்கிட்ட ரிஷி, ''நோ! நோ! நோ வே!'' என்று அலறினான்.

''நாம காதலிச்சு, கல்யாணம் செய்துக்கும்போது தான் எனக்கு தருண் அண்ணாவே அறிமுகம் ஆனாங்க.

அவங்களே தான் என்னை சிஸ்டர்ன்னு கூப்பிட்டாங்க. நானும் பதிலுக்கு அண்ணான்னு கூப்பிட ஆரம்பிச்சேன். போதுமா சார் விளக்கம்? மனசில் பதிய வைச்சுட்டீங் களா?'' என்றாள் தோரணையாக.

சிரிப்புடன், ''எஸ் டியர்! பாயிண்ட் நோட்டட்!'' என்று தன் தலையில் ஏற்றிக் கொள்வது போல சைகை காண் பித்தவனிடம்,

''நான் கேட்கிறேன்னு தப்பா எடுத்துக்காதீங்க'' என்ற முன்னறிவிப்போடு,

''எதுக்கு ரிஷி இப்படி பைசா விடாமல் கணக்கு வழக்கையெல்லாம் யக்னேஷ் உங்களிடம் கொடுக் கிறார்? இது தான் லாபம்னு உங்களிடம் வாய் வார்த்தை யால் சொன்னால் போதாதா?''

வெகுநாளாய் மனதிற்குள் குடைந்து கொண்டிருந்த கேள்விக்கு தயங்கித் தயங்கி விளக்கம் கேட்டாள் ராதிகா.

''அட லூசு!'' என வலிக்காமல் அவள் தலையில் குட்டு வைத்துவிட்டு,

''இதென்ன நம்பிக்கையில்லாமல் வரவு - செலவு கணக்கெல்லாம் பார்க்கிறதா நினைக்கிறியா? வெறும் நம்பர்களை நம்பறதை விட நண்பனின் வாய் வார்த் தையை முழுசா நம்பறவன் ரதி நான்!'' என்று தெளிவாக விளக்கினான்.

''அக்கவுண்ட்ஸை நானும் ஒரு தடவை பார்க்கும் போது ரெஸ்டாரண்டில் செலவைக் குறைப்பதற்கு ஏதாவது ஐடியா தோணும், ரதி.''

''.....''

இன்னமும் புரியாத பாவனையை வெளிப்படுத்தி மலங்க மலங்க விழித்தவளிடம் தொடர்ந்து,



''உதாரணத்திற்கு நீயே சொன்ன இல்ல? மெஸ்ஸில் கரண்ட் செலவு ஜாஸ்தின்னு... அதே மாதிரி தான் அங்கே யக்னேஷும் கணக்கில் மின்சாரத்துக்கான செலவை அதிகமா கொடுத்திருந்தான். அதைப் பார்த்து நான் அவனுக்கு லைட்டை எல்லாம் LED லைட்டா மாற்ற சொல்லி ஐடியா கொடுத்தேன். அது ரொம்பவே உதவியா இருந்தது. அப்படியே யக்னேஷ் ரொம்ப உற்சாகமா மற்ற வழியிலும் சோலார் குக்கர், சோலார் ஹீட்டர்ன்னு கரண்ட் உபயோகத்தைக் குறைக்க வழி பண்ணிட்டு இருக்கான்'' என அவன் எடுத்துச் சொல்ல, அவனைப் பெருமிதமாகப் பார்த்தாள் ராதிகா.

பாட்டி வீட்டிலிருந்து அவர்கள் விடைபெறும் போது, ''நீ கடைசி வரைக்கும் ராதிகாவை நல்லபடியா பார்த் துக்கணும், ரிஷி! இப்போ சமீபமா தான் அவள் முகத்தில் நான் சந்தோஷத்தையே பார்க்கிறேன். தன் மனக் கஷ்டத்தைக் கூட யாரிடமும் வெளிப்படையா சொல்ல மாட்டாள். மனசுக்குள்ளேயே வைச்சு கரைவாள். இன் றைக்கு அவள் உன்னிடம் குறும்பா விளையாடினதைப் பார்க்க எத்தனை சந்தோஷம் தெரியுமா? இந்த மன நிறைவோட கண்ணை மூடிட மாட்டோமான்னு இருந்தது'' எனக் கண்கள் பனிக்க மரகதம் சொல்ல,

மற்ற இருவருமே, ''பாட்டி...'' என 'கோரஸ்' பாடி குறுக்கிட்டனர்.

ராதிகா அவருடைய வாயை வேகமாக மூட, ''சரி...! சரி...! இதே மன நிறைவு இருந்தால் எனக்கு இன்னமும் ஆயுள் அதிகமாகும். போதுமா?'' என்று புன்னகையுடன் பேத்தியின் சிணுங்கலை அடக்கிவிட்டு,

தொடர்ந்து ரிஷியிடம், ''திரும்பத் திரும்ப சொல் றேன்னு அலுத்துக்காதேப்பா! அவளை எப்பொழுதும்

கண்ணும், கருத்துமா பார்த்துக்கோ. உன்னிடம் இந்த ஒரு வாக்கு மட்டும் தான் கேட்பேன்'' என்றார் உணர்ச்சிப் பொங்க.

மூத்தவரின் கைகளை ஆதுரமாகப் பற்றியவன், ''ஷி இஸ் மை ஏஞ்சல்! நீங்க ராதிகாவைப் பற்றி எந்தக் கவலையும் பட வேண்டாம். எந்த ஒரு நிலையிலும் அவளை நான் கஷ்டப்படுத்த மாட்டேன், பாட்டி! நீங்க சொன்ன மாதிரி கண்ணும், கருத்துமா பார்த்துப்பேன். இட்ஸ் எ ப்ராமிஸ்'' என்று உறுதியளித்த பிறகே விடை பெற்றான்.

தங்கள் இல்லத்தை நோக்கிய பத்து நிமிட பயணத்தில், ரிஷி-ராதிகா இருவருக்குமிடையேயான உரையாடலில், பாட்டி மரகதத்தின் கனிவு மற்றும் அவரது மேன்மை குணங்களே பெரும்பங்கு வகித்தன.

* * *

அவர்களது வீட்டில், அன்றிரவு மெல்லிய சத்தத்தில் வீணையின் இசை செவிகளுக்கு இதமாய் ஒலித்துக் கொண்டிருக்க, சோபாவில் கால் மேல் கால் போட்டு அமர்ந்தபடி, யக்னேஷ் அனுப்பிய வரவு - செலவு கணக்குகளை ரிஷி மடி கணினியில் மேற்பார்வையிட, அவனுக்குப் பக்கவாட்டு சோபாவில் அமர்ந்து கொண்டு தங்களது கல்யாண ஆல்பத்தில் கவனத்தைப் பதித்திருந்தாள் ராதிகா.

இருவரின் சார்பிலும் மொத்தமே முப்பது பேர் மட்டுமே கலந்து கொண்டு நடந்தேறிய மிகவும் எளிமையானதொரு வைபவம் அது!

குடும்பத்தினரை ஈடுபடுத்தாமல் விழாவின் நாயகன் - நாயகியை மட்டுமே கொண்டு நடந்தேறிய திருமணச் சடங்குகள்!



சுவையான உணவு; உறவினர் மற்றும் நண்பர்கள் மனநிறைவோடு வழங்கிய ஆசீர்வாதங்கள் என்று அந்நிகழ்வைப் பற்றிய நினைப்பே ராதிகாவிற்கு இனிமையாக இருக்கும்.

அவர்களின் திருமண ஆல்பம் மீண்டுமொரு முறை அச்சுப நிகழ்ச்சியை அவள் கண் முன் கொண்டு வந்து நிறுத்த, ஓய்வு நேரங்களில் அந்த ஆல்பத்தைப் புரட்டுவது ராதிகாவின் அன்றாட பொழுது போக்காய் அமைந்தது.

அதுவும் குறிப்பாக, திருமாங்கல்யம் அணிவித்த பிறகு ராதிகாவை, ரிஷி காதலுடன் பார்த்து, வசீகரமாய் புன்னகை சிந்தும் தருணத்தைப் படம் பிடித்திருக்கும் ஒரு புகைப்படத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டேயிருப்பாள்.

இன்றும் அதே போல இமைக்காமல் அதை ரசித்துக் கொண்டிருந்த ராதிகா, சிறிது நேரம் சென்று அந்தப் புகைப்படத்தில் ரிஷிக்கு ஒரு முத்தத்தையும் பதித்தாள்.

வீணையிசையில் லயித்தபடி கணினியில் கவனத்தைப் பதித்திருந்தவன், அந்த முத்தச் சத்தத்தில் கவனம் சிதறியவனாக அவளை நோக்கி, ''பேபி! இங்கே நான் குத்தக்கல்லா உட்கார்ந்திருக்கும் போது போட்டோவில் எதுக்குடா 'இச்' கொடுக்கறே? ஐ அம் ஆல்வேஸ் அட் யுவர் செர்வீஸ்!'' என்று கண் சிமிட்டினான்.

''இந்த ரிஷியை விட, அந்த ரிஷி ரொம்ப பிடிச்சிருக்கு'' அந்தக் குறிப்பிட்ட புகைப்படத்தைக் காட்டிக் கேலியுடன் திருப்பினாள் ராதிகா.

''அந்த ரிஷி வெறும் ரீல்! போட்டோக்கு போஸ் கொடுக்கிறதுக்காக வழியறான்! இங்கே இருக்கிறான்

பாரு ஒருத்தன்... இவன் தான் ரியல்! உனக்காகவே உருகறான்!'' என்று அவளைத் தன்னருகில் வருமாறு சைகை செய்தான்.

''நீங்க ஒழுங்கா கணக்கைப் பாருங்க'' என அவனைச் செல்லமாய் மிரட்டியவளிடம்,

''கணக்குப் பார்க்க தான் கூப்பிடறேன், பேபி! அங்கே ரீலுக்கு நீ ஒரு தடவை 'இச்' கொடுத்தால், இங்கே ரியலுக்கு நூறு தடவை 'இச்' கொடுக்கணும்!'' என்று காதல் 'பஞ்ச்' பேசினான் கணவன்.

அவன் கைகளைச் சுழற்றி பேசிய விதத்தில் வாய் விட்டுச் சிரித்த ராதிகா, விருப்பமுடனேயே அவனது மடியில் வந்து அமர்ந்து கொண்டு, ''செல்ல புஜ்ஜி!'' என்று அவன் மூக்குடன் மூக்கு உரசிவிட்டுச் சிரித்தாள்.

''புஜ்ஜின்னா?'' எனக் கிசுகிசுப்பாகக் கேட்டவனின் ஆள்காட்டி விரல் அவளது ரோஜா வண்ண இதழ்களை மெல்ல வருட, கணவனின் தோளில் சலுகையாய் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

அவளது நெற்றிப் பொட்டில் இதழ்ப் பதித்து, ''சொல் லுடா!'' என்று மேலும் ரகசிய குரலில் வினவ,

அவனது செவி மடலுக்கு அருகில் சென்று, ''புஜ் ஜின்னா... நீங்கதான்!'' என்று காதலில் அவள் உருகும் போதே, அவளது பட்டு இதழ்களைத் தன் வசமாக்கி யிருந்தான் ரிஷிவர்மன்.

நொடிகள், நிமிடங்களாய் நீண்ட பிறகு, அவள் இதழ் களை மெல்ல விடுவித்தவன் மூச்சு வாங்கிக் கொண்டு, ''ஐ லவ் யூ, ரதி!'' எனச் சொல்லி தன் புறங்கையால் ரசனையுடன் அவளது சிவந்த கன்னங்களை வருடி விட்டான்.



பதிலுக்கு அவனது கன்னத்தைக் கிள்ளி முத்தமொன்றை வைத்தவள், ''எனக்கு ஒரு சின்ன கவிதை தோணுச்சு, ரிஷி!'' தன் ஆள்காட்டி விரலால் அவனது உள்ளங் கையில் கோலம் போட,

''ஐ லவ் யூ சொல்லாமல் எப்படியெல்லாம் டிமிக்கி கொடுக்க முடியுமோ... கொடுக்கிறே?'' என அவளின் நெற்றியில் முட்டிவிட்டு, ''சொல்லு!'' என்று ஆர்வ முடன் ஊக்கினான்.

**''அதீத தித்திப்பு திகட்டும் என்ற**
**மெய்யை எப்பொழுதும் பொய்யாக்குகின்றன**
**உன் அன்பு முத்தங்கள்!!!''**

கவிதையைச் சொல்லி முடித்த பிறகு அவளது கன்னங்களில் குங்குமத்தின் செம்மையேற, கணவனின் மார்பிலேயே தஞ்சம் புகுந்தவளின் கவிதைக்கு பரிசாக, தித்திக்கும் பல முத்தங்களை, தெவிட்டாமல் வள்ளலாக வாரி வழங்கினான் ரிஷிவர்மன்.

# 4



பாட்டி மரகதம் கொடுத்திருந்த ஒரு மாத கால நிபந்தனை முடிந்து, கடந்த நான்கு தினங்களாக மீண்டும் அவர்களின் மெஸ்ஸிற்கு வேலைக்குச் செல்லத் தொடங்கி யிருந்தாள் ராதிகா.

ரிஷிவர்மன் மற்றும் ராதிகா இருவரின் தொழிலும் உணவகம் தொடர்புடையதால், அவர்களின் வேலைக்கு கால நேரம் என்பது கிடையாது காலையில் ஆரம்பிக்கும் வேலை இரவு வரை நீடிக்கும்.

ஆதலால் மரகதம், ராதிகாவை மாலை நான்கு மணியிலிருந்தே, ''இன்னமும் நீ வீட்டுக்குக் கிளம்பலையா?'' என்று நச்சரிக்க ஆரம்பித்து விடுவார்.

ஐந்து மணி வரை எப்படியாவது நேரத்தைக் கடத்தும் ராதிகாவாலும் அதற்கு மேல் அங்கிருக்க முடியாது.

எப்படியும் பாட்டி அவளைக் கிளப்பி விட்டு விடுவார் என்பதால், நம்பகமான நபரை வேலைக்கு வைத்திருக்கும் ரிஷிவர்மனும் நேரத்தோடு மாலையில் வீட்டிற்கு திரும்புவதை வழக்கமாக்கியிருந்தான்.

சில நாட்கள் மெஸ்ஸிலிருந்து இரவு உணவை எடுத்து வந்து விடும் ராதிகா, மற்ற நாட்களில் கணவனுடன் பேசியபடியே இரவு உணவைத் தயாரிப்பாள்.

அன்றும் அதே போன்றே அடுப்படியில் வேலையாய் இருந்தவள், ''யக்னேஷ் நியூயார்க் கிளம்பியாச்சா, ரிஷி? அவங்க சிஸ்டரை பார்க்கவா போறார்?'' என்று வினவினாள்.

''நாளைக்குத் தான் கிளம்பறான், ரதி. விடிய காலையில் ஃப்ளைட். நியூஜெர்ஸியில் இருக்கிற வீட்டை விற்கிற விஷயமாக தான் இந்த ட்ரிப். யக்னேஷ் வீட்டில், இந்தியா வர முடிவு செய்த பொழுது, அங்கே ஹவுஸிங் மார்க்கெட் சரியா போகலைன்னு அப்போ அதை விற்கலை. இந்தத் தடவை நியூயார்க்கில் இருக்கிற அவன் சிஸ்டர் வீட்டில் தங்குவான் போல...''

''ஓ! அவர் திரும்பிச் சென்னை வர, ஒரு மாசமாவது ஆகும்னு சொன்னீங்க இல்ல? அதுவரைக்கும் நீங்களே இங்கே சமாளிச்சுப்பீங்களா? நீங்க ஒருத்தரா கடையை பார்த்துக்கிறது கஷ்டம் தான், இல்லப்பா?''



யோசனையும் கவலையுமாக கேட்டவளிடம், ''ஒரு கடையைப் பார்த்துக்கிறதில் என்ன கஷ்டம் இருக்கப் போகுது? யக்னேஷ் இங்கே இருந்தால் மட்டும் அவனென்ன தினமுமா கடைக்கு வர்றான்? அதோட நம்பகமான ஆட்களை தான் வேலைக்கு வைச்சிருக்கோம். கூடவே எல்லாம் கம்ப்யூட்டரைஸ்ட் வேற. அதெல்லாம் நான் பார்த்துப்பேன். நீ உன்னோட மூளையில் அதையெல்லாம் போட்டு கஷ்டப்படுத்திக்காதே'' என்றவன்.

சிறு இடைவெளி விட்டு, ''அதுவே பாவம். ரொம்ப ஓவர் லோட் தாங்காது!'' சிரிப்புடன் அவளைச் சீண்டினான்.

திரும்பி கணவனைப் பொய்யாக முறைத்தவள், ''கரண்டி யார் கையில் வைச்சிருக்காங்கன்னு கூட நினைக்காமல்... பயமே விட்டுப் போச்சு உங்களுக்கு!'' கையில் பிடித்திருந்த கரண்டியை ஆட்டி ஆட்டி அபிநயம் பிடிக்க, இழுத்துச் சொருகிய புடவையிலும், அடுப்பின் சூட்டில் நெற்றியில் பூத்திருந்த வியர்வைத் துளியிலும் கூட மலர்ச்சியுடன் இருந்தவளை ரசித்துப் பார்த்தான் ரிஷிவர்மன்.

கண்ணில் குறும்புடன் அவளது வலது கரத்தைப் பிடித்தவன், ''அடடா... இதை மறந்து போனேன் பாரு!'' என்று யோசிப்பது போன்று கூறி, அவளது மணிக்கட்டில் அவசர முத்தமொன்றைப் பதிக்க,

தன் கரத்தை அவனிடமிருந்து வெடுக்கென்று உருவியவள், ''அமெரிக்காவிலிருந்து வந்த சாது பிள்ளையா நீங்க? நல்லா ஐஸ் வைக்க கத்துக்கிட்டு இருக்கீங்க!'' என்றாள் சிரிப்பை மறைத்தபடி.

''ஜில்லுன்னு ஒரு காதல்!'' என்று உல்லாசமாகக் கண் சிமிட்டியவன்,

மேடையின் மீது அமர்ந்து கொண்டு, அங்கிருந்த வெள்ளரிக்காயை அவளுக்கு ஒரு வாய் கடிக்க கொடுத்து, தானும் உண்டவாறே, ''திரும்ப நீ மெஸ்ஸுக்கு போறது உனக்கு எப்படியிருக்கு, ரதி? தேவைன்னா இன்னொருத் தங்களை வேலைக்குப் போட்டுக்கலாம்'' என்றான் அக்கறையுடன்.

''எப்பவும் பார்த்துட்டிருந்த வேலை தானே, ரிஷி? அதெல்லாம் ஒரு பிரச்சனையுமில்லை'' என்றவள்,

''குருமாவில் உப்பு சரியா இருக்கான்னு பாருங்க. இறக்கிடவா?'' என்று தன் வலது உள்ளங்கையில் சிறிது குருமாவை ஊற்றி, அதை அவனுக்கு ருசி பார்க்கக் கொடுத்தாள்.

அதை ருசித்துச் சுவைத்தவன், ''என்ன, ரதி? உப் புக்குப் பதில் சர்க்கரையைப் போட்டுட்டியா? இனிப்பா இருக்கு!'' எனவும்,

அவசரமாக கரண்டியிலிருந்த குருமாவை ருசித்தவள், ''இல்லையே? சரியா தானே இருக்கு?'' என்றாள் புரி யாமல்.

''உன் கையிலிருப்பதை டேஸ்ட் செய்து பாரு, குட் டிம்மா! செம ஸ்வீட்டா இருக்கு!'' அவன் கள்ளச் சிரிப் போடு கூற,

முகத்தில் இளநகை அரும்ப, ''அய்யே! ரொமான்ஸ் செய்ய ஒரு சான்ஸ் கிடைத்தால் போதுமே! விட மாட்டீங்களே!'' என்று கணவனின் சிகையைக் கலைத்து விட்டாள் மனைவி.



மேடையில் இருந்தபடியே கை நீட்டி மனைவியைத் தன் கால்களுக்கு இடையில் நிற்க வைத்தவன், ''ஹா... ஹா... இதுக்கெல்லாம் சான்ஸை தேடிட்டு இருக்கக் கூடாதுடா. நாமளே ஏற்படுத்திக்கணும். இல்லைனா... சான்ஸ் கிடைக்காமலே போகவும் சான்ஸ் இருக்கு'' என்று தத்துவத்தை உதிர்த்து,

''இது கூட உனக்குத் தெரியலையே, மக்கு!'' என்ற கொஞ்சலுடன் அவளை அணைத்து, அவளது கழுத்தில் முகம் புதைத்தான்.

அவர்கள் இருவரின் சிரிப்பு சத்தத்துக்கும் சிணுங் கலுக்கும் நடுவில், ராதிகாவின் அலைபேசி ஒலியெழுப்ப, அவளைத் தன் கைப்பிடியிலிருந்து விடாமலே, எட்டி அவளது அலைபேசியை எடுத்து மனைவியிடம் தந்தான் ரிஷிவர்மன்.

புன்னகை குரலில், ''ஹலோ!'' என்றவளின் உடல், அடுத்த முனையில் பேசியதைக் கேட்டு பதற, ''இதோ! இப்போவே வந்துடறோம். எந்த ஹாஸ்பிடல்?'' என்றாள் குரல் நடுங்க.

மனைவியின் உடல் மொழியையும் நடுக்கத்தையும் கண்டவன், ''என்னாச்சு ராதிகா?'' என்று பதட்டத்துடன் வினவியபடியே அடுப்பை அணைத்தான்.

''பா... பாட்டி... பாட்டி... கீழே விழுந்து மயக்கம் ஆகிட்டாங்களாம். ராமச்சந்திரா ஹாஸ்பிடலுக்கு...'' எனத் திக்கித் திணறி ஒருவாறு அவனுக்கு விவரம் சொல்லிய வளின் முகம் பயத்தில் வெளிறிப் போயிருந்தது.

''பயப்படாதே, ராதிகா. பாட்டிக்கு ஒன்றும் ஆகி யிருக்காது'' என அவளைச் சமாதானப்படுத்த முயற்சி

செய்தவாறே வீட்டைப் பூட்டி அவளையும் அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தான்.

அதுவரை அவளுக்கு தைரியம் சொல்லிக் கொண்டிருந்தவனுக்குமே அங்கே மருத்துவமனையில் பேச்சு மூச்சின்றி, காலில் பெரிய கட்டுடன், மூக்கிலும் கையிலும் ஏதேதோ குழாய்கள் பொருத்தப்பட்டு கிடந்தவரின் நிலை அதிர்ச்சியையே அளித்தது.

எழுபது வயதிலும் எப்பொழுதும் சுறுசுறுப்புடன் இருப்பவர்; சந்தன நிற பருத்தி சேலையில், திருநீறு வைத்த நெற்றி என்று எப்பொழுதும் கம்பீரத்துடன் தோற்றமளிப்பார். தலையெல்லாம் நரைத்திருந்தாலும் முகத்தில் சுருக்கம் அத்தனை இருக்காது.

இன்று அதே முகம் - வலியின் சாயலிலோ இல்லை, பார்க்கும் அவள் கண்கள் கலங்கியிருப்பதாலோ என்னவோ - வலியில் லேசாக சுழித்திருந்தது போன்று இருந்தது ராதிகாவிற்கு.

மெஸ்ஸில் வேலை செய்யும் ராஜம்மாவும், மெஸ்ஸிற்கு வழக்கமாக வரும் வாடிக்கையாளர் ஒருவரும் சேர்ந்து தான் மரகதத்தை இங்கு அனுமதித்திருந்தனர்.

மனைவியின் கரத்தைத் தன் கரத்தினுள் வைத்து அழுத்திக் கொண்டு, அவர்களிடம் விவரம் கேட்ட ரிஷிவர்மனிடம், ''படியில் ஈரம் இருந்திருக்கும் போல, ராதிகாம்மா! கரண்டும் இல்லாமல் எப்படியோ விழுந்து இருக்காங்க. நர்ஸிடம் கேட்டதற்கு, எக்ஸ்-ரே எடுத்திருக்கோம். ஆனால் எதுனாலும் உரியவங்க வந்த பிறகு தான் சொல்ல முடியும்னு சொல்லிட்டாங்க. முதலுதவி தான் செய்திருக்காங்க'' என்று ராஜம்மா தகவல் சொல்ல அவருக்கும், அவருடன் வந்தவர்க்கும் நன்றி தெரிவித்து,



அவர்களை அனுப்பிவிட்டு மருத்துவரை அணுகினான் அவன்.

மருத்துவர், ''அவங்களுக்கு இடது காலில் ரெண்டு இடத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கு. தலையிலும் அடிபட்டிருப்பதால், கன்குஷனோ இல்லை வேற எதுவும் பிராப்ளமா என்று பார்க்கணும். வேற எதுவும் காம்ப்ளிகேஷன்ஸ் இல்லை என்றால், ரெண்டு நாளில் அவங்களை நீங்க வீட்டுக்குக் கூப்பிட்டுகிட்டு போயிடலாம். அவங்களை சர்க்கரை, பிரஷர் என்று எதுவும் இருக்கா?'' என்று கேட்க, அவரின் கூற்றில் ராதிகாவின் மனம் இன்னமும் சஞ்சலமானது தான் மிச்சம்.

''ஷுகர் இல்லை, டாக்டர் ஆனால் பிரஷர் இருக்கு. மருந்து சாப்பிட்டுட்டு இருக்காங்க.''

மெல்லிய குரலில் விவரம் கூறியவளிடம், ''ஒன்றும் பயப்படாதீங்க. சரியாகிடும்'' என்று தைரியம் சொல்லிவிட்டுப் போனார் மருத்துவர்.

மரகதத்திற்கென்று கொடுத்திருந்த தனி அறையில், அவருக்கு மாவு கட்டுப் போட்டிருந்த காலைத் தடவி விட்டுக் கொண்டிருந்த ராதிகா, ''எல்லாம் என்னால் வந்தது தான். வீட்டுக்குப் போ என்று சொன்னால்... இதான் சாக்குன்னு உடனே கிளம்பி வந்துட்டேன். இன்னமும் கொஞ்ச நேரம் இருந்துட்டு வந்திருக்கணும். எல்லாம் என்னால் தான்'' என்று அவளையே திரும்பத் திரும்ப குற்றம் சொல்லிக் கொண்டிருக்க, கேட்டுக் கொண்டிருந்த ரிஷிவர்மனுக்கு அவளை நினைத்து பாவமாக இருந்தது.

அவளது தலையை ஆதுரமாகத் தடவிக் கொடுத்தவன், ''ஷ்! என்ன இது, ராதி? சின்னக் குழந்தை மாதிரி?

உன்னை நீயே வருத்திக்கிறதனால ஏதாவது உபயோகம் இருக்கா? கண்ட்ரோல் யுவர் செல்ஃப்!'' என்றான் மென்மையாக.

''இல்லை, ரிஷி! வயசானவங்க. இந்த வயசில் எலும்பு முறிவென்றால்? தலையில் வேற அடிபட்டிருக்கு. எனக்கு ரொம்ப பயமா இருக்கு. ரிஷி! ஒன்றுமாகாதுல்ல?''

கண்களில் பயத்துடன் கேள்வி கேட்டவளின் தோளை ஆறுதலாகப் பற்றியவன், ''தைரியமா இரு. உன்னோட எண்ணங்களுக்கே பெரிய ஷக்தி இருக்கு, ரதி. எப்பவும் நேர் மறை எண்ணங்களோடு மட்டுமே இரு. அதுவே அவங்களையும் குணமாக்கும். பாட்டி கண் திறந்து பார்க்கும் பொழுது, உன் அழுது வடிஞ்ச முகத்தைப் பார்த்தால் பயந்துட மாட்டாங்களா? கண்ணைத் துடை'' என்றவாறே அவளது கண்ணீரைத் துடைத்து விட்டான்.

''நான் போய் வீட்டிலிருந்து உனக்கு சாப்பாடு எடுத்து வந்துடறேன். வேற ஏதாவது வேணுமா?'' என்று கேட்டுக் கொண்டு அவன் சென்று விட, உணர்வின்றி படுத்திருந்த பாட்டியையே பார்த்துக் கொண்டிருந்தாள் ராதிகா.

ரத்த சம்பந்தம் எதுவும் இல்லையென்றாலும், பாசத்தோடு தன்னை வளர்த்தவர்கள். இன்று?

என்னதான் ரிஷி, தைரியம், நேர் மறை எண்ணம் என்று சொல்லிவிட்டாலும், மனதிலுள்ள பயத்தை அவளால் முழுதும் களைய முடியவில்லை.

இப்படி எதுவும் நடக்குமென்று தெரிந்து தான், தங்களிடம், ''இந்த மன நிறைவோட கண்ணை மூடிட



மாட்டோமான்னு இருந்தது'' எனக் கூறினாரோ என்று பரிதவித்த மனதை, அவளால் என்ன முயன்றும் அடக்க முடியாது போக, மனம் கணவனைத் தேடலாயிற்று.

அவன் அருகிலிருந்தால் போதும்; எல்லாவற்றையும் அவன் பார்த்துக் கொள்வான்.

தனியாக இத்தனை வருடங்கள் எல்லாவற்றையும் சமாளித்தவள் தான். ஆனால், இப்பொழுது அவனது அருகாமை அவளுக்கு யானை பலம் தந்தது.

ஒரு காதலன் தன்னுடைய காதலிக்குத் தரும் மிகச் சிறந்த பரிசு, அவள் துன்புறும் வேளையில் காட்டும் ஆதரவு மட்டும் தான்!

உணவும், அவர்கள் அங்கு இரவு தங்க மற்ற பொருட்களும் எடுத்துக் கொண்டு வந்தவனை எங்கும் போக விடாது தன் கண்ணிருப்பிலேயே வைத்துக் கொண்டவளுக்கு, அடுத்த நாள் காலையில், தைரியமளிக்கும் படியான வார்த்தைகளைக் கூறினார் மருத்துவர்.

''உங்க பாட்டி இன்னமும் கண் விழிக்காட்டாலும், ஷி இஸ் ஸ்டேபில் நவ். அதுவும் வலிக்காமல் இருக்க தான் மயக்க மருந்து கொடுத்து வைச்சிருக்கோம். பயப்பட ஒன்றுமில்லை'' என்று அவளது பயத்தை சிறிதளவாவது குறைத்தார்.

அவர் சென்றதும், ''ஹப்பா... இப்ப தான் உன் முகம் கொஞ்சமாவது தெளிஞ்சு இருக்கு. உங்க பாட்டியை விட நீ என்னை ரொம்ப பயமுறுத்திட்டே, ரதி'' என ரிஷிவர்மன் புன்னகைக்க, அவனைப் பார்த்து நிம்மதியான பெருமூச்சு வெளிவிட்டாள் ராதிகா.

பாட்டியின் நெற்றியை வருடி விட்டுக் கொண்டிருந்தவள், ''ம். இப்ப தான் எனக்கு கொஞ்சமே கொஞ்சம்

தைரியம் வந்திருக்கு. ரிஷி. அப்பாவும் போன பிறகு எனக்கிருந்தது இவங்க மட்டும் தான். உறவுகளே எனக்கு நிலைக்கிறதில்லை'' என்று சன்னக் குரலில் கூற,

''ஹே! அடி விழப் போகுது உனக்கு! ஏன் இப்படி யெல்லாம் பேசறே? நானில்லையா?'' என்று கடிந்தவன் அவள் காதைப் பிடித்து வலிக்காமல் திருக, கணவனை மன்னிப்பு கோரும் பாவனையில் ஏறிட்டாள் அவன் மனைவி.

அன்றைய காலைப் பொழுது, மருத்துவர் மற்றும் செவிலியர்களின் வரவால் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்க, அன்றைய இரவில் ரிஷிவர்மனின் அலைபேசிக்கு அவனது நண்பன் தருண் அழைத்தான்.

''தருண் கூப்பிடறான்'' என மனைவியிடம் தகவல் சொல்லிய ரிஷிவர்மன், பாட்டிக்குத் தொந்தரவு தராத வகையில், அறையின் மூலைக்குச் சென்று, மெல்லியக் குரலில், ''சொல்லு, தருண். எப்படியிருக்கே?'' என நண்பனை விசாரித்தான்.

''நான் இருக்கிறது இருக்கட்டும். முக்கியமான விஷயம் சொல்ல தான் உன்னைக் கூப்பிட்டேன். உன் தம்பி அர்ஜுன் இன்றைக்கு என்னைப் பார்க்க வந்திருந்தான்'' என எடுத்தவுடனேயே படபடத்தான் தருண்.

''இப்போ இதைச் சொல்ல தான் என்னைக் கூப்பிட்டியா? இப்போ என்னால் ரொம்ப நேரம் பேச முடியாது, தருண். ஏதாவது முக்கியமான விஷயமென்றால் சொல்லு. இல்லைன்னா நான் உன்னை ரெண்டு நாள் கழித்து கூப்பிடறேன்'' குரலில் உணர்ச்சியின்றி பேசும் கணவனை ஆச்சரியமாகத் திரும்பிப் பார்த்தாள் ராதிகா.



தருணின் அழைப்பென்றால் சந்தோஷமாக எடுப்பவன், இன்று ஏன் இப்படிப் பேசுகிறான்? மருத்துவ மனையில் இருக்கிறோம் என்றாலும் கூட...?

மறுபடியும் ரிஷியின் வீட்டவரைப் பற்றிய பேச்சா?

அவனருகில் சென்று நின்று கொண்டு, அவனது தோளை ஆதரவாகப் பற்றிக் கொண்டவளுக்கு, மறுமுனையில் தருண் பேசுவது தெளிவாகவே கேட்டது.

''இப்படி எடுத்தேன் கவிழ்த்தேன்னு பேசாதே, ரிஷி! நான் சொல்றதைக் கேளு. கல்யாண வேலையெல்லாம் எப்படி போகுதுன்னு நான் அர்ஜுனிடம் கேட்டதுக்கு, கல்யாணத்தை அவனே நிறுத்திட்டதா சொன்னான்டா.''

''....''

''நிச்சயப்படி இன்னமும் பத்து நாளில் நடக்க வேண்டிய கல்யாணம். அவனோட அண்ணன் - அதாவது நீ - வந்தால் தான் கல்யாணம் செய்துக்கறதா இருக்கானாம். நீ எங்கே இருக்கேன்னு எனக்குத் தெரியுமான்னு கேட்டான். நான் என்ன சொல்லி இருப்பேன்னு நினைக்கிறே, ரிஷி?''

அடக்கப்பட்ட கோபத்துடன் கேட்டவனுக்கு மறுமொழி சொல்லாமல் ரிஷிவர்மன் அமைதி காக்க, தருணே தொடர்ந்தான்.

''உனக்கு வாக்கு கொடுத்ததினால் என்னால் அவனிடம் எதையுமே சொல்ல முடியலைடா. எல்லாம் உன்னால்! அப்படி என்னடா உனக்கு கோபம்? மண்ணாங்கட்டி கோபம்! இருந்து சண்டை போட்டிருக்க வேண்டியது தானே? அதை விட்டுட்டு எங்கேயோ ஓடிப் போயிட்டு, இப்படி ஒருத்தன் கல்யாணத்தை நிறுத்த வைச்சுட்டியே?'' என்று கடுங்கோபத்துடன் கத்தியவன்.

நீண்ட பெருமூச்சை விட்டபடியே, ''ரிஷி! உன்னோட நல்லதை மட்டுமே நினைக்கிறவன்டா நான். எனக்கு உன்னையும் புரியாமல் இல்லை. ஒருத்தனோட கல்யாணம் நிற்க நீ காரணமா இருக்கலாமா? அதை உன்னால் தாங்கிக்க முடியுமா? அதுவும்... அது உன் தம்பி எனும்போது? நீ செய்ததுக்கு உனக்கொரு நியாயம் இருக்கிற அதே சமயம், அவங்க பக்கமும் ஒரு நியாயம் இருக்கலாமேன்னு யோசி'' என்று மென்மையாக எடுத்துக் கூறினான்.

''தருண்...''

''அங்கே அர்ஜுனோட நிச்சய வீட்டில் ஏதோ நடந்திருக்கு, ரிஷி. யாரோ அங்கே சொத்தைப் பற்றி பேசியிருக்காங்களாம். சொத்துக்காகவே அவங்க பொண்ணுக்கு உன்னைக் கல்யாணம் செய்து வைக்கணும் என்ற ஜாடை மாடையான பேச்சைக் கேட்டுட்டு தான் உங்க சித்தி, உனக்கு கல்யாணம் செய்துக்கவே விருப்பம் இல்லைன்னு சொல்லி இருக்காங்க. அதைத் தொடர்ந்து தான் மற்ற எல்லாப் பேச்சும் வந்திருக்கு. 'எங்களுக்குத் தெரிஞ்சதால நாங்க, அம்மாவே பேசட்டும்னு விட்டுட்டோம். அண்ணன் அதை நினைச்சு தான் வீட்டை விட்டுக் கிளம்பிட்டான் போல' என்று அர்ஜுன் ரொம்ப வேதனைப் பட்டுச் சொல்லிட்டு இருந்தான்டா.''

''......''

''அதோட என்னால் தானே அண்ணன் வீட்டை விட்டு போனான்னு சொல்லி நீ கிளம்பிய ஒரு மாசத்திலேயே அவனும் பென்ஸில்வேனியாக்கு வேலை வாங்கிட்டுப் போயிட்டானாம். நீ சொல்லாமல் கிளம்பி வந்துட்டே... அவன் சொல்லிட்டே கிளம்பி



போயிட்டான். அண்ணனும், தம்பியும் ஒரு முடிவோட தான்டா இருக்கீங்க.''

தலையை அழுந்தக் கோதிக் கொண்ட ரிஷிவர்மனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.

தான் அவசரப்பட்டு தவறு செய்து விட்டோமோ வென கலக்கமுற்றான்.

வாழ்க்கையில் எதுவும் சாஸ்வதமில்லை. காலையில் நன்றாக இருப்பவர்... மாலையில் என்ன நிலையில் இருப்பாரோ... யாரறிவார்?

அப்படியிருக்கையில், நடுவில் வரும் கோபதாபங்கள் அவசியமா என்ற எண்ணங்களுடன் கடந்த இரண்டு நாட்களாகவே வளைய வந்தவனுக்கு, இப்பொழுது தருண் கூறிய செய்தியும் சேர்ந்து கொள்ள மிகவும் குழப்பமுறலானான்.

கண்களை மூடி, நெற்றியைத் தேய்த்துவிட்டுக் கொண்டவன், ''தருண்! நான் இப்போ என்ன செய்ய?'' என்று நண்பனிடமே வினவ,

அதிலேயே மகிழ்ந்த தருண், ''நீ இதைக் கேட்க தான் நான் இத்தனை நாளா காத்திட்டு இருந்தேன். ரொம்ப சந்தோஷம்டா. அர்ஜுனிடம் பேசு. பேசினாலே பாதி விஷயம் சரியாகிடும். இந்த விஷயம் பேசினதில் இன்னொரு விஷயத்தைச் சொல்ல மறந்துட்டேன் பாரு. நான் இன்னமும் ரெண்டு நாளில் க்ரூஸ்க்குக் கிளம்பறேன், ரிஷி. வர எப்படியும் இன்னமும் ஆறு மாசமாகும். எப்போ போன் பேச முடியுமோ தெரியலை. ஆனால், அடுத்த முறை நாம் பேசும் பொழுது, நீ உன்னோட குடும்பம், எல்லோரும் ஒன்றா சந்தோஷமா இருக்கிறதைத் தான் நான் பார்க்கணும்'' என்று முடித்தான்.

இணைப்பைத் துண்டித்த ரிஷிவர்மன் கண்களில் வலியுடன் மனைவியை நோக்கி, ''நான் பெரிய தப்பு செய்துட்டேன், ராதிகா. ஏற்கனவே என்னென்ன பாவம் செய்திருந்தேனோ இப்படி குடும்பத்தை விட்டு... இப்போ கல்யாணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் காதலர்களைப் பிரிச்ச பாவம் வேற எனக்கு!'' என்று மனம் நொந்து கொள்ள,

அவனின் வேதனை தாளாத ராதிகா ஆறுதலாக அவனின் முதுகை வருடி விட்டவாறே, ''ஷ்! என்ன இது, ரிஷி? எனக்கு தைரியம் சொன்ன என்னோட ரிஷியா இது? நீங்க ஒரு பாவமும் செய்யலை. அர்ஜுனோட பேசுங்க. எல்லாம் சரியாகிடும்'' என்று சமாதானம் சொல்ல, படபடப்புடனே தன் தம்பிக்கு அழைப்பு விடுத்தான் அவன்.

நடுங்கும் விரல்களால் அலைபேசியைப் பிடித்திருந்த ரிஷிவர்மன், தொடர்பு கிடைத்தவுடன், ''ஹலோ'' என்று ஒற்றை வார்த்தையை உதிர்க்க,

''ரிஷி! ரிஷி! நீயா? உன் நம்பர் தானா இது? ரிஷி!'' என மறுமுனையிலிருந்து பதட்டத்துடன் ஒலித்தது ரிஷிவர்மனின் தம்பி அர்ஜுனின் குரல்.

சிலையாய் நின்றிருந்தவனை, ராதிகா தோளைப் பற்றி உலுக்கி உயிர் பெறச் செய்ய, தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''அர்ஜுன்...'' எனத் தயக்கத்துடன் அழைத்தான்.

தொண்டைக் குழியிலிருந்து சத்தமே வராமல், ''ரிஷி! ரிஷி!'' என்று திரும்பத் திரும்ப அந்தப் பெயரை மட்டுமே உச்சரித்த அர்ஜுன், ''நிஜமாகவே நீ தானா ரிஷி இது?'' என்றான் இன்னமும் நம்ப முடியாமல்.



''நான் தான்... அர்ஜுன். நீ எப்படியிருக்கே...?'' என்று கேட்டவனுக்கும் குரல் வெளிவரவில்லை.

''எங்கே ரிஷி போயிட்டே?'' எங்களை விட்டுட்டு எங்கே போனே?'' எனக் கண்ணீர் குரலில் கேள்வியெழுப்பியவன்,

''எங்கேடா போனே? ஏன்டா போனே? எப்படிடா போக முடிஞ்சுது?'' என்று அதையே கோபத்துடன் கத்தினான்.

அது உரிமையுள்ள கோபம்; உரிமையுள்ள இடத்தில் வரும் கோபம் தங்களை, கடந்த ஒரு வருடமாகத் தவிக்க விட்டவன் மீதெழுந்த நியாயமான கோபம்.

எங்கே இருக்கிறானோ? எப்படி இருக்கிறானோ என்று எண்ணி பதைத்திருந்தது கோபமாக வெளி வந்தது.

அதைப் புரிந்து கொண்ட ரிஷிவர்மனும், கண்களை இறுக மூடித் திறந்து, ''அதையெல்லாம் விடு. நீ எப்படியிருக்கே? அப்பா, சி... அம்மா எல்லாம் எப்படியிருக்காங்க?'' என்று சின்னக் குரலில் விசாரிக்க,

அவனது தயக்கத்தைக் கவனித்த அர்ஜுன், ''இன்னமும் உனக்கு எங்க மேலே கோபம் இருக்கு இல்ல, ரிஷி?'' என்றான் குரலில் வேதனையுடன்.

''அதெல்லாமில்லைடா'' என்று ரிஷி மறுக்கும் பொழுதே,

மறுமுனையில், ''கோபமில்லாமல் தான் ஈமெயில், ஸ்கைப், சோஷியல் நெட்வொர்க் என்று எதிலும் நாங்க உன்னைத் தொடர்பு செய்ய முடியாத படிக்கு, எங்களை ப்ளாக் செய்து வைச்சிருக்கே போல? புது ஐடியா வழியாவும் உனக்கு ரெக்வஸ்ட் கொடுக்க முடியலை'' என ஆவேசமாக கேள்வி தொடுத்தான் தம்பி.

அவனது கேள்விக்கு என்ன பதில் என்று தெரியாமல் திணறியவன், ''அதே கோபம் இன்னமும் இருந்திருந்தால் இப்போ போன் பேசியிருக்கவே மாட்டேன், அர்ஜுன்.'' என்று மெல்லிய குரலில் சமாதானம் செய்ய முயன்றான்.

''நீ இங்கே நியூஜெர்ஸியில் இருந்து உன் வேலை விஷயமா தான் கிளம்பி போயிருக்கிறதா நாங்க நினைச்சுட்டு இருந்தோம், ரிஷி. உன் லெட்டர் கிடைச்சதும் தான் நீ கிளம்பிப் போனதுக்கான காரணம் தெரிஞ்சுது. அதை லண்டனில் இருந்து போஸ்ட் பண்ணி இருக்கிறாய் என்றதும் அம்மாவும், அப்பாவும் அங்கே புறப்பட்டுப் போனாங்க. அங்கே பிரண்ட்ஸ், சொந்தம்னு எல்லா இடத்திலும் தேடினாங்க. யூ.எஸ். இந்தியான்னு மற்ற எல்லா இடத்திலும் ஆள் வைச்சுத் தேடினாங்க. ஏன் ரிஷி? எந்தக் கோபமா இருந்தாலும் எங்களைக் கேட்டு, எங்க கூடவே இருந்து சண்டை போட்டிருக்கலாமில்ல? எங்களை எந்த அளவுக்கு வெறுத்திருந்தால் முகத்திலேயே முழிக்க வேண்டாம்னு கிளம்பிப் போயிருப்பே?'' வருத்தத்துடன் கலங்கினான் அர்ஜுன்.

''ரொம்ப எமோஷனலா இருந்தேன். மனசு கேட்கலை, அர்ஜுன்'' என்று பதில் தந்தவன்,

''சொல்லு! ரொம்ப பெரிய மனுஷன் ஆயிட்டியா நீ? நான் கேள்விப்பட்டது என்ன? நியூஜெர்ஸியில் இருந்து பென்ஸில்வேனியாக்கு வேலையை மாத்திட்டியா? கல்யாணத்தை நிறுத்திட்டியாம்மா?'' எனப் பேச்சை மாற்றினான்.

''ஆமாம், ரிஷி. பென்ஸில்வேனியாக்கு வந்துட்டேன். எப்படியும் என் கல்யாணத்துக்கு நீ எங்கிருந்தாலும் வருவே... வருவேன்னு இத்தனை நாளா காத்திட்டு இருந்தேன். ஆனால் இன்னமும் பத்து நாளில் கல்யாணத்தை வைச்சுட்டிருக்கும்போது அந்த நம்பிக்கை ரொம்ப குறைஞ்சுடுச்சு, ரிஷி!''

''....''

''நீ எங்கே இருக்கே என்றும் தெரியலை. தருணிடம் கேட்டால் அவனும் ஒன்றுமே சொல்லலை. அதான் கல்யாணத்திற்கு பத்து நாள் இருக்கும் போதே, அண்ணன் இல்லாமல் கல்யாணம் செய்துக்க மாட்டேன்னு ஆஷா வீட்டில் சொல்லிட்டேன்.''

''.....''

''ஆஷாவிற்கும் வருத்தம் தான். ஆனால், எனக்காகக் காத்திருக்கிறதா சொன்னாள்...''

''எதையுமே யோசிச்சு செய்ய மாட்டியா, அர்ஜுன்?''

அண்ணனின் கோபத்தை சமாதானம் செய்ய முயன்றவனாக அர்ஜுன், ''ஆனால், அதுக்கெல்லாம் இப்போ அவசியம் இல்லையே? நீ தான் வந்துட்டியே? மறுபடியும் அவங்களிடம் இந்த விஷயத்தைச் சொல்லி கல்யாண ஏற்பாட்டைத் தொடரச் சொல்லணும். கல்யாணம் சிம்பிளா தான் செய்ய முடியும். அதனால என்ன? எப்போ கிளம்பறேன்னு சொல்லு. எந்த ஃப்ளைட் முதலில் கிளம்புதோ அதில் உடனே கிளம்பி வா'' என்று சந்தோஷத்துடன் திட்டத்தைத் தீட்டலானான்.

இவன் என்ன சொல்கிறான்? எப்படி அது சாத்தியம்? பாட்டி இருக்கும் நிலையில் அவரை விட்டுவிட்டு?

''அர்ஜுன்! போட்டதைப் போட்டபடி இப்படி திடீர்னு எல்லாம் என்னால் வர முடியாது. எனக்கு தான் உங்க

யார் மேலேயும் கோபமில்லைன்னு உனக்குத் தெரிஞ் சுடுச்சே? ஆஷாவை உடனே கல்யாணம் செய்துக்கோ. பாவம்டா அவள்! இப்படி நினைச்ச மாத்திரத்தில் கல்யாணத்தை நிறுத்தினால் எவ்வளவு நஷ்டம்? எத்தனை மனக்கவலை? எல்லாத்தையும் யோசிடா! நான் எப்போ முடியுதோ அப்போ சீக்கிரமே வர பார்க் கிறேன்'' என ரிஷிவர்மன் சொன்ன எதுவுமே அர்ஜுனின் காதில் கூட ஏறவில்லை.

கோபமில்லை... விரைவில் வருகிறேன் என்று நிஜ மாகவே சொல்கிறானோ இல்லை இப்போதைக்கு தன் திருமணத்தை நடத்துவதற்காக ஒரு பேச்சுக்குச் சொல் கிறானோ என்னவோ? யார் கண்டார்கள்?

இந்தத் தருணத்தை விட்டால் ரிஷிவர்மனை இங்கே வரவழைக்க முடியாமலே கூடப் போகலாம் என்று நினைத்த அர்ஜுன், ''அப்படி உனக்கு நிஜமாகவே அக்கறை இருந்ததுன்னா இங்கே, உடனே கிளம்பி வரப் பாரு. இல்லைன்னாலும் எப்போ வர முடியுதோ அப்போ வா. ஆனால் நீ வந்தால் தான் நான் கல்யாணம் செய் துக்குவேன். அது மட்டும் நிஜம். உன்னை ப்ளாக்மெயில் செய்றதுக்காக நான் இதைச் சொல்லலை. நீ எங்கே இருக்கேன்னு தெரியாத போதே கல்யாணத்தை நிறுத் தினவன் நான். இப்போ நீ எங்கே இருக்கேன்னு தெரிஞ்ச பிறகு, நீ வராமல் நான் எப்படிக் கல்யாணம் செய்துக்கு வேன்னு நினைச்சே?'' என்று அவனுடைய நிலையை ரிஷிக்கு புரியும்படியே எடுத்துச் சொன்னான்.

''அர்ஜுன் புரியாமல் பேசாதே! இங்கே எனக்கு நிறையப் பொறுப்புக்கள் இருக்கு. அதை விட்டுட்டு உடனே வர முடியாது. அர்ஜுன். புரிஞ்சுக்கோ.''



''ஒரு மகனாகவும், அண்ணனாகவும் உனக்குப் பொறுப்புக்கள் இருக்கு, ரிஷி'' கடினமான குரலில் கூறியவன்,

''டிசம்பர் ஏழு கல்யாண நாள். உனக்கு மறந்திருக் காதுன்னு நினைக்கிறேன். ஆங்... அப்புறம் முக்கியமா ஒண்ணு சொல்ல விட்டுப் போச்சு. குறித்த நாளில் கல்யாணம் நடக்கலைன்னா ஆஷாவோட அப்பா, எனக்கு அவரோட பெண்ணை எப்பவும் கல்யாணம் செய்து தரப் போறதில்லைன்னு மிரட்டியிருக்கார். அதையும் சொல்லிட்டேன். அப்புறம் உன்னிஷ்டம்'' என ரிஷிவர்மனுக்கு மேலும் குற்ற உணர்ச்சியைத் தூண்டுமளவிற்குப் பேசினான்.

தம்பி பேசியதைக் கேட்டு ரிஷிவர்மன் பல்லைக் கடிக்க, மறுமுனையில், ''அம்மா, அப்பாகிட்டேயும் பேசேன், ரிஷி. உன் குரலைக் கேட்டால் அவங்க ரொம்ப சந்தோஷப் படுவாங்க. இல்லாட்டி எனக்கு இப்போ டிஸ்ப்ளே ஆகுதே? அந்த நம்பரைக் கொடுத்து அவங்களையே உனக்குப் பேசச் சொல்றேன். ஓகேவா?'' என அடுத்த கோரிக்கையை முன் வைக்க,

''உனக்கு என்னுடைய காலிங் கார்ட் நம்பர் தான் டிஸ்ப்ளே ஆகும்னு நினைக்கிறேன். அதில் வேற சார்ஜ் கம்மியா தான் இருக்கும். இன்றைக்கே அம்மா, அப்பாக்கு ஈமெயில் அனுப்பிடறேன், அர்ஜுன்'' என்று தம்பியிடம் வாக்குறுதி அளித்தே பேச்சை முடித்தான்.

தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்த கண வனைக் கண்ட ராதிகாவிற்கு, 'அவனை என்ன சொல்லித் தேற்றுவது?' என விளங்கவில்லை.

அர்ஜுன் பேசிய அனைத்தும் அவளது செவியிலும் விழ தான் செய்திருந்தது.

அவன் மீதும் குற்றம் சொல்ல முடியாது. தன் அண்ணன், தன்னுடைய திருமணத்திற்கு வர வண்டுமென்ற அவனது நினைப்பை எப்படிக் குறை கூறுவது?

அர்ஜுனைப் பற்றி புரிந்து கொண்டவளுக்கு அவள் கணவனின் நிலையும் புரிந்து தான் இருந்தது.

குனிந்திருந்த ரிஷியின் தலையைக் கோதியவாறே, ''ரிஷி...'' என்று அவள் மெல்ல விளிக்க,

''அவன் பேசினதை நீ கேட்டுட்டு தானே இருந்தே, ராதிகா? எப்படி உளறினான் பாரு? ஒரு பெண்ணோட வாழ்க்கை அவனுக்கு அவ்வளவு லேசா போயிடுச்சா? கல்யாணத்திற்குப் பெண்ணும், மாப்பிள்ளையும் இருந்தால் போதாதா? நான் எதுக்கு வெட்டியா? லூசுத்தனமா பேசிட்டு இருக்கான்.''

''புரியுது, ரிஷி.''

''இவன் இப்படி பேசறதை எப்படி எங்க வீட்டில் கேட்டுட்டு இருக்காங்க? ஆஷாவிற்கு கஷ்டமா இருக்காதா? அவங்க வீட்டில் எப்படி ஃபீல் செய்வாங்க? அவள் காத்திட்டு இருக்கிறதா சொன்னாளாம்... இவனும் சரின்னு சொன்னாராம்!''

''டென்ஷன் ஆகாதீங்கப்பா!''

''இப்போ நான் அவனோட பேசலை என்றால் என்ன செய்திருப்பான்? யோசிக்கவே மாட்டானா?'' என்று சீற்றத்துடன் பொரிந்தான்.

அந்தச் சீற்றம் அவனது அக்கறையினாலும், இயலாமையினாலும் வந்தது என்று புரிந்தவளுக்கு கண்கள் கலங்கியது.



மனைவியின் பதிலை எதிர்பாராமல் ரிஷிவர்மனே தொடர்ந்து, ''போரூரிலிருந்து பூந்தமல்லி போறதுன்னு நினைச்சுட்டான் போல... இங்கேயிருந்து அமெரிக்கா போறது. டிக்கெட் கிடைக்கணும்; அப்படியே டிக்கெட் உடனே கிடைச்சாலும், பாட்டி இப்படி ஹாஸ்பிடலில் இருக்கும் போது நாம எப்படிப் போறது? கொஞ்சமாவது அறிவு வேண்டாம்?'' என்று படபடத்தவனுக்கு அவனுடைய மனைவியைப் பற்றியோ இல்லை தனக்குத் திருமணம் நடந்ததைப் பற்றியோ அர்ஜுனிடம் தெரிவிக்கவில்லை என்பது சுத்தமாக நினைவில்லை.

பேச்சின்றி தன் மென்மையான தொடுகையின் மூலமே அவனுக்கு ஆறுதல் அளிக்க முயன்ற ராதிகா யோசனையில் ஆழ்ந்தாள்.

அடுத்த நாள் காலையிலேயே திரும்பவும் அர்ஜுனிடமிருந்து இன்னமும் ஒன்பது தினங்களே திருமணத்திற்கு உள்ளது என்று நினைவுறுத்தும் மின்னஞ்சல் வர, அதைப் பார்த்து முந்தைய தின இரவை விட ரிஷிவர்மன் இன்னமும் கோபமாகிப் போனான்.

காலை மாலை என இரு வேளையும் விடாது, அர்ஜுன் ரிஷிக்கு மின்னஞ்சல் மூலம் தூது விட்டுக் கொண்டேயிருக்க, ஒரு கட்டத்துக்கு மேல் ராதிகாவாலும், அவள் கணவனின் நிலையைப் பார்க்க முடியவில்லை.

மரகதம் பாட்டிக்கு சுயநினைவு வந்து விட்டாலும், அவர் இன்னமும் மருத்துவமனையிலேயே தான் இருந்தார்.

அங்கே அவருடனேயே ராதிகா உதவிக்குத் தங்கி விட, ரிஷிவர்மன் தான் அவனுடைய கடை, மெஸ், வீடு, மருத்துவமனை என்று அலைந்து கொண்டிருந்தான்.

மரகதம் உறங்கிக் கொண்டிருந்த வேளையில், ''ரிஷி! இங்கே வாங்க, வந்து உட்காருங்க'' என்று ரிஷியின் கையைப் பிடித்து தன்னருகில் அமர வைத்த ராதிகா, ''நான் சொல்றதை நிதானமா கேளுங்க, ரிஷி. தருண் அண்ணா சொன்ன மாதிரி அர்ஜுன் கல்யாணம் உங்க ளால் நடக்கலை என்றால் உங்களால் தாங்க முடியாது. நீங்க சொன்ன மாதிரி அந்தப் பாவமும் நமக்கு வேண் டாம். அதனால...'' என்று தயங்கி நிறுத்தி அவனது முக மாற்றத்தை கவனித்தாள்.

''அதனால...?'' என்று நெற்றியில் முடிச்சு விழ கேட்டு நிறுத்தினான் ரிஷிவர்மன்.

''அதனால... அர்ஜுன் கல்யாணத்திற்கு நீங்க போயிட்டு வாங்க'' என்று அவள் முடிப்பதற்குள்,

''புரியாமல் பேசாதே, ராதிகா! பாட்டி இப்படி இருக் கும்போது நாம எப்படிப் போறது?'' என்றான் கடுப்புடன்.

''நான் இங்கேயே இருக்கேன். இருங்க... நான் சொல்லி முடிச்சுடறேன். பாட்டியை வீட்டுக்குக் கூப்பிட்டுக் கிட்டுப் போன பிறகும், அவங்களை விட்டு என்னால் அந்தப் பக்கம், இந்தப் பக்கம் நகர முடியாது. அதனால நான் வர்றது இப்போதைக்குச் சாத்தியப்படாது, ரிஷி. நீங்க, உங்க தம்பி கல்யாணத்தை முடிச்சுட்டு வாங்க. பாட்டி பூரண குணமானதும் நாம ரெண்டு பேரும் இன் னொரு முறை போயிட்டு வரலாம்'' என்றவளை முறைத்துப் பார்க்க மட்டுமே முடிந்தது அவளது கணவனால்.

தம்பி ஒரு புறம், கட்டிய மனைவி ஒரு புறமென்று இருவரும் மாறி மாறி ஓதியதில், அவனின் முழு சம் மதமின்றியே, ரிஷிவர்மன் அமெரிக்கா கிளம்ப, கடைசி நேர டிக்கெட் வாங்க மற்றும் இதர எல்லா ஏற்பாடுகளும் செவ்வனே நடந்தேறியது.



# 5



'உங்க தம்பி அர்ஜுன் கல்யாணத்திற்கு நீங்க போய் தான் ஆக வேண்டும்!' என்று ரிஷிவர்மனைக் கட்டாயப் படுத்திய ராதிகாவிற்கு, அவன் அமெரிக்கா கிளம்புவது உறுதியானதிலிருந்தே ஏதோ இனம் புரியாத உணர்வு இருந்து கொண்டே தானிருந்தது.

சரி... இது தங்களுக்குத் திருமணமானதும் வரும் முதல் பிரிவு... அதனால் தான் இப்படி என்று அவ ளையே சமாதானப்படுத்திக் கொண்டவளுக்கு, அவன் கிளம்புகிற நாள் வரையில் கூட அந்த உணர்வு அடங்க மறுத்தது.

உள்ளுணர்வை மொழி பெயர்க்கும் அசாதாரண திறன் மட்டும் ராதிகாவிற்கு இருந்திருந்தால், ரிஷியை வெளிநாட்டிற்குப் போகாமல் தடுத்து நிறுத்தியிருப் பாளாய் இருந்திருக்கும்.

விமான நிலையத்திற்கு புறப்பட இன்னமும் ஒரு மணி நேரமே மிச்சமிருக்க, மனைவியைத் தன் கையிருப்பி லேயே வைத்துக் கொண்டு, ''ரதி! நான் அடுத்த வாரமே இங்கே வந்துடுவேன்'' என்று மெல்லிய குரலில் ரிஷி வர்மன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே, கண் ணீர் வடிக்கத் தயார் நிலையில் இருப்பது போல ராதிகா வின் முகம் வாட்டத்தை வெளிப்படுத்தியது.

''அதுவரைக்கும் எந்த ஒரு காரணத்துக்காகவும் என் ரதி அழக்கூடாது; வேளா வேளைக்கு வயிறார சாப்

பிடணும்; புருஷனையும் எப்போவாவது நினைச்சுக் கணும்; என் ரதி சமத்து பொண்ணா அவள் உடம்பையும் பார்த்துக்கணும்; அப்பப்போ உன் பஜ்ஜிகிட்டே போன் பேச நேரம் ஒதுக்கிக்கணும்...'' என்று அவளது வெண்டை விரல் ஒவ்வொன்றையும் மடக்கி விட்டபடியே கணவன் சொன்னதைக் கேட்டு, 'களுக்' என்று சிரித்தாள் அவனது மனைவி.

'என்னத்துக்கு சிரிப்பு?' என்பது போன்று ஏறிட்டவ னிடம், ''பஜ்ஜிகிட்டே போன் பேசணும்னு சொன்னீங் களே? வாழைக்காய் பஜ்ஜிகிட்டே பேசணுமா... இல்லை... வெங்காய பஜ்ஜியிடமான்னு யோசிச்சேன். சிரிப்பு வந்தது'' எனக் கண்களை மலர்த்தினாள்.

''அன்றைக்கு நீ தானே என்னைப் பஜ்ஜின்னு சொல்லி கொஞ்சினே?''

புன்னகையைப் பெரிதாக்கி, ''சுத்தம்! அது பஜ்ஜி யில்லை, ரிஷி. புஜ்ஜி!'' எனத் திருத்தம் செய்தாள்.

''புஜ்ஜி! புஜ்ஜி!'' என்று இரண்டு முறை சொல்லிக் கொண்டு மனதில் நிறுத்திக் கொண்டவன், ''ஓகே! அப் பப்போ உன் புஜ்ஜிகிட்டே போன் பேச நேரம் ஒதுக்கிக் கணும்!'' என சொல்லி அவளது சுண்டு விரலை மடக்கி விட்டான்.

''போன தடவை அந்த பாயிண்ட் சொல்லும் போது என் கட்டை விரலை தான் மடக்கிவிட்டீங்க'' எனச் சிணுங்கலாய் அவள் நினைவூட்ட,

''அடடா... ரதிஈஈஈஈ! முடியலை... ஏதோ ஒரு விரலை மடக்கறேன். எந்த விரலை மடக்கறேன் என்பதா இப்போ முக்கியம்? என்ன சொல்றேன் என்பது தான்



முக்கியம்!'' என மனைவியின் நெற்றியில் செல்லமாய் முட்டினான்.

''நீங்க என்னைப் பற்றியே நினைச்சுட்டு இருக்காமல், அங்கே, அர்ஜுன் கல்யாணத்தில் எல்லோரிடமும் கலகலப்பா இருக்கணும். அவங்களிடம் பழைய விஷயங் களையெல்லாம் பேசி சங்கடத்தை ஏற்படுத்தாதீங்க, ரிஷி.''

''உன்னை நினைக்காமல் இருக்கிறது தான் ரொம்ப கஷ்டம், ரதி! ஐ வில் மிஸ் யூ!'' என்றபடியே அவளது காதோரத்து கேசத்தைக் கோதி விட்டான்.

அதைத் தொடர்ந்து இருவருக்குமிடையே எந்த சம்பாஷணையுமின்றி சில கணங்கள் கரைய, ''இதுக்கு முன்னாடியும் பிசினெஸ் விஷயமா தனியா ட்ரிப் போயிட்டு வருவது வழக்கம் தான். ஆனாலும் இந்தத் தடவை கிளம்பும் போது, புது மாதிரியா ஏதும் ஒரு தவிப்பு இருந் துட்டே இருக்கு. என்னன்னு சொல்ல வரலை'' மெல் லிய குரலில் கூறிய ரிஷி, அவளைப் போன்றதொரு மனநிலையே தனக்கும் இருப்பதாகப் படம் பிடித்துக் காட்டினான்.

அவனை ஆச்சர்யமாகப் பார்த்தவள், ''எனக்கும் அப்படித் தான் இருக்கு, ரிஷி. நமக்கு கல்யாணமான பிறகு இப்போ தான் முதல் தடவை ட்ரிப் போறீங்க, இல்ல? அதனால் தான் இப்படி இருக்கோ என்னவோ?'' என்றாள்.

''ம்... இருக்கலாம்!''

''....''

''நீ கேட்ட மாதிரி நம்ம டெலிபோன் டைரியில் முக்கியமான போன் நம்பர்ஸ், பின் நம்பர்ஸ் ப்ளஸ்

முக்கியமான பாஸ்வேர்ஸ்ட் எல்லாம் எழுதி வைச்சிருக் கேன். பார்த்துக்கோ. பீரோ லாக்கரில்தான் ஏ.டி.எம். கார்ட் இருக்கு. நைட் இங்கே தனியா தங்க வேண்டாம்டா. அங்கே பாட்டியோட தங்கிக்கோ.''

பொறுப்பான கணவனாக மனைவிக்கு வேண்டிய தகவல்களை ஏற்கனவே தந்திருந்தாலும், மீண்டுமொரு முறை அதை அவள் மனதில் பதித்தான்.

''ம்...'' என்ற ஒற்றைச் சொல்லுடன் ஆமோதிப்பாய்த் தலையசைத்து, கண்ணீரை மறைப்பதற்காக அவள் கண்களைத் தாழ்த்திக் கொள்ள,

''ஐ லவ் யூ!'' என்று சொல்லி அவளது தாடையைப் பிடித்து நிமிர்த்தி, அவளது கண்களில் இதழ் ஒற்றி எடுத்தான்.

விழிகளில் நிரம்பிய கண்ணீருடன், ''பத்திரமா போயிட்டு வாங்க, ரிஷி!'' என்று முழுதாகச் சொல்லி முடிப்பதற்குள் அவளுக்கு கண்களில் அருவி வழிந்தது.

விமான நிலையத்திலிருந்து விடை பெறும் வரை யிலும் கூட அடுத்து வரும் ஒரு வாரப் பிரிவை எண்ணி வருந்தியவளுக்கு, தன்னால் முடிந்த அன்பான ஆறுதல் வார்த்தைகளைத் தந்து மனைவியைத் தேற்ற முயற் சித்தான் ரிஷிவர்மன்.

இறுதியாக, ''நீ இப்படி உம்முன்னு இருந்தால் எனக்குக் கிளம்பறதுக்கே மனசு வராது, ரதி. என்ன ஆனாலும் பரவாயில்லைன்னு நான் இங்கேயே இருந் துடுவேன்'' என்று மிரட்டலாகச் சொல்லவும் தான், அவளின் அழுகை ஒரு வழியாக நின்றது.

விமானத்தில் ஏறி அமர்ந்தவனுக்கு, ''உங்க போனுக் காக காத்துட்டே இருப்பேன், ரிஷி. போய் சேர்ந்ததும்



முதல் வேலையா எனக்கு போன் செய்துடுங்க. கல்யாண வீட்டில் பிஸியா இருப்பீங்கன்னு தெரியும் தான். குறைஞ்சது அஞ்சு நிமிஷமாவது தினமும் உங்க குரல் கேட்டால் ரொம்ப சந்தோஷப்படுவேன்'' என்று காதலுடன் மொழிந்த மனைவியின் வார்த்தைகளே அவன் செவியில் ரீங்காரமிட்டன.

கண்களை மூடி உறங்க முயன்றவனின் நினைவலை களில் ராதிகாவின் முகமே மின்னலாய் வந்து போனது.

பாட்டிக்கு உடல்நிலை தேறியிருந்தால் ராதிகா வையும் தன்னுடனேயே அழைத்து வந்திருப்பான். ஆனால் அவனது போதாத வேளை! அதற்கு சாத்திய மில்லாமல் போய்விட்டது.

அர்ஜுனையாவது சமாதானப்படுத்தலாம் என்று அவனிடம் பேச முயன்றால், அவன் எந்தவித பேச்சு வார்த்தைக்கும் தயார் நிலையில் கூட இல்லை.

எல்லோருடைய சந்தோஷமும், நிம்மதியும் தான் முக்கியம் என்ற எண்ணத்தின் விளைவாக ராதிகாவும், ரிஷிவர்மனும் இந்த ஒரு வார பிரிவை மனமில்லாமல் ஏற்றனர்.

'ஒரு வாரம் தானே?' என்ற கேள்வியைக் கேட்டே மனைவியைப் பல முறை தேற்றியவனுக்கு, விமானத் தில் ஏறிய பத்தாவது நிமிடமே 'ஒரு வாரமா?' என்று பெரும் மலைப்பாய் இருந்தது.

'கண்களை மூடி திறப்பதற்குள் ஒரு வாரம் சிட்டாய் பறந்து விடும்'' என்று சமாதானம் சொல்லியவனுக்கே இப்பொழுது தேவைப்படும் போல இருந்தது!

இடது உள்ளங்கையை விரித்து வைத்தவன், மற் றொரு கரத்தால் அதன் ஒவ்வொரு விரலாய் மடக்கி

விட்டுக் கொண்டு, ராதிகாவுடனான உரையாடலை அசைபோட... சிறிது நேரத்தில் தன்னுடைய செய்கையை எண்ணி தானே சிரித்துக் கொண்டான்.

அவனது புத்திக்கு அது சிறுபிள்ளைத்தனமாய்த் தோன்றினாலும், இந்த விளையாட்டு அவனுடைய மனதிற்குப் பிடித்தமானதாகவே இருந்தது.

அது காதலுக்கே உரிய ஷக்தி போல!

மனைவியின் நினைவுகளுடனே பயணம் மேற்கொண்டவனுக்கு அவளெழுதிய கவிதை ஒன்றும் ஞாபகத்திற்கு வந்து, அவனது தனிமைக்கு இனிமை சேர்த்தது.

**உன்னிடம் மட்டுமே**
**கற்றுக் கொள்ள வேண்டும்...**
**விழிகளால் பேசும் மொழியை...**
**மௌனத்தால் கலைக்கும் (மன) அமைதியை...**
**இதழ்களால் இதயத்தை மீட்டும் வித்தையை...**
**வெறும் விரல்களால் கூட கோலமிடும் கலையை...**
**இவற்றை எத்தனை முறைக் கற்றாலும்**
**'மீண்டுமொரு முறை' உன்னிடம் மட்டுமே**
**புதிதாகக் கற்றுக் கொள்ள வேண்டும்!**

அடுத்த பத்து மணி நேரத்தில் லண்டன் ஹீரோ விமான நிலையத்தை ரிஷிவர்மன் வந்தடைந்திருக்க, நியூஜெர்ஸிக்கு புறப்படும் அடுத்த விமானத்தில் ஏற இன்னமும் மூன்று மணி நேரங்கள் இருந்தது.

விமான நிலையத்திலிருந்த பேசியை உபயோகித்து ராதிகாவை அழைத்தவன், அவளின் 'ஹலோ'விலேயே சந்தோஷம் அடைந்து, ''ரதி! ரதிம்மா! நான் தான்டா!''



என்று தன் காதல் முழுவதையும் குரலில் தேக்கி வைத்துப் பேசினான்.

''ரி...ஷி!'' என்று மறுமுனையில் ஒலித்த குரலிலேயே தன் மனைவியும் தன்னை நினைத்து தவித்திருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டான்.

இருவருமே தங்களது உணர்ச்சிகளின் பிடியிலிருந்து மீண்டு தங்களைத் தாங்களே நிலைப்படுத்திக் கொள்ள சில கணங்கள் எடுத்துக் கொண்ட பிறகு, ''ரிஷி! அதற்குள் அங்கே போயாச்சா? இன்னமும் பத்து மணி நேரமாவது ஆகும்ன்னு நினைச்சுட்டு இருந்தேனே!'' என்று கேள்விகளை அடுக்கினாள்.

''இல்லைடா! லண்டன் ட்ரான்ஸிட்டில் கொஞ்சம் டைம் இருந்தது. அதான் உனக்கு பேசலாம்னு கூப்பிட்டேன்'' என்று அவளுக்கு பதில் தந்தவன்,

''இன்றைக்கு ஃப்ளைட்டில் வரும்போது எத்தனை முறை என் கை விரலை மடக்கி, மடக்கி விளையாடினேன் தெரியுமா? கையே வலிக்குது...! யூ மேக் மீ க்ரேஸி, ரதி!'' என்றான் உருகலாய்.

''உங்களை விட நான் மோசம், ரிஷி! ஏர்போர்ட்டில் இருந்து வந்த பிறகு, பொட்டு தூக்கமில்லை. நிமிஷத்துக்கு நாலு தடவை போனை செக் பண்ணிட்டே இருந்தேன்.''

''மை ஸ்வீட் பேபி! நான் கூட என்ன நினைச்சுட்டேன் தெரியுமா? ரியல் இருக்கும் போதே ரீலை தான் பார்த்துட்டு இருப்பாள் நம்ம பொண்டாட்டி... அதனாலே இந்த ஒரு வாரத்துக்கு ரீலுக்கு தான் ஏகபோக வாழ்வுன்னு நினைச்சுட்டு இருந்தேனே?'' என ராதிகாவை ரசனையுடன் சீண்டினான்.

''உங்களுக்கு கொழுப்பு ஜாஸ்தியாகிடுச்சு! இருங்க... ரியல் பக்கத்தில் இருக்கும்பொழுதுகூட நான் இனி ரீலையே கொஞ்சிட்டு இருக்கேன்!'' என்று அவள் குறும்புடன் மிரட்ட,

''சரி... சரி! ரீலோ.. ரியலோ.. எல்லா புகழும் இறைவனுக்கே மாதிரி, எல்லா கொஞ்சலும் ரிஷிக்கே!'' என்று சிரித்தவன்,

''காலையில் பாட்டியை வீட்டிற்கு அழைச்சுட்டு வந்தாச்சா? இப்போ எப்படி இருக்காங்க?'' என மரகதத்தைப் பற்றி குசலம் விசாரித்தான்.

''ம்... இன்றைக்கு ஒரு நாள் வலி நிவாரணி மாத்திரை கொடுக்கிறதை நிறுத்தி பார்த்துட்டு நாளைக்கு டிஸ்சார்ஜ் செய்யலாம்னு டாக்டர் சொன்னார். ப்ரெஷர் தொடர்ந்து மானிடர் செய்யணும்னு சொன்னாங்க.''

''ஓ!''

''அப்புறம் பாட்டிக்கு தலையில் அடிபட்டிருந்ததுன்னு ரெண்டு மூணு ஸ்கேன் எல்லாம் எடுத்தாங்க, இல்ல? அதற்கான டெஸ்ட் ரிசல்ட் எல்லாம் வந்துடுச்சு - ஒன்றும் பயப்படும்படியா இல்லை, ரிஷி! அதை கேட்க நிம்மதியாக இருந்தது.''

''ஓ! நைஸ்!''

''காலையில் தான் கொஞ்சம் பேச ஆரம்பிச்சிருக்காங்க. உங்களைப் பற்றி விசாரிச்சாங்க. தம்பி கல்யாணத்திற்காக கிளம்பிப் போய் இருக்கிறதா சொன்னேன். கடைசி நேரத்தில் கிளம்பியதால் எனக்கு டிக்கெட் கிடைக்கலைன்னு சொல்லி சமாளிச்சேன்.''



''ம்... கரெக்ட் தான்! அவங்களுக்காக தான் நீ என் கூட கிளம்பி வரலை என்றால் அதை அவங்களாலே ஏற்றுக்கவே முடிஞ்சிருக்காது.''

மேலும் சில நிமிடங்கள் பேசிவிட்டு, ''அங்கே நியூ ஜெர்ஸி சேர்ந்ததும் உனக்கு பேசறேன். வைச்சுடவா?'' என்று சொல்லி விடைபெற்றான்.

அவனின் தாய் - தந்தைக்குத் தன் இருப்பிடம் தெரிய வந்தால், உடனே அடுத்த விமானம் பிடித்து வந்து விடுவார்கள் என்பதை நன்கு அறிந்திருந்த ரிஷிவர்மன், அவன் சென்னையிலிருக்கும் விஷயத்தை அவர்களிடம் இப்போதைக்கு சொல்ல வேண்டாம் என்று அர்ஜுனிடம் ஏற்கனவே சொல்லி வைத்திருந்தான்.

தம்பியின் திருமண நேரத்தில் தேவையற்ற அலைச்சல் வேண்டாம் என்று கருதி தான் தம்பியிடம் இந்த விஷயத்தை சொல்ல வேண்டாம் என்று குறிப்பிட்டது.

கண்டிப்பாக அர்ஜுனின் திருமண வைபவங்களுக்கு நேரில் வந்து கலந்து கொள்வதாக அம்மா, அப்பா, தம்பி ஆகிய மூவருக்கும் ஒரு மின்னஞ்சல் மட்டுமே அனுப்பியிருந்தான்.

அதற்கே, 'உன்னிடமிருந்து தகவல் வந்ததில் சந்தோஷம். நீ எங்கிருக்கிறாய்? எப்படியிருக்கிறாய்? நீ ஏன் இங்கிருந்து சென்றாய்?' என்று பல கேள்விகளைத் தாங்கி அவனுக்குப் பதில் கிடைக்கப் பெற்றது.

அனைத்துக் கேள்விகளுக்கும் அங்கு வந்து பதில் சொல்வதாக அவற்றிற்கு அவன் அப்போதைக்கு முற்றுப் புள்ளி வைத்திருந்தாலும், தினமும் குசலம் விசாரித்து இவனுக்கு ஒரு மின்னஞ்சலை அவர்கள் அனுப்பிக் கொண்டுதான் இருந்தார்கள்.

கடைசி நிமிடம் வரையில் விமானப் பயணச்சீட்டு உறுதி செய்யப்படவில்லை என்பதால் அர்ஜுனிடம் தனது பயண விவரங்களைத் தெரிவிக்காமல் வைத்திருந்தான்.

மேலும் திருமண வேலைகளுக்கு இடையே அவனைத் தொந்தரவு செய்யாமல், தம்பிக்கு ஒரு இனிய அதிர்ச்சி கொடுக்கலாம் என்று அவன் எண்ணியிருந்ததும் மற்றொரு காரணம்!

பழக்கப்பட்ட ஊர் என்பதால் அவனே விமான நிலையத்திலிருந்து ஒரு வாடகை காரை எடுத்து ஓட்டிச் சென்று, மற்ற மூவரும் எதிர்பாராத தருணத்தில், எந்தவித முன்னறிவிப்புமின்றி போய் நின்று, அவர்களைச் சந்தோஷப்படுத்த வேண்டும் என்ற முடிவில் புறப்பட்டிருந்தான் ரிஷி.

அவன் திடுதிப்பென்று எதிரே போய் நிற்பது மட்டும் அவர்களுக்கு ஆச்சரியமாயிருக்கப் போவதில்லை; அவனின் திருமணம் விஷயம் கூட அவர்களுக்கு ஆச்சரியத்தைத் தான் அளிக்கப் போகிறது.

இவன் அமெரிக்கா கிளம்புவது உறுதியானவுடனேயே, அவன் பெற்றோரிடம் நேரிலேயே விஷயத்தைச் சொல்வதென்று ராதிகாவும் ரிஷியும் கலந்து பேசியது தான்.

''இந்தத் திருமண விஷயம் போனில் சொல்லக் கூடிய விஷயமும் இல்லை. நேரில் பார்த்ததும், முதல் வேலையா நம்ம விஷயத்தைச் சொல்லிடறேன், ரதி. முடிஞ்சால் அவங்களையும் கூட்டிகிட்டே வரேன்'' என்று மனைவியிடம் சொல்லியிருந்தான்.



அத்தோடு ரிஷி தொலைபேசியிலோ, மின்னஞ்சலிலோ தன் திருமணத்தைப் பற்றி சொல்லியிருந்தாலுமே அதை அவர்கள் நம்பியிருப்பதும் கடினம் தான்.

இப்பொழுது விஷயத்தைச் சொன்னதும் அதிர்ச்சி, ஆச்சரியம், அர்ச்சனை எல்லாம் எதிர்பார்க்கலாம்.

திருமணத்தை எங்களிடம் சொல்லாமல் ஏன் செய்தாய் என்று உரிமையுடன் திட்டினாலும் பொறுத்துத் தான் ஆக வேண்டும். வேறு வழி?

அம்மா - அப்பா இருவரையும் தன்னுடனேயே சென்னைக்கு அழைத்து வந்து ராதிகாவைச் சந்திக்க வைக்க முயற்சிக்க வேண்டும்.

இப்படி பல யோசனைகளுடன் நியூஜெர்ஸியை வந்தடைந்த ரிஷிவர்மன், முதல் வேலையாய் தான் பத்திரமாக வந்தடைந்த தகவலை ராதிகாவிடம் தெரிவித்தான்.

அவனது உடைமைகள் வரத் தாமதமாகும் என்பதால் விமானச் சேவை புரிந்தவர்களே உடைமைகள் வந்ததும், தங்கள் பொறுப்பில் வீட்டில் வந்து ஒப்படைப்பதாகத் தெரிவிக்க, கையில் கொண்டு வந்த பெட்டியுடன் வாடகை வாகனங்களிருக்கும் புறம் நோக்கி நகர்ந்தான்.

* * *

ராதிகா தன் கணவனிடம் பேசி, முழுதாக நான்கு நாட்கள் பறந்தோடி விட்டிருந்தன.

பத்திரமாக வந்தடைந்து விட்டதாக விமான நிலையத்திலிருந்து தகவல் தந்ததோடு சரி. அதன் பிறகு எந்த அழைப்பும் அவனிடத்திலிருந்து வரவில்லை.

இந்த நான்கு நாட்களில் பாட்டியை மருத்துவமனையிலிருந்து அழைத்து வந்தாகி விட்டது; மெஸ்

பணிகளை மேற்பார்வையிடும் பணியைத் தொடர ஆரம்பித்தாகி விட்டது;

இயந்திரமயமாய் இயல்பு நிலைக்கு அவள் திரும்பினாலும், அவளது மனம் ரிஷிவர்மனை எண்ணி தவியாய்த் தவித்தது.

அர்ஜுனின் திருமண ஏற்பாடுகளில் ரிஷி தீவிரமாக மூழ்கியிருப்பான் என்று வைத்துக் கொண்டாலுமே, 'எனக்காக ஒதுக்க அவனிடம் ஒரு ஐந்து நிமிடம் கூட அவகாசமில்லையா?' என்று அவளது உள்ளம் சண்டி பண்ணியது.

அமெரிக்க நேரத்திற்கும், இந்திய நேரத்திற்குமிடையே இருக்கும் பத்தரை மணி நேர வித்தியாசம் காரணமாக தான் ஒரு வேளை ரிஷி தன்னை அழைக்கவில்லையோ?

ஏன் தன்னுடைய மின்னஞ்சலுக்குக் கூட எந்தவித பதிலையும் அனுப்பவில்லை? மின்னஞ்சலைப் பார்க்கும் சந்தர்ப்பமே இல்லையோ?

திடீர் சீதோஷ்ண மாற்றத்தினால் உடல் நலக்குறைவு ஏற்பட்டு விட்டதா?

அர்ஜுன் திருமணத்தில் எதுவும் பிரச்சனையா?

ஒருவேளை அவர்கள் வீட்டில் ரிஷிக்குத் திருமணமானதை ஏற்றுக் கொள்ளவில்லையா?

வெவ்வேறு கேள்விகளும், குழப்பங்களும் அவளைச் சூழ்ந்து அவளது நிம்மதியைக் கெடுத்தது.

ராதிகாவிற்கு ஒரு நிலைக்கு மேல் ரிஷியிடம் பேசாமல் பைத்தியமே பிடித்துவிடும் போலிருக்க, அவனிடமிருந்து பெற்றிருந்த தொடர்பு எண்களிலிருந்த நியூ ஜெர்ஸி வீட்டு தொலைபேசிக்கு அழைத்தாள்.



முதல் இருமுறையும் யாருமே அழைப்பை எடுக்காமல், நேரடியாக தொலைபேசி தகவல் கருவிக்குத் தான் அழைப்பு சென்றது.

என்ன விவரம் சொல்வதென்று விளங்காமல், 'நான் ராதிகா பேசறேன். ரிஷியிடம் பேசணும்' என்று மட்டும் சொல்லி வைத்து விட்டாள்.

இதற்குள் ரிஷி தங்களது திருமணம் பற்றி அவனின் வீட்டவர்களிடம் சொல்லியிருப்பான் என நினைத்திருந்தவள், ராதிகா என்று சொன்னாலே, ரிஷியின் மனைவி என்று புரிந்து கொள்வார்கள் என்று உறுதியாக எண்ணியிருந்தாள்.

மூன்றாவது முறை இவளது அழைப்பை யாரோ ஒரு மூத்த பெண்மணி எடுக்க, ''ரிஷிவர்மனிடம் பேச முடியுமா?'' என்று கேட்டதற்கு, ''இப்பொழுது முடியாது!'' என்று விட்டு பேசியை வைத்து விட்டார்கள்.

''ஹலோ...! ஹலோ...!'' என்று இவளது அலறல் வீணாய்ப் போனது தான் மிச்சம்!

தருணை அழைத்து விவரம் கேட்கலாம் என்று அவனது எண்ணிற்கு அழைத்தால் அதுவும் தகவல் கருவிக்குத் தான் சென்றது.

அமெரிக்காவில் வசிக்கும் மனிதர்களைப் பேச அழைத்தால், இயந்திரத்துடன் தான் பேச வேண்டியதாகி விடும் போல எனச் சலித்துக் கொண்டு தருணின் பணியிடத்து எண்ணைத் தொடர்பு கொண்டாள்.

'தருண் படேல்' என்ற பெயரை இவள் குறிப்பிடவும், அவன் அடுத்த ஆறு மாதங்களுக்கு கப்பலிலுள்ள பணி நிமித்தமாகச் சென்றிருப்பதாகத் தெரிவித்ததோடு,

அலுவலக விதிமுறைப்படி அவனது தொடர்பு எண்ணையும் வழங்க முடியாது என்று தெரிவிக்க, ராதிகாவிற்கு கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போன்றிருந்தது.

அவனது சகோதரி ராதிகா சென்னையிலிருந்து அழைப்பு விடுத்ததாகவும், இவளது தொடர்பு எண்ணிற்கு தருணை அழைப்பு விடுக்கச் சொல்லியும் அவர்களிடமே கோரிக்கை வைப்பதற்குள்ளாகவே அவளுக்குக் கண்ணீர் முட்ட, துரிதமாகத் தொடர்பைத் துண்டித்தாள்.

தான் எடுத்த முயற்சிகளில் அடைந்த தோல்வியைப் பற்றி மனம் தளராமல், யக்னேஷின் வீட்டிற்கு சென்று அவனது அமெரிக்க தொடர்பு எண்ணைப் பெற்றாள்.

ஆனால் ரிஷிவர்மன் நியூஜெர்ஸிக்குப் பயணப்பட்ட விவரத்தையே ராதிகா தான் யக்னேஷிடம் தெரிவிக்க வேண்டியதாய் இருந்தது.

''ஓ! ரிஷி இங்கே வந்திருக்கிறதே எனக்கு நீங்க சொல்லித் தான் தெரியும். என்கிட்டே அவன் பேசலையே?''

''அர்ஜுன் கல்யாணம்னு திடீர்னு தான் கிளம்ப வேண்டியதாகிடுச்சு. யக்னேஷ். நீங்க அவங்க வீட்டுக்குச் சென்று அல்லது யாருக்காவது போன் செய்து ரிஷி பற்றி விசாரிக்கிறீங்களா, ப்ளீஸ்?'' எனக் கெஞ்சும் குரலில் கோரிக்கை வைத்தாள்.

''ஓ! கட்டாயம் செய்யறேன். எதுக்கு ப்ளீஸ் எல்லாம் போடறீங்க? நீங்க பேசும் போதே சரியான பதில் வரலை என்றால் நான் பேசும் போதும் சரியான பதில் வருமான்னு தெரியலை. எனக்கு ஒரு வாரம் டைம் கொடுங்க நேரிலேயே அவங்களைப் போய் பார்த்துட்டு வந்து



உங்களிடம் சொல்றேன்'' என்று மறுமுனையில் தெம்பளிக்கும் விதமாய்ப் பேசினான் யக்னேஷ்.

''ஒரு வா...ர...மா?' என்று மலைத்தவள், ''இன்னமும் நாலு நாளில் ரிஷி ஊரிலிருந்தே கிளம்பினாலும் கிளம்பிடுவார், யக்னேஷ். அவர் நல்லாயிருக்காரான்னு தெரிஞ்சுக்கணும். அவ்வளவுதான்'' என்றவளின் குரல் உணர்ச்சிப் பெருக்கில் கரகரத்தது.

''நீங்க பயப்படற மாதிரியெல்லாம் ஒன்றும் ஆகியிருக்காது, ராதிகா. எனக்கு கொஞ்சம் வேலையிருக்குன்னு தான் ஒரு வாரம்னு சொல்றேன். அதை வேற சீக்கிரம் முடிக்கணும்.''

''எனக்குப் புரியுது, யக்னேஷ். உங்களுக்கு ரொம்ப தொந்தரவு கொடுக்கிறேன் போல....''

''இல்லை... அதெல்லாமில்லை...'' என்றவன் ஒரு சின்ன யோசனைக்குப் பிறகு, ''நான் கட்டாயம் விசாரிச்சுட்டு உங்களிடம் பேசறேன்'' என்று உறுதியளித்தான்.

வாடிய முகத்துடன் சோர்வாக வளைய வந்தவளைப் பார்த்த பாட்டி, ''என்னம்மா? ரிஷிகிட்டேயிருந்து எதுவும் தகவல் வந்ததா?'' என்று விசாரித்தார்.

கண்கள் எங்கோ வெறிக்க, ''ஆங்...! அவருக்கு நேரமே கிடைக்கலை போல... தம்பி கல்யாணம்னு காலில் சக்கரத்தைக் கட்டிக்கிட்டு சுத்தறார்...'' பாட்டிக்கு சமாதானம் சொல்லும் விதமாய் தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்.

''ம். கல்யாணம்னா சும்மாவா? வேலை தான் நெட்டியைக் கழட்டுமே?'' என்று பேத்தியின் கருத்தை ஆமோதித்துவிட்டு,

"உன்னை ஏன் ரிஷி அங்கே அழைச்சுட்டுப் போகலை? விசேஷத்துக்கு நீயும் போயிருக்கலாமில்ல?" என்று விவரம் கேட்டார்.

"அமெரிக்கா என்ன நம்ம வீட்டுப் பக்கத்திலா பாட்டி இருக்கு? நினைச்சவுடனே போயிட்டு வர?"

"அதற்காக கொழுந்தன் கல்யாணத்துக்கு கூடவா போக முடியாது?! எனக்காக இருந்தியா?"

"இல்லை, பாட்டி!" என்று அவசர அவசரமாக மறுத்தவள், "உங்களிடம் தான் ஏற்கனவே டிக்கெட் கிடைக்கலைன்னு சொல்லியிருந்தேனே?" என மீண்டும் தான் சொன்ன பொய்யை நினைவு கூர்ந்தாள்.

"இருக்கும்... இருக்கும். என் கால் உடைஞ்சு நான் படுக்காமல் இருந்திருந்தால் அன்றைக்கே உனக்கும் டிக்கெட் கிடைச்சிருக்கும். நீயும் இப்படி கரண்டியையே வெறிச்சு வெறிச்சு பார்க்காமல் இருந்திருப்பே" என்று பாட்டி சொல்லியதில் 'நீ சமாளிப்பது எனக்குத் தெரியாமலில்லை' என்ற பொருள் மறைந்திருந்தது.

"ஒரு வாரத்தில் வந்துடுவாங்க, பாட்டி!" என்றாள் முழு நம்பிக்கையுடன்.

"அது சரி! ஆனால் நீ தான் அஞ்சு நாளிலேயே இப்படி சோர்ந்துட்டியே? இன்னமும் ரெண்டு நாள் உனக்குத் தாங்குமா?" என்று கூர்மையானப் பார்வையுடன் ராதிகாவின் முக பாவனையை ஆராய்ந்தார்.

ரிஷியின் தம்பி திருமணம் என்பது திடீரென்று உறுதியாகி துரித கதியில் நடந்தேறும் விசேஷமாக இருக்குமா என்பதிலேயே அவருக்கு முதல் சந்தேகம்.



ஏனெனில் தம்பியின் திருமணத்தைப் பற்றிய எந்தவொரு குறிப்பையும் அவரை மருத்துவமனையில் சேர்ப்பதற்கு முன் இவர்கள் சொல்லவேயில்லையே?

சரி, அப்படியே திடீர் பயணம் மேற்கொள்ள வேண்டிய இக்கட்டு ரிஷிக்கு ஏற்பட்டது என்றாலுமே, ராதிகாவை அவன் உடன் அழைத்துச் செல்லவில்லை.

சென்னையிலிருந்த வரையில் ராதிகாவிற்கு இரண்டு மணி நேரத்திற்கொரு முறையாவது ரிஷியிடமிருந்து அலைபேசியில் அழைப்பு வந்து விடும்; ஆனால் இந்த ஐந்து நாட்களில் ஒரு முறை கூட ராதிகா, ரிஷியிடம் பேசி இவள் அறியவில்லை.

தான் மருத்துவமனையிலிருந்து திரும்பிய பிறகு, தன்னிடம் நலம் விசாரிக்காமல் ரிஷி இருக்க மாட்டான் என்பதை உறுதியாக நம்பினார்.

ஆனால் இவரது நம்பிக்கை ராதிகாவின் வட்டாரத்தில் சற்றே ஆட்டம் கண்டது.

ஒரு விஷயத்தை உண்மை என்று மனிதனின் மனம் ஒப்புக் கொள்ளும் வரை அவனுக்கு விதம் விதமானக் கேள்விகளும், தேவையற்ற கற்பனைகளும் பிறக்கின்றன.

'ராதிகா-ரிஷி இருவருக்குமான இந்தப் பிரிவு தன்னால் தானோ?' என்று உள்ளூர ஒருவித கவலை அவரை ஆட்கொண்டிருந்தது.

மருத்துவமனையில் அவரைச் சேர்த்திருந்த பொழுது இரவு பகல் பாராமல் நான்கு நாட்கள் தன்னுடனேயே ராதிகா இருந்து கவனித்துக் கொண்ட காரணத்தால் ரிஷிக்கும், ராதிகாவிற்கும் வாக்குவாதம் ஏற்பட்டு, வார்த்தைகள் தடித்திருக்குமோ?

தான் கவலைப்படுவோம் என்பதினால் பேத்தி தன்னிடமிருந்து உண்மையான காரணத்தை மறைக்கிறாளோ என்று வருத்தம் கொண்டார்.

ராதிகா அப்படி வெடுக்கென்று பேசும் பெண்ணல்ல என்றாலுமே... அவரது கற்பனை, அவருக்கு கலவரத்தை உண்டு பண்ணியது.

ஒரேயொரு வாரம் தான் என்று தன்னைத் தேற்றும் பேத்திக்கு அதே ஒரு வாரம் மலைக்க வைக்கிறதோ?

இன்னமும் இரண்டு நாட்கள் தாங்குமா என்று கேட்பவருக்கு என்ன பதில் சொல்வதென்பது தெரியாமல், ''நீங்களா எதையாவது நினைச்சுக்கறீங்க, பாட்டி'' என அலுத்துக் கொண்டாள் பேத்தி.

''உனக்கு ஏதாவது ஒத்தாசையா இருப்பேன்னு தான் உங்கப்பா என்னை ஊரிலிருந்து கூப்பிட்டு வந்து கவனிச்சுக்கிட்டான். இப்போ நானே உனக்கு பாரமா இருந்துட்டேனே?'' என்று மனமே கேளாமல் புலம்பித் தீர்த்தார் மரகதம்.

''ஏன் பாட்டி இப்படியெல்லாம் பேசிட்டு?''

''ஒரு மாசமா துருதுருன்னு சிரிச்ச முகமா வளைய வந்த பொண்ணு, இப்படி ரெண்டே நாளில் சோர்ந்துட்டியே? எல்லாம் என்னால தானே, ராதிகா?'' என்று தன் பேத்திக்காக மருகினார்.

நல்வார்த்தைகள் மூலம் பாட்டிக்குத் தேறுதல் சொன்னவளின் உள்ளம் அவளது கணவனின் குரலுக்காகவும், அவனுடைய நலத்தை அறிவதற்காகவும் ஏங்கியது.

மேலும் இரண்டு நாட்கள் நத்தை வேகத்தில் நகர கவலையில் மிகவும் சோர்வுற்றாள் அவள்.



அவளது சோர்வைப் போக்கும் விதமாய் யக்னேஷிடமிருந்து அழைப்பு வந்தது. ஆனால்... அது நல்லதொரு செய்தியைத் தான் தாங்கி வரவில்லை.

# 6



கடந்த ஒரு வாரமாக தன் கணவன் ரிஷிவர்மன் தன்னை அழைப்பான்... அழைப்பான் என்று காத்திருந்து, காத்திருந்து ஏமாந்து போனாள் ராதிகா.

அவனுக்கு என்ன வேலையோ என்னவோ என்று முதலில் சாதாரணமாக எடுத்துக் கொண்டபொழுதே, அவனது குரலைக் கேட்காமல் அவளுக்கு ஒரு வேலையும் ஓடவில்லை.

ஆனால் இப்பொழுதோ, இதோ இன்று அவன் தன்னை அழைப்பான், நாளையாவது கண்டிப்பாக அழைப்பான் என்று கண்களில் உயிரைத் தேக்கி வைத்துக் கொண்டு காத்திருந்தவளுக்கு, நாளாக... நாளாக கண்டிப்பாக அவனுக்கு ஏதோ ஆகி விட்டதென்று நெஞ்சம் பதறியது.

அவனை உள்ளும், புறமும் நன்றாக அறிந்திருந்தவளுக்கு அவன் நிலை மட்டும் சரியாக இருந்திருந்தால், கண்டிப்பாக ஒரு சில நிமிடங்கள் எடுத்தாவது, அவனின் நலனைக் குறித்து தனக்கு தெரியப்படுத்தாமல்... தன் நலன் குறித்து தெரிந்து கொள்ளாமல் அவனால் இருக்க முடியாது என்று சர்வ நிச்சயமாகத் தெரியும்.

கணவனிடம் தான் நேரடியாகப் பேச முடியவில்லை... அவன் தொடர்புடைய யாரிடமாவது பேசி விஷயத்தை அறியலாமென்று முயற்சித்தவளுக்கு அதற்கும் வழி யில்லாமல் போக, யக்னேஷின் மூலமாகவாவது ஏதாவது தகவல் வருமென்று மிகவும் எதிர்பார்த்திருந் தாள்.

இதற்கிடையில் ரிஷியிடமிருந்து தகவல் எதுவும் வந்ததா என்று பாட்டி வேறு கேட்க, அவருக்கு என்ன பதில் சொல்வதென்று இவளுக்குப் புரியவில்லை.

ரிஷிவர்மனின் நண்பன் யக்னேஷிடம் கேட்டிருப்ப தாக பாட்டியிடம் அவள் சொல்ல, ''ஆமா! அவன் சொல்ற துக்குள்ளே உன் புருஷன் வந்துடுவான். நாளைக்குத் தானே ரிஷி திரும்பி வர்றதா சொன்னே?'' என்று கேட்டார் பாட்டி.

அவன் வந்துவிட்டாலே போதும் என்றிருந்த ராதிகா வின் தலையில் இடியாக இறங்கியது அன்று பகலில் வந்த யக்னேஷின் அழைப்பு.

சம்பிரதாயமான குசல விசாரிப்புகள் கூட இன்றி, ''ரிஷியைப் பார்த்தீங்களா, யக்னேஷ்? ரொம்ப வேலையா அவருக்கு? இங்கே கிளம்ப ரெடி ஆயிட்டாரா? அதே ஃப்ளைட் தானே?'' என்று ஆர்வமும் பரபரப்புமாக வின வியவளின் ஆசையில் மண்ணை அள்ளிப் போட்டது யக்னேஷின் பதில்.

''ராதிகா... அது...'' என்று அவன் தயங்கி இழுக்கும் போதே இங்கே ராதிகாவின் உடலில் ஒருவித நடுக்கம் பரவ,

''ஏன்... என்...னாச்சு யக்னேஷ்?'' என்றாள் வெளி யவே வராத குரலில்.



''தைரியமா இருங்க, ராதிகா!'' என்று சொன்னதி லேயே அவளது தைரியம் மொத்தத்தையும் அழித்து விட்டு,

''ரிஷி... ஏர்போர்ட்டில் இருந்து வீட்டுக்குப் போகும் போதே... பெரிய விபத்து நடந்திருக்கு'' என்று இன்ன மும் அவன் தொடர்ந்து கூறியதை முழுதும் கேட்கும் நிலையில்லை அவள்.

''ரிஷி!'' என்ற தீனமான அலறலுடன் மயங்கி சரிந் திருந்தாள்.

'ஹலோ! ஹலோ!' என்று யக்னேஷ் கத்தியதோ, இல்லை தொடர்பைத் துண்டித்து பின் அவனே மீண்டும் அழைத்ததோ எதுவுமே எட்டாத நிலையில் இருந்தவள், தானாக சுய நினைவு பெற்று, நான்கு கால்களில் தவழ்ந்த படியே பதட்டத்துடன் கீழே கிடந்த அலை பேசியைத் தேடி எடுத்த பொழுது யக்னேஷிடமிருந்து நான்கைந்து அழைப்புகள் வந்திருந்தன.

கண்கள் அருவியாய்ப் பொழிய, நடுங்கிய கரத்தோடு அவனை மீண்டும் அழைத்தவள், ''ரிஷி! ரிஷி! இப்போ எப்படி இருக்கார்? எப்படி? என்ன ஆச்சு? பயப்படும்படி ஒன்றுமில்லை தானே, யக்னேஷ்?'' என்றாள் உயிரைக் கையில் பிடித்தபடி.

''நியூஜெர்ஸியில் போன வாரம் பயங்கர பனிப் பொழிவு. இருட்டு வேளை. ஹெவி ட்ரக் ஒன்று ஸ்கிட் டாகி மோதியதில், இவன் ஓட்டிட்டு வந்த கார் நல்ல டேமேஜ். இவனுக்கு தலை, உடம்பெல்லாம் நல்ல அடி'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்க, சுவற்றில் சாய்ந்து அமர்ந்திருந்தவளுக்கு தேகம் முழுக்கப் பதறியது.

ஹெவி ட்ரக் என்றால்... ஐயோ! கடவுளே!

கண்ணீர் வழிய, அதைத் துடைக்கக் கூடத் தோன்றாமல், ''உ..யிர்...'' என்றவளுக்கு முழுதையும் கேட்கக் கூட முடியாமல் வார்த்தைகள் திக்க, யக்னேஷிற்குமே பாவமாக தான் இருந்தது.

சில கணங்கள் நீண்ட அமைதியைக் கலைத்து, ''அதெல்லாம் பயமில்லை. நீங்க எதையாவது போட்டுக் குழப்பிக்காதீங்க'' என்றான் தொண்டையைச் செருமிக் கொண்டு.

அவன் கூறியதில் முழு சமாதானம் அடையாமல், ''எனக்கு அவரை உடனே பார்க்கணும். நான் இப்போவே கிளம்பி வரேன்'' என்றாள் நடுங்கும் குரலில்.

''ராதிகா! கண்ட்ரோல் யுவர்செல்ஃப்! அவங்க அம்மா, அப்பா என்று இங்கே எல்லோரும் அவனைக் கவனிச்சுக்க மாட்டாங்களா? நீங்க வந்து என்ன செய்யப் போறீங்க? நினைச்சவுடன் கிளம்பி வர மாதிரியா இருக்கு நிலைமை?''

என்ன பெரிய நிலைமை? என் நிலை தெரியாமல் என்ன பேசுகிறான் இவன்?

அதற்குள் தன்னை ஒரு நிலைக்குக் கொண்டு வந்திருந்தவள், ''இருக்கட்டும்! ரிஷி எப்படி இருக்கார் என்று நேரில் பார்க்காமல் என்னால் இங்கே நிம்மதியா இருக்க முடியாது. ஒவ்வொரு விஷயத்திற்காகவும் உங்களோட போன் காலுக்காக காத்திட்டே இருக்கவும் முடியாது. நான் இன்றைக்கே டிக்கெட்டுக்கு பார்க்கிறேன்'' என்று தீர்மானமாகக் கூற,

''ப்ச்! ராதிகா! டி.வி. நியூஸ் பார்க்கிறீங்களா இல்லையா? இங்கே கிழக்கு பகுதியில் எல்லாம் இந்த வாரம்



பெரிய சூறாவளி காற்றை வானிலை அறிக்கை மையம் அறிவிச்சு இருக்காங்க. விமானங்களை எல்லாம் ரத்து செய்யப் போறதா சொல்லிட்டு இருந்தாங்க. நீங்க இதற்கு நடுவில் கிளம்புனீங்க என்றால் உங்களைப் பற்றிய கவலையை வேற சேர்த்து படணும். கொஞ்சம் பொறுத்துக்கோங்க. ரிஷிக்கு எந்த ஆபத்தும் இல்லை'' என்று யக்னேஷ் கூற, அவன் சொன்னதை முழுதும் ஏற்கும் மன நிலையிலில்லை அவள்.

தன்னைச் சமாதானப்படுத்த சொல்கிறானோ என்னவோ?

இங்கே, இத்தனை மைல் தூரத்தில் இருப்பவளுக்குத் தெரியவா போகிறது என்ற நம்பிக்கையில் சொல்கிறானோ? இல்லை, இவளை வேறு எதற்குக் கலவரப்படுத்த வேண்டுமென்று நினைத்து சொல்கிறானோ?

எதுவாக இருப்பினும் தன் கண்ணாலேயே தன் கணவன், நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருக்கிறான் என்பதைப் பார்க்காவிடில் இவளால் ஒரு வாய் தண்ணீர் கூட நிம்மதியாகப் பருக முடியாது போன்று தோன்றியது.

அவனிடம் சம்மதித்தும் ஒன்றும் சொல்லாமல், மறுப்பாகவும் ஒன்றும் கூறாமல், ரிஷியைப் பற்றி மேலும் துருவித் துருவி விவரம் கேட்டு விட்டே அலைபேசியை வைத்தாள்.

அடுத்து விமான டிக்கெட்டிற்கான ஏற்பாட்டில் இறங்க, அங்கே உள்ள கால நிலை பற்றி யக்னேஷ் கூறிய யாவும் உண்மை என்று தெரிய வரவும் அடுத்து என்ன செய்ய என்று புலப்படவில்லை அவளுக்கு.

கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போன்று உணர்ந்தவள், கண்களை மூடி ஆயாசமாக இருக்கையில் சாய்ந்தாள்.

ரிஷி... ரிஷி... என்று அவனையே அவளது மனம் தேடியது.

மூடிய விழிகளிருந்தும் கண்ணீர் சொரிய, அவனிடம் பறந்து செல்லத் துடித்த மனதை அதன் போக்கில் போகவிட்டு, அவனது நினைவுகளில் மூழ்கினாள்.

மனதின் வேகம் கால்களுக்கு இருந்தால் எத்தனை நன்றாக இருக்கும்? இந்நேரம் அவனருகில் அவனுக்குத் துணையாக இருந்திருக்கலாமே?

அழுகையை அடக்கப் பார்த்தும் முடியாமல், அவளது தொண்டையிலிருந்து பெருத்த கேவல் எழும்ப, அவனது தலையணையைக் கட்டிக் கொண்டு தேற்றுவார் யாருமின்றி தேம்பலானாள்.

போகமாட்டேன் என்றவனை அடம் பிடிக்காத குறையாக தான் அனுப்பி வைத்திருக்கக் கூடாது!

கடவுளே! ரிஷிக்கு ஒன்றுமாகக் கூடாது! நல்ல ஆயுளோடு நூறாண்டுகள் அவன் நலமாக இருக்க வேண்டும்! இருப்பான்!

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, சுவற்றில் மாட்டியிருந்த காக்கும் கடவுளான பெருமாளைக் கோபமான விழிகளால் உறுத்தவள், அந்தப் படத்தோடு மானசீகமாக என்ன பேசினாளோ?

'உன்னை நம்பி தான் அவரை அனுப்பினேன்! பத்திரமா திரும்ப அவரை என்னிடமே கொண்டு வந்து சேர்ப்பது உன் பொறுப்பு!' என்று மிரட்டினாளோ?

ராதிகாவை அவளது நினைவுகளோடும், கோபத்தோடும், பரிதவிப்போடும் இருக்க விடாமல், அவளது அலைபேசி அழைக்க, திரும்ப யக்னேஷ் தானோ என்னவோ என்று பாய்ந்து போய் எடுத்தாள்.



பாட்டி தான் அழைத்திருந்தார்.

''என்னம்மா? போய் ரொம்ப நேரமாச்சே? இன்னமும் உன்னைக் காணலையேன்னு தான் கூப்பிட்டேன்'' என்று அவர் கூற, அப்பொழுது தான் அவள் இருப்பது, தங்களின் வீட்டில்... மெஸ்ஸில் இல்லை என்று புரிந்தது ராதிகாவிற்கு.

நல்லவேளை இவள் உடைந்து அழுததைப் பாட்டி பார்க்கவில்லை!

ஏற்கனவே வயதானவர், ரத்த அழுத்தம் வேறு இருக்கிறது. இது மாதிரி என்று தெரிந்தால் தாங்க மாட்டார்.

குரலைச் சிரமப்பட்டு சரி செய்து கொண்ட ராதிகா, ''இதோ வந்துட்டேன், பாட்டி கொஞ்சம் ஒதுக்கி வைக்க வேண்டியது இருந்தது'' எனச் சமாளித்துவிட்டு,

''இப்போ தான் ரிஷியோடு பேசினேன். பாட்டி, திடீர்னு இந்தியாக்கு அவர் கிளம்பி வந்ததாலே, அங்கே இப்போ அவர் செய்ய வேண்டிய வேலை நிறைய இருக்காம். அதனாலே நாளைக்கு அவர் வர்றதா இருந்ததைத் தள்ளிப் போட்டு இருக்காராம், பாட்டி. என்னிடம் அதை எப்படிச் சொல்றதுன்னு யோசிச்சு, இத்தனை நாள் தயங்கிக்கிட்டே இருந்தாராம்'' என்று மூச்சு விடாமல் ஒருவாறு கோர்வையாகச் சொல்லி முடித்தாள்.

''அடடா! அதுக்காக பேசாமலே இருப்பானா அவன்? எப்போ வருவான் என்று எதுவும் சொன்னானா, ராதிகா?'' என்று கேட்டவருக்கு என்ன சொல்ல முடியும் அவளால்?

''கூடிய சீக்கிரமே பத்திரமா திரும்ப வந்துடறதா சொன்னார், பாட்டி!'' என்றவள், அதற்கு மேல் அவருக்கு

கேள்வி கேட்க சந்தர்ப்பம் அளிக்காமல், இன்னமும் சிறிது வேலையிருப்பதாகச் சொல்லி அழைப்பைத் துண்டித்தாள்.

மெஸ்ஸிற்குத் திரும்பச் சென்ற பிறகும் கிடைத்த இடைவெளியில், எல்லா விமானச் சேவை நிர்வாக அலுவலகத்திற்கும் அழைப்பு விடுத்து, பயணச் சீட்டு குறித்து விசாரித்த வண்ணமிருந்தாள்.

லண்டன் வரைக்குமான விமானத்தில் டிக்கெட் கிடைத்தாலும், அதன் பின்பு அமெரிக்காவின் கிழக்கு பிராந்தியத்தில் எல்லா போக்குவரத்தையும் தற்காலிக மாக நிறுத்தி வைத்திருப்பதாக தகவல் கிடைக்க, மீண்டும் மீண்டும் முயற்சித்த வண்ணமே இருந்தாள்.

எப்பொழுதும் கைப்பேசியும், கையுமாகவே இருந்த பேத்தியைக் கண்ணுற்ற பாட்டி, ''என்னம்மா? ரிஷி நல்லாயிருக்கானா? எப்போ வர்றதா சொல்றான்?'' என்று கவலையுடன் கேட்டவர்,

''இங்கே என்னை யாராவது பார்த்துக்க மாட்டாங்களா? பேசாமல் நீயும் அவனுடனே கிளம்பி போயிருந்திருக் கலாம்'' என்று தினமும் புலம்புவதையே இப்பொழுதும் புலம்பினார்.

எதையோ இழந்தது போன்று எப்பொழுதும் சோக மயமாக காட்சியளித்த ராதிகாவின் முகத்தைப் பார்க்கப் பார்க்க, அவருக்கு தன்னால் தானே என்ற குற்ற உணர்வு மிகுந்து எழுந்தது.

அவரை யோசனையுடன் ஏறிட்ட ராதிகா, ''ரிஷியும் அதையே தான் சொல்றார், பாட்டி எப்போ அங்கே வேலை முடியும்னு தெரியலையாம். அதனால, உங்களைப் பார்த்துக்க ஒரு நர்சை ஏற்பாடு செய்துட்டு, என்னைக் கிளம்பி வரச் சொல்றார்'' என்று தயக்கத்துடன் இழுத் தாள்.



தன்னை நம்புபவரிடமும் இப்படிப் பொய் மேல் பொய்யாக உரைக்கிறோமே என்ற குற்ற உணர்ச்சி இருந்தாலும், அவளாலும் அப்போதைக்கு செய்யக் கூடியது வேறொன்றுமில்லை.

யாருக்கும் கெடுதலின்றி, மற்றவர்களின் மனம் நோகாமல் காக்கும் பொய்யும் நன்மை தானே?

தீர்வு கிடைத்த சந்தோஷத்துடன், ''நானும் அதையே தான் சொல்றேன். நீயும் கூட போய் இருந்து, செய்ய வேண்டிய வேலையை நல்லபடியா முடிச்சுட்டு, பொறு மையா வா. உன் புகுந்த வீட்டு மனுஷங்க எல்லோரும் உன்னைப் பார்த்த மாதிரியும் இருக்கும். வெளி நாட்டில் எப்படி எப்படியோன்னு கேள்விப் படறோம். ரிஷி நல்லவன் தான். இருந்தாலும்... கட்டிய புருஷன் ஓரிடம், நீ ஓரிடமென்று இருக்காதே, ராதிகா'' என்று மரகதம் சொல்ல, நிம்மதியான மூச்சை வெளியிட்டாள் பேத்தி.

ராதிகாவின் அன்றாட வேலைகளுடன், மரகதத்திற்கு செவிலி பெண்ணைத் தேடும் முயற்சி ஒரு பக்கம், மெஸ்ஸை இவள் வரும் வரையில் ஒழுங்கு படுத்தும் பணி ஒரு பக்கம், விமானப் பயணச் சீட்டிற்கு அலையும் கட்டாயம் ஒரு பக்கம். இத்துடன் யக்னேஷிடம் அவள் கணவனைப் பற்றிய தகவலறிய தொலைபேசி தொடர்பு என்று நாலா பக்கமும் பம்பரமாகச் சுழன்றாள் அவள்.

இதற்கிடையில் தன் கணவனைப் பற்றிய அவளது வருத்தத்தையும், பயத்தையும் பாட்டிக்குத் தெரியாமல் மறைக்கும் வேலை என மிகவும் சோர்ந்து போனாள்.

இப்படியே அந்த வாரம் செல்ல, அடுத்த வாரமும் அவளுக்கு கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு எந்த டிக்கெட்டும் கிடைக்கவில்லை.

முதல் வாரம் சூறாவளியினால் ரத்து செய்யப்பட்டிருந்த விமானச் சேவை அனைத்தும் அந்த வாரத்தில் தான் மீண்டும் செயல்படத் தொடங்கியிருக்க, முந்தின வாரம் பயணம் தடைப்பட்டவர்களுக்கே இந்த வாரம் முன்னுரிமை கொடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தனர் பயணச் சீட்டு அலுவலகத்தினர்.

மிகவும் இக்கட்டானச் சூழல்... கணவன் ஆஸ்பத்திரியில் இருக்கிறான் என்று இவள் புலம்புவதை செவிமடுக்க அங்கு யாருக்கும் அவகாசமில்லை.

''சாரி மேடம்! உங்களுக்கு முன்னுரிமை கொடுத்தால், மற்ற வாடிக்கையாளர்கள் சண்டைக்கு வர வாய்ப்பிருக்கு. இன்னமும் ஏழே நாள் பொறுத்துக்கோங்க. அதற்குள் கிறிஸ்துமஸ் கூட்டமும் புது வருஷக் கூட்டமும் குறைஞ்சுடும்'' என்று இவளைச் சமாதானப் படுத்துபவர்களுக்கு எங்கே புரியப் போகிறது இவளது பரிதவிப்பு?

ஏழே நாள் என்று சர்வ சாதாரணமாகக் கூறுபவருக்கு எங்கே தெரியப் போகிறது இவள் ஏழு விநாடிகளைக் கூட கடக்க எடுத்துக் கொள்ளும் முயற்சி?

இங்கிருந்து கொண்டு அவளால் ஒன்றும் செய்ய முடியாத கொடுமை அவளை பைத்தியம் பிடிக்கும் நிலைக்குத் தள்ளியது.

கடவுளே! ரிஷியுடன் பேச முடிந்தால் கூட தேவலாமே! அவன் எப்படி இருக்கிறான் என்று தெரிந்தாலும் போதுமே!



இவளிடம், ''நான் இருக்கேன், ரதிம்மா!'' என்று ஒரேயொரு முறை அவன் வாய் மூலமாகவே சொன்னாலும் போதுமே!

ரிஷிவர்மன் அமெரிக்கா சென்று கிட்டத்தட்ட மூன்று வாரங்களுக்கும் மேல் ஓடி மறைந்திருந்த நிலையில்... அவனது குரலைக் கேட்க முடியாமல்...

அவன் நலமாக இருக்கிறானா இல்லையா என்றும் உறுதியாகத் தெரியாமல் என்னென்னவோ எண்ணும் மனதை அடக்கவும் வழி புலப்படாமல்... இவளது தவிப்பு இங்கே யாருக்குமே புரியாதா?''

ரிஷிவர்மனுடன் பேச வேண்டுமென ஆயிரம் முறையாவது முயற்சித்திருப்பாள். எல்லா முயற்சிகளும் பயனற்றுப் போனது.

ரிஷிவர்மன் பற்றிய தகவல் சொல்லிய யக்னேஷிடம் இரண்டு முறை பேசியதோடு சரி!

அவனையும் இப்பொழுது பிடிக்க முடியவில்லை. சூறாவளி காற்றினால் தொலைபேசித் தொடர்பு எதுவும் பாதிக்கப்பட்டிருக்குமோ என்னவோ?

யக்னேஷின் சென்னை வீட்டிற்கு, அவனுக்கு வேறு எதுவும் தொலைபேசி தொடர்பு எண் இருக்கிறதா என்று கேட்கப் போனால்... இவளது நேரம் - அவனது பெற்றோர்கள் கொல்கத்தா சென்றிருப்பதாகத் தகவல் தந்தனர் பக்கத்து வீட்டவர்கள்.

சுய பச்சாதாபமும், கணவனின் அருகாமைக்கு ஏங்கும் ஏக்கமும், அவனின் தேக நிலை குறித்த கவலையும், அவள் மீதே எழுந்த கோபமும் என அனைத்தும் சேர்ந்து கொள்ள, கண்களை இறுக மூடி கண்ணீரைக் கட்டுப்படுத்த முயன்றாள்.

ரிஷிவர்மனும் இங்கில்லாத நிலையில், கண்ணீர் தன்னைப் பலவீனப்படுத்தும் என அறிந்திருந்தவள் பெருமுயற்சி ஆழ்ந்த மூச்செடுத்தாள்.

அவளின் முயற்சியையும் மீறி மூடிய விழிகளி லிருந்து ஒற்றைக் கோடாய் கண்ணீர் கீழிறங்கியதைப் பொருட்படுத்த இது தருணமில்லை என்ற பக்குவம் அவளுக்குப் பிறந்தது.

இக்கட்டான வேளைகளில், 'எல்லாவற்றையும் கணவனே பார்த்துக் கொள்வான்' என்று ரிஷியை சார்ந்திருந்த ராதிகா, இன்று அவனுக்கே ஒரு சுகக்கேடு என்றதும், 'தன்னால் எல்லாவற்றையும் எதிர்கொள்ள முடியும்... தன்னால் மட்டுமே முடியும்!' என்றொரு நம்பிக்கை யுடன் சூழ்நிலையை எதிர்கொண்டாள்.

வட சென்னையிலிருந்து தென் சென்னைக்கு தனி யாக பிரயாணப்படவே வெகுவாக பயந்தவள், இன்று துணையே இன்றி கண்டங்கள் பல தாண்டிச் செல்லத் துடிக்கிறாள்...!

பெண்களின் மன உறுதியை சோதித்துப் பார்க்க வென்றே சோதனைகள் விரும்புகின்றது போல!

என்ன முயற்சி செய்தும் ரிஷிவர்மனைப் பற்றிய ஒரு தகவலும் அறிந்து கொள்ள முடியாத நிலையில், பயணச் சீட்டும் கிடைக்காத தருவாயில் மீண்டும் தருணைத் தொடர்பு கொள்ள முயற்சித்தாள் ராதிகா.

மீண்டும் இரண்டு - மூன்று முறை அவனது அலு வலகத்திற்குத் தகவல் சொல்லி, தருணிடம் தெரிவிக் கும்படியும், அவளைத் திரும்பவும் அழைக்கும் படியும் வேண்டிக் கொண்டாள்.



இவளது பிரார்த்தனைக்குச் செவி சாய்ப்பது போன்று, அடுத்த இரண்டு நாட்களில் தருண் படேலிடமிருந்து ராதிகாவிற்கு அழைப்பும் வந்தது.

தருணிடமிருந்து அழைப்பு என்று தெரிந்ததும், ஓடிச் சென்று தனியறைக்குள் புகுந்து கொண்ட ராதிகா, அவனிடம் எல்லா விபரமும் சொல்லி அழுதாள்.

அதுவரை தன் துக்கத்தை, பயத்தைத் தன்னுள்ளே மறைத்து வைத்திருந்தவள், அவள் கணவனின் உற்ற நண்பன் முன் உடைந்தாள்.

''எனக்கு ரொம்ப பயமா இருக்கு, அண்ணா! டிக்கெட்டே கிடைக்கலை. எனக்கு என்ன செய்றதுன்னே தெரியலை. அவரோட அப்பா - அம்மா, யக்னேஷ் என்று யாரிடமும் பேசவும் முடியலை. ரிஷி எப்படி இருக்கார், என்னன்னு தெரியாமல்... என்னால் இங்கே நிம்மதியா மூச்சு கூட விட முடியலை.''

எல்லாவற்றையும் செவி மடுத்த தருண், ''சிஸ்டர்! ரிஷி ரொம்ப ஸ்ட்ராங் பெர்சனாலிட்டி. அவனுக்கு ஒன்றும் ஆகாது. தைரியமா இருங்க. ரிஷி அங்கே, அப்படி யிருக்கும் போது என்னால் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருக்கேனே! ப்ச்! எனக்கு இன்னமும் கப்பலில் தான் வேலை. எப்போ போர்ட்-க்கு வருவேன்னு திட்டவட்டமா சொல்ல முடியாது. ஆனால், என்னோட ஷிப் காண்டாக்ட்ஸ் வைத்து, என்னால் எதுவும் டிக்கெட்டுக்கு ஏற்பாடு செய்ய முடியுமான்னு பார்க்கிறேன். தைரியமா இருங்க. சீக்கிரமே உங்களைத் திரும்பக் கூப்பிடறேன். டிக்கெட் புக் செய்ய உங்க விவரங்களை எனக்கொரு ஈமெயில் அனுப்பிடுங்க'' என அவளுக்குத் தைரியமளித்து பேசியவனின் வார்த்தைகள் ராதிகா விற்கு யானை பலம் தந்தது.

'ரிஷிவர்மனுக்கு ஒன்றுமாகாது!' என தருண் சொன்ன தையே தாரக மந்திரமாகப் பிடித்துக் கொண்டவளை மேலும் தேற்றும் விதமாக, அவன் வாக்களித்திருந்த படியே அடுத்த இரண்டாவது நாளே ராதிகாவை அழைத் தான் தருண்.

''ப்ரிட்டிஷ் ஏர்வேஸில் டிக்கெட் கிடைச்சிருக்கு, ராதிகா'' என்று தேதி மற்றும் மற்ற விவரங்களைக் கூறி யவன்,

''உங்களோட ஈமெயில் ஐடிக்கு எல்லாம் அனுப்பி வைச்சுடறேன். ரிஷி உங்களுக்கு ஏற்கனவே விசா வாங்கி வைத்து இருக்கிறதனால எந்தப் பிரச்சனையும் இருக்காது. இருந்தாலும் உங்க கல்யாணம் தொடர்பான எல்லா டாகுமென்ட்ஸையும் எடுத்துக்கோங்க. அங்கே யிருக்க என்னோட பிரண்ட் - ரித்திக் - அவனிடமும் விவரம் சொல்லிடறேன். அவனே வந்து உங்களை விமான நிலையத்தில் இருந்து கூப்பிட்டுப் போவான். அங்கே போய் என்ன செய்றதுன்னு கவலைப்படாதீங்க. கையில் கொஞ்சம் பணம், டாலர்ஸ்-ஆ மாற்றி எடுத்துக் கோங்க. ஏதாவது தேவைன்னா அவனிடம் நீங்க கூச்சப் படாமல் கேட்கலாம். எனக்கு ரிஷி எப்படியோ அவனும் அப்படிதான்'' என்று விவரமாகக் கூறியவனுக்கு மனமார நன்றி தெரிவித்தாள்.

அவளுக்குத் தேவையானவற்றை எடுத்து வைத்துக் கொண்டவள், பாட்டியிடம் பத்திரமாக இருக்கச் சொன்னதோடு ராஜம்மாவிடமும் அவரைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளச் சொன்னாள்.

அவளால் முடிந்த வரையில் எல்லா ஏற்பாடுகளையும் செவ்வனே செய்து, எல்லோரிடமும் விடைபெற்ற



ராதிகா, மனதில் பயத்துடனும் கலக்கத்துடனும், இவை எல்லாவற்றுக்கும் மேலாக கணவனைக் காணப் போகிற ஆவலோடு பரபரப்போடும் அமெரிக்காவிற்கு பயணப் பட்டாள்.

# 7



ராதிகா, ரிஷிவர்மனைக் காண அமெரிக்கா கிளம்பிய அதே நேரத்தில், பலத்த அடிகளுடன் அவன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு கிட்டத்தட்ட இருபது நாட்கள் ஆகியிருந்தது.

இருபது நாட்களுக்கு முன்...

அமெரிக்கா வந்தடைந்த ரிஷிவர்மன், ராதிகாவிற்கு அழைத்துப் பேசிய பிறகு, மிகுந்த ஆவலுடன் நியூ ஜெர்ஸி நூவார்க் லிபர்டி சர்வதேச விமான நிலையத் திலிருந்து தன் பெயரில் வாடகை காரை எடுத்துக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டான்.

அவன் வீட்டிற்குப் பயணிக்கும் தேசிய நெடுஞ் சாலையில், டிசம்பர் மாத பனிப்பொழிவு காரணமாக வாகனங்கள் ஒன்றுக்கொன்று நீண்ட இடைவெளி விட்டுச் சென்று கொண்டிருந்தன.

பஞ்சு போல விழும் பனிப் பொழிவின் பொழுது சாலைகளில் வாகனங்களை செலுத்துவது மிகவும் கடினமான விஷயம்.

ஆதலால் பனி விழும் என்று தெரிந்தவுடனேயே அது உறைவதைத் தடுக்க உடனடியாக அரசாங்க

வாகனங்கள் மூலம் சாலையில் உப்பு தூவி விடுவர். போக்குவரத்து பாதிக்காத வகையில் அப்போதைக்கு அப்போதே அதை பாதையிலிருந்து அகற்றி சாலையோரமாகக் குவித்தும் வைத்து விடுவார்கள்.

பனிக் குவியலை பக்கவாட்டில் ஒதுக்கி வைத்தாலும் சாலையின் மேற்புறத்திலுள்ள ஈரப்பதத்தினால் வண்டிகள் சட்டென்று 'ப்ரேக்' பிடிக்காமல் சறுக்கும் அபாயமும் உண்டு என்பதினாலேயே ஒவ்வொரு வாகனத்திற்குமிடையே நீண்ட இடைவெளி அவசியமாகின்றது.

பல ஆண்டுகள் இதே காலநிலையில், இதே ஊரில் வாழ்ந்து பழக்கப்பட்ட ரிஷிவர்மனுக்கு இது ஒன்றும் புதிதல்ல என்பதால் கவனமாகவே அவன் வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

இருப்பினும், சாலையில் சென்று கொண்டிருந்த மற்றொரு கனரக வாகனம் சரியாக 'ப்ரேக்' பிடிக்காமலோ அல்லது ஓட்டுனரின் கவனமின்மையினாலோ ரிஷியின் காரை மோதி அதைத் தலைகீழாய் புரட்டி, அப்பளமாய் நொறுக்கி போட்டது.

கண் சிமிட்டும் நேரத்தில் நடந்த இந்த கோர விபத்தில் ரிஷிவர்மனின் தலையில் பலத்த அடிபட, உயிருக்கே ஆபத்தான நிலையிலிருந்த அவனை, காவலர்கள் மீட்டு மருத்துவமனையில் சேர்த்திருந்தனர்.

அவனது கைவிரல் ரேகை மற்றும் பாஸ்போர்ட் விவரங்களைக் கொண்டு ரிஷியின் வீட்டினருக்கும் அடுத்த ஒரு மணி நேரத்தில் தகவல் தரப்பட, ஒரு வருடம் கழித்து அவனைக் கண் குளிரப் பார்க்கப் போகிறோம் என்று மகிழ்ந்து கொண்டிருந்தவர்களின் தலையில் இந்த விபத்து பற்றிய செய்தி இடியை இறக்கியது.



நெஞ்சம் நிறைய கனத்தோடு மருத்துவமனைக்கு விரைந்தவர்களுக்கு, மருத்துவர்கள் முதலுதவி செய்து முடிக்கும் வரையிலும் அவனைப் பார்க்கவே அனுமதி தரப்படவில்லை.

இந்த நிலையில் யார்... யாருக்கு சமாதானம் சொல்லித் தேற்ற முடியும்? அதுவும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியான குற்ற உணர்வில் திளைத்திருக்கும் பொழுது?

அவன் வீட்டை விட்டுச் சென்றதற்கே தான்... தான் முழுக் காரணம் என்று மனதளவில் நொறுங்கிய சுதா, இப்பொழுது இந்த விபரத்தைப் பற்றிக் கேள்விப் பட்டதும் மேலும் நொறுங்கிப் போனார்.

ரிஷிவர்மன் அனுப்பிய மின்னஞ்சலில் 'அவனுடைய புரிதல் தான் தவறு' என்று குறிப்பிட்டிருந்தாலும் கூட, தாய் ஸ்தானத்தில் இருக்கும் அவர் தான், தன் பாசத்தை அவனுக்குப் புரிய வைக்கத் தவறியதாக வருந்தினார்.

அர்ஜுனின் நிலைமையோ படுமோசம்!

'கல்யாணத்திற்கு வரக் கூடிய சந்தர்ப்பமில்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தவனை, எமோஷனல் ப்ளாக்மெயில் செய்து வரவழைத்ததால் தான் இப்படியொரு அசம்பாவிதம் நேர்ந்ததாக வருந்தினான் அவன்.

ஒரு வருடமாக கண் காணா தேசத்தில் இருந்தாலும் நலமுடன் இருந்தான்; ஆனால் தன்னுடைய வற்புறுத்தலுக்காக... தன்னுடைய திருமணத்தில் கலந்து கொள்ள வந்த இடத்தில் அவன் இப்படி உயிருக்கு உத்திரவாதமின்றி படுத்த படுக்கையில் கிடக்கிறானே என அர்ஜுனின் மனமே ஆறவில்லை.

ரிஷியின் தந்தையைப் பற்றி எதுவும் சொல்ல வேண்டியதில்லை; கண்கள் ஒரே இடத்திலேயே இமைக்கவும் மறந்து நிலைக் குத்தி நிற்க, மிகவும் சோர்வுடன் அமர்ந்திருந்தார்.

அவரது உதடுகள் மட்டும், 'ரிஷி! ரிஷி! ரிஷி!' என்று முனகிக் கொண்டே இருந்தது.

அவரவர் கவலையில் மூழ்கியவர்களை மேலும் கலங்கடிக்கவென்றே மருத்துவரின் பேச்சு அமைந்தது.

''ட்ரக் மோதியதில் ரிஷியின் பின் பக்க தலையில் தான் பலத்த அடி விழுந்திருக்கிறது. காரின் கண்ணாடி சுக்கு நூறாக உடைந்து சிதறியதில் சிலவை அவரது காயத்தில் பட்டிருப்பதால் அந்தக் கண்ணாடித் துகள்களை முழுவதுமாக அகற்றி முதலுதவி செய்திருக்கிறோம். ரிஷிக்கு ரத்தம் தேவைப்பட்டதால் அவருக்கு இரண்டு பாட்டில் ரத்தம் ஏற்றிக் கொண்டிருக்கிறோம். ஆனால்...?'' என்று அவர் சின்னதாகத் தயங்க, அவர் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த மூவருக்கும் பொறுமை பறந்தது.

''ஆனால்...?''

''ஆனால்... அவருக்கு மூளையில் ரத்தக்கட்டு (Blood clot) ஏற்பட்டிருக்க வாய்ப்பிருக்கு என்பதால் எம்.ஆர்.ஐ. சி.டி. ஸ்கேன் எடுத்திருக்கோம். நாளைக்கு தான் அதனுடைய முடிவு தெரிய வரும். ஒருவேளை க்ளாட் இருக்கு என்று தெரிய வந்தால் அதை உடனடியா அகற்றியாகணும். இல்லையென்றால் அவருக்கு ஸ்ட்ரோக் வரலாம். உயிருக்கும் ஆபத்தாகலாம்.''

மனதிலிருந்த தைரியம் வடிய, 'கடவுளே!' என்ற முணுமுணுப்புடன் அம்மூவரின் கண்களும் கலங்கியது.



தான் சொன்ன விஷயத்தை மற்றவர்கள் கிரகித்துக் கொள்ள சில மணித்துளிகள் இடைவெளி விட்ட மருத்துவர், ''அந்த க்ளாட் சின்னதாக இருந்தால் ஊசி போட்டுக் கரைச்சுடலாம். நாளைக்கு ஸ்கேன் முடிவு வர வரைக்கும். இதனால் எந்த ஆபத்தும் வராமல் இருக்கணும் என்பதால் 'ஆன்ட்டி - க்ளாட்' ஊசி போடலாம்னு நாங்க பரிந்துரைக்கிறோம். நீங்க வேணாம்னு அபிப்ராயப்பட்டால்... எங்களால் ஊசிப் போட முடியாது'' என்று தாங்கள் அளிக்கும் சிகிச்சைப் பற்றி நோயாளி அல்லது நோயாளியின் குடும்பத்தினருக்கு விளக்கிச் சொல்ல வேண்டிய அவரின் கடமையைச் செவ்வனே செய்தார்.

''ரிஷிக்கு இப்போ எப்படி...?'' அர்ஜுனுக்கு அவனது கேள்வியைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

''கோமாவில் தான் இருக்கிறார். நரம்பு மண்டலத்தில் வேறு ஏதாவது பிரச்சனையா, இல்லை க்ளாட் தான் பிரச்சனையா என்று ஸ்கேன் முடிவில் தான் தெரியும்.''

''டாக்டர்! ஒருவேளை க்ளாட் இல்லை என்றால் நீங்க போடற ஊசி ஆபத்தாகிடாதே?'' சுதாவிடமிருந்து பதட்டத்துடன் கேள்வி பிறந்தது.

''ஆகாது. ஆனால்... நரம்பு மண்டலத்தில் பிரச்சனை என்றால் எந்தவித முன்னெச்சரிக்கையும் நம்மால் இப்போதைக்கு எடுக்க முடியாது. பிரச்சனை டயகனைஸ் செய்த பிறகுதான் சிகிச்சையையே ஆரம்பிக்க முடியும்'' என்றவரை கேள்வியுடன் குறுக்கிட்டார் ரிஷியின் தந்தை ராமநாதன்.

''க்ளாட் அகற்றுவதற்கு ஊசி மட்டும் போதுமா, டாக்டர்?''

''ஊசி, மருந்து, மாத்திரையில் கரையலாம் என்ற அளவில் கட்டி இருந்தால் சர்ஜரி தேவைப்படாது'' என்று நம்பிக்கைத் தந்தவர், அடுத்த நாள் ஸ்கேன் முடிவு வந்ததும் அறுவை சிகிச்சை தேவையிருப்பதாகச் சொல்லி அதன் சாதக பாதக அம்சங்களையும் விளக்கினார்.

''ரொம்ப பாசிட்டிவான விஷயம் என்னவென்றால் இந்த சர்ஜரி செய்தால் கட்டாயம் ஸ்ட்ரோக் அல்லது உயிருக்கு எந்தவித பாதிப்பும் வராது'' எனவும் அனை வரின் முகத்திலும் நம்பிக்கை வெளிச்சம் தெரிந்தது.

''ஆனால் சர்ஜரியின் முடிவில் ரிஷி கோமாவிலிருந்து திரும்ப ஐம்பது சதவீதம் தான் வாய்ப்பிருக்கு. அவரது மூளையில் இருக்கும் க்ளாட் தவிர சில நியூரான்களும் பாதிப்படைஞ்சு இருந்தால் வேற பிரச்சனைகள் வரவும் வாய்ப்பிருக்கு.''

''ரிஷி...!''

''இந்த சர்ஜரி மூலம் அவர் மறுடியும் பழைய இயல்பு நிலைக்குத் திரும்ப ஐந்து சதவீதத்திற்கும் குறைவான வாய்ப்பு தான். அறுவை சிகிச்சை செய்யலாமா என்று யோசிச்சு உங்க முடிவைச் சொல்லுங்க'' என மருத்துவர் சொன்ன பொழுது மற்ற மூவரும் கவலையில் ஆழ்ந்தனர்.

ஆண்டவன் மேல் பாரத்தைப் போட்டு அறுவை சிகிச்சைக்கு சம்மதம் என்று தெரிவிக்க, இரண்டு வாரங்கள் சென்று மருத்துவர் குழுவினால் அதற்கான நாள் குறிக்கப்பட்டது.

'எந்தக் காரணத்திற்காகவும் உன்னுடைய திருமணம் தடைபடக் கூடாது' என்பதை அழுத்தம் திருத்தமாக ரிஷிவர்மன் ஏற்கனவே அர்ஜுனிடம் குறிப்பிட்டிருந்த



தால், உறுதி செய்த அதே நாளில் அர்ஜுனுக்கு எளிமை யான முறையில் பதிவு திருமணம் நடந்தேறியது.

இத்தனை சிரமப்பட்டு ரிஷி வந்ததற்கு குறைந்த பட்சம் அவனுடைய திருமணமாவது நடக்கட்டும்!

தொலைந்துபோன ரிஷியின் பெட்டிகளை விமான நிலையத்திலிருந்து வந்து ஒப்படைத்திருக்க, அதிலிருந்த விலாசத்தை வைத்து, ரிஷி கடந்த ஒரு வருடமாக சென்னையில் தான் வசித்திருக்கிறான் என்ற விவ ரத்தைக் கண்டறிந்தனர்.

'ரிஷி லண்டனில் இல்லையா? சென்னையில் தான் ஒரு வருடமும் வசித்தானா?' என்ற கேள்விக்கு விடை தேட அவர்கள் முயன்ற பொழுது தான் ராதிகா யக் னேஷை அழைத்திருக்க, அவனும் ரிஷியைப் பற்றி விசாரிக்க அவர்களைத் தொடர்பு கொண்டான்.

ரிஷியைப் பற்றி மருத்துவர் கூறியதை அறிந்த யக்னேஷ் தாமதிக்காமல் மருத்துவமனைக்கு விரைந்து வந்தான்.

இன்னமும் இரண்டு வாரத்தில் ரிஷிக்கு அறுவை சிகிச்சை என்ற தகவலை ராதிகாவிடம் சொல்லி அவளை மேலும் கவலைப்பட வைக்க வேண்டாம் என்ற எண் ணத்திலும், அவளிடம் வேறு என்ன சொல்லி சமா ளிப்பது என்று தெரியாமலும் அவளது அழைப்புகளை எடுக்காமல் விடுத்தான்.

நண்பனின் குடும்பத்திற்குத் தேவையான உதவி களோடு தன்னுடைய வேலைகளையும் யக்னேஷ் கவனித்துக் கொண்டிருந்த வேளையில், ரிஷிக்கு திருமணம் நடந்த விஷயத்தைப் பற்றியோ, ராதிகாவைப் பற்றியோ அவன் வீட்டினர் அறிந்திருக்கவில்லை என்பது அவனுக்குத் தெரிய வந்தது.

அதைப் பற்றி அவர்களிடம் தெரிவிக்க வேண்டும் என்று ஒவ்வொரு முறை அவன் முயற்சித்த பொழுதும் அது தோல்வியையே தழுவியது.

அறுவை சிகிச்சை முடிந்து முப்பது மணி நேரத்திற்குப் பிறகு அடிப்படை பரிசோதனைகளை நடத்திய மருத்துவர்கள் ரிஷிவர்மனுக்கு நினைவு திரும்பி விட்டது என அறிவித்தனர்.

கடந்த இருபது நாட்களாக மகனைப் படுத்த படுக்கையாகப் பார்த்த தந்தைக்கு, மகனுக்கு நினைவு திரும்பி விட்டது என்ற வார்த்தையைக் கேட்ட பின்னும், நிம்மதி பெருமூச்சை விட முடியாமல், அவனது மூளை நியூரான்களுக்கும் மற்றும் நரம்பு மண்டலத்திற்கும் எந்த வித பாதிப்பும் இருக்கக் கூடாதே என்ற எதிர்பார்ப்பு தான் மிகுந்திருந்தது.

மானிட்டர்களின் ஓசைகளுக்கு நடுவில்... தலையில் பெரிய கட்டு, நெற்றியின் ஓரத்தில் இரண்டு மூன்று புரையோடிய கீறல்கள், கை மற்றும் கால்களில் ஆங்காங்கே பிளாஸ்திரி எனப் படுத்திருந்தவனைக் கண்டு மௌனமாக கண்ணீர் சிந்தினார் சுதா.

மூடியிருந்த இமைகளை மெல்லத் திறந்து தந்தையையும், தாயையும் கூர்ந்து வெறித்த ரிஷிக்கு, அர்ஜுனின் நிச்சயதார்த்த விழாவில் விருந்தினர்களின் உபசரிப்பு மற்றும் மேற்பார்வை பணி என்று தான் பம்பரமாய் சுழன்று கொண்டிருந்த வேளையில், அவனது செவிகளில் விழுந்த சுதாவின் பேச்சு அவனுக்கு இப்பொழுது நினைவிற்கு வந்தது.

'இவர்களின் முகத்தை மீண்டும் காண நேரிடுகிறதே!'' என்ற எண்ணத்தில் அவனுக்கு வெறுப்பு



மண்ட, அவர்களைப் பார்க்கப் பிடிக்காமல் கண்ணை இறுக மூடிக் கொண்டவனின் மனதில் பழைய ஞாபகங்கள் வலம் வரலாயின.

* * *

''ரிஷிக்கு கல்யாணம் செய்துக்கிற எண்ணமே யில்லை. அவனுக்காக நீங்க காத்திருக்க வேண்டாம்!''

சுதாவிடம் ஏதோ ரசீது பற்றிய விவரம் கேட்பதற்காக வந்த ரிஷி, தன்னைப் பற்றிய பேச்சு... அதுவும் பொய்யானத் தகவல் காதில் விழுந்ததும் அதிர்ச்சியில் சுவருக்கருகில் நின்றவன் மீதியையும் கூர்மையுடன் செவிமடுக்க ஆரம்பித்தான்.

அன்னையின் பேச்சில் பொய் சொல்வதால் இயல்பாக எழும்பும் சின்ன தடுமாற்றம் கூட இல்லையே? உடன் இருக்கும் தந்தையும், அர்ஜுனும் கூட மறுப்பாக எதுவும் சொல்லாமல் நிற்கிறார்களே?

அன்னை அப்படிச் சொன்னதற்கு ஏதாவது வலுவான காரணம் இருக்குமா?

பல்வேறு சிந்தனைகளில் நெஞ்சம் உழன்றவனுக்கு சுதாவின் அடுத்த பேச்சு இடியை இறக்கியது.

''அவனைக் கல்யாணத்திற்குக் கட்டாயப்படுத்த முடியாது, அண்ணி. எனக்கிருப்பது ஒரு பையன் தான். அர்ஜுன் மட்டும்தான்'' என்று சொல்லி அருகிலிருந்த அர்ஜுனின் தோளில் கையை வைத்துக் கொண்டு நின்றார் சுதா.

தன் அன்னையின் வாய் வார்த்தையாக அப்படியொரு கூற்றைக் கேட்டவனின் நெஞ்சத்தை யாரோ வாள் கொண்டு அறுப்பது போன்றிருந்தது.

"அம்மா... அம்மா... நீங்கள் என் அம்மா தான்!" என்று சுயக்கட்டுப்பாட்டை இழந்து கத்த வேண்டும் போல வெறி வந்தாலும், அவனுக்கிருந்த அதிர்ச்சியில் அசையாமல் சிலையாய் நிற்க மட்டுமே அவனால் முடிந்தது.

ஏன் அம்மா இப்படிப் பேச வேண்டும்? என்னிடம் விளையாடுகிறார்களா? என்று அவன் வெகுநேரம் சிந்திக்க வேண்டிய அவசியமில்லாமல் அடுத்த உரையாடல் அமைந்தது.

"ரிஷிக்குக் கல்யாணம் காட்சி என்று இல்லையென்றால் சொத்தெல்லாம் அர்ஜுனுக்கும், நிச்சயம் செய்த மருமகளுக்கும் தான்னு சொல்லுங்க" என்று மற்றவர் கேட்டதும்,

"அதெல்லாம் பேசறதுக்கு இது தருணமா, அண்ணி? சொத்தெல்லாம் அர்ஜுனுக்கு இல்லாமல் வேறு யாருக்கு?"

அதற்கு மேல் ரிஷிக்கு அந்த இடத்தில் நிற்கப் பிடிக்கவேயில்லை. பேச்சு தொடக்கத்திலேயே அப்பா, அர்ஜுன் இவர்களின் குறுக்கீட்டை எதிர்பார்த்தவனுக்கு அவர்களிருவரும் கடைசி வரையில் வாயைத் திறக்கவேயில்லை என்பது கூடுதல் வேதனையைத் தந்தது.

இத்தனை வருடங்களாக தன் மேல் சுதா கொண்டிருந்த தாய் அன்பு எல்லாம் போலியா? நான் மட்டும் தான் 'அம்மா - அம்மா' என்று உருகிக் கொண்டிருக்கிறேனா?

பல மணி நேரங்கள் சென்ற பிறகும் ரிஷியின் மனம் அடங்க மறுத்த தருணத்தில் தான் குடும்பத்தினரைப் பிரிய எண்ணி விமான நிலையத்தை நோக்கி பயணம் மேற்கொண்டான்.



* * *

தன் கசப்பான நினைவுகளில் மூழ்கியிருந்த ரிஷியின் எண்ணங்களில் குறுக்கிட்ட சுதா, "ரிஷி...!" என்று மனம் தாளாமல் அவனைக் கூப்பிட, மீண்டுமொரு முறை கண்ணைத் திறந்து பார்த்து விட்டு மூடிக் கொண்டான்.

அவனது செய்கையைக் கண்ட பெரியவர்களுக்கு, 'இவனுக்கு இன்னமும் கோபம் குறையவில்லையா?' என்ற தவிப்பு பிறந்தது.

தீவிர கண்காணிப்பு பிரிவில் ரிஷியை வைத்திருந்ததால் மூன்று நிமிடங்களுக்கு மேல் அங்கிருக்க அனுமதியில்லை என்பதால் அவனுடன் நீண்ட நேரம் செலவழிக்கவும் முடியாமல் திரும்பி விட்டனர்.

அடுத்த இரண்டு நாட்களில் அவனது உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட, சாதாரண அறைக்கு மாற்றப்பட்டு மருத்துவர்களுடன் ஓரளவு பேசவும் தொடங்கினான்.

'எங்களுடன் பேசு, ரிஷி!' என்று தொடர்ந்து நச்சரிக்கவும்,

வேண்டா வெறுப்பாக, "இன்றைக்கு என்ன தேதி?" என்றான் இறுகிய குரலில்.

மகன் திருவாய் மலர்ந்ததில் மனம் மகிழ்ந்த ராமநாதன், "டிசம்பர் 28" எனத் துரிதமாக பதில் தர,

நம்ப முடியாத பாவனையில் அறையைச் சுற்றி கண்களைச் சுழற்றியவாறே, "இங்கே ஆஸ்பத்திரியில் இருபது - இருபத்தைஞ்சு நாள் இருந்திருக்கேனா?" என வினவினான் அவன்.

மகனின் இந்தக் கேள்வி ராமநாதனின் மனதிற்கு நிம்மதியைக் கொடுக்க, ''ஆமாம்பா! நாங்க ரொம்ப பயந்துட்டோம். எங்க உயிரைக் கையில் பிடிச்சிட்டு இருந்தோம்'' என நிம்மதி குரலில் தெரிவித்தார்.

தந்தையை நோக்கி புருவம் உயர்த்தியவன், ''அன்றைக்கு விசேஷ வீட்டில் நீங்க பேசியதை வைச்சுப் பார்த்தால், நான் செத்தால் நிம்மதின்னு இருந்திருப்பீங்களே?'' என்று நம்ப முடியாத பாவனையோடு கேட்ட பொழுது, ரிஷியின் முகம் கடுமையாய் மாறியது.

அதைக் கேட்டு உள்ளம் பதைத்த தந்தை, ''ஐயோ! ஏன் ரிஷி இப்படியெல்லாம் பேசுறே? இன்னமுமா உனக்குக் கோபம்?'' என்று உள்ளம் நொந்தார்.

'சமீபத்தில் அனுப்பியிருந்த மின்னஞ்சலில் கோபமில்லை என்று ரிஷி குறிப்பிட்டிருந்தானே?' என சுதாவின் மனதில் யோசனை ஓட, இன்னமும் பழைய கோபம் மிச்சம் இருக்கிறது போலும் என வருத்தத்துடன் நினைத்துக் கொண்டார்.

''நீ அதையெல்லாம் இன்னமும் மனசில் வைச்சிருக்கியா?'' என வேதனையுடன் கேட்டவர்,

''அதனால் தான் இந்த ரெண்டு நாளா முகத்தைத் திருப்பிகிட்டியா?'' என்று அவனது நடவடிக்கையைப் பற்றி புரிந்து கொண்டவராக வினவினார்.

'இவர்களுக்கு நான் கோபம் கொண்டிருக்கிறேன் என்பது தெரியுமா? ஒருவேளை என்னுடைய பையில் லண்டன் அல்லது இந்தியாவிலிருந்து அஞ்சல் செய்வதற்காக நான் எழுதி வைத்திருந்த கடிதத்தைப் பார்த்து விட்டார்களா?'



மனதில் சிந்தனை ஓடிக் கொண்டிருக்க, ''என்னுடைய லெட்டரைப் படிச்சீங்களா?'' என உணர்ச்சியற்ற குரலில் வினவ, சோகமாக தலையசைத்தார் சுதா.

ரிஷிவர்மன் விட்டேற்றியாக, ''அத்தனை சுலபத்தில் நீங்க பேசியதைத் தூக்கி எறிஞ்சிட முடியுமா என்ன?'' கேட்க,

இப்படி அவன் மீண்டும் பழைய விவகாரத்தைப் பற்றி பேசுவதைக் கேட்கும் பொழுது முதலும், கடைசியுமாக சரியான விளக்கத்தை அவனுக்குச் சொல்வது தன் கடமையாக கருதினார் சுதா.

நீண்ட பெருமூச்சை வெளியேற்றி, ''அர்ஜுன் நிச்சய வீட்டில் நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது தான், ரிஷி அப்படிப் பேசியதற்காக உன்னிடம் மனசார மன்னிப்புக் கேட்கிறேன். கொஞ்சம் இரு! நான் பேசி முடிச்சுடறேன். நான் பேசியதை மட்டும் கேட்டதால் தான் உனக்கு இத்தனை கோபம்னு நினைக்கிறேன்'' என்றவர், தான் அன்று எந்த மாதிரியான நேரத்தில் அப்படிச் சொல்ல நேர்ந்தது என்று விளக்கமாக எடுத்துரைத்தார்.

''ஏன்மா? அதுக்கு நீங்க எதுவும் பேசாமல் இருந்திருக்கலாமே?''

''இல்லை, ரிஷி! அவங்க ஒவ்வொருவரிடமா வாயைப் பிடுங்கிட்டே இருந்தாங்க. அவங்களிடம் எந்த சமாளிப்பும் சரிப்பட்டு வராதுன்னுதன், 'ரிஷிக்கு கல்யாணம் செய்ய விருப்பமில்லை... எனக்கு ஒரே மகன் தான்' என்று நேரடியா சொல்ல வேண்டியதா ஆகிடுச்சு. யோசிச்சு பேசற அளவுக்கு அவகாசமும் இல்லைப்பா.''

''....''

''ஏன்டா? கோபமென்றால் என்னிடம் வந்து அன்னைக்கு நைட்டே கேட்க வேண்டியது தானே?''

''என்னன்னு மா கேட்கச் சொல்றீங்க? உங்களுக்கு அர்ஜுன் மட்டும்தான்...'' அவனால் கேள்வியை முடிக்கவே முடியாமல் தொண்டை கரகரத்தது.

''உண்மையைச் சொல்லு, ரிஷி! என்றைக்காவது உனக்கும், அர்ஜுனுக்கும் நான் வித்தியாசம் காட்டியிருக்கேனா? இத்தனை நாள் பிரிஞ்சு என்னை ரொம்ப கஷ்டப்படுத்திட்டியேப்பா?''

இந்த இடைப்பட்ட நாட்களில் சுதாவிடம் ஏற்பட்டிருந்த தேக மெலிவே அவரது வருத்தத்தையும், உள்ளத் தவிப்பையும் அவனுக்குத் தெளிவுபடுத்த, ரிஷிக்கு அவர் மீதிருந்த கண் மண் தெரியாத கோபமும், வருத்தமும் ஓரளவு மட்டுப்பட்டது.

''எனக்கும், அர்ஜுனுக்கும் வித்தியாசம் தானே? நீங்க என்னிடம் தானேம்மா எப்போதும் கண்டிப்பு காண்பிப்பீங்க? பிரண்ட்ஸ் கூட ஸ்மோக் செய்தேன் என்பதற்காக ரெண்டு நாள் என்னிடம் பேசாமல் இருந்தீங்க. ஆனால் அதே தப்பை அர்ஜுன் செய்தப்போ நீங்க ஒன்றுமே சொல்லலை. லோன் என்ன வைச்சிருக்கேன், என்ன சாப்பிடறேன், எந்த வண்டி மாத்தறேன் என்று ஒவ்வொரு சின்ன விஷயத்தையும் மைக்ரோ மேனேஜ் செய்துட்டே இருந்தீங்க. ஆனால் அர்ஜுனுக்கு அப்படியில்லை...'' ஒரு சிறுவன் போல புகார் பட்டியல் தந்தான் ரிஷிவர்மன்.

அவன் பேசியதற்கு ஆமோதிப்பாகத் தலையாட்டிய சுதா, ''ஏன், ரிஷி? உனக்குக் கல்யாணம் செய்யாமல் அவனுக்கு கல்யாணம் செய்ததையும் உன் புகாரில்



சேர்த்துக்கலையா?'' வேதனை சிரிப்புடனே கேள்வியெழுப்பினார்.

தம்பிக்கு முதலில் திருமணம் நடக்கட்டும் என்று பெற்றோர்களிடம் பரிந்துரைத்ததே அவன் தானே?!

அப்படியிருக்கையில் அதையும் தான் யோசித்தேன் என்று வெளிப்படையாகச் சொல்வதற்கு இப்பொழுது அவனுக்குச் சிறிது சங்கடம் எழுந்தது.

''நீ நினைக்கிறது உண்மைதான், ரிஷி! நான் உன்னையும், அர்ஜுனையும் ஒன்றா நினைக்கலை'' என்று வெளிப்படையாக ஒப்புக் கொண்டவர்,

ரிஷியின் கண்களில் வலியைப் பார்த்ததும், ''அவனை விட உன்னை தான் எப்பொழுதும் உசத்தியா பார்த்தேன். யாரும் உன்னை... உன் வளர்ப்பை ஒரு குறை சொல்லிடக் கூடாதேன்னு தான் அத்தனை கண்டிப்பு காட்டினேன். அதோட, முன் ஏர் செல்லும் வழியில் தானே பின் ஏர் போகப் போகுது? உன்னைச் சரியான வழியில் நடத்தினால் அர்ஜுனையும் சுலபமா வழி நடத்தலாம் என்ற எண்ணம் வேற இருந்தது'' என்று தன் மன நிலையை அவனுக்குப் புரிய வைத்தார்.

ரிஷியின் மௌனம் தொடர, ''என்னுடைய கணிப்பு சரி தானே, ரிஷி? அர்ஜுனுக்கு நீ தானே எல்லா விஷயத்திலும் ரோல் மாடல்?'' என்று கேட்டு அங்கிருந்த இறக்கத்தை ஓரளவு தளர்த்த வைத்தார்.

'ச்ச! இவரைப் போய் தவறாக நினைத்து விட்டோமே?' என்று வருந்தியவனிடம்,

''அர்ஜுனும், ஆஷாவும் தனியா வீடு வாங்கித் தங்கறதா சொன்னதால் தான் அவங்க கல்யாணத்தைச்

சீக்கிரம் முடிக்கணும்னு நீ அது பற்றிப் பேச்சை எடுத்ததுக்கு சரின்னு சொன்னேன், ரிஷி'' எனச் சொல்லி அவனது குழப்பம் முழுவதையும் போக்கினார்.

''ம்....''

''உனக்கு எங்க மேலே இன்னமும் கோபமா?'' என்றவரின் கேள்விக்கு, ''இல்லை'' என்று மறுத்தான்.

''அர்ஜுன் நிச்சயதார்த்தம் முடிந்ததும் உனக்கும் ஒரு பெண் பார்த்துக் கல்யாணம் முடிக்கணும்னு தான் நினைச்சுட்டு இருந்தேன். ஆனால் ஏதேதோ நடந்துடுச்சு'' எனக் கண் கலங்கினார்.

அவருக்கு ஆறுதலாக, ''உங்களைத் தப்பா புரிஞ்சுக் கிட்டதுக்கு நான் தான் மா சாரி! ஏன் கவலைப்படறீங்க? அதான் இப்போ பிழைச்சு வந்துட்டேனே?'' எனத் தேற்றிக் கொண்டிருந்த பொழுது அர்ஜுன், ஆஷா மற்றும் யக்னேஷ் அவனைப் பார்க்க வருகை தந்தனர்.

முகம் மலர அவர்களை வரவேற்றவன், ''நீ எப்போ யக்னேஷ் சென்னையிலிருந்து வந்தே?'' என நண்பனை விசாரித்தான்.

''அப்போ வந்தது தான், ரிஷி. இன்னமும் கிளம்பவேயில்லை'' என்ற யக்னேஷ், ''எங்களையெல்லாம் பயமுறுத்திட்டியே, ரிஷி? ரொம்ப கஷ்டமாகிடுச்சுடா! தேங்க் காட்!'' என முகம் மலர்ந்தான்.

அர்ஜுன், ''ரிஷி! என்னால் தானே இப்படி ஒரு விபத்து நடந்ததுன்னு என்னை நானே எவ்வளவு நொந்துகிட்டேன் தெரியுமா? ஆல் இஸ் வெல்! இன்றைக்கு நீ பேச ஆரம்பிச்சதா அப்பா சொல்லவும் எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? உடனே நானும், ஆஷாவும்



கிளம்பி வந்துட்டோம்'' என அவன் கண்கள் ஆனந்தத்தில் பனிக்க சந்தோஷம் கொண்டான்.

''உன் ஃபியான்ஸியையும் அழைக்கழைக்கணுமாடா? நான் வீட்டுக்கு வந்ததும் கூட பார்த்திருக்கலாமே?''

சிறு கூச்சத்துடன், ''ரிஷி! ஆஷா இப்போ என் ஃபியான்ஸி இல்லை. உன் விருப்பப்படியே அதே நாளில் ஆஷாவை ரிஜிஸ்டர் கல்யாணம் செய்துகிட்டேன்'' என்று அர்ஜுன் சகோதரனுக்கு விளக்க,

''என் விருப்பமா? என்னடா சொல்றே? உனக்கு நிச்சயம் முடிஞ்சு இருபது - இருபத்தைஞ்சு நாள் தானே இருக்கும்?'' என ரிஷிவர்மன் தெளிவுபடுத்திக் கொள்ள வினவி, அங்கிருந்த மற்றவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கினான்.

தொடர்ந்து அவனே, ''உன்னை முதலில் கல்யாணம் செய்துக்க சொன்னதுக்காக உனக்கு இருந்தாலும் இத்தனை அவசரம் கூடாது, அர்ஜுன்!'' எனத் தம்பியைக் கேலி செய்ய, அவனின் கேலியை ரசிக்க முடியவில்லை அவனது தம்பியால்.

''ஹேய்! ரிஷி! நல்லா நினைவு படுத்திப் பார்! எனக்கு நிச்சயதார்த்தம் முடிஞ்சு ஒரு வருஷம் ஆச்சு'' என்றான் பதட்டத்துடன்.

அங்கிருந்த நாட்குறிப்பில் ஊன்றிப் பார்த்த ரிஷியோ அவநம்பிக்கையுடன், 'இல்லை' என்பது போல தலையசைக்க முயல... அந்தச் சின்ன அசைவிலேயே அவனைத் தலைவலி பலமாக அழுத்தியது.

தலையைப் பிடித்துக் கொண்டு, ''ஒரு வருஷமா?'' என்று மெல்லிய குரலில் ரிஷிவர்மன் கேள்வியெழுப்ப,

அங்கிருந்த அனைவரும் பேச முடியாமல் சில கணங்கள் சிலையென சமைந்தார்கள்.

# 8



''ஒரு வருஷமா?''

''நான் ஏர்போர்ட் போகும்போது தானே விபத்து நடந்தது?''

கண்களில் கேள்வியும், குழப்பமுமாக வினா எழுப்பிய ரிஷிவர்மனை அங்கிருந்த அனைவரும் அவனை விட குழப்பத்துடன் ஏறிடும் பொழுதே, மூடியிருந்த கதவைப் படாரென திறந்து கொண்டு புயல் போன்று உள்ளே நுழைந்தாள் ராதிகா.

''ரிஷி!'' என்ற அழைப்புடன் வில்லில் இருந்து புறப்பட்ட நாணாக கணவனின் அருகே விரைந்தவளின் கண்கள், கண்ணுக்குத் தெரிந்த இடத்திலெல்லாம் கட்டுடன் இருந்தவனைக் கண்டு நீரைச் சொரிய லாயிற்று.

ரிஷியின் தலையிலிருந்த கட்டை நடுங்கும் விரல் களால் தடவிய ராதிகாவின் அதரங்கள், ''ரிஷி! ரிஷி!'' என்றதைத் தவிர வேறு எதையும் உதிர்க்கவில்லை.

கடைசியில் அவள் பயந்தபடியே ஆகிவிட்டதே! கடவுளே!

தலையே தெரியாதபடிக்கு கட்டுப் போட்டிருக் கிறதே? அறுவை சிகிச்சை எதுவும் செய்திருக்கிறார் களா?



தலை முழுக்க சவரம் செய்திருப்பார்கள் போலிருக் கிறதே? பெரிய அடியா?

நானும் உடன் இல்லாமல் எப்படித் துடித்தானோ என்று கணவனுக்காகப் பரிதாபப்பட்டவளுக்கு அவள் துடித்ததெல்லாம் மறந்து போனது.

கணவனை எந்த நிலையில் காணப் போகிறோமோ என எதையெதையோ எண்ணி பதைத்திருந்தவளுக்கு ரிஷிவர்மனைக் கண்ணால் கண்டவுடன் தான் பாதி உயிராவது திரும்பி வந்தது.

கட்டுக்களுடன் மருத்துவமனையில் அச்சுறுத்தும் தோற்றத்தில் அவன் இருந்தாலும் இனி குறையொன்று மில்லை!

கைக்கு தட்டுப்பட்ட இடங்களை எல்லாம் கண் களாலும், நடுங்கும் கரங்களாலும் வருடியவாறே, ''நான் வந்துட்டேன், ரிஷி! நீங்க நல்லா ஆகிடுவீங்க!'' என்று தாரக மந்திரம் போன்று வாய்க்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

சந்தேகமாக, 'ஒரு வருஷமா?' என்று ரிஷிவர்மன் கேள்வியெழுப்பிய குழப்பத்தில் இருந்தே இன்னமும் மீளாத அவனின் சொந்தங்கள், 'யார் இந்தப் புது பெண்?' என மேலும் குழம்பிப் போனார்கள்.

இவள் பாட்டுக்கு வந்தாள்... யாரையும் கண் ணெடுத்துப் பாராமல் நேராக கட்டிலில் இருந்தவனின் அருகே சென்று ஏன் கண்ணீர் வடிக்கிறாள்?

அங்கே ரிஷிவர்மனும் அதே குழப்பத்தில் தான் இருந்தான்!

தன்னைக் கண்டு இவள் ஏன் இப்படி உணர்ச்சி வசப்பட வேண்டும்? ஏன் இந்தக் கண்ணீர்? என்ன முணுமுணுக்கிறாள்? எனக்குத் தெரிந்தவளா?

ஆனால்... இவளை நான் இதற்கு முன் பார்த்ததில்லையே?!

தலையை அவளிடமிருந்து சற்றே நகர்த்திக் கொண்டவன், ''ஹூ ஆர் யூ?'' என்று அவளைப் பார்த்து புரியாத பாவனையில் வினவ, எல்லோரும் ராதிகாவின் முகத்தையே அவளது பதிலுக்காக குறுகுறுப்புடன் ஏறிட்டனர்.

'யார் நீ?' என்று கேட்ட கணவனின் கேள்வியில் கண்களை நிமிர்த்தி அவனைப் பார்த்தவள், யாரிடம் கேட்கிறான் எனப் பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

அவளுக்கு முதுகு புறத்தில் யாரும் நிற்கிறார்களோ... அவர்களிடம் தான் வினவுகிறானோ என்னவோ என்று குனிந்த வாக்கிலேயே அவள் திரும்பிப் பார்க்க, அப்பொழுது தான் அங்கிருந்தவர்களைக் கண்ணுற்றாள்.

அறையினுள்ளே அவள் நுழைந்த பொழுது கட்டிலில் படுத்திருந்தவன் மீதே அவளது முழு கவனமும் இருந்தால், அறையில் யார் யார் இருக்கிறார்கள் என்பதை அவள் சரியாகக் கவனித்தாளில்லை.

இப்போது அங்கே தன் புகுந்த வீட்டினரைப் பார்த்த ராதிகாவிற்கு, இவர்களைப் பார்த்து ரிஷி ஏன், 'யார் நீ?' என்று கேட்க வேண்டும்? இன்னமும் அவனுடைய கோபம் குறையவில்லையா என்ற கேள்வி எழுந்தது.

தர்ம சங்கடமான புன்னகை ஒன்றை அவர்களின் புறம் சிந்தியவளின் கவனம், தன் கரத்தை அவனது தலையிலிருந்து எடுத்து விட்டவனிடம் மீண்டும் போனது.



அவளின் லேசாக சமன்பட்ட மனது, ''ஹூ ஆர் யு?'' என்று திரும்பவும் கேட்டவனின் அந்நியத்தனமான பார்வையில் மீண்டும் தடதடக்க ஆரம்பித்தது.

ஏன் இப்படித் தன்னைப் புதிதாகப் பார்ப்பவனைப் போல் பார்க்கிறான்?

நெஞ்சில் இனம் புரியாத கலக்கம் சூழ, அதை பெரிது படுத்தாமல், ''அவங்க உங்க அப்பா, அம்மா, தம்பி, ரிஷி! அவங்க மேலே உங்களுக்கு இன்னமும் எதுக்குக் கோபம்?'' என்று முயன்று தருவித்த இயல்பான குரலில் அவள் வினவ, அதை கேட்டுக் கொண்டிருந்த சுதாவிற்கு சுறுசுறுவென கோபம் ஏறியது.

அவனே கோபப்படவில்லை என்றாலும் கூட இவள் விடமாட்டாள் போலிருக்கிறதே? அவனைக் கோபப்பட இவளே தூண்டுவாள் போல...?

கோபம் ஏறிய அதே வேளையில் யாரிவள்... ரிஷி வர்மனுக்கு தங்கள் மேலுள்ள கோபத்தைப் பற்றித் தெரிந்திருக்கிறதே என்ற யோசனையும் எழுந்தது.

கூர்மையான பார்வையுடன் புதிதாக வந்தவளை நோட்டம் விட்டவர், ''அவன் எங்களைக் கேட்கலை... உன்னைத் தான் யாருன்னு கேட்டான்!'' என்று விளக்க, காலின் கீழே பூமி நழுவியதைப் போன்று உணர்ந்தாள் ராதிகா.

என்னையா...? என்னையா யாரென்று கேட்டான்...? என் ரிஷியா?

சுதா பேச ஆரம்பித்ததும் அவர் புறம் திரும்பிய ராதிகா, காதால் கேட்டதை நம்ப முடியாமல் அதிர்ச்சியுடன்

திகைப்புற்ற விழிகளால் மெல்ல அவளுடைய கண வனைப் பார்த்தாள்.

அப்பொழுதும் அவனின் முகத்தில் பரிச்சய பாவனை கிஞ்சிதமும் இல்லாததைக் கண்டு அவளின் திகைத்த விழிகள் திகைத்தபடியே இருந்தது.

என்னைத் தான் கேட்கிறானா? நிஜமாகவா? விளை யாடுகிறானா?

ஒரு மாதம் பிரிந்திருந்தால் கட்டிய மனைவி கூட மறந்து போகுமா?

இத்தனை நாட்கள் கழித்து தன்னைக் கண்டதும் அவன் முகத்தில் அவள் எதிர்பார்த்த சந்தோஷமும், பூரிப்பும் ஏன் இல்லை?

பயமும் கலக்கமுமாக, ''ரிஷி...!'' என்று நீளமான குரலில் அவனை விளித்து,

''நான்... ராதிகா... ரிஷி! உங்க மனைவி!'' என்று தன்னைத் தானே அவளுடைய கணவனிடம் அறிமுகப் படுத்திக் கொண்டவளுக்கு நின்றிருந்த கண்ணீர் அவளது கட்டுப்பாட்டையும் மீறி விழத் தயாராக இருந்தது.

''மனைவியா?'' என்று அங்கிருந்தவர்கள் அவர வருக்குத் தக்க வகையில் ஒருவரின் முகத்தை ஒருவர் பார்த்து தங்களின் அதிர்ச்சியை வெளிப்படுத்த, ரிஷி வர்மனோ ராதிகாவின் முகத்தையே கூர்ந்தான்.

நெற்றிச் சுருங்க அவளைப் பார்த்தவனுக்கு அவனது தலையில் யாரோ சம்மட்டியால் அடிப்பது போன்று வலி எடுக்கவும், அந்த வலியில் அவனது கண்கள் தாமாக மூடிக் கொண்டன.



அந்த வலி ஏற்படுத்திய மாறுதல்களால் அவனுட லில் சேர்த்திருந்த மருத்துவ உபகரணங்கள், 'பீப், பீப்' என்று ஒலி எழுப்பலாயிற்று.

ஒரு வருடம் என்று ரிஷிவர்மன் சந்தேகமாக கேட் டதும், மருத்துவரை அழைக்கப் போயிருந்த யக்னேஷ் திரும்பி வந்த பொழுது, செவிலிய பெண்களால் அறைக்கு வெளியே துரத்தப்பட்டிருந்த அனைவரும் கைகளைப் பிசைந்தவாறு பதட்டத்துடன் குழுமியிருந் ததைக் கண்டு அதிர்ச்சியும் ஆச்சரியம் அடைந்தான்.

அவசரமாக அவர்களிடம் சென்ற யக்னேஷ் என்ன வென்று விசாரிக்க, உள்ளே நடந்ததை அவனுக்குச் சுருக்கமாக விளக்கினான் அர்ஜுன்.

''ராதிகாவா? இங்கேயா?'' என்று ஆச்சரியத்துடன் கூறிய யக்னேஷ் திரும்பிப் பார்க்க, அவர்களை விட்டு சற்றே தள்ளி நின்று கொண்டிருந்த ராதிகா திக்பிரமை பிடித்தது போன்று மூடியிருந்த அறை வாசலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டு அவளிடம் விரைந்தான்.

ராதிகாவின் மூளை ரிஷிவர்மனின் மூளையைப் போன்றே, 'மனைவியா?' என்ற கேள்விக்குப் பிறகு வேலை நிறுத்தம் செய்திருந்தது போலும்!

அவனுடைய மனைவி என்று தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொள்ளும் நிலை அவளுக்கு ஏன்?

அதுவும் அவளுடைய கணவனிடமே?!

ரிஷிவர்மனின் மனைவி என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டதும் அவனின் வீட்டினர் அதிர்ச்சி யடைந்ததைக் கூட ஒரு வழியில் புரிந்து கொள்ள

முடிந்தவளால், ரிஷிவர்மனின் உணர்ச்சியே இல்லாத பார்வையையும், கேள்வியையும் புரிந்து கொள்ள முடியவில்லை.

'யார் நீ?' என்ற அவனின் கேள்வியையே கிரகித்துக் கொள்ள முடியாதவளால் அவனின் பாராமுகத்தை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்?

அதை பாராமுகம் என்று கூடச் சொல்ல முடியாதே? அவன் பார்த்த பார்வையில் கோபமுமில்லை... தாபமு மில்லையே?

முகத்தைக் கோபத்தில் திருப்பிக் கொள்ளவும் இல் லையே? அறியாதவரைக் கண்டால் பார்க்கும் பார்வை அன்றோ அது?

ஆனால் ஏன்?

அவன் முதன் முதலில் தன்னை சென்னையில் பார்த்த பொழுது கூட, புதிதாகப் பார்ப்பவரிடம் காட்டும் சிறிய முறுவலாவது அவனிடம் இருந்ததே.

இப்பொழுது அதுகூட இல்லையே?! என்ன நடக் கிறது இங்கே? என்னவாயிற்று அவனுக்கு?

கண்களில் நீரே வற்றிப் போனது போன்று வறண்டு போயிருந்தவளை யக்னேஷ் அழைக்க, அதை கவனிக்கும் மனநிலையில்கூட இல்லை அவள்.

தன்னுடைய சர்வமும், ரிஷிவர்மனைப் பரிசோதிப்ப தற்காக மூடியிருந்த அவன் அறையிலேயே இருந்ததாக உணர்ந்தவள், அவளுடைய கவனத்தை அங்கேயிருந்து அங்கே இங்கே திருப்பினாளில்லை.

திரும்பவும் யக்னேஷ் சிறிது சத்தமாக விளிக்க, அவனை விழி விரித்துப் பார்த்தவளுக்கு தனக்கு



தெரிந்த ஒரே முகமென்றதும் சற்றே தைரியம் வந்தது போன்றிருந்தது.

உதடுகள் துடிக்க, ''ரிஷி... ரிஷிக்கு என்னாச்சு? எப்படி? ஏன் எனக்கு விபத்து பற்றி தெரிஞ்சதுமே போனே செய்யலை, யக்னேஷ்?'' என்று அவள் மனதிலுள்ள கேள்விகளையெல்லாம் படபடவெனக் கொட்டினாள்.

''சாரி, ராதிகா. புயலினால் கொஞ்ச நாள் சிக்னலே இல்லை. அப்புறம் எப்படி இதை சொல்றதுன்னு பயந்துட்டு... சொல்ல தைரியமில்லாமல்.. சொல்லலை. சொல்லாமல் இருந்தது தப்பு தான். சாரி!'' என்று மன்னிப்புக் கோரியவன் நடந்ததைச் சுருக்கமாகச் சொல்ல, ரிஷிவர்மனுக்கு நடந்த விபத்து குறித்தும், மருத்துவர் கூறியிருந்ததையும் கேட்ட ராதிகாவிற்கு சப்த நாடியும் நடுங்கியது.

கடவுளே! எத்தனை ஆபத்தான நிலையிலிருந்து மீண்டிருக்கிறான்?

அவளின் மிகவும் பலவீனமான நேரங்களில் ரிஷியை மீண்டும் உயிருடன் காண்போமா மாட்டமோ என்றும் கூட அவள் பரிதவித்திருக்கிறாள். அப்படியும் கூட ஆகியிருக்கும் போல!

நன்றி இறைவா! கோடானு கோடி நன்றிகள்!

அவனை தன்னிடம் மீட்டுக் கொடுத்ததற்கு, அவ ளுக்குத் தெரிந்த... தெரியாத அத்தனைக் கடவுளுக்கும் கை கூப்பி நன்றி தெரிவித்தவள் பிடிமானமற்று சுவற்றில் தொய்ய, அவள் இங்கே வந்ததைக் குறித்து விசாரித்தான் யக்னேஷ்.

தருணிடம் ரிஷிவர்மனைப் பற்றி விசாரித்ததையும், தருணின் நண்பன் சித்திக் பற்றியும் ராதிகா கூறிக்

கொண்டிருப்பதற்கும் மூடியிருந்த அறை வாயில் திறப்பதற்கும் சரியாக இருந்தது.

எல்லோரையும் வெளியே அனுப்பிவிட்டு ரிஷிவர் மனைப் பரிசோதித்த மருத்துவர் முடிவாகக் கூறியது - அவனுக்குக் கடந்த ஒரு வருடமாக எதுவும் நினைவில் இல்லை என்பதைத் தான்!

''சரியாகச் சொல்லப் போனால்... ஏர்போர்ட் போகிற வழியில் தான் அவருக்கு விபத்து நடந்து இருக்கிறதா நினைச்சுட்டு இருந்திருக்கார் ரிஷி. அதுவரை நடந்தது எல்லாமே ரிஷிக்கு நல்லா நினைவு இருக்கு. அதன் பிறகு - அதாவது ஏர்போர்ட் போனதிலிருந்து விபத்து நடந்த வரைக்கும் எதுவும் அவருக்கு நினைவில்லை.''

என்ன சொல்கிறார் இவர்?

அப்படியென்றால்... இந்த இடைவெளி காலத்தில் நடந்த எங்களின் திருமணம்? நான்?

என்னையும் அவனுக்கு நினைவில்லையா? எப்படி மறக்க முடியும்?

இதற்கு மேல் அவளை அதிர்ச்சியடைய வைக்க எதனாலுமே முடியாதென்று நினைத்திருந்த ராதிகாவின் மூளையில் நிகழ்ந்து கொண்டிருக்கும் எண்ண அதிர்வு களை விளக்க... அந்தப் புகழ்பெற்ற மூளை நிபுண மருத்துவராலுமே முடிந்திருக்காது.

''அம்னீஷியாவில் நிறைய வகை இருக்கு. சிலருக்கு அவங்க யாருனே சுத்தமா நினைவு இருக்காது. இதில் மொத்தமா - எல்லாத்தையுமே, சுயத்தையும் கூட மறக்கிறதும் நடக்கும். இல்லை... சில குறிப்பிட்ட வருஷங்கள், மாதங்கள் மட்டும் மறக்கிறதும் இருக்கு.



ஆனால் புதுசா நடக்கிறது, அதாவது விபத்துக்குப் பிறகு நடக்கிறது எல்லாம் நினைவு இருக்கும். அதை ரெட்ரோக்ரேட் அம்னீஷியா (retrograde amnesia) என்று சொல்வாங்க.''

''சிலருக்கு பழசெல்லாமே நினைவு இருக்கும். ஆனால் விபத்துக்கு பிறகு நடப்பதை நினைவு வைத்துக் கொள்ள முடியாது - இதை antegrade amnesia என்று சொல்வாங்க.''

''ரிஷிக்கு இது வரைக்கும் பார்த்தால் retrograde amnesia மாதிரி தான் இருக்கு. அம்னீஷியாவிற்கு மருந்து மாத்திரை எல்லாம் இல்லை. இது ஒரு நோய் கிடையாது. மற்ற எல்லா வேலைகளையும் அவரால் நல்லாவே செய்ய முடியும்.''

''பார்த்த பொருள், பழகிய வாசம், தொடுகை இதனால் எல்லாம் அவருடைய ஆழ் மனதில் இருக்கிறது வெளியே வர வாய்ப்பிருக்கு. அவருக்கு நாளைக்கே பழசெல்லாம் நினைவு வந்தாலும் வரலாம்... வராமலும் போகலாம். நம்பிக்கையோடு இருங்க'' என்று ஆங்கிலத்தில் விளக்கிய மருத்துவர் அனைவருக்கும் நம்பிக்கையை ஊட்டிய அதே தருணத்தில், ரிஷிவர்மன் பூர்ண குணமடைவான் என்ற உறுதியையும் அளிக்காமல் ராதிகாவின் நம்பிக்கையைப் பறித்துக் கொண்டார்.

ரிஷிவர்மனின் பிறந்த வீட்டு சொந்தங்களைப் பொருத்தவரையில் அவன் திரும்பவும் அவர்களிடம் வந்து சேர்ந்ததே போதுமென்ற நிலை தான்.

அதுவும் இப்பொழுது... அவர்கள் மேல் அவனுக்குக் கோபம் இல்லை எனும் போது அவர்களுக்கு வேண்டியதும் வேறொன்றுமில்லை.

கடந்த ஒரு வருடம் என்பது அவர்களைப் பொருத்த வரையில் தேவையற்றது தான். நினைவு வந்தால் சரி... நினைவே வரவில்லை என்றாலும் சரிதான்!

அதனால் பாதிக்கப்படுவது யாருமில்லை... ரிஷி வர்மன் உள்பட என்பது அவர்களது கருத்தாக இருந்தது.

ஆனால்... ரிஷிவர்மனை முறைப்படி மணந்த அவனது தர்ம பத்தினி ராதிகாவிற்கோ நிலைமையே தலை கீழ் ஆயிற்றே?

கடந்த ஒரு வருடம் தானே அவளது வாழ்வில் மிக முக்கியமான நாட்கள்! அதை ரிஷி மறந்து விட்டான் என்றால்... அவளது நிலை?

அவனுக்குக் கடந்து போன நாட்களின் நினைவு இல்லை என்றால்... அவன் தங்களைப் பற்றியும் அல்லவா மறந்து போய் இருப்பான்! அதனால் தான் தன்னை யாரென்று கேட்டானோ?

ராதிகாவிற்கு கண்களை இருட்டிக் கொண்டு வர, நாற்காலியின் கைப்பிடியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

நான் அவனுடைய மனதில் அழுத்தமாகப் பதித்திருந் தால், என்னை அவன் மறந்து போயிருக்க மாட்டான் தானே என்று எதையெதையோ எண்ணி கலங்கிய வளுக்கு கண்களிலிருந்து கண்ணீர் வழிந்த வண்ண மிருந்தது.

அவனுடைய ஆழ்மனதில் அவளுடைய நினைவுகள் இல்லை என்றால்... ரிஷியின் பால் அவளின் தாக்கம் அந்தளவிற்குத் தான் இருந்ததா?

மூளைக்கு நினைவில்லாமல் போகலாம்... காதல் கொண்ட மனம் கூட நினைவிழந்து போகுமா என்ன?



மண வாழ்வு என்பது இரு மனங்கள் சம்பந்தப்பட்டது அல்லவா?

இதில் மூளை என்கிறது வந்தது? மனதிற்கும் மூளைக்கும் என்ன சம்பந்தம்?

மருத்துவத்தில் மூளை, மனம் எல்லாம் ஒன்றையே குறிப்பன என்றும், வெவ்வேறு வார்த்தைகளையிட்டு நாம் தான் அதை சுட்டிக் காட்டுகிறோம் என்பதும் அந்த நேரத்தில் ராதிகாவிற்கு நினைவில்லை.

ஒரு பக்கம் தன்னை நினைவில்லாத ரிஷிவர்மன் மீது கோபம்...

தன்னால் தானே இந்நிலை என்பதனால் நேர்ந்த தன்னிரக்கம்...

அவனை... அவன் விருப்பத்திற்கு மாறாக இங்கே அனுப்பிய தன் மீதே எழுந்த வெறுப்பு...

அவனை உயிருக்கே ஆபத்தான நிலைக்குக் கொண்டு வந்ததனால் ஏற்பட்ட குற்ற உணர்ச்சி...

இனி தன் நிலை என்ன என்ற கலக்கத்தினால் வந்த அலைப்புறுதல்...

இப்படி நாலா பக்கமும் ராதிகாவின் உணர்ச்சிகள் அவளைப் பந்தாடின.

இதற்கு நடுவில் ரிஷிவர்மனுக்கு நினைவு திரும்பி யதும் - கட்டாயம் அவனுக்கு நினைவு திரும்பும். வேறு மாதிரி எண்ணத்தைக்கூட அவளால் இப்பொழுது ஜீரணிக்க முடியாது! - இந்த மறதியினால் ரிஷி எவ்வளவு வேதனைப் படுவான் என்றும் நினைத்துக் கொண்டாள்.

அது அவளையே தேற்றிக் கொள்ளவா இல்லை தனக்குத் தானே நம்பிக்கை அளித்துக் கொள்ளவா என்று அவளுக்கு மட்டுமே வெளிச்சம்!

விழிகளை இறுக மூடி கண்ணீரை அடக்கியவள் ஒரு முடிவுடன் கன்னத்தைத் துடைத்து நிமிர்ந்தாள்.

இந்நேரத்தில் கண்ணீர் வேலைக்கு ஆகாது!

மருத்துவர் ரிஷிவர்மனை இன்று ஒரு நாள் மட்டும் மருத்துவமனையில் வைத்திருந்து விட்டு, நாளைக்கு வீட்டுக்கு அழைத்துப் போகலாமென்று அனுமதி தந்து விட்டிருந்த நிலையில் அடுத்து நடக்க வேண்டியதைப் பார்க்க வேண்டுமே? இங்கே மருத்துவமனையில் இருக்க முடியாது.

ஒரு வேளை தன்னை அவனுடைய வீட்டிற்கு ரிஷி அழைத்துச் செல்லவில்லையென்றால்...?

அப்படியே அவன் மறந்து விட்டான் என்றாலும்... சரி... நினைவு வரும் போது வரட்டுமென இதை இப்படியே விட முடியுமா என்ன?

இது வரையில் தன் எண்ணங்களிலேயே மூழ்கித் திண்டாடியவள் தங்களுக்குள் கூடிப் பேசிக் கொண்டிருந்த ரிஷியின் வீட்டினரின் புறம் மெல்ல பார்வையைச் செலுத்த... மீண்டும் மருண்டு நின்றாள்.

நியூஜெர்ஸி வந்ததும் அவன் பெற்றோர்களைப் பார்த்து, முதல் வேலையாக தங்கள் திருமணத்தைப் பற்றி தன் வீட்டினரிடம் சொல்வதாகச் சொல்லியிருந்த ரிஷிக்கு, அதை அவர்களிடம் சொல்ல சந்தர்ப்பமே வாய்த்திருக்கவில்லை என்பதை யூகிக்க முடியாதவளில்லை அவள்.

யாருக்குமே அவளை யாரென்றே தெரியாத இந்நிலையில் என்னவாகப் போகிறது?

பிள்ளைக்குத் தந்தையை அதனுடைய தாய் தான் அறிமுகப்படுத்த வேண்டும். அம்மாதிரி மனைவியைக்



கணவன் தான் - 'இவள் என் மனைவி!' என்று அவனின் உறவுகளிடம் அறிமுகப்படுத்த வேண்டும்.

இல்லை... அந்த அறிமுகத்தை அங்கீகரிக்கும் நிலையிலாவது அந்தக் கணவன் இருக்க வேண்டும்.

இங்கே... அது இரண்டுமே இல்லாத பொழுது... என்ன நடக்கப் போகிறது?

அதுவும், இதுவரை தன்னை யாரென்று அவர்கள் கேட்டதோடு சரி! அதன் பின்பு ஒரு வார்த்தை கூட இல்லையே?

அவளது எண்ணம் அங்கிருந்தவர்களை எட்டியது போன்று இவள் புறம் திரும்பிய அர்ஜுன் வேகமாக அவளை நோக்கி வந்தான்.

# 9



அவளை நோக்கி வரும் அர்ஜுனையே சிறு கலவரத்துடன் பார்த்துக் கொண்டிருந்த ராதிகாவைப் போன்றே மற்றவர்களும் நடக்கப் போவதை அகல விரித்த கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர்களின் பயத்தை ஒன்றுமில்லாமல் ஆக்குவது போல், ராதிகாவின் அருகில் வந்ததும், ''சாரி, அண்ணி!'' என்று எடுத்த எடுப்பிலேயே அவளிடம் மன்னிப்பு வேண்டிய அர்ஜுன்,

அவளது புதிரான பார்வையைப் பார்த்ததும், ''அண்ணனுடைய நிலைமை எதுவும் தெரியாமல் என்

கல்யாணத்துக்கு வந்தே ஆகணும்னு அவனுக்கு நான் தான் ப்ரஷர் போட்டுட்டேன். வந்த இடத்தில் இப்படி... சாரி, அண்ணி!'' என்றான் உணர்ச்சிப் பெருக்கோடு.

'தன்னால் தான்!' என்று குற்ற உணர்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தவளை இந்த வார்த்தைகள் ஆறுதல் படுத்தவில்லை என்றாலும் கொழுந்தனின் வேதனையைக் குறைப்பதற்காக வேண்டியாவது அவ னிடத்தில் சரளமாகப் பேச வைத்தது.

''உங்க மேல் எந்தத் தப்புமில்லை, அர்ஜுன். தேவை யில்லாமல் கவலைப்படாதீங்க. ரெண்டு யோசனையா இருந்தவரை நானும் வற்புறுத்தி தான் கல்யாணத்திற்கு அனுப்பி வைத்தேன். ஆனால்...'' என்றவளுக்கு வறண் டிருந்த கண்கள் மீண்டும் நீரைச் சொரிய தயாரானது.

அவளுடைய ஆறுதலை ஏற்காமல் மேலும் வருந்தி பவனாய், ''நான் ரொம்ப சுயநலத்தோட இருந்திருக் கேன், அண்ணி. ரிஷி சொல்ல வர்றதை முழுசா கூட கேட்கலை; இந்த ஒரு வருஷத்தில் அவன் வாழ்க் கையில் நடந்த எந்தவொரு விஷயத்தையும் கேட்டு தெரிஞ்சுக்காமல்... என்னுடைய கல்யாணத்துக்கு கண்டிப்பா வந்துடணும்னு மட்டும் திரும்பத் திரும்பச் சொல்லிட்டு இருந்திருக்கேன்... ஐ அம் சோ சாரி'' எனத் தன்னையே நொந்து கொண்டான்.

அவன் பேசியதைக் கேட்டு கசப்பான புன்னகை ஒன்றை உதிர்த்தவள், ''நீங்களும் கேட்கலை; ரிஷியும் சொல்லலை. கொஞ்ச நேரத்திற்கு முன்னாடி என்ன தெரியுமா யோசிச்சுட்டு இருந்தேன்? என் வார்த்தையை மட்டும் எந்த அளவுக்கு நம்புவாங்க? நான் ரிஷியுடைய



மனைவி தான்னு சொல்றதுக்கு மேரேஜ் சர்டிபிகேட் எல்லாம் காண்பிக்க வேண்டியிருக்குமோன்னு ரொம்ப கவலையா இருந்தேன்'' என்று நிதர்சனத்தைச் சொன்ன துடன், ''தேங்க்ஸ்!'' என உளமார தன் நன்றியையும் பதிவு செய்தாள்.

சற்று முன்பு குடும்பத்தில் மற்றவர்களின் மனநிலை... குறிப்பாக தாய் சுதாவின் மனநிலை அப்படித் தான் இருந்தது என்று வெளிப்படையாக ஒப்புக் கொள்ள ஏனோ அவனுக்குத் தயக்கமாய் இருந்தது.

ஆனால் சில நிமிடங்கள் பேசியதிலேயே, ராதிகா நிலைமையை உணர்ந்து செயல்படுபவள் என்றெண்ணி யவன், ''யக்னேஷ் தான் அம்மாகிட்டே பேசி சமாதானம் செய்தார், அண்ணி!'' என்று தர்ம சங்கடத்துடன் தெரி வித்தான்.

''யக்னேஷா?'' என்று ஒருமுறை அந்தப் பக்கம் பேசிக் கொண்டிருந்தவர்கள் மீது பார்வையைச் செலுத்தியவள்,

''ஓ! எங்களுக்கு கல்யாணம் ஆனது அவருக்குத் தான் தெரியுமில்ல?'' என்று விட்டு,

''உங்க அண்ணன் எப்படியிருக்கார்? மறுபடியும் அவரைப் போய் எப்போ பார்க்க முடியும்?'' என்று விசா ரித்தாள்.

''அண்ணனுக்கு கொஞ்சம் ஓய்வு தேவையா இருக் கிறதால இன்னமும் ஒரு ரெண்டு மணி நேரத்துக்கு அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம்னு டாக்டர் சொல்லியிருக்கார். அதுவரைக்கும் நீங்க வீட்டுக்கு வந்து ரெஸ்ட் எடுக்கறீங்களா? நீங்க ஏதாவது சாப்பிட்டீங் களா?''

''நான் ரெண்டு மணி நேரம் இங்கேயே இருந்து ரிஷியைப் பார்த்துட்டே வர்றேனே?'' என்றபோது சுதா வின் குரல் இடையிட்டது.

''ரிஷி தூங்கி எழுந்து உன்னைப் பார்த்தால், அவ னுக்கு ரொம்ப அதிர்ச்சியா இருந்தாலும் இருக்கலாம்... அதனாலே நாம அவன் மனநிலையைத் தெரிஞ்சுகிட்டு கொஞ்சம் லேட்டா வந்து அவனைப் பார்க்கலாம். எனக்கும் கூட உன்னோட பேச வேண்டியதிருக்கு. வீட் டுக்குப் போகலாமா?'' என்று தோரணையாக வினவினார்.

சுதா பேசிய விதத்திலிருந்தே அவளிடமிருந்து அவர் சற்று விலகியே இருப்பது போல் ராதிகாவிற்குத் தோன்ற, சில கணங்கள் யோசித்தவள், 'சரி' என்ற தலை யசைப்போடு கிளம்பினாள்.

பயணக் களைப்பு தீர அவள் நீராடி உண்டு முடிக்கும் வரை வாளாதிருந்தவர் அதன் பிறகு, ''ராதிகா! ராதிகா தானே உன் பேரு? அப்படித் தான் யக்னேஷ் சொன்னான். உனக்குக் கல்யாணம் ஆகி எத்தனை மாசம் ஆச்சு?'' என்று வினவிய பொழுது, ஒரு சில வார்த்தைகளில் இருந்த அழுத்தம் ராதிகாவின் மனதை ரணப்படுத்த,

''எங்களுக்குக் கல்யாணம் ஆகி ரெண்டு மாசம் ஆகுது. போட்டோ பார்க்கறீங்களா? ஆல்பம் எடுத்துட்டு வந்திருக்கேன'' என்றாள் மெல்லிய குரலில்.

''நான் ஒன்றும் நம்பிக்கையில்லாமல் கேட்கலை. யக்னேஷ் தான் சொன்னனே?''

'யக்னேஷ் சொன்னதால் தான் நம்பினீர்களா?' என்று திருப்பிக் கேட்க முடியாமல், ''இல்லை... கல்யாண போட்டோஸ் நீங்க பார்த்ததில்லையேன்னு தான் பார்க் கறீங்களான்னு கேட்டேன்'' என்றாள் தன்னிலை விளக்க மாக.



''உங்க கல்யாணத்தையே நாங்க பார்க்க வேண் டாம்னு தானே யாருக்கும் சொல்லாமல் கல்யாணம் செய்தீங்க? இப்போ போட்டோஸ் மட்டும் காண்பிச்சுட் டால் அந்தக் குறை சரியாகிடும் போல?'' என்றார் அலுப் புடன்.

சுதா பேசுவதைப் பூதக் கண்ணாடி கொண்டு பார்க்கக் கூடாது என் மனதை சமாதானம் செய்தவளுக்கு ஆயாசமாய் வந்தது.

'பேசினால் தானே குற்றம்?' என்பது போல ராதிகா ஊமையாய் அமர்ந்திருக்க,

''என்னுடைய மூத்த மகன் மனஸ்தாபத்தினால் ஒரு வருஷம் பிரிஞ்சு இருந்ததையே என்னால தாங்க முடியலை; எங்களிடம் சொல்லாமலே கல்யாணமும் செய்துக்கிட்டான் என்றால் எங்களுக்கு எப்படி இருக்கு சொல்லு?'' என அவளிடமே நியாயம் கேட்டார் சுதா.

''.......''

''இவ்வளவுக்கும் அவன் என்னிடம் சின்னச் சின்ன விஷயத்தையும் பகிர்பவன்... கல்யாணம் கூட சொல் லிக்காமல் செய்திருக்கான் என்றால் எனக்கு எத்தனை மன வருத்தம்? நீயாவது அவனிடம் ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமில்ல? அர்ஜுன் கல்யாணத்தை நிறுத்தாமல் இருந்திருந்தால்... நினைச்சுப் பார்க்கவே முடியலை'' எனத் தோள்களைக் குலுக்கிக் கொண்டார்.

அர்ஜுன் திருமணத்தை நிறுத்தாமல் இருந்திருந் தால்... இந்நேரம் ரிஷி சென்னையிலேயே நலமாக

இருந்திருப்பானாய் இருக்கும் எனத் தோன்றியதை ராதிகாவால் தடுக்க இயலாமல்... ஆனால் அப்படி நினைத்ததற்கும் சேர்த்தே குற்ற உணர்ச்சியில் திளைத்தாள்.

எல்லாம் விதி! இதில் யாரை, இல்லை எதை காரண கர்த்தாவாக்க முடியும்?

''அர்ஜுன் கல்யாணத்திற்கு, ரிஷியை நானும் சமாதானம் செய்து தான் அனுப்பி வைத்தேன், அ...த்...தை'' என்றவளுக்கு இன்னமும் இயல்பாக உறவு முறையைச் சொல்லி அழைக்க முடியவில்லை.

''ஓ! நீ ஏன் கல்யாணத்திற்குக் கிளம்பி வரலை?'' அவருக்கு இன்னமும் அவள் மீது நம்பிக்கையே வரவில்லை.

''பாட்டி சீரியஸாகி ஹாஸ்பிடலில் இருந்தாங்க. அதான் வர முடியாத சூழ்நிலை'' என்று தொடங்கி நடந்த நிகழ்வுகளைச் சுருக்கமாக விவரித்தாள்.

அவள் பேச்சை உள்வாங்கியவர், ''ராதிகா! நான் ஒரு சில விஷயங்கள் பேசணும்னு தான் உன்னைத் தனியா அழைச்சுட்டு வந்தேன்'' என்றவர்,

சின்ன தயக்கத்திற்குப் பிறகு, ''ரிஷிக்கு இந்தக் கடந்த வருட நினைவுகள் எதுவும் இல்லை; நினைவுகள் திரும்பி வரும் என்று உத்திரவாதமும் இல்லைன்னு டாக்டர் சொல்லியிருக்கார். வலுக்கட்டாயமா அவனுக்கு ஞாபகப்படுத்துவதை விட, நினைவுகள் இயல்பாக திரும்ப வருவது தான் அவனது மூளை நியூரான்களுக்கு நல்லதாம்'' என்று பேச்சை நிறுத்தினார்.

ராதிகாவிற்கு அவரது அணுகுமுறையும், பாவனையும் மிகுந்த கலவரத்தை ஏற்படுத்தியது.



அவளது ரிஷிக்கு பழைய நினைவுகள் இருந்திருந்தால் தனக்கு இப்படி ஒரு இக்கட்டு ஏற்பட்டிருக்கவே முடியாது!

ஆனால்... ஆனால் தான்!

இப்படியிருக்கலாமோ... அப்படியிருக்கலாமோ என்று யோசிக்கக் கூட அவளுக்கு அவகாசமில்லை.

ராதிகாவின் முகத்தைப் பார்த்துப் பேச முடியாமல், பார்வையைத் தரையில் பதித்தபடி, ''அவனுக்குப் பழைய நினைவுகள் வரும் வரையில்... உன்னைப் பிரிஞ்சு இருக்க ரிஷி முடிவு செய்தால்... அது உனக்கு சம்மதமா?'' என்று அவரைக் குடைந்து கொண்டிருந்த கேள்வியைக் கேட்டே விட்டார்.

இழந்த நினைவு தானாக எப்படி வரும்? பழகின பொருட்கள், இடம் எல்லாவற்றையும் பார்த்தால், கேட்டால் அவனுக்கு நினைவு வரலாம் என மருத்துவர் சொன்ன பொழுது இவரும் அங்கே தானே இருந்தார்!

அழுகையும், ஆத்திரமும் பொங்கி வர, எதுவும் பேசாமலேயே எழுந்து செல்ல எத்தனித்தவள், பின்னர் என்ன தோன்றியதோ, ''ஒருவேளை பழைய நினைவுகள் வரவே இல்லையென்றால் என்னை நிரந்தரமாகப் பிரியச் சொல்லீங்களா?'' என்றாள் கோபம் கலந்த குரலில்.

''அவனுக்கு சீக்கிரமே பழைய நினைவுகள் திரும்பும்னு நம்பிக்கை வைப்போம், ராதிகா'' என்றவரை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் இளையவள்.

''ரிஷியிடமிருந்து இந்த கண்டிஷன் வரவும் வாய்ப்பிருக்கு. உணர்ச்சிப் பெருக்கில் நாம எதுவும் பேசி... அதனால் அவனிருக்கும் அவனுக்கு எந்தவித மெடிக்கல்

காம்ப்ளிகேஷனும் வர வேண்டாம்னு தான் இதை உன்கிட்டே பேசறேன். அவன் இந்த விபத்தில் பிழைச்சு வந்ததே மறு பிறவிதான்... இன்னொரு முறை அவனைப் பேச்சு மூச்சில்லாமல் பார்க்கிற சக்தி எனக்கில்லை...'' என்று தொடர்ந்து பேசிய சுதாவின் குரல் முடிக்கும் பொழுது கரகரத்தது.

என்னை மட்டும் என்ன கல்லாலா செய்து வைத்திருக்கிறது?

எனக்கு மட்டும் அந்தச் சக்தி இருக்கிறதா என்ன? ரிஷியை அந்த மாதிரி நிலையில் நினைத்துப் பார்த்த ராதிகாவிற்கு ஈரக்குலை நடுக்கம் எடுத்தது.

இருந்தாலும்...

''ரிஷி இந்த மாதிரி கண்டிஷன் போட்டால்... அவரை நீங்க சமாதானம் செய்ய முயற்சி எடுக்கணும். அதை விட்டுவிட்டு நீங்க என்னைச் சமாதானம் செய்ய முயற்சி செய்றீங்களே?'' சுற்றி வளைக்காமல் நேரடியாய் வினவினாள் ராதிகா.

''அவனுடைய உடல்நிலைக்குத் தக்க தானே யோசிக்க முடியும்?''

''ரிஷிக்கு ஒரு வேளை இந்தக் கடைசி ஒரு வருஷ ஞாபகம் மட்டும் இருந்து, பழசெல்லாம் மறந்து போயிருந்தால்... அவருடைய உடல்நிலையை மனசில் வைச்சு உங்களால் அவரைப் பிரிந்திருக்க முடியுமா? மனசு கிடந்து அடிச்சுக்காது?! ஆனால் என்கிட்டே மட்டும் இப்படியொரு கேள்வியைக் கேட்கறீங்களே? உங்களுக்கொரு நியாயம் எனக்கொரு நியாயமா? ஏற்கனவே நான் நொந்து போய் இருக்கேன். இதில் பிரிவு... அது இதுன்னு பேசி என்னை மேலும்



நோகடிக்காதீங்க. ப்ளீஸ்!'' என்று கூறி முகத்தைத் திருப்பிக் கொள்ள, அவளுடைய அந்தக் கேள்வி சுதாவைச் சாட்டையாய் விளாசி, தான் அவ்வாறு பேசியதற்கா அவரை வருந்த வைத்தது.

''இல்லைம்மா. நான் ரிஷியுடைய நலனை மட்டும் மனசில் வைச்சு சுயநலமா தான் பேசறேன். அப்படித் தான் என்னாலே இப்போதைக்கு யோசிக்கவும் முடியுது. உன்னைக் கஷ்டப்படுத்தணும்னு நான் எதையுமே பேசலை'' என்று தன்னிலை விளக்கம் தந்தார் சுதா.

ராதிகாவிற்கு ரிஷியின் நிலைப்பாடு குறித்து குழப்பம் எழுந்தாலும் அவன் குணத்தைப் பற்றி அவளுக்குத் தெரிந்திருந்ததனால், ''நானும், நீங்களும் சுயநலமா யோசிக்கலாம். ஆனால் எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் ரிஷி எல்லோருடைய நலனையும் மனசில் வைச்சு தான் நடந்துப்பார். அந்த நம்பிக்கை எனக்கிருக்கு'' என்றாள் உறுதியாக.

''அது எனக்கும் தெரியும், ராதிகா. ஆனால் அவனுக்கு ஒரு விஷயம் பிடிக்கலை என்றால் ஒதுக்கி வைக்க... அல்லது... ஒதுங்கி இருக்கணும்னு தான் நினைப்பான். இருபத்தைஞ்சு வருஷமா வளர்த்த என் மேலேயே கோபப்பட்டு பிரிஞ்சு இருந்துட்டானே?''

இருவரும் பிரிந்து விடலாம் என்று ஒருவேளை அவன் முடிவெடுத்தால்... என்ற கேள்வி ராதிகாவின் மனதிற்குள் விஸ்வரூபம் எடுக்க, எதுவும் பேசாமல் மௌனியாய் மருத்துவமனைக்குக் கிளம்பினாள்.

இவர்களுக்கு முன்னரே மருத்துவமனைக்குச் சென்ற அர்ஜுன், ராதிகாவைப் பற்றிய அடிப்படை விவரங்களைச் சொல்லி, ரிஷியைத் தயார்ப்படுத்தி வைக்க,

இம்முறை ராதிகாவைப் பார்த்த ரிஷிவர்மனின் முகத்தில் முழுவதும் அந்நியபாவமில்லை.

அவனின் நலன் குறித்து விசாரித்த பின், இயல்பான பேச்சுக்கு இடையில், ''நாளைக்கு டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்குப் போகலாம்னு டாக்டர் சொல்லியிருக்கார், ரிஷி. உன்னிடம் சொன்னாரா?'' என ராதிகாவைப் பற்றி பேசுவதற்கு முன், கேள்வி தொடுத்தார் சுதா.

அவரது எண்ண ஓட்டம் புரிந்தது போல் சில கணங்கள் எதுவும் பேசாமல் சுற்றி இருந்தவர்களின் மீது பார்வையைச் செலுத்திய ரிஷி, ''நான் ராதிகாவோடு தனியா பேசணும்'' என்று மெல்லிய குரலில் சொன்ன அடுத்த ஐந்தாவது நிமிடம், அனைவரும் வெளியே செல்ல, பதட்டத்தில் ராதிகாவிற்கு வியர்வை முத்துக்கள் பூத்தன.

சுதா பேசியது போன்றே ரிஷியும் பிரிவைப் பற்றி பேசி விடக்கூடாதே என்ற அச்சத்தில் விளைந்த பதட்டம் அது!

தன்னையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தவளை அருகில் அழைத்து அமர வைத்தவனும் படுக்கையின் தலைமாட்டில் தளர்வாகச் சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

ரிஷியின் இடது கரம் மற்றும் மார்பிலிருந்து ஏதோ சில வயர்கள் மற்றும் ட்யூப்கள் அருகிலிருந்த மானிட்டரில் இணைக்கப்பட்டிருந்தன.

மெல்லிய குரலில், ''உன்னைப் பற்றி எதுவும் என் நினைவில்லை. என்னை மன்னிச்சிடு, ராதிகா!'' என்று அவன் தொடங்கும்போதே ராதிகாவின் கைகள் நடுங்கின.



அவன் வாய் மொழியாகவே தன்னை நினைவில் இல்லை என்று சொல்லுவது ஒரு பக்கம் வேதனை என்றால்... நிரந்தரப் பிரிவைப் பற்றி அவன் பேசி விடக்கூடாதே என்ற கலக்கம் மறு பக்கமுமாய் தவித்தாள் அவள்.

''இதில் உங்க மேல் என்ன தப்பிருக்கு. ரிஷி? நீங்க ஏன் மன்னிப்பு கேட்கறீங்க?'' என்றவள் தன் வேதனையை மறைக்க கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

''தப்பு செய்ததற்காக நான் உன்னிடம் மன்னிப்பு கேட்கலை. ஆனால்... என்னுடைய நிலை உன்னை ரொம்ப வேதனைப்படுத்தற மாதிரி இருக்கு. அதனால் தான்...'' என்று அவன் விளக்கம் சொல்லவும் சின்னதாய் ஒரு நம்பிக்கைப் பிறந்தது போல அவளின் கண்கள் ஒளிர்ந்தது.

தொடர்ந்து, ''எனக்கு பழைய நினைவுகள் வரலாம்... வராமலும் போகலாம்னு டாக்டர் சொல்லியிருக்கார். ஆனால்... நினைவுகள் வந்த பிறகு தான், உன்னை மனைவியா ஏற்க முடியும்னு சொல்றது நியாயமில்லைன்னு தான் தோணுது. நீ என்ன சொல்றே?'' என்று அவளிடம் கூர்மையானப் பார்வை ஒன்றை செலுத்தினான்.

'கடவுளே! சுதா சொன்னதைத் தான் இவனும் சொல்லப் போகிறானோ?' என்ற ஏமாற்றத்துடன் மண்டையை மேலும் கீழுமாய் ஆட்டி வைத்தாள்.

''பழசு நினைவில்லாமல் கணவன் - மனைவியா அன்னியோன்யத்துடன் வாழறதும் கஷ்டம் தான் இல்லையா?''

அவனது கேள்விக்கு, 'ரிஷியின் வாயிலிருந்து பிரிவைப் பற்றி கேட்க வேண்டிய துர்பாக்கியமா எனக்கு?' எனச்

சிந்தனை பிறக்க, பேரிடி தாக்கியது போல சின்ன அசைவு கூட இல்லாமல் சிலையாய் அமர்ந்திருந்தாள்.

அவளுடைய பிரதிபலிப்பைக் கண்டவனோ, ''ராதிகா...? ஒரு வேளை... நான் நோயாளின்னு... உனக்கு என் கூட சேர்ந்து வாழ விருப்பமில்லையா?'' என விசாரித்தான்.

''நீங்க நோயாளி எல்லாம் இல்லை, ரிஷி. இன்னொரு தடவை, தயவு செய்து அப்படி சொல்லாதீங்க'' என்று திருத்திவிட்டு,

''நீங்க என் கூட இல்லைன்னா வாழறதுக்கே எனக்கு விருப்பமிருக்குமான்னு தெரியலை, ரிஷி!'' என்று உணர்ச்சிப் பூர்வமானக் குரலில் உறுதியாய்ப் பேசினாள்.

''ச்ச! என்னதிது, ராதிகா? கொஞ்சம் யதார்த்தமா பேசலாமே? நான் என் முடிவை சொல்றதுக்கு முன்னாடி உன்னுடைய விருப்பத்தையும் தெரிஞ்சுக்கணும் என்று தான் கேட்டேன்'' என்று ரிஷி சொல்ல, அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

''நாம ரெண்டு பேரும் கணவன் - மனைவியா வாழறதைப் பற்றி முடிவு செய்ய எனக்கு ஒரு வருஷம் அவகாசம் வேணும், ராதிகா. என்னால் இயந்திரமயமா சேர்ந்து வாழ முடியாது. அப்படி வாழ்ந்தால் அது மன சளவில் இருக்காது. அதனால்... அதனால்... அதுவரை யில்... இருவரும் நண்பர்களா... ஒரே வீட்டில் இருக்க லாமா? உனக்கு இதில் ஆட்சேபணை இருந்தால்...''

இந்த அவனது முடிவில் ஒரு பெண்ணின் ஆசையும் வாழ்வும் அடங்கியிருக்கிறதே என நினைப்பில், அதற்கு மேல் தயக்கத்தில் ரிஷிக்கு வார்த்தைகள் எதுவும் கோர்வையாக வரவில்லை.



''தெளிவுபடுத்திக்க தான் கேட்கிறேன். ஒரு வருஷத் திற்குப் பிறகும் கணவன் - மனைவியா வாழறதைப் பற்றி உத்திரவாதம் எதுவும் நீங்க கொடுக்கலையே?''

ராதிகாவின் கேள்விக்காக அவளைப் பார்வையா லேயே மெச்சினாலும், ''லைஃப் டஸ் நாட் கம் வித் காரண்டீஸ். உனக்கு எந்தவித ஃபால்ஸ் ஹோப்-ம் கொடுக்க வேண்டாம்னு நினைக்கிறேன். ஒரு வருடத் திற்குப் பிறகு நாம நண்பர்களாக பிரியவும் நேரிடலாம்; இருவருக்கும் சம்மதம் என்றால் கணவன் - மனைவியா சேர்ந்தும் வாழ முடிவு செய்யலாம். இந்த ஒப்பந்தத்தில் உனக்கும் சம்மதமென்றால் மட்டும் இதை அமுல் படுத்தலாம்'' என முடிவை அவளிடமே ஒப்படைத் தான்.

உடனடியாகப் பிரிய வேண்டி வருமோ என்ற கவலையில் மூழ்கியிருந்தவளுக்கு, ரிஷிவர்மனின் இந்த ஒப்பந்தம் கரை ஒதுங்க கிடைத்த துடுப்பு போன்ற பலத்தைத் தந்தது.

அவனது நிலையிலிருந்து பார்க்கும் போது ரிஷி பேசியதை நியாயமாகக் கூட உணர்ந்தாள்.

கணவன் - மனைவி என்கிற பந்தத்தில் இயந்திரத் தனமாய் இருக்க முடியாது என்பதை அறிந்தவள் தானே அவள்?

முன்பு ஒரு வருடத்திற்குள் தன்னோடு காதலில் விழுந்தவன் அவன். திரும்பவும் தன் மீது காதல் கொள்ள மாட்டானா என்ன? இல்லை பழைய காதல் தான் திரும்பாதா?

ஒரு வருடத்தில் என்ன வேண்டுமென்றாலும் நடக்க லாமே?

''சம்மதம்!'' என்று நம்பிக்கையுடன் அவனிடத்தில் சொல்லும் பொழுதே பாட்டிக்கு இந்த விஷயம் தெரியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என முடிவும் செய்து கொண்டாள்.

இவர்கள் இருவரும் அறையில் தனிமையில் உரையாடிக் கொண்டிருந்த பொழுது, ரிஷியைப் பார்ப்பதற்காக வந்திருந்த யக்னேஷை ஒரு பிடி பிடித்தார் சுதா.

கடந்த இரண்டு வாரமாய் ரிஷியின் உடல்நிலையைப் பற்றிய கவலையில் மூழ்கியிருந்தவருக்கு யக்னேஷிடம் பேச சந்தர்ப்பம் சரியாக அமையாமல், இப்பொழுது தான் அதற்கான வாய்ப்பு கிடைத்தது.

''ஏன்பா? இங்கே ரிஷியைக் காணாமல் தவிச்ச எத்தனை தடவை உன்னிடம் கேட்டிருப்போம்? ஒரு வார்த்தை சொல்லலையில்ல, நீ? உங்க ப்ரண்டை விட்டே கொடுக்க மாட்டீங்களே? எப்போ தான் பெரியவங்க தவிப்பையெல்லாம் புரிஞ்சுக்கப் போறீங்களோ?''

''சாரி, ஆன்ட்டி...!''

''என்னத்த சாரி? உன் கூட சேர்ந்து தொழில் ஆரம்பிச்சதாலே அங்கே தான் வந்திருப்பானோன்னு எனக்கு சந்தேகம் இருந்துட்டே இருந்தது. ஆனால் ரிஷி அப்பா ராம் தான், ரெண்டு வருஷம் நம்ம பையன் சென்னையிலா இருந்து தொழிலைக் கவனிச்சான்? இப்போ மட்டும் எதுக்கு தொழிலுக்காக சென்னைக்குப் போகப் போறான்னு கேள்வி கேட்டார்.''

சுதா பேச ஆரம்பித்ததிலிருந்து தலையைக் குனிந்தவன் தான். நிமிரவேயில்லை.

''இருந்தாலும் என் சித்தப்பாவை விட்டு ரிஷியைச் சென்னையில் தேடச் சொன்னேன். அவரும் வந்து



பார்த்துட்டு ரிஷி அங்கேயில்லைன்னு தான் சொன்னார். என்ன தேடினாரோ...?'' புலம்பியபடியே கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டார்.

''ரிஷி அடிக்கடி பிசினஸ் விஷயமா வெளியே போவான், ஆன்ட்டி. அதனால் கூட அவர் ரிஷியை மிஸ் செய்திருக்கலாம்.''

''என்னமோடா? இந்த ஒரு வருஷம் எத்தனை கஷ்டம் தெரியுமா? ரெண்டு மகன்களும் ஆளுக்கொரு பக்கம்? சரி... எல்லாம் விடு! கல்யாணம் செய்யப் போறதைக் கூட எங்களிடம் சொல்லாமல்... மனசே ஆற மாட்டேங்குதுடா'' எனப் பொரிந்தார்.

இவரிடம் இருந்தால் இதைப் பற்றிப் பேசிப் பேசியே ஒரு வழி செய்து விடுவார் என்றெண்ணிய யக்னேஷிடம், ''இப்போ பார்! அவனுடைய நினைவு திரும்புவதற்கு சான்ஸ் ரொம்ப கம்மியா தான் இருக்கு என்று டாக்டர் சொல்லிட்டுப் போறார்'' எனப் பெருமூச்செறிந்தார்.

''நான் நாளைக்கு காலையில் சென்னைக்குக் கிளம்பறேன், ஆன்ட்டி. ரிஷியிடம் அவன் பங்கு பணத்தைக் கொடுத்துட்டு, சொல்லிட்டுப் போகலாம்னு தான் வந்தேன். நீங்களே இதை அவனிடம் கொடுத்துடறீங்களா? நான் இன்னும் எதுவும் எடுத்து வைக்கலை'' என்றவன் கையோடு கொண்டு வந்த காசோலையை அவரிடத்தில் தர முயற்சித்தான்.

அவனது கரத்திலிருந்த கடித உறையை வாங்காமலே, ''இதென்ன செக்-ஆ? அவனுடைய அக்கவுண்ட் விவரமெல்லாம் ரிஷிக்கு நினைவு இருக்கான்னு தெரியலையே, யக்னேஷ். எதற்கும் காசாவே கொடுத்துட

முடியுமா? இல்லாட்டி... என் பெயருக்கு செக் கொடுக்கிறாயா?'' என்று சமயோசிதமாய் வினவினார்.

சற்று முன்னர் ரிஷிக்கு பழைய நினைவு மீளுவதற்கான வாய்ப்பு குறைவு என்ற சுதாவின் புலம்பலும், பணமாகவே தந்து விடு என்ற அவரது கோரிக்கையும் யக்னேஷின் மனதில் சலனத்தைத் தோற்றுவித்ததுடன், நண்பனின் அம்னீஷியாவைச் சாதகமாக எடுத்துக் கொண்டு அவனுக்கு மித்ர துரோகத்தையும் இழைக்கத் தூண்டியது.

# 10



நாளை விடிந்தால் புது வருடப் பிறப்பு!

புது வருடத்தை வரவேற்கும் பொருட்டு அவர்களின் நண்பர்கள் அளிக்கும் விருந்திற்கு ராமநாதனும், சுதாவும் சென்று விட்டிருக்க, வீட்டில் தனித்திருந்த ரிஷிவர்மனும், ராதிகாவும் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பாகிக் கொண்டிருந்த 'பால்-ட்ராப்'-ஐ பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும், புது வருட கொண்டாட்டங்களில் ஒன்றாக நியூயார்க் நகரில், டைம்ஸ் ஸ்கொயர் என்ற இடத்தில் அதற்கென்றே வடிவமைக்கப்பட்ட கம்பத்திலிருந்து பிரத்யேகமாக செய்யப்பட்ட பந்து விழும்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த ராதிகாவிற்கு, அம்மாடி... ஒரு பந்து விழுவதைக் காண இத்தனை கூட்டமா என்றிருந்தது.



அதுவும் உடலை நடுங்கும் இந்த டிசம்பர் மாத குளிரில்?!

என்ன 'Ball drop' என்னவோ?! ஒன்றும் புரியவில்லை அவளுக்கு! புரிந்தாலும் எதிலுமே சுரத்தின்றி இருந்தாள்.

அவளுக்கும், ரிஷிக்கும் திருமணமாகி வரும் முதல் வருடப் பிறப்பு இது!

எல்லாம் நல்ல முறையில் இருந்திருந்தால்... அவர்களும் இந்நாளை நல்ல முறையில் கொண்டாடியிருக்க மாட்டார்களா?

இப்படி ஆளுக்கொரு இருக்கையில் அமர்ந்து, இரவு தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டா இருப்பார்கள் என்ற ஏக்கத்துடன் கணவனை நோக்கினாள்.

அவனை மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு அழைத்து வந்து இன்றோடு மூன்று நாட்களாகி விட்டது.

ஐந்து படுக்கையறை கொண்ட விஸ்தாரமான தனி வீடு. உள்ளே நுழைந்ததும் மாடி படிக்கட்டு. அதன் இடப்புறம் லிவிங் ரூம், டைனிங் ஹால்; வலப்புறம் ஒரு அறை, சமையற்கட்டு, ஃபேமிலி ரூம்; மாடியில் நான்கு அறைகள். வீட்டிற்கு வெளியேவும் இது போன்று ஒரு வீடு கட்டுமளவிற்கு இடமுண்டு.

ஒற்றை படுக்கையறையிலும் கணவனுடன் சந்தோஷத்துடனும், மனநிறைவுடனும் இருந்த ராதிகாவினால் இந்தப் பெரிய வீட்டில் நிம்மதியாகக் கூட இருக்க முடியவில்லை.

அதிகம் பேசாத ராமநாதன் ஒரு புறம்; எல்லாவற்றையும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் சுதா ஒரு

புறம்; எல்லாவற்றிற்கும் மேலாக அறிந்தவர் போன்று மட்டுமே தன்னை நடத்தும் கணவன் மறுபுறமென தவித்துப் போனாள்.

அவளுடன் சிறிது பேசிக் கொண்டிருந்த அர்ஜூனும் ஆஷாவும், ரிஷி மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு வந்ததுமே, நிறைய நாள் வேலைக்கு விடுமுறை எடுத்து விட்டதாகச் சொல்லி திரும்பவும் பென்ஸில்வேனியா விற்கே சென்று விட்டிருந்தனர்.

ஆக, இப்பொழுது உடன் பேசுவதற்குக் கூட ஆளில்லாமல் தனித்திருப்பது போன்று உணர்ந்தாள் ராதிகா.

ஒரு வருடம் வெறும் நண்பர்களாக மட்டும் சேர்ந்திருந்து பார்க்கலாம் என்று ரிஷிவர்மன் சொன்ன பொழுது, அப்போதைக்கு நிம்மதி அடைந்த ராதிகா விற்குத் தெரிந்திருக்கவில்லை அது இவ்வளவு கடினமாக இருக்கக் கூடுமென்று!

ஓரோர் நேரத்தில், 'டேய்! நான் உன் மனைவிடா!' என்று கத்தலாம் போன்று கூட அவளுக்குத் தோன்றியது.

'உனக்கு என்ன என்னை நினைவு வர்றது? நினைவு வந்தாலும் வரவில்லை என்றாலும் நான் தான் உன்னுடைய மனைவி! அது என்னுடைய உரிமை!' என்று அவனுடைய சட்டையைக் கொத்தாகப் பிடித்து ஆட்டும் வெறி கூட முளைத்தது.

அவளுக்கு வரும் கோபத்தின் அளவைக் கண்டு, எதையும் பொறுத்துப் போகும் அவளே அரண்டு விட்டாள்.

தன்னுடைய ஆற்றாமையே கோபமாக வெளி வருகிறதெனப் புரிந்தவளுக்கு மனம் மேலும் வாடியது.



இதற்கிடையில் இந்தியாவிலிருக்கும் பாட்டியை அழைத்து, ஒன்றுமே நடக்காதது போன்று வேறு பூசி மொழுக வேண்டியிருந்தது.

அவளைப் பொருத்தவரை ரிஷி அவளது கணவன்; மனதாலும், உடலாலும் அவனை வரித்தவள்.

ஆனால் அவனோ, அவளை வேற்று நபராக நடத்துவதைக் காணும் பொழுது தைரியமாக இருக்க வேண்டுமெனத் தனக்குத்தானே உருவேற்றிக் கொண்டது கூட அவளுக்குப் பயனற்று போனது.

மூன்று நாட்களிலேயே இப்படிச் சோர்ந்து போனால் எப்படி? இப்பொழுது தானே பிழைத்தெழுந்து வந்திருக்கிறான். நாளடைவில் எல்லாம் சரியாகப் போகுமென தனக்குத் தானே தைரியம் சொல்லிக் கொண்ட வண்ணமிருந்தாள்.

தனக்கிருக்கும் நம்பிக்கையைவிட பயம் அதிகமானால் எப்படி என்று தன்னைத் தானே கேள்வி கேட்டுக் கொண்டவளை, தொலைக்காட்சியிலிருந்து வந்த ஆரவாரக் கூச்சல் இடையிட்டது.

தன் சிந்தனைகளிலேயே உழன்றுக் கொண்டிருந்தவள் அவளுடைய கவனத்தை 'பால் ட்ராப்' மீது வைத்தபடி புது வருடத்தை வரவேற்க தயாரானாள்.

கடிகாரம் நள்ளிரவைத் தொட்டதும், அந்த ஜனத்திரளில் இருந்தவர்கள் யாவரும், அவர்கள் அருகிலிருக்கும் அவரவர் துணையைக் கட்டிப் பிடித்தும், முத்தமிட்டும் தங்களின் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண்டதைப் பார்த்துக் கொண்டிருந்தவளிடம்,

முக்காலி மீது காலை நீட்டியவாறு சோபாவில் சாய்ந்து அமர்ந்திருந்த ரிஷிவர்மன், ''ஹாப்பி நியூ இயர்,

ராதிகா!'' என வாழ்த்துச் சொல்ல, அவனை விழி மலர்த்தி பார்த்தாள் ராதிகா.

தொலைக்காட்சியில் அவள் பார்த்த காட்சிக்கும், நடப்பிற்கும் தான் எத்தனை வித்தியாசம்?

அவன் ஒவ்வொரு முறையும், 'ராதிகா, ராதிகா' என்று அவளை விளிக்கும் போதெல்லாம் அவள் வெறுமையாக உணர்ந்தாள்.

''என் மாமனாருக்கு நல்ல ரசனை. ராதிகா என்று எவ்வளவு அழகாக உனக்குப் பேர் வைச்சிருக்காரு பாரேன்!'' என ரசித்து, சிலாகித்தாலும் எப்பொழுதும் வாய் நிறைய அவளை 'ரதி' என்றோ, இல்லை 'ராதி' என்றோ, இல்லை 'ராது' என்றோ தான் அவன் பெரும்பாலும் அழைப்பது.

அவன் செல்லமாகப் பெயரைச் சுருக்கி அழைத்த போதெல்லாம், அந்தச் சுருக்கத்திற்குப் பெரிதாக அவள் முக்கியத்துவம் கொடுத்தவள் இல்லை தான்.

ஆனால்... அது இல்லை எனும் போது தான் அதை மிகவும் எதிர்பார்த்தாள்.

இப்பொழுது அந்தச் செல்ல சுருக்கமே அவனுக்கு மறந்து போனது போன்று... அந்த இடத்தில் அணை யிட்டது போன்று அவளது எண்ண அலைகள் தடைப் பட்டன.

அழைப்பை மட்டுமல்ல... அவளையும் தானே அவன் மறந்து போனான்?

தன்னை சென்னையில் விட்டு விட்டு ரிஷி அமெரிக்கா வந்திருந்த பொழுது கூட தனிமையை அவள் இப்படி உணர்ந்திருக்கவில்லை.

இப்பொழுது கைக்கு எட்டும் தூரத்திலேயே அவனை வைத்துக் கொண்டு...?



கணவனை விழியெடுக்காமல் பார்த்த ராதிகா, மெல்ல அவனுடைய இருக்கையில் இருந்து எழுந்து வந்து, "வெரி ஹாப்பி நியூ இயர், ரிஷி! இந்த வருஷம் நமக்கு நல்லதா அமையட்டும்!'' என்ற பிரார்த்தனையுடன் அவனை நோக்கி குனியவும் ரிஷியின் உடல் விறைப் புற்றது.

அந்த விறைப்பை உணர்ந்த ராதிகா, அதைச் சட்டை செய்யாமல், மிக இயல்பாக அவனது வலது கை புறமிருந்த இரவு விளக்கை, கை நீட்டி அணைத்தாள்.

மீண்டுமொரு முறை வாழ்த்துச் சொல்லிய பின், அவனுக்கு எதுவும் வேண்டுமா என விசாரித்துவிட்டு படுக்கையில் விழுந்தவளின் கண்ணோரங்கள் கரித்துக் கொண்டு வர, ரிஷிவர்மனிடம் கூறிய பிரார்த்தனை யையே திரும்ப தனக்குத் தானே அழுத்திச் சொல்லிக் கொண்டாள்.

நம் எண்ணங்களுக்கே பெரிய ஷக்தி இருப்பதாக நம்பியவன் அவளது ரிஷிவர்மன். அது உண்மை யானால், அவளது கணவனை அவளிடமே கட்டாயம் திரும்ப கொண்டு வந்து சேர்க்கும்.

அதையே திரும்பத் திரும்ப தனக்குத் தானே உருப் போட்டுக் கொண்டவளின் மனதில் நம்பிக்கையின் ஒளி பாய்ந்தது போன்று இருந்தது.

ஒருக்களித்துப் படுத்துக் கொண்டிருந்த ராதிகாவைப் பார்த்தவனுக்கும் அவளை எண்ணி தர்மசங்கடமாய் தான் இருந்தது.

அவள் தன்னருகே நெருங்கி வந்த பொழுது அவ ளையும் மீறி அவனுடைய உடல் விறைத்தது அவ ளுடைய தவறன்று!

இருப்பினும் அவளுக்குத் தவறிழைத்தது போன்று தவித்துப் போனான்.

ஒரு பெண்ணை... அதுவும் மனைவி என்று வந்தவளை ரொம்பவும் காயப்படுத்துகிறோமோ என்ற குற்ற உணர்வு அவனை வெகுவாகத் தாக்கியது.

ஆனால் அவள் தன்னவள் என்றே தோன்றவில்லையே?! அப்படியிருக்கும் பொழுது எப்படி...?

தலையை அழுந்தக் கோத சென்றவனின் கரங்களில் சொர சொரவென மண்டை படவும், அறுவை சிகிச்சைக்காக தலை மழிக்கப்பட்டிருந்தது நினைவு வர, மகா வெறுப்பாக வந்தது அவனுக்கு.

கோபத்தில் முக்காலி மீது வைத்திருந்த காலை ஓங்கி ஒரு உதை விடப் போனவன், எங்கே அந்தச் சத்தத்தில் படுத்திருந்த ராதிகா எழுந்து விடுவாளோவென அமைதி காத்தான்.

திரும்பி ராதிகாவைப் பார்த்தவனுக்கு தனக்கு மணமாகி விட்டது என்பதையே இன்னமும் நம்ப முடியவில்லை.

அப்படி மணமானது கூட நினைவின்றி... மனைவி என்று வந்தவளையும் அவனுக்குச் சற்றும் அடையாளம் தெரியவில்லை என்பதனையும் அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

நிஜமாகவே எனக்குத் திருமணம் ஆகி விட்டதா? இவள் தான் என் மனைவியா? மனைவி என்று இருப்பவளை எப்படி மறந்து போனேன்? எப்படி மறக்க முடியும்?

அப்பொழுது ஆழ்மனதில் பதியுமளவிற்கு அவர்களின் உறவு இல்லையா? எங்களின் உறவு எப்படிப்பட்டது? அறிவுப் பூர்வமானதா இல்லை உணர்வு பூர்வமானதா?



மேலோட்டமானதா இல்லை அன்னியோன்யமானதா என்று நினைவு கூற முயற்சித்தவனின் தலைவலிக்க ஆரம்பிக்க, பல்லைக் கடித்து வலியைப் பொறுத்துக் கொண்டவன் அதை மறக்க ராதிகாவை உற்று நோக்கலானான்.

அவனது தந்தைக்கும், சித்திக்கும், தம்பிக்கும் எப்படியோ ரிஷி தங்களிடம் திரும்ப வந்து விட்டான்; அவனுக்குத் தங்களை நினைவு இருக்கிறது என்பதிலேயே மட்டமற்ற மகிழ்ச்சி என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்.

ஐயோ பாவமே என அவனுக்காக வருத்தப்பட்டவர்களால் செய்ய முடிந்ததும், அது மட்டுமே.

அழுதாலும் புரண்டாலும் அவரவரின் வலியை அவரவர் தானே பொறுத்தோ சகித்தோ போக வேண்டும்?

மனைவியாக வந்தவளோ எதையோ இழந்தது போன்றே இந்த இரண்டு மூன்று நாட்களாக வளைய வந்து கொண்டிருந்தாள்.

அவள் தன்னுடன் பேசத் துடிப்பதும், இயல்பாக இருக்க தவிப்பதும் அவனுக்கும் தெரிந்தே இருந்தாலும் செய்வதறியாது தவித்தான் அவன்.

மனைவி என்ற உரிமையுடன் ஒருத்தி... ஆனால் அவளிடம் எந்தவித உரிமையையும் எடுத்துக் கொள்ள தூண்டாத அந்நியத்தனம் அவனிடம்!

உரிமையில்லாத இடத்தில் எப்படி இயல்பாகப் பழக முடியும்?

அவள் தன்னவள் என்ற உரிமையே அவனுக்குத் தோன்றாத பட்சத்தில் அவன் என்ன செய்யப்

போகிறான்? அவன் சொன்ன மாதிரி ஒரு வருடம் மட்டுமே உடன் இருந்து பார்க்கப் போகிறானா?

ஒரு வருடமான பிறகும் ஒருவேளை நினைவு வரவில்லையென்றால்...?!

நினைவு வரவில்லையென்றால் இது தன்னையும், அவனையும் எவ்வளவு பாதிக்கப் போகிறது?

'இன்று போய், நாளை வா!' என்பது மாதிரி இந்த வருடம் நினைவுக்கு வரவில்லையென்றால், அடுத்த வருடம் என்று காலத்தைக் கடன் வாங்கப் போகிறானா?

இல்லை... இதெல்லாம் அவன் வாழ்வில் ஒத்துவர வாய்ப்பில்லை என்று அவளிடமிருந்து விவாகரத்துப் பெற்றுக் கொள்ளப் போகிறானா?

இல்லை... காலப் போக்கில் உரிமையும், உறவும் வந்து சேருமா? இதெல்லாம் சரியாகி விடுமா? அல்லது எப்பொழுதுமே அந்நியமாக தான் இருக்க வேண்டுமா?

பழைய நினைவுகள் திரும்பவும் வரும் பொழுது - வந்தால் - இப்பொழுது நினைவு இருப்பது ஒருவேளை மறந்து போகுமோ என்ற எண்ணமே அவனுக்கு மேலும் பயத்தையும் குழப்பத்தையும் விளைவிக்க, மட்டுப்பட்டிருந்த தலைவலி அதிகமானது.

பலவித சாத்தியக் கூறுகளை நினைக்கவே பயமாக இருந்தது! எத்தனை காலம் இப்படியே இருக்க இயலும்?

வலியினால் தள்ளாடிக் கொண்டே மெல்ல எழுந்து வந்து படுக்கையில் விழுந்தவன், ராதிகாவைப் பார்த்துக் கொண்டே உறங்க முயற்சிக்க, அவனது தலைவலியும் மெல்ல மெல்ல குறைந்து அடங்கியது.



அவனது தலைவலிக்கு காரணமானவளே அவனின் வலி நிவாரணத்திற்கும் காரணமாகும் விந்தையை அவன் எப்பொழுது புரிந்து கொள்வான்?

* * *

இரவு யோசனையின் பலனாக புது வருடத்தை நல்ல முறையில் துவக்க முயற்சிக்க வேண்டுமென நினைத்திருந்தவன் காலையில் விழித்தெழுந்ததும் ஒரு மெல்லிய புன்முறுவலுடனே, ''குட் மார்னிங், ராதிகா!'' என அவளுக்கு காலை வணக்கம் சொன்னான்.

கணவனின் புன்முறுவல் ராதிகாவின் முகத்திலும் புன்னகையைத் தோற்றுவிக்க, பதில் வணக்கம் கூறியவள், ''உங்க அப்பாவும் அம்மாவும் கோவிலுக்குப் போயிருக்காங்களாம். திரும்பி வர மதியத்திற்கு மேலே ஆகும்னு கிச்சனில் நோட் எழுதி வைச்சிருந்தாங்க'' என்றவாறே படுக்கைக்கு அருகே இருந்த மேஜையின் மீது அவனுக்கு குடிக்க காபியை வைத்தாள்.

''ம்ம்... எப்பவும் மார்கழி மாசம் அவங்க ரெண்டு பேருமே காலையில் ப்ரிட்ஜ் வாட்டர் பாலாஜி கோவிலுக்குக் கிளம்பிடுவாங்க. இத்தனை நாள் ஹாஸ்பிடலுக்கும், வீட்டிற்கும் அலைஞ்சதில் போயிருந்திருக்க மாட்டாங்க'' என்றவன், பல் தேய்த்துவிட்டு வந்தான்.

கோப்பையை எடுத்து பருகியவாறே, ''ராதிகா! நம்ம கல்யாணம் எப்போ, எப்படி நடந்தது?'' என்று ரிஷி விசாரிக்க, படுக்கையைச் சரி செய்து கொண்டிருந்தவள் ஒரு கணம் அசைவின்றி நின்றாள்.

தங்களின் திருமணம் எப்படி நடந்தது என்று அவள்... அவனுக்குச் சொல்ல வேண்டுமா?

''இப்போ எதுக்கு கேட்கறீங்க, ரிஷி?'' என்றாள் திரும்பாமல்.

''எத்தனை நாள் நான் ஒன்றுமே தெரியாமல் இருட்டிலேயே இருக்க? அதான் தெரிஞ்சுக்கலாமேன்னு!'' எனப் பதில் வர,

''உங்களுக்கு தானா நினைவு வர்றது தான் நல்லதுன்னு டாக்டர் சொல்லியிருக்கார், ரிஷி. ஏன் இப்போ? கொஞ்சம் பொறுமையா இருக்கலாமே?'' என்றாள் மெல்ல.

''தானா நினைவு வரலைன்னா என்ன செய்யறது?''

அவளுடைய பயத்தையே அவன் வாய் வார்த்தையாகக் கேட்டவளுக்கு என்ன பதில் சொல்ல எனத் தெரியவில்லை.

அந்த பயம் அவளுக்குமே இருந்ததே? ஆனால் கூடவே, காதலும் சொல்லித் தெரிவதில்லையே என்றும் தோன்றியது.

பெருமூச்சுடன் கட்டிலில் அமர்ந்து, எந்தவித ஏற்றமும் இறக்கமுமின்றி செய்தி வாசிப்பது போன்று நடந்த நிகழ்வுகளை மட்டுமே சொன்னவள், அவை எதுவும் அவனின் மூடியிருந்த நினைவு பெட்டகத்தைத் தட்டித் திறக்கிறதா என அவன் முகத்தை ஆர்வமுடன் பார்த்தாள்.

ரிஷிவர்மனும் அதையே தான் எதிர்பார்த்திருப்பான் போல... அவனின் முகமும் ஏமாற்றத்தைத் தான் காட்டியது.

''உங்க வீட்டில் யார் யாரெல்லாம் இருக்கீங்க? அம்மா, அப்பா?'' என விடாமல் அவன் மேலும் துருவ,



உதட்டைக் கடித்துக் கொண்டவள், ''பாட்டி மட்டும் தான் இப்போ இருக்காங்க. அவங்களுக்கு காலில் அடி பட்டது என்பதனால் தான் நீங்க மட்டும் அர்ஜுன் கல்யாணத்துக்குக் கிளம்பி வந்தீங்க'' என்றும் சேர்த்து சொன்னாள்.

அவள் கூறியவற்றை அசை போட்டவன், அடுத்து கேள்வி கேட்க வாயைத் திறக்க, இதற்கு மேல் தன்னால் தாள முடியாது என்று உணர்ந்தவள், ''இன்றைக்கு இது போதும், ரிஷி! இன்னமும் நீங்க சொன்ன ஒரு வருஷ காலம் மிச்சம் இருக்கு. வீணா யோசிச்சு தலை வலியை இழுத்துக்காதீங்க. அடிக்கடி தலை வலி வர்றது நல்லதில்லை. மெல்ல மெல்ல நினைவு வரட்டும். வரலைன்னா... அதைப் பிறகு பார்க்கலாம்'' என்று முடித்தாள்.

அவள் முகத்தைப் பார்த்தவனுக்கு என்ன தோன்றியதோ அவனும் அதற்கு மேல் அவளை வற்புறுத்தவில்லை.

காலி கோப்பையை எடுத்துக் கொண்டு வெளியேறியவள் நின்று திரும்பி, ''உங்க அப்பா, அம்மா உங்களோட தமிழில் பேசினாலும், அவங்களுக்கு இங்கிலீஷில் பதில் சொல்லும் நீங்க... என்னோட மட்டும் தமிழில் பேசறது ஏன் என்று மட்டும் இப்போதைக்கு யோசிங்க'' என்று நிதானமாக மொழிந்து விட்டுச் செல்ல, ரிஷிவர்மனின் கண்கள் வியப்பிலும், கேள்வியிலும் விரிந்தது.

இந்த வித்தியாசத்தை அவன் இதுவரை உணரவில்லையே? தன் யோசனையின்றி தன்னிச்சையாகவே வருகிறதா?

அவளை நினைவில்லாதவனுக்கு அவளுடன் பேசிய மொழி மட்டும் நினைவிருக்கிறதா?

அவனே அறியாமல் வேறு என்னென்னவோ அவனுக்கு நினைவு இருக்கிறதோ? யார் அறிவார்?

மூளையின் பல்லாயிரக்கணக்கான சுருக்கங்களில் என்னவெல்லாம் புதைந்திருக்கிறதோ? அது எப்பொழுது வெளி வருமோ?

## 11



தன் தாய் - தந்தையினரிடம் ஒரு மொழியிலும் அவளிடம் வேறு மொழியிலும் தான் பேசுவதாக ராதிகா சொல்லிவிட்டு சென்றதையே அசைப்போட்டுக் கொண்டிருந்த ரிஷிவர்மனுக்கு இன்னமும் வியப்பிலிருந்து மீள முடியவில்லை.

நான் ராதிகாவிடம் பேசும் மொழி தானாக... தன் நினைவின்றி வருவது போன்று மற்றவைகளையும் தாமாக வருமா? இல்லை நானாக எதையும் தூண்ட வேண்டுமா?

வேறு எதையெல்லாம் நான் இழந்தேன் என்ற யோசனையில் ஈடுபட்டவனுக்கு எல்லாம் மசமசவென தான் தெரிந்தது.

நெற்றிப் பொட்டைத் தேய்த்து விட்டபடி கண்களை அழுந்த மூடிக் கொண்டவனின் செவிகளில் ராதிகா அவளது பாட்டியுடன் பேசிக் கொண்டிருந்த தொலைபேசி பேச்சு காதில் விழ, மறுமுனையில் என்ன பேசினார்கள் என்பதை இவளது பேச்சிலேயே யூகிக்க முடிந்தது.

''புத்தாண்டு நல்வாழ்த்துக்கள், பாட்டி! நான் நல்லாயிருக்கேன். ரிஷி நல்லாயிருக்கார். உங்களுக்கு கால் எப்படியிருக்கு? நீங்க எப்படியிருக்கீங்க?''



''ஒழுங்கா செக்-அப்புக்கு போயிட்டு வாங்க. இங்கே ரிஷிக்கு நிறைய வேலையிருக்கு, பாட்டி. அதனால் இப்போதைக்கு அங்கே நாங்க வரலை.''

''ரிஷி ஹாஸ்பிடலில் இருந்து வந்ததுமே அர்ஜுனும், ஆஷாவும் பென்ஸில்வேனியாவிற்கு கிளம்பிட்டாங்க. அர்ஜுன் இங்கே வேலையை மாற்றி வர இன்னமும் ஆறு மாசமாவது ஆகுமாம்.''

''ம்ம்... பென்ஸில்வேனியா போறதுக்கு இங்கிருந்து ஒரு நாலு - அஞ்சு மணி நேரம் ஆகும்னு சொல்லிட்டு இருந்தாங்க, பாட்டி.''

''ம்ம். ரிஷி நல்லா பார்த்துக்கிறார். வீட்டில் எல்லோரும் ரொம்ப நல்ல மாதிரி தான். கலகலன்னு பேசுவாங்க. உங்க கூட பேசணும்னு ரிஷியும், அத்தையும் சொல்லிட்டு தான் இருந்தாங்க. நேரம் தான் இங்கேயும், சென்னைக்கும் ஒத்தே வர மாட்டேங்குது. நீங்க தப்பா எடுத்துக்காதீங்க பாட்டி.''

''மெஸ்ஸுக்கு வர யாரோ ஏதாவது சொன்னால் நீங்க ரிஷியை எப்படி சந்தேகப்படலாம்? இது பற்றி தெரிஞ்சால அவர் கஷ்டப்படுவார்!''

''வெளியே பனி ஜாஸ்தியா இருக்கு, பாட்டி. வாகனம் போறதுக்கு இடைஞ்சல் இல்லாமல் கொட்டும் பனியை அப்படியே சாலையோரத்தில் குவியலா குவிச்சு வைச்சுட்டே இருக்காங்க. நம்ம வீட்டு முன்னாடி விழுந்திருக்கிற பனியை நாம தான் எடுத்துப் போடணும். சரியா டிரஸ் செய்துக்காமல் வெளியில் போனால் அப்படியே விறைச்சுடும். அதனாலேயே ரிஷி வெளியில் கூப்பிட்டால் கூட நான் போறதேயில்லை.''

''நேற்று கூட இங்கே புத்தாண்டு கொண்டாட் டத்தைப் பார்க்கிறதுக்கு அத்தை, மாமா எல்லாம் நியூயார்க் வரைக்கும் போயிட்டு வரலாம்னு கூப்பிட் டாங்க. ஆனால் நான் தான் குளிருக்கு பயந்துட்டு வேணாம்னு சொல்லிட்டேன். நான் வரலை என்றதும் ரிஷியும் என் கூடவே இருந்துட்டார். டி.வி.யில் தான் அந்தக் கொண்டாட்டத்தையெல்லாம் பார்த்துட்டு இருந்தோம்.''

''நான் சந்தோஷமா இருக்கேன், பாட்டி. என்னைப் பற்றி நீங்க எதுவும் கவலைப்பட வேண்டாம். நான் நேரம் கிடைக்கும் போது பேசறேன். ஆங்...! சரி... சரி... அவரையும் கேட்டதா சொல்றேன். வைச்சுடறேன்!''

பேச்சை முடித்து ரிஸீவரை அதனிடத்தில் பொருத் தியவள் கண்களை அழுந்த மூடி, நெற்றிப் பொட்டைத் தேய்த்துவிட்டுக் கொண்டாள்.

தனக்கிருக்கும் ஒரே ஆதரவான பாட்டியிடம் கூட உண்மை நிலவரத்தைச் சொல்லி ஆறுதலடைய அவள் விரும்பவில்லை; அப்படி அவள் பாரத்தை இறக்கி வைக்க முயற்சித்தால் அதை அவரால் பாட்டியால் தாங்கிக் கொள்ளவே முடியாது என்பதை அவள் நன்கு அறிவாள்.

மெஸ்ஸுக்கு வருபவர் யாரோ ஒருவர், 'வெளிநாட்டு மாப்பிள்ளை பல பேர் ஏமாற்று பேர் வழிகள். உங்கள் பேத்தியைக் கல்யாணம் செய்தவனை விசாரிச்சீங்களா? ஆள் அரவமே காணோமே?' என்று பாட்டியிடம் கொளுத்தி விட்டு போனதற்கே கலக்கத்துடன் பேசுகிறார் அவர்.



இதில் அவள் எங்கிருந்து விபத்து, மறதி என்பதைப் பற்றியெல்லாம் சொல்வது?

அவனது அறை வாயிலிலிருந்து ராதிகாவையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த ரிஷிவர்மன், அவளது பாதி பேச்சிலேயே தன் வேலைகளை விட்டு விட்டு வந்து விட்டிருந்தாலும் ராதிகாவைத் தொந்தரவு செய்யாமல் சற்று தள்ளியே நின்று அவளைக் கவ னித்துக் கொண்டிருந்தான்.

அவள் தன்னிடம் பேசிய இந்த இரண்டு - மூன்று நாட்களில் இதுவரையில் அவள் எந்தவித உணர்ச் சியையும் காட்டியதில்லை. ஒரு எல்லைக்கோட்டுக்கு அப்பாலேயே தன்னை நிறுத்தி வைத்திருப்பது போல உணர்வான் அவன்.

தான் அவளிடத்திலிருந்து விலகியிருக்கும் பொழுது அவள் மட்டும் அவன் மேலே விழுந்தா பழக முடியும்?!

இப்பொழுது பாட்டியிடம் பேசும் பொழுது ராதி காவின் உற்சாகமான வாழ்த்தும், அன்பான விசாரிப்பும் தான் அவனை ஈர்த்தது. அவள் பேசும் ஒவ்வொரு வரியிலும், 'ரிஷி-ரிஷி' என்று அவனை மையப்படுத்தி... அவனை விட்டுக் கொடுக்காமல் தாங்கிப் பேசிக் கொண்டிருக்கிறாள்.

ஆனால் நான்...?

தான் மிகவும் சுயநலமாய் நடந்து கொள்கிறோமோ என்ற குற்ற உணர்ச்சி ரிஷிக்கு மிகுந்தது.

ராதிகா குறிப்பிட்டது போல அவளிடம் வீட்டில் உள்ளவர்கள் யாரும் கலகலப்பாக... ம்ஹூம்.. அப்படிக் கூடச் சொல்ல முடியாது... சுமூகமாகக் கூடப் பேசுவ தில்லை என்பதை அறிந்தவன் தான் அவன்!

புகுந்த வீட்டினரைப் பற்றி குற்றம், குறை கண்டு பிடித்து அழுது புலம்பாமல், அவளைச் சந்தோஷமாய் வைத்திருப்பதாகக் காட்டிக் கொண்டு பேசுவதில் ராதிகா பெருந்தன்மையாக நடந்து கொள்வதாக ரிஷிக்குப் பட்டதோடு, முன்பைவிட அவனிடத்தில் சின்னதொரு நெருக்கம் உருவானதாக தோன்றியது அவனுக்கு.

பேசி முடித்ததும் ஆயாசமாக அமர்ந்தவளின் அருகில் சென்றவன், ராதிகாவிற்கு குளிர்ந்த நீரைப் பருகக் கொடுத்தான்.

திடீரென்று தன்னருகில் அரவம் கேட்டு திடுக்கிட்டவள், ரிஷியைக் கண்டதும் சின்னதொரு முறுவலில் தன் வேதனையை மறைத்துக் கொண்டு நீரை வாங்கிப் பருகினாள்.

''பாட்டி நல்லாயிருக்காங்களா?'' என்று ரிஷி கேட்டதை ஆச்சரியத்தோடு பார்த்தவள், ''நல்லாயிருக் காங்க'' என்றாள் உற்சாகமாக.

''வெளியே எங்கேயாவது போயிட்டு வரலாமா, ராதிகா? ஏதாவது வேலையிருக்கா?'' என ரிஷி வினவ.

அவன் அப்படி கேட்டதில் மகிழ்ச்சி பிறந்தாலும், ''இந்தக் குளிரிலா?'' என்று கேட்டு ஜன்னல் வழியாக வெளியே தெரிந்த பனி மழையைக் கண்டு கலக்கமுற்றாள்.

''ம். ஜாக்கெட் போட்டுக்கலாம். ஒன்றும் பிரச்சனையில்லை'' என்று அவன் சர்வ சாதாரணமாக சொல்ல, ராதிகாவிற்கு இப்பொழுதே நடுங்கியது.

''நீங்க வெளியே போகலாமான்னு எதுக்கும் டாக்டர் கிட்டே ஒரு வார்த்தை கேட்டுக்கலாமா?''



''லாங்க் ட்ரிப் தான் போக வேண்டாம்னு சொல்லி யிருக்கிறார். இங்கே நியூஜெர்ஸிக்குள்ளேயே தானே போயிட்டு வர்றோம். ஒன்றும் பிரச்சனையில்லை'' என்று விட்டு தயாராவதற்கு கிளம்பினான்.

அந்நேரத்தில் சுதாவும், ராமநாதனும் கோவிலுக்குச் சென்று வீட்டிற்குத் திரும்ப, ''நாங்க வெளியே போயிட்டு வர்றோம்பா'' என்று அறிவித்தான் ரிஷிவர்மன்.

சுதா, ''ம். நல்லது தான். முடிஞ்சால் கோவிலுக்குப் போயிட்டு வாங்க, ரிஷி. பெருமாளுக்கு நல்ல அலங் காரம் செய்திருக்காங்க'' என்று மகனிடம் சொல்லி விட்டு,

''ராதிகா! என் கூட வா. என்னிடம் இருக்கிற புடவை, நகைகளில் ஏதாவது உனக்குப் பிடிச்சிருந்தால் எடுத் துக்கோ'' என்றபடி அவளைத் தன்னுடன் அழைத்துச் சென்றார்.

மரியாதைக்காக அவரது பேச்சிற்கு கட்டுப்பட்டு அவரது பின்னே சென்றாலும், சுதாவிற்கு எந்தவித மன சங்கடத்தையும் தராமல் எதுவும் வேண்டாம் என்று மறுத்துவிட்டு, தன்னிடமிருந்த எளிமையான உடை களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து உடுத்திக் கொண்டாள்.

அடுத்த சில நிமிடங்களில் தயாராகிக் கிளம்பி வந்த ரிஷி, ராதிகாவைக் கண்டதும், ''ஹேய்! என்ன ஸ்வெட்டர் மட்டும் போட்டுட்டு வெளியே கிளம்பறே? ஜாக்கெட் எங்கே?'' என்றான்.

''இல்லை... சென்னையிலிருந்து ஸ்வெட்டர் மட்டும் தான் கொண்டு வந்தேன். ஜாக்கெட் எல்லாம் வாங்க நேரமும் இல்லை; அந்த யோசனையும் இல்லை.''

"ஹாஸ்பிடலுக்கு வந்த போதும் இப்படியேவா வந்தே?" என்று ஆச்சரியப்பட்டவனுக்கு ராதிகாவின் அப்பொழுதைய மனநிலையைப் புரிந்து கொள்ளவும் முடிந்தது.

ராதிகாவும் அதே விளக்கத்தைத் தான் தந்தாள்.

"எனக்கு இந்தப் பனி, குளிர் எதுவுமே தெரியலை, ரிஷி. உங்களைப் பார்க்கணும், உங்களோட நலனைத் தெரிஞ்சுக்கணும் என்ற எண்ணம் மட்டும் தான் இருந்தது" என்று அவள் சொன்ன தொனியில் அவனது மனம் இளகியது.

மீண்டும் வீட்டினுள் சென்று வந்தவன், "கோவிலுக்குப் போயிட்டு அப்படியே திரும்பி வரும்போது, கடைக்குப் போயிட்டு வரலாம். அதுவரை என்னுடையதை உபயோகப்படுத்திக்கோ" என்று தன்னிடமிருந்த இன்னொரு ஜாக்கெட்டை எடுத்து அவளிடம் தந்தான்.

ஒரு நன்றியோடு பெற்றுக் கொண்டவளுக்கு ரிஷியிடம் நல்லதொரு மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையும் எழுந்தது.

* * *

அவர்கள் கிளம்பியதும் சுதா, "உங்களிடம் நம்ம ரிஷி பற்றி ஒரு விஷயம் பேசணும். எதையும் பேசறதுக்கு முன்னாடி ஒரு தடவைக்கு இரண்டு தடவை யோசிச்சு... கலந்து பேசி... விசாரிச்சு தான் பேசணும்னு இருக்கேன், ராம்" என்ற முஸ்தீபுடன் கணவனிடம் பேச்சைத் தொடங்கினார்.

ராமநாதனின் சம்மதம் கிடைக்கப் பெற்றதும், "நம்ம ரிஷியுடைய பிரண்ட் யக்னேஷும், ரிஷியும் சேர்ந்து ஒரு ஃபிரான்சைஸ் எடுத்து நடத்தறாங்க என்பது வரைக்கும் நமக்கு தெரியும் இல்லையா?" என்று நினைவூட்டினார்.



"ஆமாம்! ரிஷி அவனுடைய பேரிலிருந்த வீட்டை அடமானம் வைச்சு தானே தொழிலில் இரண்டு கோடி முதல் போட்டான்? மூணு வருஷமா அதில் மாசத்துக்கு இவ்வளவுன்னு பங்கு பணம் வந்துட்டு தானே இருந்தது?"

"ம். இப்போவும் வந்துட்டு தான் இருக்கு. ஆனால் மூன்றில் இரண்டு பங்குக்கு இல்லை... மூன்றில் ஒரு பகுதிக்கு தான் பங்கு பணம் வருது."

"அப்படின்னா? அவன் ஒரு பகுதி மூலதனத்தை நம்ம ரிஷிக்கு திருப்பிக் கொடுத்துட்டானா?" எனக் கேட்டவர் நம்ப முடியாமல் மனைவியை ஏறிட்டார்.

ஆமோதிப்பாக தலையசைத்த சுதா, "ஒரு கோடியைத் திருப்பிக் கொடுத்திருந்தால் ரிஷிக்கிருக்கும் மார்ட்கேஜை இந்நேரம் அடைச்சிருப்பானே? அந்த லோன் முடியலைன்னு எனக்குத் தெரியுமேப்பா என்று யக்னேஷிடமே கேட்டேன், ராம்" என்றவர் கணவர் விஷயத்தைக் கிரகித்துக் கொள்ள சின்னதொரு இடைவெளி கொடுத்தார்.

".... சொல்றதுக்கு சங்கடப்பட்டு கொஞ்சம் தயக்கத்தோட தான் யக்னேஷே சொன்னான். அந்தத் தொகையை நம்ம ரிஷி, ராதிகாவுக்காக தான் செலவு செய்தானாம். ராதிகாவும், அவன் பாட்டியும் சேர்ந்து ஒரு மெஸ் நடத்திட்டு வர்றாங்களாம். அதை விரிவுபடுத்தவும், பிரபலப்படுத்தவும் அந்தத் தொகை உதவியிருக்கு என்று சொன்னான்."

''ஓ...!'' என்றவரின் நெற்றியில் யோசனையின் விளைவாக முடிச்சுக்கள் விழுந்தன.

''இதைப் பற்றி ரிஷிகிட்டேயோ, உங்ககிட்டேயோ பேசறதுக்கு முன்னாடி யக்னேஷ் சொன்னது உண்மையான்னு தெரிஞ்சுக்க, என் சித்தப்பாவை விட்டு விசாரிக்கச் சொன்னேன். அவரும் ரிஷியைத் தேடினது மாதிரி இல்லாமல் நம்பகமா விசாரிச்சு தான் உறுதிப்படுத்தினார். ரிஷி தான் முன்னாடி நின்று அங்கே விஸ்தரிப்பு வேலையெல்லாம் கவனிச்சுகிட்டானாம். இந்த ஒரு வருஷத்தில், 'கல்யாண சமையல் மெஸ்' அங்கே நல்ல பிரபலம் ஆகியிருக்கு. வெப்சைட், டோக்கன் என்று பிசினெஸ் நல்லபடியா பிக்-அப் ஆகியிருக்குன்னு சொன்னார்.''

ஒரு சின்ன அதிருப்தியோடு, ''நீ ஏன் விசாரிச்சே? இதெல்லாம் தெரிஞ்சால் ரிஷிக்கும், ராதிகாவுக்கும் சங்கடம் தானே?'' என்று வருந்தினார்.

''என்னை என்ன செய்யச் சொல்றீங்க? யக்னேஷை நமக்கு எத்தனை வருஷமா தெரியும்? அவன் சொல்றதை நம்பாமல் இருக்க முடியலை. ரிஷியிடமும் கேட்டு தெரிஞ்சுக்க முடியாது. எடுத்த எடுப்பிலேயே அந்தப் பொண்ணு... சரி... சரி... அப்படிப் பார்க்காதீங்க... அந்தப் பொண்ணு இல்லை... ராதிகாவிடம் போய், ரிஷி உனக்கு காசு கொடுத்தானா என்றா கேட்க முடியும்?''

''......''

''கல்யாணம்னு ஆன பிறகு அவளும் நம்ம குடும்பத்தில் ஒருத்தி தான். அந்தப் பொண்ணு வாங்கின பணத்தைத் திருப்பிக் கொடுக்கணும் என்று கூட எதிர்பார்க்கலைங்க. பதினைஞ்சு வருஷத்தில் கொஞ்சம்



கொஞ்சமா அடைக்க வேண்டிய லோனை, ரிஷி இப்போ முப்பது வருஷத்தில் அடைக்கணும். அவ்வளவுதான். ஆனால் ராதிகா கல்யாணம் ஆகிடுச்சு என்று சொன்ன மாதிரி... இதைப் பற்றியும் ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமில்ல? நமக்கு எந்த விஷயமும் தெரிய வேண்டாம்னு தானே அவள் எதுவுமே சொல்லலை.''

அவருடைய குரலில் இருந்த வருத்தத்தை உணர்ந்தவர், ''இதைப் பெருசு பண்ணாதே, சுதா. விட்டுடு. நமக்குள்ளேயே இருந்துட்டுப் போகட்டும். எல்லாத்தையும் உன்னிடம் வந்து சொல்லணும்னு எதிர்பார்க்காதே'' என்று சமாதானம் செய்தார்.

''அதில்லை, ராம்! ரிஷியுடைய ராசியா என்னன்னு தெரியலை. ஏற்கனவே அர்ஜுன் வீட்டு விசேஷத்தில் ரிஷியுடைய சொத்தை மனசில் வைச்சு தான் அந்தப் பெரியம்மா, பொண்ணு கொடுக்கிறதா பேசுச்சு. இப்பொழுது ராதிகாவும் சொத்துக்கு ஆசைப்பட்டு அவனைக் கல்யாணம் செய்திருக்கக் கூடாதேன்னு கவலையா இருக்கு. நம்ம ரிஷிக்கு சூதுவாது தெரியாதுங்க.''

''அதனால் தான் மருமகளிடம் மட்டும் படாமலே நடந்துக்கிறியா? உன் கவலை எனக்குப் புரியுதும்மா. ராதிகா நல்ல மாதிரின்னு நம்பு, சுதா! எதுக்கு எதிர்மறையா யோசிக்கிறே?''

''ரிஷியிடம் இந்த விஷயத்தைச் சொல்லி வைக்கிறது நல்லதுன்னு தோணுது. ராதிகாவிடம் ரிஷியைத் தனியா விட்டுட்டுப் போறதுக்கு பயமா இருக்கு. இதுக்காக தான் அர்ஜுனும், ஆஷாவும் நம்மை பென்ஸில்வேனியாக்கு கூப்பிடும் போதெல்லாம் தள்ளி போட்டுகிட்டே இருக்கேன்.''

''ராதிகாவை சந்தேக கண்ணோட்டத்தோடு நீ பார்க்கிறதோட பையனிடமும் இதையெல்லாம் சொல்லி, அவனிடமும் உன் எண்ணத்தைத் திணிக்கிறதுக்கு முயற்சி செய்யாதே. அவர்களுக்குள் நல்ல புரிதல் ஏற்பட்டு, அவங்க சேர்வதற்கான சந்தர்ப்பத்தை நாம ஏற்படுத்திக் கொடுக்காட்டியும், எதையாவது சொல்லி அவர்களைப் பிரிச்சிட வேண்டாம்.''

''எதுக்கும் ரிஷியிடம் ஒரு வார்த்தை சொன்னால் கவனமா இருப்பான்...''

''அவன் ஒன்றும் சின்னப் பையனில்லை. நல்லது கெட்டது தெரியும். இதைப் பற்றி நீ எதுவும் பேச வேண்டாம், சுதா. நானே அவனிடம் ஒரு தகவலா சொல்லிக் கிறேன்'' என்றவர்,

ஒரு சின்ன யோசனைக்குப் பிறகு, ''கொஞ்ச நேரத் திற்கு முன்னாடி ராதிகாவுக்கு புடவை, நகைன்னு கூப் பிட்டுப் போய் காண்பிச்சதெல்லாம் டெஸ்ட் பண்ற துக்கா?'' எனத் தீவிரமான குரலில் வினவினார்.

கணவன் தன்னுடைய மனதை நன்கு புரிந்து கொண் டிருக்கிறார் என்பதை உணர்ந்த சுதா ஆமோதிப்பாக தலையசைத்து விட்டு, ''ஆனால் தப்பான நோக்கத்தில் செய்யலைங்க'' என வாக்குமூலம் தந்தார்.

''தப்பான நோக்கத்திலிருந்தால் நான் கேட்கும் போது இல்லைன்னு பொய் சொல்லியிருப்பே, சுதா. ஆனால் எனக்கு தான் கவலையா இருக்கு. ஏற்கனவே ஒரு தடவை தவறான புரிதலினால் வருத்தம் ஏற்பட்டு, நமக்கும் ரிஷிக்குமான உறவில் ஒரு சின்ன விரிசல் விழுந்துடுச்சு. அதனால் எவ்வளவு கஷ்டப்பட்டோம்னு, அனுபவிச்ச நமக்கு நல்லாவே தெரியும். இந்த மாதிரி ராதிகாவை நாம



சந்தேகப்படறோம் என்று தெரிந்தால்... எங்கே ரிஷிக்கும் நமக்குமிடையே திரும்பவும் விரிசல் வருமோன்னு தான் கவலைப் படறேன், சுதா.''

''என்னால் அந்த மாதிரி ஒரு நிலையை இன்னொரு தடவை தாங்கிக்கவே முடியாதுங்க.''

''அதுவும் எனக்குத் தெரியும். ஆனால் இந்த மாதிரி டெஸ்ட் வைச்சுட்டு இருந்தால் ரிஷி எப்படிப் பொறுப் பான், சொல்லு? அதனாலே நான் ஒரு யோசனை சொல்றேன். நாம ரெண்டு பேரும் ஒரு சில மாசத்துக்கு பென்ஸில்வேனியாவில் போய் அர்ஜுன் - ஆஷா கூட தங்குவோம். அதுதான் எல்லாருக்குமே நல்லது'' என்றார் தீர்மானமாக.

* * *

புத்தாண்டு தினத்தையொட்டி ப்ரிட்ஜ்வாட்டர் பாலாஜி கோவிலில் இருந்த பலத்த கூட்டத்திற் கிடையே அழகுற அலங்கரித்திருந்த பெருமாள் தரி சனத்தைக் கண் குளிர ரசித்துவிட்டு ராதிகாவும், ரிஷியும் அங்கேயே கீழேயிருந்த உணவுக் கூடத்தில் அமர்ந்து பிரசாதம் அருந்திக் கொண்டிருந்தனர்.

உணவு கூடத்திலும் கூட்டம் அதிகமாக இருந்ததால் நால்வர் அமரும் இருக்கையில் இவர்களது இருக்கைகள் போக, மீதமிருந்த இரண்டு இருக்கைகளை வேறொரு புதுமண தம்பதியோடு பகிர்ந்து கொள்ள வேண்டிய சூழல் அமைந்தது.

அந்தப் புதுமையான தம்பதியினரில் இருந்த பெண்மணி நால்வருக்கும் பொதுவான விஷயத்தைப் பற்றி மட்டும் பேசிக் கொண்டிருந்தாள். மற்ற மூவரும்

அவளது பேச்சுக்கு ஆமோதிப்பாக தலையை மட்டும் அசைத்துக் கொண்டிருந்தனர்.

''விண்ணைத் தாண்டி வருவாயா படத்தில், 'அன்பில் அவள்' பாட்டு வரும் தெரியுமா? அதில் இந்தக் கோவிலைத் தான் காண்பிச்சு இருப்பாங்க. பார்த்ததுமே என் ஹப்பிகிட்டே சொல்லிட்டு இருந்தேன். ஒரே குஷி தான்!''

மற்றவர்கள் புன்னகையை மட்டும் சிந்த, அந்தப் பெண் தொடர்ந்து உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந் தாள்.

''போகும்போது அவர்கிட்டே மல்லிகைப் பூ கேட்டிருக்கேன். இங்கே கோவிலில் இருக்கும் கடையில் விற்குமாம். என் பிரண்ட் சொன்னாள் - ப்ரிட்ஜ்வாட்டர் கோவில் புளி சாதத்தையும், மல்லிகைப் பூவையும் மிஸ் பண்ணிடாதேன்னு. நீங்களும் மிஸ் பண்ணாதீங்க'' என்ற தகவலோடு.

ரிஷியிடம், ''சார்! உங்க வீட்டம்மாவுக்கு வாங்கிக் கொடுங்க'' என்ற சிபாரிசும் செய்தாள்.

''... எனக்கு மதுரை தாங்க ஊர். தெருவுக்கு தெரு மல்லிகைப்பூ கடை இருக்கும். அங்கிருந்த வரையில் பூ வாசம் பழகிட்டதாலோ என்னவோ ரொம்ப எல்லாம் ஆசைப்பட்டதில்லை. ஆனால் இங்கே வந்த பிறகு மல்லிகைப்பூவை எத்தனை மிஸ் பண்றேன் தெரியுமா? உங்களுக்கு மதுரையா?''

சின்ன புன்னகையுடன், ''எனக்கு சென்னை...'' என் றாள் ராதிகா.

''எங்க ஊரில் இருந்து தான் மல்லிகை இங்கே வரு தாம். உலகமே ஒரு க்ளோபல் விலேஜ் என்று சொல்வது எத்தனை பொருத்தமில்ல?''



''ம்...''

''இந்த ஊரில் எப்படிங்க பொழுது போகுது உங் களுக்கு? வீட்டுக்குள்ளேயே எனக்கு அடைஞ்சு கிடக்கிற மாதிரி இருக்கு. என்னதான் இருந்தாலும் நம்ம ஊர்... நம்ம ஊர் தாங்க. பக்கத்து வீடு... எதிர்த்த வீடுன்னு பழக்கம் பேசி... அதெல்லாம் இங்கே முடியாதில்ல?''

''ம்... நீங்க நல்லா பேசறீங்க'' என்று சிநேகமாய் முறுவலித்தாள் ராதிகா.

''இப்படி தாங்க இந்தியன் ஸ்டோர்ஸில் ஒரு அம்மா நல்லா பேசுதேன்னு சகஜமா பேசினேன். பார்த்தால் அடுத்த நாளே ஏதேதோ பொருட்களோட வீட்டுக்கு வந்து, மல்டி லெவல் மார்க்கெட்டிங் பிஸினெஸ் செய்ங் கன்னு நின்னுட்டாங்க. நீங்க எதுவும் அந்த மாதிரி பிஸினெஸ் செய்யலை, இல்ல?''

''இல்லை...'' என்று ராதிகா தலையசைக்க,

தீவிரமான யோசனையிலிருந்த ரிஷிவர்மன், ''மதுரை யில் கருப்பட்டி போட்டு, பருத்தி பால் ரொம்ப ஃபேமஸ் தானே?'' என்று சந்தேகத்துடன் வினவினான்.

கணவனுடைய கேள்வியில் கண்களை விரித்து திகைப்புடன் நோக்கினாள் ராதிகா. மெஸ் மெனுவில் மதுரை பிராந்திய சமையல் இருக்கும்போது அதில் கருப்பட்டி பருத்தி பாலும் அடக்கம்.

உணவு பதார்த்தம் ரிஷிவர்மனுக்கு நினைவில் இருக்கிறது என்றால்... கூடிய விரைவிலேயே இவர்கள் வாழ்ந்த வாழ்க்கையும் அவன் நினைவிற்கு வரும் என்று உற்சாகம் கொண்டது அவள் மனது.

புது பெண்மணி, ''ஹையோ! பருத்தி பால்! எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும். அதை வேற நீங்க

ஞாபகப்படுத்தறீங்களா? இங்கே தான் சார் கருப்பட்டியும் கிடைக்க மாட்டேங்குது... பருத்தி விதையும் கிடைக்க மாட்டேங்குது. அடுத்த தடவை ஊருக்குப் போகும் போது தான் அதை வாங்கணும். உடம்புக்கு ரொம்ப வலுன்னு அம்மா சொல்வாங்க'' என்று சாதாரணமாக தந்த பதிலில் ரிஷிவர்மன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

ஊற வைத்த பருத்தி விதைகளை அரைத்து, பாலெடுத்து, அதை கருப்பட்டி பாகுடன் காய்ச்சி ஏலக்காய் சேர்த்து செய்யும் பருத்தி பால் மிகவும் ருசியாக இருக்கும்.

நியூஜெர்ஸியில் பருத்தி விதை, கருப்பட்டி கிடைக்க வில்லையென்றால் வேறு எங்கு நான் பருத்திப் பாலை ருசித்திருக்க முடியும்?

பருத்தி பால் நினைவில் இருக்கிறது என்றால் மற்ற விஷயங்களெல்லாம் என் மூளையின் எந்த மூலையில் சென்று ஒளிந்திருக்கின்றதோ?

மற்ற இருவரும் விடை பெற்று சென்ற பிறகும் தன் யோசனையிலிருந்து மீளாமல் இருந்தவனைப் புரிந்து கொண்டவளாக, ''டாக்டர் தான் சொல்லியிருக்காரே? பேசும் மொழி,

பதார்த்த ருசி, பழகிய வாசனை இதெல்லாம் ஆழ் மனதிலிருந்து விஷயங்கள் என்று. இயல்பாக இருங்க, ரிஷி'' என்று மெல்லிய குரலில் தேற்றினாள்.

கோவிலிலிருந்து வெளியே வரும் பொழுது, சற்று முன் பேசியதை நினைவில் கொண்ட ரிஷிவர்மன், அங்கு விற்ற மல்லிகைப் பூவை ராதிகாவிற்கு வாங்கிக் கொடுக்கவும் மறக்கவில்லை.



நேசத்துடன் பெற்றுக் கொண்டவள், ''வீட்டிற்கு போய் பூ வைச்சுக்கிறேன், ரிஷி'' என்று தனது கைப்பையில் பத்திரப்படுத்திக் கொண்டாள்.

புத்தாண்டையொட்டி துணிக்கடைகள் பூட்டியிருக்க, இருவரும் கோவிலிலிருந்து நேரடியாக வீட்டை வந் தடைந்தனர்.

வீட்டிற்கு வந்ததும் தன் கணவன் வாங்கிக் கொடுத்த மலர் சரத்தில் பாதியை சுதாவிடம் தந்த ராதிகா, ''அங்கே மல்லிகைப் பூ விற்றது, அத்தை. நீங்க வைச்சுக்கோங்க'' என்று சொல்ல,

'இந்தப் பெண்ணைப் போய் சந்தேகப்பட்டியே?' எனப் பார்வையாலேயே மனைவியைச் சாடினார் ராமநாதன்.

அன்று மாலையே ரிஷியிடம் சென்று, யக்னேஷ் கூறிய விவரங்களைத் தகவலாகச் சொல்லிய ராமநாதன், அர்ஜுன், ஆஷா வீட்டிற்கு அந்த வார இறுதியில் தாங்கள் செல்வதாக அறிவித்தார்.

இரவு உறங்கச் செல்வதற்கு முன்பு பெரியவர்கள் இருவரும் பென்ஸில்வேனியா செல்வது குறித்து ராதிகாவிடம் பேசிக் கொண்டிருந்த ரிஷி, கூடவே, ''மெஸ் விரிவாக்கத்திற்கு நான் உனக்கு எதுவும் பணம் கொடுத்தேனா?'' என்று வினவ,

அவனது கேள்வியில் துணுக்குற்றவள், ''இல்லையே, ரிஷி'' என,

''உண்மை தானா, ராதிகா? இல்லை... இன்றைக்குக் காலையில் உன் பாட்டியிடம் பொய் சொன்னது மாதிரியா?'' எனத் திருப்பிக் கேட்டு அவளை அதிர்ச்சி யடைய வைத்தான்.



# 12

''காலையில் உன் பாட்டியிடம் பொய் சொன்னது மாதிரியா?'' என்று ரிஷிவர்மன் கேட்டதில் துணுக்குற்ற ராதிகாவிற்கு அவன் என்ன கேட்கிறான், ஏன் அப்படிக் கேட்கிறான் என்றே புரியவில்லை.

இங்கிருக்கும் நிலவரத்தை பாட்டியிடம் உள்ளது உள்ளபடியே உரைக்காமல், எல்லாவற்றையும் திரித்து - திரித்து... அப்படி சொல்வது சரியில்லை. திரித்து என்றால் அதில் ஒரு கயமைத்தனம் வருகிறதே?

இவள் நல்லதிற்குத் தானே சொன்னாள்?

எல்லாவற்றையும் பூசி மொழுகியது போன்று இவனிடம் நான் என்ன பூசி மொழுகினேன்?

அதற்கு அவசியம் தான் என்ன?

''நீங்க என்ன கேட்கறீங்கன்னு புரியலையே, ரிஷி? பாட்டியின் உடல் நிலையைக் கருதி, அவங்களை வேற வீணா எதுக்குக் கலவரப்படுத்தணும்னு சின்ன பொய் சொன்னேன் தான். ஆனால் உங்களிடம் நான் என்ன பொய் சொன்னேன் என்று சொல்றீங்க?''

நெற்றி சுருங்க, புரியாத பாவனையோடு கேட்டவளைக் கூர்மையாகப் பார்த்தான் ரிஷிவர்மன்.

நிஜமாகவே ஒன்றும் தெரியாமல் கேட்கிறாளா?

இல்லை, பாட்டிக்காக சின்னதாகப் பொய் சொன்னது போன்று, இப்பொழுது அவனுடைய உடல் நிலையைக் கருதி அவனிடம் எதுவும் சொல்லாமல் மறைக்கிறாளா?



''நான் பொய் என்று சொல்லியிருக்கக் கூடாது. சாரி. பொய் என்றில்லை... என்னுடைய ஹெல்த்தை முன்னிட்டு எதுக்கு தேவையில்லாமல்னு நினைச்சு, எதையும் கொஞ்சம் குறைச்சுச் சொல்றியோன்னு...'' என்று உடனேயே இறங்கி வந்தவனை இன்னமும் புரியாமல்தான் பார்த்துக் கொண்டிருந்தாள் ராதிகா.

''உன்னுடைய மெஸ்ஸிற்காக நான் ஏதாவது பணம் கொடுத்திருந்தால் அதில் தப்பும் ஒன்றுமில்லை. மனைவிக்காக, மனைவியின் தொழிலுக்காக கணவன் செய்றது ஒன்றும் குற்றமில்லையே? எனக்குத் தெரியாததைத் தெரிஞ்சுக்க தான் கேட்கிறேன். கூச்சப்படாமல் சொல்லு'' என்று ஊக்கினான்.

''இதில் சொல்றதுக்கோ, கூச்சப்படறதுக்கோ ஒன்றுமே இல்லை, ரிஷி. நிஜமாகவே மெஸ்ஸுக்காகன்னு உங்களிடம் ஒன்றும் வாங்கலை. பேங்க் லோன் போட்டு கொஞ்சம், மெஸ் பணம் கொஞ்சம் என்று தான் எல்லாமே செய்திருக்கு. லோன் போட்டால், வருமான வரியில் கொஞ்சம் கழிச்சுக்கலாம்னு நீங்க தான் யோசனை சொன்னீங்க'' என்றவள்,

உள்ளிழுத்த மூச்சுடன், ''ஏன் இப்போ திடீர்னு மெஸ் விரிவாக்கம் பற்றி கேட்டீங்க? எதுவும் உங்களுக்கு நினைவு வந்திருக்கா?'' என்று ஆர்வமுடன் வினவினாள்.

தலையை மறுப்பாக அசைத்த ரிஷி, ''இல்லை. எனக்கு எதுவும் நினைவு வரலை'' என்று மட்டும் கூற,

எழுந்த ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு, ''அப்புறம் எப்படி அதை மட்டும் குறிப்பா கேட்டீங்க?'' என்றாள் குழப்பத்துடன்.

ஒரு கணம் தயங்கி யோசித்த ரிஷிவர்மன், யக்னேஷ் சொன்னதாக ராமநாதன் கூறியதை ராதிகாவிடம் தெரிவிக்க, அதிர்ச்சியில் வாயடைத்துப் போனாள் அவள்.

பழி ஓரிடம் பாவம் ஓரிடம் என்று இதைத் தான் சொல்வார்களோ?

Franchise தொடங்க எவ்வளவு பணம் வேண்டுமென ரிஷியே இவளிடம் சொல்லாதிருந்தால் கூட அதே தொழிலில் இருப்பதால் ராதிகாவிற்குத் தெரிந்திருக்கும். அதில் மூன்றில் ஒரு பங்கு பணம் என்றாலும் கூட அதுவே கிட்டத்தட்ட ஒரு கோடிக்கு குறையாமல் வருமே?!

அத்தனை பணத்தையா மெஸ்ஸில் போட்டதாக யக்னேஷ் சொன்னான்? ஏன்?

முதலில் யக்னேஷ் எங்கே கொடுத்தான்? வருங்காலத்தில் ஏதோ ஒரு நாள் கொடுப்பதாக தானே சொல்லியிருந்தான்?

பணமென்றால் பிணமும் வாயைத் திறக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறாள். அதற்காக உற்ற நட்பும் கூடவா நிறம் மாறிப் போகும்?

யக்னேஷ் மாதிரி சில பேருக்கு மனசாட்சியைத் தூங்க வைப்பது மிகவும் எளிது போல!

ரிஷிக்கு நினைவில்லை என்பதனால் அவனை எப்படியெல்லாம் ஏமாற்றப் பார்க்கிறான்?

அவள் பொய் உரைத்தாளா எனக் கேட்ட கணவன் மீது ராதிகாவிற்கு ஏனோ சற்றும் கோபம் வரவில்லை. மாறாக பரிதாபமே எழுந்தது.



இன்றைய நிலையில் ரிஷி ஒரு வெற்று பலகை மாதிரி தானே? யார் அதில் என்ன எழுதுகிறார்களோ அதைத் தானே நிஜமென்று அவன் நம்புவான்?

யக்னேஷ் செய்யும் இந்த மித்ர துரோகத்தைப் பற்றி ரிஷிக்குத் தெரிந்தால் அவன் எவ்வளவு வருத்தப்படுவான் என்று கணவனுக்காக வருத்தப்பட்டவளைப் பற்றி தான் அவளுடைய கணவனும் நினைத்துக் கொண்டிருந்தான்.

ஆனால், சாதகமாக இல்லை.

யோசனையுடன் ராதிகாவைப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு ஒரே குழப்பமாக இருந்தது.

சிறு வயது முதல் பழகிய நண்பனை அவன் நம்புவானா இல்லை மனைவி என்று வந்திருப்பவள் சொல்வதை நம்புவாளா?

யார் மீதும் குற்றம் சுமத்தவோ, பழி போடவோ அவனுக்கு விருப்பமில்லை தான். இருந்தாலும் ஒன்றும் கேட்காமலோ சொல்லாமலோ இருப்பதற்கு சம்பந்தப்பட்டது ஒரு ரூபாய் ரெண்டு ரூபாய் இல்லையே?

ராதிகாவுடன் திருமணமான இந்த ஒரு மாதத்திற்குள் ஒரு கோடியைத் தூக்கிக் கொடுக்க முடியுமா? அதுவும் அவளுக்கில்லை... அவளுடைய தொழிலுக்கு!

இவளுக்குக் கொடுக்கவில்லை என்றால்... யக்னேஷ் பொய் சொல்கிறானா?

அவனுக்குப் பொய் சொல்ல வேண்டிய அவசியமென்ன? ச்ச... ச்ச... அவன் ஏன் அப்படிச் சொல்லப் போகிறான்?

அப்பொழுது ராதிகா உண்மையைச் சொல்லவில்லையா என ஆரம்பித்த இடத்திலேயே அவனின்

யோசனை வந்தடைய, எதையும் தீர்மானமாக ரிஷியால் சொல்ல முடியவில்லை.

தனக்கு நினைவில்லை என்பதற்காக சின்ன விஷயத்திலிருந்து பெரிய விவகாரம் வரை மற்றவர் சொல்வதை நம்பும் நிலையில் தான் இருப்பதை நினைத்து, அவனுக்கு அவன் மீதே கோபம் எழுந்தது.

அதையாவது எல்லோரும் ஒரே மாதிரி உரைத்தால் தேவலாம்! ஒவ்வொருவரும் ஒன்று சொன்னால் அவன் யாரையென்று நம்புவது?

''மூணு வருஷத்துக்கு முன்னாடியே நான் செய்தது என்பதால், யக்னேஷ் தொழில் தொடங்க நான் பணம் கொடுத்தது எனக்கு நினைவு இருக்கு. ஆனால், அவன் பணம் திருப்பி தந்ததோ, இல்லை மெஸ்ஸிற்கு நான் அதைக் கொடுத்ததோ எனக்கு நினைவிலில்லை...'' என்று கூறியவன் அவளது பார்வையில் முகம் சிவக்க, பின்னங் கழுத்தில் கையைக் கொடுத்து அழுத்தினான்.

ராதிகாவின் மௌனப் பார்வைக்குப் பதிலளிக்கும் விதமாக, ''யக்னேஷ் ஒன்று சொல்றான். நீ ஒன்று சொல்றே. எனக்கு ஒரே குழப்பமா இருக்கு'' என்று சமாளிக்கும் வகையில் சொன்னவன், வேறொன்றும் கூறாமல் படுக்கையில் விழுந்து கண்களை மூடிக் கொண்டான்.

கண்களை மூடிக் கொண்டானே ஒழிய, எண்ணங்கள் விழித்துக் கொண்டிருந்த ரிஷிவர்மனின் முதுகைப் பார்த்தவளுக்கு மெல்லிய கோபம் வந்தது.

ஆனால், அவளுடைய கோபத்திற்கோ வருத்தத்திற்கோ அவசியமில்லை எனப் புரிய அது வந்த வேகத்திலேயே அடங்கியும் போனது.



ரிஷியைப் பொருத்தவரை ராதிகாவை இந்த நான்கு நாட்களாக தான் அவனுக்குத் தெரியும்.

அப்படியிருக்கும் பொழுது அவளை உடனேயே அவன் நம்ப வேண்டுமென அவள் எதிர்பார்ப்பது அதீதம் அல்லவா? அதுவும் அவளின் பால்ய சிநேகிதன் வார்த்தையை மீறி!

Action speak louder than words - இல்லையா?

இல்லை... இல்லை எனத் திரும்பத் திரும்ப அவள் வாய் மொழியாக மறுப்பதை விட அவள் செய்கைகளின் மூலம் அவளை அவன் அறிந்து, புரிந்து கொள்ள வைக்க வேண்டும்.

புரிந்து கொள்வான்!

* * *

பென்ஸில்வேனியாவில் இருக்கும் அர்ஜுனின் வீட்டிற்கு கிளம்பிச் செல்வதற்கு முதல் நாள் மருமகளை அழைத்த ராமநாதன், ''ராதிகா, இந்தாம்மா... இதை வாங்கிக்கோ. உனக்கு எங்களோட கல்யாணப் பரிசு'' என்று ஒரு சின்னப் பெட்டியை அன்புடன் நீட்டினார்.

அந்தப் பெட்டியை பார்த்தாலே அது பிரபல நகை கடையினுடையது என தெள்ளத் தெளிவாக புரிய, அவர் நீட்டியதை வாங்காமல், ஹால் சோபாவில் உட்கார்ந்திருந்த ரிஷியைப் பார்த்தாள்.

சுதா, ''அவனை எதுக்குப் பார்க்கிறே? உங்க கல்யாணம் இங்கே நடந்திருந்தால், இப்போ ஆஷாக்கு கொடுத்தது மாதிரி உனக்கும் சபையில் வைத்தே கொடுத்திருப்போம். ஹ்ம்ம்.. அதுக்கு தான் எங்களுக்குக் கொடுப்பினை இல்லையே?'' என்று சொல்ல, அவரைக் கண்டனத்துடன் நோக்கினார் ராமநாதன்.

''புது வருஷம் அன்றைக்கு நீங்க கோவிலுக்குப் போகும்பொழுதுகூட, உங்க அம்மா போட்டுக்கச் சொல்லி கொடுத்ததை ராதிகா வாங்கிக்கலை. ரிஷி. வேண்டாம்னு நாசூக்கா மறுத்துட்டாள். இதையாவது வாங்கிக்கச் சொல்லி சொல்லுப்பா'' என மகனிடம் கூறியவர்,

மருமகளிடம், ''வாங்கிக்கோ, ராதிகா. உனக்கு நகையில் ஆசை இல்லாமல் இருக்கலாம். ஆனால், இது எங்க ஆசை. எங்களுக்கென்ன மகளா இருக்கு? போட்டு அழகு பார்க்க? வீட்டுக்கு வந்த மருமகளுக்குச் செய்றது எங்க கடமையும் கூட. அதில் எங்களுக்கொரு சந்தோஷம்'' என்று விட்டு,

மனைவியிடமும், ''சொல்லு, சுதா!'' என அர்த்த புஷ்டியான பார்வை ஒன்றை செலுத்தினார்.

சுதாவும், ''வாங்கிக்கோ, ராதிகா!'' என இணைந்து சொல்லி, கவரை ராதிகாவின் புறம் அவரும் சேர்ந்து நீட்டினார்.

ராமநாதன் கூறியதில் மனம் நெகிழ்ந்தாலும் ராதிகாவிற்கு இன்னமும் தயக்கம் போகவில்லை. அவளை இன்னமும் சுதா முழு மனதுடன் ஏற்காதது மாதிரியே அவளுக்குத் தோன்றியது.

''இல்லை, மாமா. இப்போ எதுக்கு இதெல்லாம்? உங்களிடமே இருக்கட்டும். எங்கேயாவது போகும் போது வாங்கிப் போட்டுக்கிறேன்'' என அவள் இன்னமும் தயங்கித் தயங்கியே நிற்க,

''நீ கையை நீட்டி வாங்குகிற மாதிரி தெரியலை!'' என்ற ராமநாதன், ''ரிஷி! வா வந்து இதை அவளுக்குப் போட்டு விடு!'' என ரிஷியிடம் பணித்தார்.



நடப்பதையெல்லாம் யோசனையுடன் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவன், இருக்கையை விட்டு மெல்ல எழுந்து வந்து, சுதா கொடுத்த நான்கு ரோடியம் வளைகளையும், ரூபியும் வைரமும் பதித்திருந்த பெரிய ஹார செட்டையும் ராதிகாவிற்கு அணிவிக்க, அவனையே விழியெடுக்காமல் பார்த்திருந்தாள் ராதிகா.

அவனும் அவளையே தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது மட்டுமல்ல தொடர்ந்து வந்த நாட்களிலுமே அவனுடைய பார்வை ராதிகாவைத் தொடர்ந்த வண்ணமே இருக்க, அவனுடைய செவிகளில் அவன் தந்தை சொன்னதே திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தது.

இரவலாகக் கொடுத்ததைக் கூட சம்பந்தப்பட்டவர் வந்து கேட்கும் வரை மறந்தது போன்று, தன்னிடமே வைத்துக் கொள்பவர்களை அவன் பார்த்திருக்கிறான்.

அவர்களுக்கு மத்தியில் பரிசாக வருவதைக் கூட வாங்கிக் கொள்ள தயக்கம். அது நடிப்பாகவும் தோன்றவில்லை. கடைசியில் அதை மிகுந்த தயக்கத்துடனே தான் பெற்றுக் கொண்டாள்.

அப்படிப் பெற்றுக் கொண்டவள் அன்று இரவே ரிஷியிடம் கொண்டு வந்து கொடுத்து, பத்திரப்படுத்தி வைக்கவும் சொல்லி விட்டாள்.

அவளிடமே இருக்கட்டுமென அவன் சொன்னதற்கும், ''இருக்கட்டும், ரிஷி யாரிடம் இருந்தால் என்ன? முழு மனசோட கொடுக்கும் பொழுது நானே வைச்சுக்கிறேன். பிரெண்ட் என்று இல்லாமல் மனைவியா வாங்கிக்கறேன்'' என்று சாதாரணமாக கூறிவிட்டு அவள்

சென்று விட, அவனுக்குத் தான் ஒரு மாதிரியாகி விட்டது.

அந்த வாரத்தில் ஒரு நாள், இங்கிருக்கும் சீதோஷ்ண நிலைக்கு ஏற்றபடி ராதிகாவிற்கு சில உடைகளைத் தேர்ந்தெடுக்க சென்ற இடத்திலும் அப்படித்தான்.

ஒவ்வொரு உடையாக பார்த்து அவள் கழித்துக் கொண்டே வர... என்னவென்று கவனித்தவனுக்கு அவள் விலையைப் பார்த்து பயந்துதான் வேண்டாம் என்கிறாள் எனப் புரிய, ''இங்கே மைனஸில் டெம்ப்ரேச்சர் இருக்கும்போது, நீ ஒரு ஸ்வெட்டரும், காட்டன் சுடிதாரோடவும் இருக்க முடியாது'' என்று வற்புறுத்திதான் அவளை ஒன்றிரண்டு உடைகளையாவது அவன் வாங்க வைத்திருந்தான்.

ஒவ்வொன்றையும் இந்திய ரூபாய் கணக்கிற்கு மாற்றி வாயைப் பிளந்தவள், ''இது ரெண்டாயிரம் ரூபாயா?'' ''ஷூ மூவாயிரத்து ஐநூறா?'' என்று கண்களை அகல விரித்தது இப்பொழுது ரிஷிக்கு நினைவு வர, அவன் இதழோரத்தில் புன்னகை பூத்தது.

நகைகளில் நாட்டமில்லை; இரவல் அறவே பிடிப்பதில்லை; யாரோ தானே வாங்கி கொடுக்கிறார்கள் என வாங்கிக் குவிப்பதுமில்லை!

எப்பொழுதும் அவளிடம் ஒரு எளிமை. 'Simplicity is the ultimate sophistication' என டாவின்ஸி சொன்னது போன்று அதுவே அவளுக்கு அழகாக தான் இருக்கிறது என நினைத்துக் கொண்டான்.

அப்படி எளிமையே அவளுடைய இயல்பாக இருப்பவள்... பகட்டின்றி இருப்பவள்... மற்றவர் பொருளை வேண்டாமென மறுப்பவள்... பணத்தை வாங்கியிருந்தால் அதை ஒப்புக் கொண்டிருக்க மாட்டாளா?



இல்லையென்று ஏன் சொல்லப் போகிறாள்?

ஆனால் அதையும் ஒருமுறை சொன்னதோடு அவ்வளவு தானே? திரும்பத் திரும்ப அதை அவள் வலியுறுத்தவேயில்லையே?

அப்படி அவள் சொல்லாததே ரிஷிக்கு சிறிது சிறிதாக அவள் மீது நம்பிக்கையை வரவழைத்திருந்தது.

குற்றமுள்ள நெஞ்சு தானே குறுகுறுக்கும்? இல்லை இல்லை என மறுதலிக்கும்?

அவளைப் பார்க்கப் பார்க்க... அவளுடன் வசிக்க... அவளின் இயல்பு சிறிது சிறிதாக அவனுக்குப் புரிய வர, ரிஷிவர்மனுக்கு அவன் மீதே சந்தேகம் வந்துவிடும் போன்று இருந்தது.

எதற்கும் அலட்டாமல், எல்லாவற்றையும் அதன் போக்கிலேயே சாதாரணமாக எடுத்துக் கொள்ளும் அவளது குணமே, அவனுக்கே தெரியாமல் அவனைச் சிறிது சிறிதாக ராதிகாவின் புறம் இழுக்க, எது எப்படியோ தன்னிடம் அவள் பொய் சொல்லவில்லை என்பதை முழு மனதோடு நம்பலானான்.

மெஸ்ஸிற்காக செலவு செய்யப் போவதாக யக்னேஷிடம் ஒரு வேளை அவன் சொல்லியிருந்திருக்கலாம். ஆனால், அதைச் செய்ய முடியாமல் வேறு எதற்கோ பிறகு அந்தப் பணம் உபயோகப்பட்டிருக்கலாம்.

ராதிகா, யக்னேஷ் இருவருமே அவரவருக்குத் தெரிந்ததை அவனிடம் சொல்லியிருந்திருக்கலாம். இதில் ஒருவர் உண்மையைச் சொன்னால் மற்றொருவர்

பொய் தான் சொல்கிறார்கள் என அவன் ஏன் நினைக்க வேண்டும்?

அவ்வளவு பணமும் போன வழி தெரியாமல் போக வழியே இல்லை! ஏதாவது தடயமில்லாமலா போகும்?

'கண்டுபிடிக்கலாம்' என்று திடமாக நம்பியவனுக்கு கடந்த ஒரு வாரம், பத்து நாளாக அவனது நெஞ்சின் மீது வைத்திருந்த பாறாங்கல்லை யாரோ அகற்றியது போன்றிருந்தது.

பலவாறு யோசித்த பிறகு அவனின் மனம் லேசாக, படிகளிலிருந்து இறங்கி வந்தவன், ராதிகா அவளது பாட்டியிடம் பேசுவதைக் கண்ணுற்று அவளைத் தொந்தரவு செய்யாமல் அங்கேயே நின்றான்.

''நல்லாயிருக்கோம், பாட்டி. அத்தையும், மாமாவும் அர்ஜுனோட வீட்டுக்குக் கிளம்பி போய் இருக்காங்க. ம்ம்.. கேட்டதா சொல்றேன்.''

''........''

''ரிஷியும் போன திங்கள்கிழமையிலிருந்து அவரோட பழைய வேலைக்கே போக ஆரம்பிச்சு இருக்கார். எனக்கு டூரிஸ்ட் விசா என்பதால் வேலைக்குப் போக முடியாது, பாட்டி.''

''.......''

ரிஷியை நிமிர்ந்து பார்த்தவள், ''இங்கே தான் இருக்கார். நல்லாயிருக்கார். இல்லை பாட்டி... வெளியே கிளம்பிட்டு இருக்கார். அப்புறம் பேசச் சொல்றேன்'' எனவும், பாட்டி என்ன கேட்டிருப்பார் என்று ரிஷியால் யூகிக்க முடிந்தது.



அவளிடமிருந்து கைப்பேசியை வாங்கியவன், ''பாட்டி! நான் தான் ரிஷி பேசறேன். எப்படி இருக்கீங்க?'' என்று வினவ, ஆச்சரியத்தில் கண்களை விரித்தாள் ராதிகா.

முகம் பளிச்சென்று மலர சந்தோஷத்தில் விரிந்த இதழ்களுடன் இருந்தவளைப் பார்த்துக் கொண்டே, ''நாங்க எல்லோரும் ரொம்ப நல்லாயிருக்கோம். உங்க கால் வலி எப்படியிருக்கு? நர்ஸ் வந்து நல்லா கவனிச்சிக்கிறாங்களா?'' எனக் கேட்டான்.

''.............''

''மெஸ்ஸை பற்றி நீங்க கவலைப்படாதீங்க. உங்க உடம்பை நல்லா பார்த்துக்கோங்க. ம்ம். ராதிகாவை நான் நல்லபடியா பார்த்துக்கிறேன். நாங்க சீக்கிரமே சென்னை வர பார்க்கிறோம்.'' என்று முதியவருக்கு உற்சாகமூட்டும் வகையில் பேசி, கைப்பேசியை வைத்தவனின் குரலும் கனிந்து தான் இருந்தது.

விழிகளில் நேசம் பொங்க, ரிஷியைப் பார்த்துக் கொண்டிருந்த ராதிகா அவனிடம் நெருங்கி வர, இம்முறையும் ரிஷியின் உடல் விறைப்புற்றது.

கணவனை நெருங்கி வந்தவள், அவனது கைகளை இறுகப் பற்றி, ''தேங்க்ஸ், ரிஷி!'' என மெல்லிய குரலில் கூறிவிட்டு மாடியேறி போக, அவளையே ஏமாற்றத்துடன் பார்த்திருந்த ரிஷிவர்மன், பிடித்து வைத்திருந்த மூச்சை விட்டு, பின்னங்கழுத்தை அழுத்தி கண்களை மூடிக் கொண்டான்.

தான் என்ன எதிர்பார்க்கிறோம் என்றே அவனுக்குப் புரிபடவில்லை!

மாடியேறி வந்த ராதிகா நேராக அவளுடைய பெட்டியைத் திறந்து, அதிலிருந்த அவர்களது திருமண ஆல்பத்தை வெளியில் எடுத்து, அதை மார்போடு அணைத்தவாறே கட்டிலில் தொய்ந்து அமர்ந்தாள்.

அவள் உற்சாகமாக இருப்பது போல் காட்டிக் கொள்ள வேண்டுமென எத்தனை பிரயத்தனப்பட்டாலும், இது மாதிரி ஒரு சில நேரங்களில் அவளுக்கும் யாருடைய ஆறுதலாவது தேவையாய் இருந்தது என்னவோ சத்தியம்.

அதுவும் தன் பாட்டிக்காக, அவருடைய மன ஆறுதலுக்காக அவருடன் பேசிய ரிஷியை இழுத்து அணைத்துக் கொள்ள வேண்டும் போல் அவளுள் அடங்காத ஆசை பெருக, அவனை நெருங்கியவளின் ஆசை, அவனது உடல் விறைப்பை உணர்ந்து பொங்கிய பாலில் நீர் பட்டது போன்று அடங்கியது.

நடந்த எதுவுமே கனவல்ல எனக் குறிக்கும் ஏதோ ஒரு சாட்சியம் உடனடியாக அவளுக்குத் தேவைப்பட, விரைந்து வந்து ஆல்பத்தை எடுத்து பிரித்தவள், ஒவ்வொரு புகைப்படமாக ஏக்கத்துடன் ரசித்துப் பார்க்கலானாள்.

நிஜத்தை முடியாவிட்டால் குறைந்தபட்சம் நிழலையாவது தொட்டு தடவ முடிகிறதே என்ற எண்ணத்தில், அவள் கண்ணிலிருந்து சூடான கண்ணீர் புகைப்படத்திலிருந்த ரிஷியின் முகத்தில் விழ, வேக வேகமாக அதைத் துடைத்தாள் அவள்.

மருத்துவமனையில் அவள் அழுததோடு சரி. பின்பு ஒரு கட்டுப்பாட்டோடு வளைய வந்தவளின் அணை உடைய, கண்ணீர் துடைக்க... துடைக்கப் பெருகிய வண்ணமிருந்தது.



''இங்கே இருக்கிறான் பாரு ஒருத்தன்... இவன் தான் ரியல்! உனக்காகவே உருகறான்!'' என்று சொன்னீங்களே ரிஷி... எங்கே அந்த ரிஷி?

எந்த நேரத்தில் நான் நேரில் இருக்க ரிஷிக்கு முத்தம் கொடுக்காமல் நிழலுக்கு முத்தம் வைத்தேனோ... இப்பொழுது அதுவே சாஸ்வதம் ஆகிவிடும் போலிருக்கே?

உங்களுக்கு நூறு 'இச்' கொடுக்க நான் தயாரா இருக்கேன், ரிஷி! நீங்க எப்போ அதை ஏற்றுக்க தயாராவீங்க?

புகைப்படத்தில் மோகனமாக சிரித்துக் கொண்டிருந்த ரிஷிக்கு நூறு இதழ் ஒற்றல்களை அள்ளி வழங்கியவாறே, ''ஐ லவ் யூ, ரிஷி! ஐ லவ் யு! ஐ நீட் யூ பேக்!'' என்று உருகலானாள்.

ஒன்றா இரண்டா ஒரு கோடி ஞாபகம்
உயிர் தின்ன பார்க்குதே நண்பா
துண்டாய் துண்டாய் பூமியில் விழுந்தேன்
எங்கே நீ என் நண்பா?

அவளது கணவனின், 'ஐ லவ் யூ'-க்களைப் பரிகாசம் செய்தவளுக்கு, இன்று ஒரே ஒரு முறையாவது அவன் அவளைக் காதலுடன் பார்த்து, அவனுக்கே உரித்தான குரலில், 'ஐ லவ் யூ, ரதி!' என்று சொல்ல மாட்டானா வென ஏங்கினாள்.

அவன் விளையாட்டுக்குச் சொன்ன, 'நீ யாருன்னே தெரியாதுன்னு உன்னிடம் சொல்லிட்டு...' இப்பொழுது வினையாகிவிட்டதே எனத் தன்னுள்ளே அழுது புலம்பியபடி இருந்தவள், படிகளில் சத்தம் கேட்டு, அவசரமாக அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு, ஆல்பத்தைக் கட்டிலுக்கு அடியில் மறைத்து வைத்தாள்.

ராதிகா மாடிக்குப் போனதும் எதையோ இழந்தது போன்று தவித்த ரிஷிவர்மன் சிறிது நேரத்திலேயே அவளைத் தொடர்ந்து மாடிக்கு வர, அவள் எதையோ மறைத்து வைத்ததைக் குழப்பத்துடன் பார்த்தான்.

அங்கேயே அவனது கண்கள் அலைபாய, 'தலை வலிக்கிற மாதிரி இருக்கு, ராதிகா. காபி கிடைக்குமா?'' என விருப்பம் தெரிவிக்க,

அவனை நிமிர்ந்து பாராமலே அங்கிருந்து சென்றவளின் காலடி ஓசை மறையுமட்டும் அசையாதிருந்தவன், ராதிகா சென்று விட்டதும், அப்படி எதை அவள் மறைத்து வைத்திருக்கிறாள் என ஆர்வமுடன் குனிந்து கீழே இருந்ததை எடுத்தான்.

கையில் எடுத்ததைப் பார்த்தவன், மாலையும் கழுத்துமாக இருந்த அவர்கள் இருவரின் சந்தோஷ முகத்தை கண்ணுற்றதுமே திகைப்பில் உறைந்தான்.

ராதிகாவிற்கும் அவனுக்கும் நடந்த திருமணத்தின் சாட்சியாக திருமண ஆல்பம்!

மெல்ல ஒவ்வொரு புகைப்படமாக பார்த்துக் கொண்டு வந்தவனுக்கு ஆச்சரியம் தாளவில்லை!

ராதிகாவின் முகத்திலிருந்த மலர்ச்சியும் சந்தோஷமும் பூரிப்பும் மட்டும் அவனது ஆச்சரியத்திற்கு காரணமில்லை.

புகைப்படத்திலிருந்த ரிஷியின் முகத்தில் அத்தனையொரு நேசம், காதல். அவளது முகத்திலும் தான். இருந்த எல்லா படத்திலுமே இருவருமே ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்துக் கொண்டோ, தோளில் சாய்ந்துக் கொண்டோ, கையைக் கோர்த்துக் கொண்டோ தான் இருந்தார்கள்.



திருமண நாளில் புகைப்படம் எடுக்கும் போது எல்லா மணமக்களுமே அந்த போஸில் தான் இருப்பார்கள் என்றாலுமே அவன் பார்ப்பதில் கலப்படமில்லாத அன்பு தான் அவனுக்குத் தெரிந்தது.

**நிழலில் இருப்பது நிஜத்தில் ஏன் இல்லை? நிழல் எப்பொழுது நிஜமாகும்?**

**நினைவில்லை என்பாயா? நிஜமில்லை என்பாயா?**

**நீ என்ன சொல்வாய் அன்பே?**

**உயிர்த் தோழன் என்பாயா? வழிப்போக்கன் என்பாயா?**

**விடை என்ன சொல்வாய் அன்பே?**

**சாஞ்சாடும் சூரியனே! சந்திரனை அழவைத்தாய்**

**சோகம் ஏன் சொல்வாயா?**

**செந்தாழம் பூவுக்குள் புயலொன்று வரவைத்தாய்**

**என்னாகும் சொல்வாயா?**

# 13



முதன் முதலில்(!) ராதிகாவை அவன் மருத்துவமனையில் பார்த்த பொழுது தனக்குத் திருமணம் என்று ஒன்று நடந்திருந்ததையே ரிஷிவர்மனால் நம்ப முடியவில்லை.

ஒரு வருட காலத்திற்குள் முன்பின் அறிமுகமில்லாத பெண்ணுடன் காதல் மலர்ந்து... குடும்பத்தினருக்கு கூடத் திருமணத்தைப் பற்றி அறிவிக்காமல்... இதெல்லாம் சாத்தியம் தானா என்று ரிஷியின் மனதில் ஒரு சின்ன ஐயம் எழுந்ததென்னவோ உண்மை!

ஆனால் ராதிகா பொய் சொல்ல வேண்டிய அவசிய மென்ன? அதுவும் அந்தத் தருணம் வரை மருத் துவர் உள்பட யாருக்குமே அவனுக்கு ரீட்ரோக்ரேட் அம்னீஷியா இருப்பதைப் பற்றி தெரிந்திருக்காத பொழுது!

ஆனால் இப்பொழுதோ அவனால் முதலில் நம்ப முடியாத அத்திருமண நிகழ்வில் எடுத்த புகைப்படங்கள் அவன் கண்களுக்கு விருந்தாக, அவன் உள்ளத்திற்கு இதமாய் இருந்தது.

அதே சமயம், தற்பொழுது ராதிகாவின் பால் தனக்கு காதலோ, நேசமோ இல்லை என்ற நிதர்சனம் ரிஷிக்கு குற்ற உணர்ச்சியையும் ஏற்படுத்தியது.

''ஏற்கனவே சொன்னதையே திருப்பி சொல்றேன்னு நினைக்காதேப்பா. அவளுடைய வருத்தத்தை ராதிகா யாரிடமும் பகிர்ந்துக்க மாட்டாள், ரிஷி. மனசுக்குள் ளேயே பூட்டி வைச்சுக்குவா... அவளை நல்லபடியா பார்த்துக்கோ'' எனச் சற்றுமுன் பேசிய பாட்டியின் உரையாடல் வேறு அவன் செவிகளில் எதிரொலிக்க, ராதிகாவின் மேல் பச்சாதாபம் எழுந்தது.

ஆனால் காதல் என்கிற உணர்வு பச்சாதாபத்தினால் பிறப்பதில்லையே?

புகைப்படத்தில் பார்வையைப் பதித்தவாறே, ராதி காவின் உணர்வுகளைக் காயப்படுத்துவதாக எண்ணி, ''ஐ அம் சாரி!'' என்று மானசீகமாக அவளிடம் மன்னிப்பு வேண்டினான்.

நாட்கள் இப்படியே செல்ல, அந்த வாரத்தில் ஒரு நாள் சென்னையிலிருக்கும் யக்னேஷிடமிருந்து ரிஷி வர்மனுக்கு அழைப்பு வந்தது.



சந்தோஷமாக அழைப்பை எடுத்து முகமன் கூறி விட்டு, ''நான் நல்லாயிருக்கேன், யக்னேஷ். நீ எப்படி யிருக்கே?'' என்றான்.

''இருக்கேன்டா. வீட்டில் எல்லாம் எப்படியிருக்காங்க? ராதிகா எதுவும் என்னைப் பற்றி சொன்னாங்களா?''

கடைசி கேள்வியைக் கேட்கும் போது யக்னேஷ் ஏதோ தயக்கத்துடன் வினவுவது போல இருந்தது ரிஷிக்கு.

ஆனால் அதை தயக்கம் என்று குறிப்பிடுவதை விட பயம் என்பது தான் இவ்விடத்தில் சாலப் பொருந்தும். ரிஷிக்கு எப்பொழுது உண்மை தெரியுமோ என்பதால் ஏற்பட்ட பயம்; அதனால் விளைந்த தயக்கம்.

மருத்துவமனையில் ரிஷியுடைய பங்கு பணத்தை ஒப்படைக்க போகும் பொழுது, சுதா கேட்ட கேள்வி களில் தடுமாறி, சிந்திக்க நேரமின்றி ராதிகாவின் பெயரை இந்த விவகாரத்தில் இழுத்தது.

கடந்த ஒரு வருட கால நிகழ்வுகள் ரிஷிக்கு நினை வுக்கு வரவில்லையென்றாலும், ராதிகாவிடம் பணப் பட்டுவாடா பற்றி அவன் பேச மாட்டானா என்று நிதான மாக யோசிக்கும் பொழுது தான், யக்னேஷுக்கு அவன் செய்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்பது விளங்கியது!

ராதிகா தன்னுடைய ஏமாற்று வேலையைப் பற்றி ரிஷிக்கு சொல்லிவிட்டால்? சொல்லிவிட்டால்... என்ன சொல்லிவிட்டால்? சொல்லாமல் எப்படியிருப்பாள்?

ரிஷிக்கு உண்மை தெரிய நேரிடும் பொழுது, விளைவுகள் எவ்விதமிருக்குமோ?

சட்டப்பூர்வமாக இவ்வளவு முதலீடு, அதில் எனக்கு இவ்வளவு பங்கு என்று ரிஷி இவனிடம் எழுதி வாங்கவில்லை. அத்தனை நம்பிக்கை தன் மீது வைத்திருந்தவனுக்கு, தான் ஒரு ஏமாற்றுப் பேர்வழி என்று தெரிந்தால் காவல்துறையை நாடுவானோ?

நீதிமன்றம் வாயிலாக தனது வங்கிக் கணக்கை ஆராய்ந்தாலே தான் மாட்டிக் கொள்வது உறுதி என்பது போன்ற விபரீத கற்பனைகள் அவனுக்குக் கலவரத்தை ஏற்படுத்த, ரிஷி என்ன சொல்லப் போகிறானோ என்ற பயத்தோடு காத்திருந்தான்.

மற்ற கேள்விகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், ''ஒன்றும் சொல்லலையே! உன்னைப் பற்றி என்ன சொல்லணும், யக்னேஷ்?'' என்று அவனையே திருப்பிக் கேட்டான் ரிஷி.

குற்ற உணர்ச்சியில் திளைத்திருந்த யக்னேஷ் மேலும் குன்றலுடன், ''இல்லை. அங்கே உனக்குத் துணையா இல்லாமல் கிளம்பி வந்துட்டேனே... அதான்.'' எனச் சமாளிக்க முயன்றான்.

''இல்லைடா! எதுவும் சொல்லலை. தருண் எங்கே? ஆளையே காணோம்? அவனுடைய போனுக்கு கூப்பிடறேன். நம்பர் எதுவும் மாத்திட்டானான்னு தெரியலை. போகவே மாட்டேங்குது.''

''அவன் தான் க்ரூஸ்-க்கு போய் இருக்கானே? அவன் திரும்பி வர்றதுக்கு இன்னமும் ஆறு மாசம் ஆகும்னு



நினைக்கிறேன். கட்டாயம் முதல் வேலையா உன்னைத் தான் வந்து பார்ப்பான்'' எனத் தகவல் கூறிய யக்னேஷ்.

''பழைய விஷயமெல்லாம் எதுவும் நினைவில் வந்ததா, ரிஷி?'' என வினவினான்.

''தருண் எங்கேயிருக்கிறான் என்பதையே உன்னிடம் கேட்டு தெரிஞ்சுக்க வேண்டிய நிலையில் தான் இருக்கேன்'' என்று சலிப்புடன் சொன்னவனிடம்,

''டாக்டர் என்ன சொன்னார்?'' என்று விசாரித்தான்.

''டாக்டர் என்ன சொல்றார்.. ரிலாக்ஸ்டா இருன்னு தான் சொல்றார். வேற ஒன்றும் பெருசா சொல்றதுக்கில்லை, யக்னேஷ். ஆனால் எனக்கு தான் ஒரு சில விஷயங்களை நினைச்சால் பயங்கர கடியாகுது. ஒருத்தங்க சொல்றதை உண்மை தான் என்று அப்படியே ஏற்றுக்க வேண்டிய சூழலில் தான்டா இருக்கேன். அங்கே வியாபாரமெல்லாம் எப்படிப் போகுது?''

''வழக்கம் போல் தான், ரிஷி. நல்லாப் போகுது'' என்றவனுக்குத் தவிப்பில் மேலும் நெஞ்சம் குறுகுறுக்க,

''என் மேலே உனக்கு எந்தச் சந்தேகமுமில்லை தானே, ரிஷி? நான் சொல்றதில் உனக்கு நம்பிக்கை இருக்கா?'' என மெல்லிய குரலில் வினவினான்.

''ஏன்டா இப்படியொரு கேள்வியைக் கேட்டு என்னைச் சங்கடப்படுத்தறே?'' என்ற பதில் கேள்வியே தன் நண்பனைச் சங்கடப்படுத்தும் என்பதை ரிஷி அறிந்திருக்கவில்லை.

ரிஷிவர்மன் ஏதாவது சந்தேகப்பட்டுக் கேள்வி எழுப்பியிருந்தால் கூட யக்னேஷிற்கு எந்தவிதக் குற்ற உணர்ச்சியும் எழுந்திருக்காது.

ஆனால் தூய்மையான நட்பில் சந்தேகத்திற்கு என்ன அவசியம் என்று ரிஷி கேட்டதே, யக்னேஷிற்கு வலியைத் தந்தது.

''ம்ம்ம்.. ஆன்ட்டி உன்னிடம் நான் கொடுத்த பணத்தைக் கொடுத்தாங்களா, ரிஷி? அப்படியே இந்த மாசம் உன் பங்கை உன்னுடைய அக்கவுண்டுக்கு அனுப்பி வைச்சுடவா?''

''கொடுத்தாங்க யக்னேஷ். ஆங்! அனுப்பிடு. யூ.எஸ் அக்கவுண்ட் மறுபடியும் ஆபரேட் செய்ய ஆம்பிச்சுட்டேன். விவரமெல்லாம் ஈ.மெயிலில் அனுப்பி வைக்கிறேன்.''

நெருப்பு மேலிருக்கும் அவஸ்தையுடன் யக்னேஷ், ''சரிடா. வைச்சுடவா?'' என அவசரமாக விடைபெற முயல,

''ஒரு நிமிஷம்!'' என்று அவனைத் தடுத்த ரிஷி, ''நீ என்கிட்டே எப்போ யக்னேஷ் பணம் கொடுத்தே?'' எனத் தயக்கத்துடன் வினா தொடுத்தான்.

இதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், ''எதுக்கு இந்தக் கேள்வி கேட்கிறே?'' என்று திருப்பிக் கேட்டான்.

''எனக்கு எதுவுமே ஞாபகமில்லைடா. அதான் கேட்டேன்.''

சின்ன இடைவெளிக்குப் பிறகு, ''என்னைச் சந்தேகப்படறியா?'' என ரிஷிக்குப் பதில் சொல்லாமல், கேட்ட கேள்வியையே மீண்டும் கேட்டான் யக்னேஷ்.



''மறுபடியும் மறுபடியும் இந்தக் கேள்வியையே கேட்டு என்னைக் கஷ்டப்படுத்தறே, யக்னேஷ். எனக்கு எதுவும் தெரியலை என்றால் சுற்றி இருக்கறவங்களைக் கேட்டு தானே தெரிஞ்சுக்க முடியும். அப்படி நான் கேட்பதை எப்படி சந்தேகம்னு சொல்லுவே? காசு கொடுத்தியா கொடுக்கலையான்னு கேட்டால் சந்தேகமான்னு திருப்பி கேட்கலாம். ஆனால் இப்போ எதுக்குடா இந்தக் கேள்வியைக் கேட்டு என்னைக் காயப்படுத்தறே?''

''.......''

''எனக்குள் உதிக்கும் கேள்விகள் என்னைக் கஷ்டப்படுத்துது என்றால், நான் கேட்கிற கேள்விகளும் என்னைச் சுற்றி இருக்கறவங்களைக் கஷ்டப்படுத்துது போல'' என்றவன், மறுமுனையில் பதிலுக்காகக் காத்திருக்காமல் அழைப்பைத் துண்டித்துவிட்டு, சிறிது நேரத்திலேயே, 'ஏன் தனக்கு இத்தனைக் கோபம்?' என்று அதற்கும் வருந்தலானான்.

அடுத்து கொஞ்ச நேரம் எதற்காக கோபம் கொண்டோம் என்ற காரணத்தை அலசினான். தன் ஆற்றாமையினால் ஏற்பட்ட கோபமோ என்றெண்ணியவனுக்கு சலிப்பு தான் பிறந்தது.

இரவு உணவு அருந்துவதற்காக கணவனை அழைக்க வந்த ராதிகா, அவன் யோசனையுடன் இருப்பதைக் கண்டு, ''என்ன யோசனை, ரிஷி?'' என்றாள் அக்கறையுடன்.

அவளது புரிதலைப் பார்வையாலேயே மெச்சியவன், ''யக்னேஷ் போன் செய்திருந்தான், ராதிகா. அவனிடம் கோபப்பட்டுட்டேன்'' என்றான் மெல்லிய குரலில்.

"நீங்க கோபப்படற மாதிரி அவர் என்ன பேசினார்?" என்று ராதிகா கேட்டதும் குழப்பமாய் இருந்த ரிஷியின் முகத்தில் யோசனை படர்ந்தது.

அவனது யோசனையைக் கண்டவள், "நீங்க காரணமில்லாமல் கோபப்பட மாட்டீங்களேன்னு தான் அப்படிக் கேட்டேன்" என்றாள்.

"எனக்கு பணம் கொடுத்ததா அவன் சொன்னதை, எப்போ கொடுத்தான் என்று கேட்டேன். சின்ன தொகையா இருந்திருந்தால் கூட கையில் பணமா தந்திருக்க வாய்ப்பிருக்கு. கோடி கணக்கில் பட்டுவாடா என்றால் அவ்வளவு பெரிய தொகை என்னுடைய பேங்க் அக்கவுண்டில் ட்ரான்சாக்ஷன் ஆன மாதிரியும் தெரியலை. அவன் என்னிடம் கொடுத்த பணத்தை உனக்காக, மெஸ்ஸுக்காக நான் செலவு செய்ததா சொல்றான். ஆனால் அப்படி எதுவும் பணம் வாங்கலை என்று நீயும் சொல்றே. அந்தப் பணம் எங்கே போச்சுன்னு மண்டை குடையுது. அதைத் தெரிஞ்சுக்கலாம்னு தான் எப்போ கொடுத்தான் என்று கேட்டேன்."

"ஓ! அதுக்கு அவர் என்ன சொன்னார்?"

"உனக்கு என் மேல் நம்பிக்கையில்லையா என்று கேட்கிறான். எனக்கு சரியான கோபம் வந்துடுச்சு! பிடிச்சு கத்தி விட்டுட்டேன். ஆனால் இப்போ அதுக்கும் சேர்த்து தான் வருத்தப்படறேன்."

அவன் மனதில் உள்ள குமுறலை அவனே தொடர்ந்து வெளியில் கொட்டட்டும் என்ற எண்ணத்தில் அமைதியாக செவிமடுத்தாள் அவன் மனைவி.



"..... ஒருத்தங்க சொல்றதை உண்மையா... பொய்யான்னு ஆராய நான் எந்தக் கேள்வியையும் கேட்கிறதில்லை, ராதிகா. அப்படிச் சந்தேகம் வந்தால் அது நிம்மதியைக் குலைச்சிடும்ன்னு பயமா இருக்கு. அன்றைக்கு உன்னிடம் நான் கேட்ட போது நீ அதை ரைட் சென்ஸில் எடுத்துக்கிட்டே. ஆனால் இன்றைக்கு யக்னேஷ் அப்படி எடுத்துக்கலை. நம்பிக்கை, சந்தேகம்னு திருப்பித் திருப்பி அதையே சுற்றிச் சுற்றி வர்றான்" என்றவனின் குரலில் தன்னுடைய நிலையைப் பற்றிய வருத்தம் மட்டுமே பிரதிபலித்தது.

யக்னேஷ் சந்தர்ப்பவசத்தால் சொன்ன பொய் அவனுக்கு குற்ற உணர்ச்சியை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்பதை ராதிகாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

யக்னேஷின் கேள்விகள் குற்றமுள்ள நெஞ்சின் பிரதிபலிப்பு அவ்வளவே!

'உன் நண்பன் சொன்னது பொய்!' என்று வெளிப்படையாகச் சொல்லும் உண்மை ரிஷிக்கு அதிர்ச்சியை அளிக்கும்; மருத்துவரின் அறிவுரைப்படி அது அவனது உடல்நிலைக்கு உகந்ததல்ல.

உண்மையை நிதானமாக எடுத்துச் சொல்லும் பொழுது இத்தனை காலம் பழகின நண்பனே தன்னை ஏமாற்றியிருக்கிறான் என்ற விரக்தியில் ரிஷிக்கு மற்றவர்கள் மீது ஒவ்வொரு விஷயத்திலும் சந்தேகம் முளைக்கும்; அச்சந்தேகம் அவன் குறிப்பிட்டது போல அவனது நிம்மதியைக் கெடுத்துவிடும்.

ஆனால் அதே சமயம் நடந்த உண்மையை ரிஷியே கண்டறியும் சந்தர்ப்பம் வாய்த்தால், 'மற்றவர்கள்

உண்மையைச் சொன்னாலும், பொய்யைச் சொன்னாலும் அவனை எளிதில் ஏமாற்ற முடியாது' என்ற மனப்பாங்கு அவனுக்கு நம்பிக்கையளிப்பதாய் இருக்கும்.

கணவனின் முகத்தையே சில கணங்கள் உற்று நோக்கியவள், ''உங்களாலேயே அந்தக் கேள்விகளுக்கான விடையைக் கண்டுபிடிக்க முடியும் பொழுது, நீங்க ஏன் ரிஷி அதை மற்ற இடத்தில் தேடறீங்க?'' என்று வினா எழுப்பினாள்.

''அதெப்படி, ராதிகா? அந்தப் பணத்தை வேறெதுவும் அக்கவுண்டில் வைச்சிருக்கேனான்னு கூடத் தெரியலையே? ப்ச்! எனக்கு டைரி எழுதும் பழக்கம் கூட இல்லை.''

''உங்க கம்ப்யூட்டரில், 'காஸ்ட் அனாலிசிஸ்'ன்னு ஒரு சாப்ட்வேர் உபயோகப்படுத்திட்டு இருந்தீங்களே? அதில் மாசா மாசம் பிசினெஸ் பட்ஜெட்டில் இருந்து, வீட்டு பட்ஜெட் வரைக்கும் போட்டு வைப்பீங்களே? அதில் புது அக்கவுண்ட் ஏதாவது இருந்தால் அதுவும் தெரிஞ்சுட போகுது.''

கடந்த பத்து மாத காலத்தில், 'காஸ்ட் அனாலிசிஸ்' என்ற மென்பொருள் பற்றி பரிச்சயம் ஏற்பட்டு, அதன் உதவியுடன் ரிஷிவர்மன் வரவு-செலவுக் கணக்குகள், சேமிப்புகள், சொத்து மற்றும் காப்பீடு விவரங்கள் என்று சகலத்தையும் பராமரித்துக் கொண்டிருந்தான்.

கண்களை விரித்து, ''ஓ! அப்படியா?!'' என்று மகிழ்ந்தவன் அடுத்த கணமே, ''....ஆனால் அதிலும் சின்ன சிக்கலிருக்கு, ராதிகா'' என்று சோர்ந்தான்.



''என்ன சிக்கல்?''

''விபத்துக்கு அப்புறம் என்னுடைய கம்ப்யூட்டர், ஈமெயில்ஸ் பாஸ்வேர்ட் எல்லாம் மறந்துட்டேன். தப்பு தப்பா பாஸ்வேர்ட் போட்டு, எல்லாம் லாக் ஆகிடுச்சு. அப்புறம் கம்ப்யூட்டர் டீலர்கிட்ட போராடி, ஈமெயில் ப்ரொவைடர்கிட்டே ஐடன்டிடி ப்ரூஃப் (Identity proof) காண்பிச்சு.. போன வாரம் தான் எல்லாத்தையும் ரிட்ரீவ் செய்து வாங்கினேன்.''

''ம். ஓகே.''

''என்னுடைய ஈமெயிலில் காஸ்ட் அனாலிசிஸ் என்று ஒரு நோடிஃபிகேஷன் வந்தது. க்ளிக் செய்தால் அதிலும் இதே பாஸ்வேர்ட் போராட்டம் நடந்து, அதுவும் லாக் ஆகிடுச்சு. அந்த கம்பெனி விவரம் கண்டுபிடிக்க முயற்சி பண்ணினேன். ஆனால் எதுவும் தெரியாததாலே அதில் பெருசா என்ன இருக்க போகுதுன்னு நான் இது வரை எதுவும் கண்டுக்கலை. ஆனால் நீ சொல்றதைப் பார்த்தால்... இப்போ ரொம்ப அவசியம்னு தோணுது.''

''ஓ! நம்ம மெஸ்ஸுக்கு வரும் கஸ்டமர் ஒருத்தர் அந்த கம்பெனியில் தான் வேலை பார்க்கிறார். அவர் கிட்டே என்ன பண்றதுன்னு யோசனை கேட்கிறேன். இதைப் பற்றிய கவலையை விட்டுட்டு நீங்க இப்போ சாப்பிட வாங்க'' என்று கணவனைக் கையோடு உணவு மேஜைக்கு அழைத்துச் சென்றாள்.

முன்னிருந்ததை விட ரிஷி-ராதிகா இருவரின் பந்தத்திலும் இடைவெளி குறைந்திருக்க, சங்கோஜமோ தயக்கமோ இல்லாமல் ராதிகாவினிடத்தில் இயல்பாகப் பேசி பழகினான் ரிஷி.

அன்றொரு நாள், 'பருத்தி பால்' என்று ரிஷி குறிப்பிட்டு பேசியதிலிருந்து அவனுக்குப் பிடித்த பதார்த்தங்களையும், அவன் கடந்த ஒரு வருடத்தில் பழகியிருந்த சுவைக்கு ஏற்ற மாதிரியான உணவை மட்டுமே தயாரிப்பதில் ஆர்வம் காட்டினாள் அவள்.

அவனின் நினைவுகளைத் தட்டியெழுப்ப ஏதோ அவளாலான சிறு முயற்சி!

ரிஷிவர்மன் ஒரு சில பதார்த்தங்களைப் புதிதாக சுவைப்பது போலிருக்கும்; ஒரு சிலவற்றின் செய்முறையைக் கூட சரியாகச் சொல்லி அவளை ஆச்சரியப்பட வைப்பான்.

இரவு உணவின் பொழுது ராதிகாவையும் தன்னருகிலேயே அமர்த்தி அன்புடன் பரிமாறுவான். உண வருந்தும் பொழுது இளம் பிராயத்து நினைவுகளைப் பகிர்வதுடன், அன்றாட நிகழ்வுகளைப் பகிர்வதும் அவர்களுக்குள் வழக்கமான ஒன்றானது!

இன்றும் அதே போன்று, ராதிகா, ''பீர்க்கங்காய் சட்னியில் நல்லெண்ணெய் ஊத்தி சாப்பிட்டால் உங்களுக்குப் பிடிக்குமே? இங்கே எண்ணெய் வைச்சிருக்கேன் பாருங்க'' என்று அவன் புறம் கிண்ணத்தை நகர்த்தி வைத்தாள்.

''இன்றைக்கு ரெஸ்டாரண்டில் Baking oven-ல் இருந்து ட்ரே எடுக்கும் பொழுது கையில் லேசா சுட்டுக்கிட்டேன், ராதிகா. அதனால் எனக்கு இட்லியைப் பிட்டு தட்டில் வைக்கிறியா? ப்ளீஸ்.''



அவன் சொன்னதைக் கேட்டு பதறியவள் அவனது உள்ளங்கையைப் பார்த்து, ''ஏன் ரிஷி வந்ததுமே சொல்லலை? ஆயின்மெண்ட் ஏதாவது போட்டீங்களா?'' என்றபடி சமையலறை இழுப்பறையில் இருந்து தீக் காயத்திற்கான மருந்தை எடுத்து தடவினாள்.

''சின்ன காயம் தான், ராதிகா'' என்று சமாளித்தவன் மருந்தின் காந்தலில், ''உஸ்ஸ்ஸ்ஸ்ஸ்....'' என்று முனங்க,

''எப்பொழுதும் தெர்மல் க்ளவ்ஸ் எல்லாம் போட்டு கவனமா தானே செய்வீங்க? இன்றைக்கு என்ன ஆச்சு?'' கணவனின் வலியைத் தன் வலியாய் உணர்ந்து அக்கறையுடன் கடிந்தாள்.

''கவனமா செய்றது தான்'' என்றவனுக்கு மருந்திட்ட அவள் கைகளைச் சுத்தம் செய்த பிறகு, இட்லியைப் பிட்டு ஊட்ட ஆரம்பித்தாள்.

சென்னையில் இது அவ்வப்பொழுது அவர்களுக்குள் வழக்கம் தான் என்பதால் அது வேறுபாடாகவும் அவளுக்குத் தோன்றவில்லை.

அவள் ஊட்டியதை உண்டவனுக்கு வேறுபாடாகத் தோன்றாது தான் அதிசயம்!

அவனுக்குமே அது பழக்கம் தான் என்பது போன்று அவனும் பிகு செய்யாமல் இலகுவாக உணவை அருந்தியபடியே பேச்சைத் தொடர்ந்தான்.

''....ஆனால் இன்றைக்கு என்ன நடந்தது தெரியுமா? எங்க ரெஸ்டாரண்ட்டில் வேலை பார்க்கும் ஏஞ்சலினா வந்து இந்த வாரம் வெளியே டின்னர் போகலாமான்னு

கேட்டாள். நான், எனக்கு கல்யாணம் ஆகிடுச்சுன்னு அவளிடம் சொன்னால் அவள் அதை நம்பவே இல்லை. க்ளவ்ஸ் எல்லாம் கழட்டி வெட்டிங் ரிங்கை காண்பிக்கவும் தான் நம்பினாள். பார்த்தால் பேக்கிங் (Baking) முடிஞ்சு டைமர் அலாரம் அடிக்க ஆரம்பிச்சுடுச்சு. அரைகுறையா க்ளவ்ஸ் போட்டு ட்ரே எடுக்கும் போது தான் கையில் சுட்டுகிட்டேன்'' என அன்று அலுவலில் நடந்தவற்றை மனைவியிடம் பகிர்ந்தான்.

''வெளியில் டின்னர் போறதுக்கு எதுக்கு நீங்க கல்யாணம் ஆச்சுன்னு சொல்லணும்?'' என்று ராதிகா சர்வ சாதாரணமாய் வினவ, 'புரிந்து தான் பேசுகிறாளா?' என்பது போல மனைவியை ஒரு பார்வை பார்த்தான் அவன்.

'ஏதோ உளறிவிட்டேனா?' என்பது போல் திருதிருவென்று விழித்தவளிடம்,

''இந்த ஊரில் ஒரு பையன் இன்னொரு பெண் கிட்டே... அல்லது ஒரு பொண்ணு இன்னொரு பையன் கிட்டே போய், 'டின்னர் போகலாமா?' என்று கேட்டால், அது டேடிங்-க்கு பிள்ளையார் சுழி போடற மாதிரி. நட்பு ரீதியா என்றால் ஃபேமிலி டின்னர் அல்லது லஞ்ச் தான் கேட்பாங்க.'' என்று அவன் விளக்கம் கொடுக்க, அவன் மீது தன் பார்வையால் அக்னி கணை ஒன்றை அனுப்பிக் கொண்டிருந்தாள் ராதிகா.

''நீ ஏன் இப்போ என்னைப் பார்த்து நெற்றிக் கண்ணை திறக்கிறே? நான் எதுவும் தப்பு செய்யலை'', என்று சரணடையும் விதமாய் வாக்குமூலம் தந்தவனிடம்,



''ஓ! ஒருத்தி வந்து 'டின்னர் போகலாமா?' என்று கேட்கிற வரைக்கும் இடம் கொடுத்து வைச்சு இருக்கீங்களே? அது தப்பு கிடையாதா?'' எனப் பல்லைக் கடித்தபடியே வினவ, ரிஷிவர்மனுக்கு உணவு புரை ஏறியது.

தண்ணீரை எடுத்து அவனுக்கு அருந்தக் கொடுத்தவள், ''யாராவது டின்னர் பற்றி நினைக்கிறாங்களாயிருக்கும்!'' என்றாள் எரிச்சலுடன்.

ஆனால் அவளது கோபம் ரிஷியை வருத்தப்படுத்துவதற்கு மாறாக அவனை மிகவும் குஷிப்படுத்தியது தான் விந்தையிலும் விந்தை!

''ஏன் இப்படி அலுத்துக்கிறே? நான் கல்யாணமானவன்னு அடையாளப்படுத்திக்கிறதுக்கு கையில் ரிங் மட்டும் தான் போட்டுக்க முடியும். உடனே அப்படி பார்க்காதே... இது நம்ம கல்யாண மோதிரமா என்றெல்லாம் எனக்குத் தெரியாது. ஹாஸ்பிடலில் இருந்து வந்ததுமே வீட்டிலிருந்த ஒரு மோதிரத்தை எடுத்து போட்டுக்கிட்டேன். அதைத் தான் அவளிடம் இப்போ காட்டினேன். அதுக்கெல்லாம் பாராட்ட பண்ண மாட்டியே?'' என்றவனுக்கு புன்னகையை அடக்கவே முடியவில்லை.

கோபத்தில் ராதிகாவின் மூக்கு நுனியும், அவளது காதோரமும் செக்கச் செவேலென சிவந்திருக்க அவளது முகத்தை கண்களாலேயே வருடியவன், இன்னமும் அவள் சமாதானமடையாமல் இருக்கவும், ''நான் வேணா நாளையிலிருந்து, 'இவ்விடம் யாரும் டின்னர் டேட் கேட்க கூடாது'ன்னு என் நெற்றியில் ஒரு ஸ்டிக்கர் எழுதி ஒட்டிக்கவா?'' என்றான் கேலியாக.

அவன் கேட்டதைக் கற்பனை செய்து பார்த்தவளுக்கு கோபம் மறைந்து புன்னகை மலர்ந்தது.

அவளுடன் இணைந்து நகைத்தவன், ''ஹப்பாடி!'' என்று நிம்மதிப் பெருமூச்சை ஒன்றை வெளியேற்றிவிட்டு அவள் புறம் கண் சிமிட்டினான்.

கணவனின் பார்வையிலிருந்த மாறுதல் அவளுக்கு நாணத்தை வரவழைக்க, ''இன்னமும் ரெண்டு இட்லி வைக்கவா?'' எனக் கேட்டபடியே தட்டிலிருந்த உணவில் பார்வையைப் பதித்தாள்.

ரிஷிக்கு என்ன தோன்றியதோ, தன் புறங்கையால் அவளது கன்னத்தை மென்மையாக வருடியவன், ''இன்னமும் கோபமா தான் இருக்கியா? கன்னமெல்லாம் சிவந்து, சூடா இருக்கே?'' என மெல்லிய குரலில் கூறியவாறே,

அவன் உதட்டைக் குவித்து, அவளது கன்னங்களைக் குளிர்விக்கும் முயற்சியாய் மெல்ல ஊத, ராதிகாவிற்குச் சிலிர்த்தது.

கணவனின் செய்கை அவளுக்குப் பிடித்தமானதாய் இருந்தாலும், ரிஷின் மனமும் தன்னை நாடும் வரை பொறுமையாய்க் காத்திருக்க வேண்டும் என்று தன்னையே நிதானப்படுத்திக் கொண்டாள்.

## 14



காலச் சக்கரம் யாருக்காகவும் நிற்காமல் அதன் சுழற்சியைத் தொடர்ந்து கொண்டேயிருந்தது.



காலச் சுழற்சி மாற்றமில்லாமல் நடந்து கொண்டிருந்தாலும் ரிஷிவர்மன் மற்றும் ராதிகாவின் உறவு நிலையில் சிறு சிறு மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு தானிருந்தது.

அவனுக்கே தெரியாமல் சிறிது சிறிதாக ராதிகாவின்பால் அவனுடைய அணுகுமுறை முன்னே மாறிக்கொண்டு வந்திருந்தாலும், அந்த 'ஏஞ்சலினா' சம்பவத்திற்குப் பிறகு ரிஷிவர்மனுக்குமே அவனுடைய பழக்கத்தில் வித்தியாசம் தெரிய ஆரம்பித்திருந்தது.

தான் ராதிகாவிற்கு உரியவன் என்ற எண்ணம் அவன் மனதில் ஒரு மூலையிலாவது இல்லாமல் போயிருந்தால் ஏஞ்சலினா அழைத்த போதே அவன் போயிருந்திருக்கலாமே?

ஏன் போகவில்லை?

அவன் கையில் போட்டிருந்த ஏதோவொரு மோதிரத்தை, திருமண மோதிரம் என்று அவளிடம் காட்ட வேண்டிய அவசியமென்ன? அவனுக்குமே அந்தப் பந்தத்தில் ஈடுபாடு வந்திருக்காவிட்டால் அவன் அப்படிச் சொல்லியிருக்க மாட்டானே?

அவனுக்கு ஈடுபாடு... அந்தப் பந்தத்தின் மீதா... இல்லை... அந்தப் பந்தம் உருவாக காரணமானவள் மீதா?

அப்படி அவள் மீது தானென்றால்... அது, 'ரெடிமேட்' மனைவியாக ஒருத்தி அவன் கண் முன்னேயே வளைய வருவதினாலா?

இல்லை... ராதிகாவை எங்கே, எப்பொழுது பார்த்திருந்தாலும் அவனுக்கு ஈடுபாடு வந்திருக்குமா?

முன்பும் இப்படித்தான் வந்ததா?

ராதிகாவிடம் ஏதாவது கேட்கலாம் என்றாலோ... "உங்களுக்கே நினைவு வர வேண்டிய நேரத்தில் வரும். அதுவரைக்கும் ஒன்றையும் யோசிக்காமல் இருங்க" என்று அவன் வாயை அடைத்து விடுகிறாள்!

சொல்வதற்கு அவளுக்கென்ன? சுலபமாகச் சொல்லி விட்டாள்!

இங்கு நானல்லவா இதுவா, அதுவா, இப்படியா, அப்படியா என மண்டை காய்கிறேன்?

யோசித்து யோசித்து தலைவலி வருவது ஒன்று தான் மிச்சம் என்பதால் யோசிப்பதையும் அவன் சில காலமாக தவிர்த்து வந்தான்.

ஆனாலும், முழுதும் அப்படி விட்டேற்றியாக இருக்க முடியாமல் இப்பொழுது போன்று அவ்வப்பொழுது குழம்புவதும் அவனுக்கு வாடிக்கையாகி விட்டிருந்தது.

அப்போதெல்லாம் அவளிடமிருந்து ஏதாவது தகவல் பெயருமா என்று விடாமல் கேட்டு பார்ப்பான்.

இப்போதும் சமையலறையில் எதையோ செய்து கொண்டிருந்த ராதிகாவின் பின்புறம் சென்று நின்று கொண்டவன், அவள் செய்வதை வேடிக்கை பார்க்கலானான்.

எப்படி அவள் வாயிலிருந்தே விஷயத்தை வரவழைப்பது என்ற யோசனையிலிருந்தவனிடம், "என்ன, ரிஷி? ஏதாவது வேணுமா?" என்றாள்.

"ஒன்றுமில்லை. சும்மா தான் வந்தேன். எத்தனை நேரம் டிவி பார்க்கிறது?" என்றவன், "இத்தனை நேரமா



நீ என்ன செய்துட்டு இருக்கே?" எனக் கேள்வியெழுப்பினான்.

"உங்களுக்குப் பிடிக்குமேன்னு பால்கோவா செய்துட்டிருக்கேன். அதுக்குத்தான் பாலை சுண்ட வைச்சுட்டு இருக்கேன்" என்றவள், சர்க்கரையையும், நெய்யையும் விட்ட பாலைக் கலக்கிக் கொண்டிருக்க, அதை ராதிகாவின் தோள் வழியாக எட்டி பார்க்க முனைந்தவனின் நாசியை அவளுக்கே உரிய வாசம் தாக்கியது.

தலைக்குக் குளித்த ஈர கூந்தலைக் காய வைக்கவென சின்ன க்ளிப் மட்டும் போட்டிருந்தவளின் கேசம், குனிந்து என்ன செய்து கொண்டிருக்கிறாள் எனப் பார்க்க முற்பட்டவனின் நாசியை உரச, கண் மூடி அந்த சுகத்தை உள்ளிழுத்து அனுபவித்தான் அவன்.

என்ன சத்தத்தைக் காணோமே என்று திரும்பி பார்த்த ராதிகாவின் வழு வழு கன்னத்தை, அவள் கணவனின் மூக்கு முட்ட, அவளுக்கு ஒரு கணம் மூச்சு நின்று போனது.

விரிந்த விழிகளில், அவளுக்கு மிக மிக அருகில் தெரிந்த கணவனின் முகத்தை ஆசையுடன் நிரப்பிக் கொண்டு அசையாமல் நின்றாள்.

அசைய முற்பட்டிருந்தாலும் அவளால் முடிந்திருக்காது என்பது தான் நிதர்சனம்.

ராதிகாவின் கன்னத்தைத் தீண்டியதும் மெல்ல கண்களைத் திறந்தவனின் விழிகள், அவன் முகத்தைத் தொட்டுத் தொட்டுச் செல்லும் அவளின் கண்ணின் பாவையையே ஒருவித தேடலுடன் தொடர்ந்தது.

இருவரின் கண் இமைகளும் ஒன்றை ஒன்று முத்த மிட்டுக் கொள்ளும் நெருக்கத்தில் நின்றவர்கள் எத்தனை நேரம் அப்படியே இருந்தார்களோ?

முதலில் சுயஉணர்வு பெற்று, பிடித்திருந்த மூச்சை மெல்ல விட்டவன், வாய்க்கு வந்த முதல் வார்த்தை யாக, ''என்ன தான் போட்டு குளிப்பியோடா?! உன் னிடமிருந்து வரும் வாசமே சம்திங் ஸ்பெஷல் தான்!'' என உதிர்க்கவும், அப்பொழுது தான் வெளிவிட்டிருந்த மூச்சை மீண்டும் உள்ளிழுத்தாள் ராதிகா.

முன்பு அவன் சொன்ன அதே வார்த்தைகள்!

அவளுடைய பழைய ரிஷி திரும்பிவிட்டானா?

ஆவலும் பரபரப்புமாக கணவனின் முகத்தைப் பார்த்தவளுக்கு அதிலிருந்த அதிசய பாவமும், யோசனை யும் தான் தெரிந்தது.

இதே வார்த்தைகளை முன்பொரு முறை அவன் உதிர்த்ததும், அதனைத் தொடர்ந்து நடந்ததும் அவளது மனக்கண் முன்னே வந்து அவளை அவஸ்தைக்குள் ளாக்க, அடுத்து என்ன செய்வது... எப்படி நடந்து கொள்வ தென்று புரியாமல் விழித்தாள்.

அவன் தோள் சாய துடித்த மனதை மிகுந்த சிரமத் தோடு சமன் செய்து கொண்டிருந்தவளிடம், ''நாளைக்கு நாம நியூயார்க் போகலாம். அதைச் சொல்லத் தான் வந் தேன்'' என்று அவசரமாகக் கூறியவன், விடுவிடுவென அங்கிருந்து சென்று விட, எதையோ எதிர்பார்த்துக் காத்திருந்த ராதிகாவின் விழிகள் அவனை ஏமாற்றத் துடன் தொடர்ந்தன.

* * *



அடுத்த நாள் நியூயார்க் மாநகரத்தின் வானளாவிய கட்டிடங்களுக்கு மத்தியில் கணவனுடன் நடந்து கொண்டிருந்த ராதிகா, அக்கட்டிடங்களையும், சுறுசுறுப் பாக அங்குமிங்கும் ஓடி கொண்டிருக்கும் ஜனத்திரளை யும் வாய் மூடாது கண்டு வியந்தாள்.

நியூயார்க் நகரம் - ஒரு வருடத்திற்கு சுமார் ஐம்பது மில்லியன் மக்கள் பார்வையிட வரும் உலகின் மிக பிரசித்திப் பெற்ற நகரம்.

உலக வணிக வர்த்தகம் மற்றும் கலாச்சார தலை நகரம்; ஐக்கிய நாட்டின் தலைமை அலுவலகத்தைத் தன்னுள் வைத்திருக்கும் தனிச் சிறப்பையும் பெற்றது.

''ஹப்பா... எவ்வளவு உயரமான கட்டிடங்கள்? எவ்வளவு டாக்ஸி? நடக்கக் கூட இடம் இருக்காது போல?''

கார்களையே இது வரை நியூஜெர்ஸியில் அதிகம் பார்த்திருந்தவளுக்கு நியூயார்க்கின் வீதிகளில் போகும் மஞ்சள் நிற டாக்ஸிக்களும், பேருந்துகளும் வியப்பை அளித்தன.

''நியூயார்க்கில் ரியல் எஸ்டேட் ரொம்பவே விலை அதிகம், ராதிகா. ரொம்ப காஸ்ட்லியான ஊர்; இங்கே கார் பார்கிங்-க்கு காசு கொடுத்து கட்டுபடியாகாது. அமெரிக்காவிலேயே அதிக ஜனத்தொகை இருக்க இடமும் கூட. சப்-வே, டாக்ஸி, பஸ் என்று இங்கே பப்ளிக் ட்ரான்ஸ்போர்ட் தான் வசதி'' என்று விவரங் களைப் பகிர்ந்தான் ரிஷிவர்மன்.

''இங்கே தானே பங்கு சந்தை தொடர்பா வேலை நடக்கும் வால் ஸ்ட்ரீட் இருக்கு?''

''எஸ்! எஸ்! அங்கேயும் நான் உன்னை அழைச்சுட்டு போறேன். அங்கே இருக்கிற உயரமான கட்டிடங்கள் அந்தத் தெருவையே குறுகலா காண்பிக்கும். செக்யூரிட்டி அதிகம் இருக்கும்.''

''நியூஜெர்ஸி ரோட்டில் மக்களையே கண்ணால் பார்க்க முடியலை. இங்கே பார்த்தால் நம்ம ஊரு ரெங்க நாதன் தெரு மாதிரி எவ்வளவு கூட்டம்? அதுவும் இத்தனை குளிரில்?''

''குளிர் போகும் வரைக்கும் காத்துகிட்டு இருந்தால் எப்பவும் இந்த ஊரில் வெளியவே போக முடியாது. பேருக்குத் தான் நாலு மாசம் மட்டும் தான் குளிர் காலம்னு சொல்றது. ஆனால் வருஷத்தில் பாதி நாளுக்கும் மேலே குளிரத் தான் செய்யும்.''

''நீங்க சொல்றதும் சரி தான். நான் கூட இன்றைக்கு அடிக்கிற வெயிலைப் பார்த்து ஏமாந்து போயிட்டேன். ஸ்வெட்டர் மட்டும் போட்டுட்டு வெளியே வந்துட்டு, அப்புறம் திரும்ப போய் தான் ஜாக்கெட் போட்டுட்டு வந்தேன்.''

நவீன உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றான எம்பயர் ஸ்டேட் பில்டிங்கின் நூற்றிரெண்டாவது தளத்திற்குச் சென்று அங்கிருந்து நியூயார்க் நகரம் மொத்தத்தையும் பார்வையிட்டுக் கொண்டிருந்தவள், ''ஹப்பா.. எல்லாம் எவ்வளவு குட்டி குட்டியா தெரியுது இல்ல?'' எனச் சிறு குழந்தையாய் மகிழ,

அவளைச் சிரிப்புடன் பார்த்த ரிஷியிடம் அதென்ன கட்டிடம், இதென்ன கட்டிடம் எனக் கேட்ட வண்ணமிருந்தாள்.



''அது, 'ஒன் வேர்ல்ட் ட்ரேட் சென்டர்' - ட்வின் டவர்ஸ் விழுந்ததுக்குப் பிறகு, அதுக்கு பதிலா கட்டியது'' எனவும், ட்வின் டவர்ஸின் நினைவில் ஒரு கணம் அமைதி காத்த ராதிகா, ''ப்ச்! யாரோட பலத்தையோ யாரிடமோ காட்ட எத்தனை அப்பாவி உயிர்கள் பலி? சம்பவம் நடந்த பொழுது, என் பிரெண்ட்-ஓட சித்தப்பா இங்கே தான் வேலை பார்த்துட்டு இருந்தாராம். அன்றைக்கு அவங்க பயந்த பயம் இன்னமும் எனக்கு நல்லா நினைவு இருக்கு'' என்று கூற, அவளது தோளைப் பற்றி ஆறுதலாக அழுத்தினான் ரிஷி.

எம்பயர் ஸ்டேட் பில்டிங்கிலிருந்து சப்-வே எனப்படும் நிலத்தடி ரயிலைப் பிடித்து, ட்வின் டவர்ஸ் இருந்த இடத்திற்கு வந்து, குண்டு வெடிப்பால் இறந்தவர்களின் ஆன்மாக்களுக்காக ஒரு நிமிடம் கண்மூடி வேண்டி நின்றனர் ரிஷிவர்மன் தம்பதியினர்.

அங்கிருந்து பாட்டரி பார்க் வந்து, சுதந்திர தேவியின் சிலை (STATUE OF LIBERTY) இருக்கும் எல்லிஸ் தீவிற்குச் செல்ல ஒரு பெரிய படகில் ஏறியவர்கள் அதன் மேல் தளத்திற்கு வந்தனர்.

சுதந்திர தேவி சிலை அமெரிக்கர்களுக்கு பிரெஞ்சுக்காரர்களால் பரிசளிக்கப்பட்டது. இந்த ரோமானிய தேவதை சிலையை பிரெஞ்சு நாட்டிலிருந்து கடல் மார்க்கமாக 350 பாகங்களாக கொண்டு வந்து அமெரிக்க நாட்டில் வைத்து நான்கு மாத காலம் எடுத்து ஒன்றாக இணைத்துள்ளனர்.

மொத்தம் நானூற்று ஐம்பதாயிரம் டன் எடை கொண்ட இந்தச் சிலை கம்பீரமான தோற்றத்துடன்,

இடது கையில் அமெரிக்க நாட்டின் சுதந்திர தேவியை ரோமானிய எண்களில் பதிக்கப்பட்டதொரு பலகையை யும், வலது கையில் உயர்த்திப் பிடிக்கப்பட்ட தீப்பந்தத்தையும் கொண்டிருக்கும். அந்தச் சிலையின் பாதத்தில் இருக்கும் அறுத்தெறியப்பட்ட சங்கிலி அடிமைத்தனம் களையப்பட்டதை அடையாளப்படுத்து கின்றது.

உலகில் இருக்கும் ஏழு கடல்கள், ஏழு கண்டங்கள் என்பதைக் குறிப்பிடும் விதமாய் சுதந்திர தேவியின் சிலையின் மகுடத்தில் ஏழு கதிர்கள் அமைக்கப்பட்டிருக் கின்றன.

மேலும் அம்மகுடத்தில் உள்ள இருபத்தைந்து ஜன்னல் கள் புவியில் கண்டறியப்பட்ட இருபத்தைந்து இரத்தினங் களுக்காகவும், ஒளி கிரணங்கள் உலகத்தில் படுவதைக் குறிப்பிடுவதற்காகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த விவரங்களை அவளிடம் கூறியவன், ''டெக்'க்கு போயிடலாம், ராதிகா. அங்கேயிருந்து நியூயார்க்கின் ஸ்கை லைன்-ஐ நல்லா பார்க்க முடியும்'' என ரிஷி வர்மன் சொல்ல,

அவனுடன் படகின் மேல் தளத்திற்கு வந்த ராதிகா நியூயார்க்கின் உயரமான கட்டிடங்களைத் தூரத்திலிருந்து மிகவும் ரசித்துப் பார்த்தாள்.

''இத்தனை குளிரில் நாம மட்டும் தான் ஸ்டாட்சு ஆஃப் லிபர்டி பார்க்க வருவோம்னு நினைச்சிருந்தேன். இங்கே பார்த்தால்... நீங்க சொன்ன மாதிரி மக்கள் குளி ருக்குப் பயப்படவே மாட்டாங்க போலிருக்கே?'' என அதிசயப்பட்டவளை,



ஓடி வந்த சில சிறு குழந்தைகள் ரிஷியின் புறம் இடித்துத் தள்ளிவிட்டு, ''சாரி, மிஸ்!'' என்று விட்டு போயினர்.

தன் மேல் வந்து விழுந்தவளின் சுகமான சுமையைத் தாங்கியவனுக்கு பெரும் அவஸ்தையாக இருந்தது.

நேற்றே அவளுக்கு மிக நெருக்கத்தில் நின்ற பொழுது அவனுக்கு உண்டான உணர்ச்சிகளில் தத்தளித்தவ னுக்கு, இதென்ன இப்படியொரு போராட்டம் என்ற நினைப்பில் தான் ஆச்சரியமும் அது ஏனென்ற யோச னையும்.

அவளுடன் வீட்டில் தனியாக இருக்கப் பயந்து கொண்டு தான், அதைத் தவிர்க்க வாய்க்கு வந்த முதல் இடமான நியூயார்க்கை அவசரமாக அவன் சொல்லிவிட்டு சென்றதே.

அவளுடன் பொது இடத்தில் இருந்தால் பாதுகாப்பு என நினைத்து அவன் செய்த இந்த ஏற்பாடு சரியாக வேலை செய்யாதது குறித்து அவனுக்கு ஏமாற்றம் அன்றோ எழுந்திருக்க வேண்டும்?

ஏன் எழவில்லை? மாறாக அவனுக்குள் என்னவோ ரசாயன மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தது.

ராதிகாவின் தோள்களைப் பற்றி அவளை ஒரு நிலைப் படுத்திய ரிஷிவர்மன், ''நிறைய ஸ்கூலுக்கு இந்த வாரம் ஸ்ப்ரிங் ப்ரேக் விட்டிருப்பாங்க. அதனாலே இங் கிருந்து மட்டுமில்லாமல், மற்ற ஸ்டேட்டில் இருந்தும் டூரிஸ்ட்ஸ் வந்திருப்பாங்க. அதான் கூட்டம். குளிருக்கு ஏற்ற மாதிரி ட்ரெஸ் போட்டுகிட்டால் போச்சு. வேறென்ன செய்ய?'' என்றான் முயன்று வருவித்த இயல்பான குரலில்.

ரிஷிவர்மனுக்குள் நடந்து கொண்டிருந்த போராட்டம் அவளுக்கில்லை போலும்.

இல்லை.. போராட்டம் இருந்தாலும் கணவனைத் தானே இக்கட்டான நிலையில் நிறுத்தக் கூடாதென்ற வைராக்கியமோ?

எதுவோ ஒன்று, அவளை அவனிடமிருந்து சற்றே விலகி நிற்க வைத்தது.

"இந்த ஊரில் தான் நாலு மாசம் போடற ட்ரெஸ்-ஐ அடுத்த நாலு மாசம் போட முடியாது போலிருக்கே?" என்று சாதாரணமாக கூறியவளுக்கு, காலையில் கிளம்பும் பொழுது கையுறையை மறந்து வைத்து விட்டு வந்ததின் விளைவாக கைகள் மரத்து போகத் தொடங்கியது.

அது மெல்ல மெல்ல, குளிருக்குப் பழக்கப்படாத அவளின் தேகத்தையும் ஊடுருவ, படகின் மேல் தளத்தில் இருந்ததும் சேர்ந்து கொண்டு அவளது உடலில் லேசாக நடுக்கம் பரவ ஆரம்பித்ததை கண்டவன், "நாம வேணும்னா கீழே போயிடலாம், ராதிகா. குளிர் கொஞ்சம் குறையும்" என்றான் அக்கறையுடன்.

"இல்லை, ரிஷி. இப்படியே சமாளிச்சுக்கிறேன். நாம திரும்ப இங்கே எப்போ வரப் போறோமோ? ப்ளீஸ்..." என்று கெஞ்சியவளிடம் தனது கையுறைகளைக் கழற்றி அவளிடம் கொடுத்து, போட்டுக் கொள்ளச் சொன்னான்.

அவனுடைய உடல் சூட்டைத் தாங்கி வந்த அவனது கையுறையைப் பெற்றுக் கொண்டவள், குளிருக்கு இதமாக அதை அவளது கன்னத்தோடு வைத்து அழுத்



தியவாறே, சுற்றிலும் நீல வண்ணத்திலிருந்த நீர் பரப்பையும், சுதந்திர தேவி அமைக்கப்பட்டிருந்த தீவையும் ரசித்துக் கொண்டிருந்தாள்.

கூடவே அந்தப் படகின் மேல் தளத்தில் சின்ன குழந்தைகள் அவரவர் தந்தையின் தோள்களின் இரு பக்கமும் காலைப் போட்டு உட்கார்ந்து கொண்டு பயணம் செய்து கொண்டிருந்த காட்சியையும்!

வெகுநேரம் சிறு தளிர்களின் மழலையையும், அவர்களின் உற்சாகத்தையும் ரசித்தவளையே ரசித்துக் கொண்டிருந்தவன், "உனக்கு குழந்தைகள்னா ரொம்பப் பிடிக்குமா?" என்று ராதிகாவிடம் வினவினான்.

"ம்! ரொம்ம்ம்ப... ரிஷி! எவ்வளவு க்யூட்டா, சொகுசா உட்கார்ந்துட்டு சவாரி வருதுங்க பாருங்க? கீழே விழுந்துகூட கூடாதுன்னு அவங்க அப்பாவுடைய தலை முடியை முன்னெச்சரிக்கையா பிடிச்சுக்கிறதைப் பாரு. சோ ஸ்வீட்!" கண்களில் சந்தோஷத்துடனும், முகத்தில் மலர்ச்சியுடனும் பேசினாள்.

புன்னகையுடன் மனைவியை ஆமோதித்த ரிஷி, "நல்லவேளை ஆப்ரேஷன்-க்கு பிறகு என்னுடைய மண்டையில் முடி வளர்ந்துடுச்சு. நாளைக்கு நம்ம குழந்தையும், என் தலை முடியைப் பிடிச்சுட்டு சொகுசா சவாரி..." என்று பேசிக் கொண்டிருக்கும் பொழுதே, 'தான் என்ன உளறிக் கொண்டிருக்கிறோம்?' என்ற எண்ணம் உதயமானதால் பேச்சைப் பாதியிலேயே நிறுத்தினான்.

அவனது சங்கோஜத்தை உணர்ந்தவளும் ரிஷியிடம் எந்தக் கேள்வியையும் எழுப்பாமல், அவன் விரித்த

கற்பனையைத் தானும் கண்டு ரசித்துக் கொண்டிருந்தாள்.

குழந்தை யார் மாதிரியிருக்கும்? என்ற யோசனை ஓடியவளின் முகம் அந்த இனிய கற்பனையில் பூவாக மலர, அவளின் தேகம் குளிரில் நடுங்க ஆரம்பித்ததைக் கூட கவனிக்கவில்லை அவள்.

அவளது நடுக்கத்தை கண்டவன், ''இல்லை நீ கீழே வா! உனக்கு குளிர் தாங்கலை'' என அவளை வற்புறுத்தி,

''நல்ல ஜாக்கெட் எடுத்துட்டு வந்திருக்கக் கூடாதா? நானாவது கவனிச்சு இருக்கணும்'' என்று தன்னையே கடிந்தும் கொண்டு விட்டு,

''இந்தா... என் ஜாக்கெட்டை போட்டுக்கோ'' என அவனுடையதைக் கழட்டலானான்.

''அச்சோ! வேண்டாம் ரிஷி! உங்களுக்குக் குளிராதா? என்ன செய்றீங்க? சொன்னால் கேளுங்க'' என மறுத்தவளின் பேச்சு, அவள் கூறியதைச் செவிமடுக்காமல் அவன் ஜாக்கெட்டை கழட்டவும் நின்று போனது.

தான் கொடுக்கும் அங்கியை வாங்காமல் அவன் போட்டிருக்கும் டி-ஷர்ட்டையே வைத்த கண் வாங்காமல் பார்க்கும் ராதிகாவின் தோள் தொட்டு அசைத்தவன், ''ஹே! என்ன குளிரில் விறைச்சு போயிட்டியா? என்ன அப்படிப் பார்க்கிறே? ஏதாவது ஒட்டிட்டு இருக்கா என்ன?'' எனத் தன் டி-ஷர்ட்டை குனிந்து பார்த்தான்.



தன்னிச்சையாக உயர்ந்த ராதிகாவின் வலது கரம், ரிஷிவர்மன் போட்டிருந்த சிவப்பு நிற டி-ஷர்ட்டின் இடப்பக்க மார்பின் புறம் நீண்டு, அதன் மேல் அவள் எம்பிராய்டரி செய்திருந்த அவர்கள் இருவரின் பெயரின் முதல் எழுத்தான ஆங்கில 'R'-ஐ மெல்ல வருடலானது.

''ஓ! இதுவா? இந்த டி-ஷர்ட் என்னோட தொலைஞ்சு போன லக்கேஜில் இருந்தது. நல்ல வேளை ட்ரான்ஸிட்டிலேயே லக்கேஜ் தொலைஞ்சதாலே விபத்தில் இது சேதம் ஆகலை. இத்தனை நாளா பெட்டியைத் திறக்காமல் வைச்சிருந்தேன். இன்றைக்கு ஏனோ அதைத் திறக்கணும்னு தோணுச்சு. இது கண்ணில் பட்டவுடன் இதைத் தான் இன்றைக்குப் போட்டுக்கணும்னு, போட்டுக்கிட்டு வந்துட்டேன்'' என்று சொல்லிக் கொண்டே போனவனுக்கு ராதிகாவின் நிலை குத்தின பார்வை அப்பொழுது தான் உறைத்தது.

ஏதோ தோன்ற, சில நொடிகளின் அமைதிக்குப் பின், ''இந்த 'கீ'... நம்ம ரெண்டு பேரோட முதல் எழுத்தைக் குறிக்குதா?'' என்றான் சின்னதாகி விட்ட குரலில்.

கணவனை நிமிர்ந்து பார்த்தவளின் விழிகளில் என்ன இருந்தது?

என்னிடமே எல்லாவற்றையும் கேட்பதை விட்டுவிட்டு எப்பொழுது நீ என்னிடம் கூற போகிறாய் எனக் கேள்வி கேட்டதோ?

இல்லை... ஒவ்வொரு முறையும் கடந்து போனவற்றை நினைவுபடுத்தும் வகையில் நீ இப்படி எதையாவது செய்கையில்... எதையாவது பேசுகையில்...

உனக்குத் தான் எல்லாம் நினைவு வந்துவிட்டதோ என்று ஏன் என்னை ஏங்க வைக்கிறாய் எனக் குற்றம் சுமத்தியதோ?

விழிகள் நீரில் பளபளக்க ஆமோதிப்பதாக மெல்ல தலையசைத்தவள், பார்வையை வேறு புறம் திருப்பிக் கொண்டாள்.

ராதிகாவின் விழிகள் சொன்ன மொழிகளில் சிக்கித் தவித்தவனுக்கு ஒன்றும் சரியாகப் புரியவில்லையே தவிர, அதில் தெரிந்த பாவம் குழப்பத்தையும் சங்கடத் தையும் ஒருங்கே விளைவித்தன.

அவள் கண்களில் விழத் தயாராக இருந்த கண்ணீரில் துணுக்குற்றவனுக்கு அவன் என்ன செய்தான்? ஏன் இந்தக் கண்ணீர் என்று புரியவில்லை.

இருந்தாலும் அதற்கு அவன் தான் முழு முதற் காரணம் என்பது மட்டும் புரிந்தது.

அவன் சொன்ன எதுவோ... இல்லை... சொல்லாத எதுவோ அவளைக் காயப்படுத்தியிருக்கிறது என்பதும் புரிந்ததாலேயே சங்கடமும் குழப்பமும்.

அதன் பிறகு இருவருமே அவரவர் சிந்தனைகளில் மூழ்கியிருக்க, அதன் பின் அப்பயணம் இறங்கு முக மாகவே சென்று கொண்டிருந்தது.

எதையும் ரசிக்கும் மனப்பான்மையில் இருவருமே இல்லாத பொழுது வேறு எப்படியிருந்திருக்க முடியும்?

வீடு வந்து சேர்ந்த பின்னரும், இருவரின் சங்கடமான அமைதி தொடர, அது பொறுக்காமல்... ஆனால் என்ன செய்து அதைப் போக்குவதென்றும் புரியாத ரிஷிவர்மன்



அவனது அறைக்குச் சென்று, கணினிக்குள் புகுந்து கொண்டான்.

ராதிகா தான் அவளுக்குப் பழக்கமில்லாத ஊரில், பழக்கமில்லாத வீட்டின் நான்கு சுவர்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும் படியானது.

இன்றைக்கு படகில் ரிஷியுடன் நெருங்கி நின்றதும், அவள் எம்பிராய்டரி செய்த டி-ஷர்ட்டை அவன் அணிந் திருந்ததைப் பார்த்ததும் சேர்ந்து அவளை நெகிழ்ச்சிக் குள்ளாக்கியிருக்க, அவளால் ஒரு நிலையில் இருக்க முடியவில்லை.

ரிஷிக்கு நினைவு திரும்பினாலும் திரும்பாவிடினும் அவன் தான் அவளுக்கு எல்லாமே என்பதை உணர்ந்தே தானிருந்தாள் அவள்.

எப்பொழுது அவனுக்கு நினைவு திரும்பும்? இல்லை திரும்பவே திரும்பாதா?

தினம் தினம் இப்படியே ஏக்கத்தோடும் எதிர்பார்ப் போடும், அது நிறைவேறாத ஏமாற்றத்தோடும் தான் கழிக்க வேண்டுமா?

என்னை இந்தச் சுவர்களைப் பார்த்து புலம்ப வைத்து விட்டு அவன் எங்கே போனான்? அவன் மனதில் என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறான் என விடுவிடு வென படிகளில் ஏறி, அவனிருந்த அறைக்குள் அவள் நுழையவும்,

அதுவரை யோசனையில் ஆழ்ந்திருந்த ரிஷிவர்மன், "காஸ்ட் அனாலிசிஸ் பாஸ்வர்ட் ஏதாவது கிடைச்சதா, ராதிகா?" என எடுத்த எடுப்பில் விசாரிக்கவும்,

நான் என்ன கேட்க வந்தேன்? இவன் என்ன உப்பு பெறாத விஷயத்தைக் கேட்கிறான் என்று கண் மண் தெரியாத ஆத்திரம் வந்தது அவளுக்கு.

''ஏன்? இன்னமும் என் மேலே உங்களுக்குச் சந்தேகமா? அத்தனை பணத்தை எடுத்து நான் மாளிகை கட்டிகிட்டேன். நியூயார்க்கில் ஒரு பென்ட்-ஹௌஸ் கூட வாங்கியிருக்கேன். தெரியாதா உங்களுக்கு?'' என்று கோபத்தில் ராதிகா பொரிய ஆரம்பிக்க, அவளுக்கு ஏனிந்த திடீர் கோபமெனப் புரியாமல் குழம்பினான் ரிஷிவர்மன்.

அவள் மீது அவன் சந்தேகம் கொள்வதாக நினைக்கிறாளா?

இல்லையே! முதன்முறை பணத்தைப் பற்றி அவளிடம் சந்தேகமாகக் கேட்டதோடு சரி. அதன் பின், அந்தச் சந்தேகத்தின் நிழல் கூட அவள் மீது அவனுக்கில்லையே.

பொழியும் பனி எப்படிச் சுத்தமானதோ அதே போன்றே ராதிகாவும் சுத்தமானவள்! அது அவனுக்கு எப்படித் தெரியும் என்பதற்கு அவளிடம் விடையில்லை.

தெரியும்! அவ்வளவு தான்!

ஏனோ அவளை உள்ளும் புறமும் நன்கு அறிந்த மாதிரியிருந்தது அவனுக்கு.

அவளின் சந்தேகத்தைத் துடைக்கும் பதட்டத்துடன், ''ச்சே... ச்சே... என்ன ராதிகா... இப்படிச் சொல்லிட்ட? உன்னை நான் சந்தேகப்பட்டால் அது நான் என்னையே



சந்தேகப்படறதுக்குச் சமானம்'' என ரிஷிவர்மன் உறுதியாகச் சொல்ல,

அவனுடன் தொடர்ந்து சண்டையும் போட முடியாமல், அதற்கும் சேர்த்து அவன் மீதே கோபம் வந்தது அவளுக்கு.

ஒரு மூச்சு சண்டை போட்டால் கூட உள்ளே கொதித்துக் கொண்டிருப்பது கொஞ்சம் அடங்கும்... உள்ளேயிருப்பதை எல்லாம் கொட்டி விடலாமென்றால்... சண்டையும் போட விட மாட்டேன் என்கிறாய்? ச(ம)ரசமாகவும் போக விட மாட்டேன் என்கிறாய்?

ஏன்டா என்னை இப்படிக் கொல்லாமல் கொல்கிறாய்?

இந்தத் திரிசங்கு சொர்க்கத்தை எத்தனை நாளைக்கு அவளாலும் தாள முடியுமென அவளுக்குத் தெரியவில்லை.

பாட்டி அடிக்கடி சொல்வது போல அவள் பொறுமைசாலி தான்! ஆனால் பொறுமைசாலியான அவளுக்கே எத்தனை நாட்கள் கோபம் கொள்ளாமல் தாக்குப் பிடிக்க முடியுமென்று தெரியவில்லை.

இப்பொழுது மாதிரியே விதியின் மீது காட்ட முடியாத கோபத்தை அவன் மீது அவள் செலுத்தினாள்... அதில் யாருக்கு என்ன பயன்?

இப்படியே போனால் எங்கே அவளது அன்பு வெறுப்பாக மாறி விடுமோவென மிகவும் பயந்து போனாள் அவள்.

அவளது கோபமும், வெறுப்பும் அவனுக்கும் அவள் மீது வெறுப்பைத் தோற்றுவித்தால்...?

எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டவளால், அவனுடைய வெறுப்பை மட்டும் தாங்கவே முடியா தென நன்கு தெரிந்தது.

அதையுணர்ந்த அடுத்த வினாடியே அவளது கோபம் வந்த வேகத்திலேயே கரைந்து விட, 'கடவுளே! சீக்கிரமே இதற்கு ஒரு வழிகாட்டு!' என மனமுருக வேண்டிக் கொண்டாள்.

அத்தனை நேரமிருந்த தீவிரமும், நிமிர்வும் போய், தன் சக்தியெல்லாம் வடிந்தது போன்று தளர்ந்தவள், "ப்ச்! கிடைக்கலை!" என்று மட்டும் கூறி அவ்விடத்தை விட்டு அகல, தளர் நடையுடன் சென்றவளையே கண்களில் வலியுடன் தொடர்ந்தான் ரிஷிவர்மன்.

தனக்கு அவளை நினைவில்லை என்ற பொழுது கூட, வேதனை, கோபம், கழிவிரக்கம், பயமென ஏதோ வொரு உணர்ச்சியுடன் இருந்தவள் அவள்.

இன்று அவளின் உணர்ச்சித் துடைத்த முகம் தன் னால் தானே?

அவள் பின்னேயே போகத் துடித்த கால்களும், அவ னோடு அவளை இறுக அணைக்கத் துடித்த கைகளும் அவனை அங்கேயே மேலும் உட்கார விடாமல் எழும்ப வைத்தன.

தட தடவென படிகளில் அவள் இறங்கும் பொழுதே அவளின் துயர் பொறுக்காமல் தான் துடிப்பதின் பொரு ளென்ன? அதை உடனே துடைக்க விழையவும் இந்த அவசரம் ஏன்?



அவள் முகம் மகிழ்ச்சியில் விகசித்தால் தன் மனமும் மலர்வதின் ரகசியமென்ன?

அதை மலர்ச்சியோடு மட்டுமே பார்க்கும் ஆசை ஏன் என்ற ஆயிரம் கேள்விகள் அவனைப் படையெடுக்க, கண்விழி வெளியே தெறித்து விடுமளவிற்கு அவனது தலை வலியெடுக்க ஆரம்பித்தது.

மாடி படிக்கட்டுக் கைப்பிடியில் வைத்திருந்த அவனது கரமும் தளர, கால்களை அடுத்த படிக்கட்டில் வைப்பதற்கு முன் அவனின் உடலில் நடுக்கம் பரவ லானது.

## 15



தலையில் சுத்தியலால் பலமாக அடிப்பது போன்ற வலி எடுப்பதாகச் சொல்லி மாடி படிக்கட்டிலேயே அமர்ந்து விட்ட ரிஷியின் வேதனையைக் கண்ட ராதிகாவும் சில கணங்களுக்கு வெலவெலத்து விட்டாள்.

கையும் ஓடாமல், காலும் ஓடாமல் சில கணங்கள் பிரம்மை பிடித்தவள் போல் நின்றவள், துரிதமாகச் செயல்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்து நடந்து கொண்டாள்.

ரிஷியைச் சோதித்துப் பார்த்த மருத்துவர், "எந்த ஆபத்துமில்லை!" என்று சொல்லும் வரையில் ராதிகா வின் மனம், 'ரிஷி! ரிஷி!' என மன்றாடிக் கொண்டே யிருந்தது.

அவனிடத்தில் கோபம் கொண்டு பேசியதால் தான் ரிஷிக்குத் தாள முடியாத தலைவலி வந்து விட்டது என்று தன் மேலேயே பழியைப் போட்டுக் கொண்டு அதற்கும் சேர்த்தே வேதனைப்பட்டாள்.

வலியில் படிக்கட்டிலிருந்து அவன் உருண்டு விழுந்திருந்தால்...? நினைத்துப் பார்க்கவே முடியவில்லை அவளால்!

மருத்துவரும் இந்த முறை சற்றே கண்டிப்பானக் குரலில் அறிவுரை வழங்கினார்.

''ரிஷி! உங்களுக்கு மேஜர் ஆபரேஷன் நடந்து இன்னமும் நீங்க பூரண குணம் பெறலை. எங்களுடைய அறிவுரையை நீங்க பின்பற்றினால் தான் சிகிச்சைக்கான முழு பலன் கிடைக்கும். எந்த ஸ்ட்ரெஸ்ஸும் எடுத்துக்காதீங்க. எதையாவது யோசிச்சுட்டே இருந்தால் உங்களுடைய நியூரான்ஸ் அதற்கு ஒத்துழைக்காது. இப்படி அடிக்கடி தலைவலி வர்றதும் நல்லதும் கிடையாது, ரிஷி.''

அவரது அறிவுரைகளை ரிஷியும் தலையை அசைத்து ஏற்றுக் கொண்டாலும், யோசிக்காமல் இருக்க வழிவகை தான் அவனுக்குத் தெரியவில்லை.

அவனது தலைவலி பற்றி கேள்வியுற்றதும் பென்ஸில் வேனியாவிலிருந்து சுதாவும், ராமநாதனும் உடனே கிளம்பி வந்துவிட்டனர்.

ரிஷியின் குசலத்தைப் பற்றி விசாரித்து திருப்தி கொண்ட சுதா, ''ஏன்மா? நீ அவனை ஒழுங்கா பார்த்துப் பேன்னு தானே தனியா விட்டுப் போனோம்? இப்படி



அவன் தலைவலியை இழுத்து வைச்சுக்க விட்டுட்டியே?'' என ராதிகாவிடம் சற்றே ஆதங்கத்தோடு வினவினார்.

முதன்முறை பொறுமையாக இருந்த ரிஷியால், அடுத்த முறை சுதா இதே போன்றொரு குற்றச்சாட்டை ராதிகா மீது வைக்கும் பொழுது பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

''அம்மா! ராதிகா என்னை நல்லாவே கவனிச்சுக்கிறாள். நானா எதையாவது யோசிச்சு தலைவலியை இழுத்து வைச்சதுக்கு நீங்க ஏன் அவளைக் குற்றம் சொல்றீங்க?''

ரிஷியின் தொனியில், 'போதும்! இதற்கு மேல் அவளை எந்தக் குறையும் சொல்ல வேண்டாம்!' என்ற அதிகாரமிருந்தது.

சுதா பதில் பேசுவதற்கு முன்பே குறுக்கிட்ட ராதிகா, ''உங்க உடம்பு முடியலைன்னு ஆற்றாமையால் பேசறங்க. அதைப் பெருசு பண்ணாதீங்க, ரிஷி'' என்றாள் சமாதானமாக.

''ப்ச்! உன்னைக் குற்றம் சொல்லிவிட்டால் உடனே என்னுடைய உடம்பு சரியாகிடுமா? அதுவும் சேர்ந்து தானே என்னைக் கஷ்டப்படுத்தும்?!''

மகனின் பேச்சைக் கேட்டதும் தன் தவறை உணர்ந்த சுதா மெல்லிய குரலில், ''ஐ அம் சாரி, ரிஷி!'' என்றார்.

இன்னமும் மகனின் முகத்திலிருந்த கோபம் குறையாதது கண்டு, ''ராதிகா இங்கே இருப்பதால் தானே மறந்த ஒரு வருஷத்தை நினைவுபடுத்திக்க முயற்சி

எடுக்கறே? அது தானே உனக்குத் தலைவலி கொடுக்குது? அதான் சொன்னேன்'' என்றார் தன்னிலை விளக்கமாக.

மகன் மீண்டும் சுள்ளென்று ஒரு வார்த்தை சொல்வதற்கு முன்பு, ''இதென்ன பேச்சு, சுதா? நீ மறுபடியும் அவனுக்குத் தலைவலியை வரவழைக்க வேண்டாம். அவன் ரெஸ்ட் எடுக்கட்டும்'' என்று ராமநாதன் குறுக்கிட,

''சரி! சரி! நான் எதுவும் பேசலை. அவன் கூட கொஞ்ச நேரம் இருந்துட்டு வரேன். நீங்க போய் ரெஸ்ட் எடுங்க'' என விடைக் கொடுத்தார் சுதா.

ராமநாதன் அறையை விட்டு வெளியேற, அவரைப் பின் தொடர்ந்தபடியே வந்த ராதிகா அவரிடம் பேச்சு கொடுத்தாள்.

''மாமா! உங்ககிட்ட ஒரு விஷயம் தனியா பேசணும்.''

ரிஷியின் அறையை ஒருமுறை நோட்டம் விட்டவர், ''ம்! பேசலாம் வா! எப்படியும் பென்ஸில்வேனியா கதையெல்லாம் பேசி முடிக்க, உங்க அத்தைக்கு கொஞ்சம் நேரம் பிடிக்கும்'' என்றபடியே அங்கிருந்த டைனிங் அறைக்குச் சென்றார்.

மிகுந்த தயக்கத்துடன், ''நான் இந்தியாவுக்குக் கிளம்பிடலாம்னு இருக்கேன், மாமா'' என்றார் எடுத்த எடுப்பிலேயே!

''ஏன்மா? ஏன் இந்த திடீர் முடிவு?''

''ரிஷியை ரொம்ப கஷ்டப்படுத்தறேனோன்னு இருக்கு, மாமா. அதனால் தான்.''



''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி சுதா சொன்னது உன்னைக் காயப்படுத்திடுச்சா? ரிஷிக்கு முடியலை என்றதும் அவள் இப்படிப் பேசிட்டாள், ராதிகா. நான் அத்தையிடம் இந்த மாதிரி பேசக் கூடாதுன்னு சொல்லி வைக்கிறேன்மா'' என்று சங்கடத்துடன் ஆறுதல் தந்தார்.

''அச்சோ! இல்லை மாமா. கட்டாயம் இந்த முடிவை அத்தை பேசியதால் நான் எடுக்கலை. அப்படி நினைக்காதீங்க!''

'வேறே எப்படி நினைக்கச் சொல்றே?' என்ற கேள்வியை ராமநாதனின் விழிகள் வினவ, உணவு மேஜை மேலிருந்த கண்ணாடி டம்ளரில் தண்ணீர் ஊற்றி பருகினார்.

''அதான் சொன்னேனே? ரிஷியைக் கஷ்டப்படுத்தற மாதிரி இருக்குன்னு.''

அவள் சொன்னதைக் கேட்டு மாமனாரின் முகத்தில் அவநம்பிக்கையின் சாயல் தென்பட, ''பாட்டியைப் பார்க்கணும் போல இருக்கு, மாமா. அவங்களுடைய சமையல் புத்தகம் வெளியீட்டு விழா அடுத்த மாசம் வருது. அதில் நான் கலந்து கொண்டால் சந்தோஷப்படுவாங்க. அந்தப் புத்தகம் வெளி வர்றதுக்கு காரணமே நம்ம ரிஷி தான்'' என்ற காரணத்தையும் சேர்த்துச் சொன்னாள்.

ராமநாதன் அனுபவம் வாய்ந்தவர்! நிறுத்தி நிதானமாக யோசித்துப் பேச அவகாசம் தராமலேயே, தன்னெதிரே அமர்ந்திருந்தவளின் பதிலிலிருந்தே கேள்விகளைத் தொடுத்தார்.

''ம். சரி! அது அடுத்த மாசம் தானே?''

''.....''

''இன்னமும் ஏதோ ஒரு காரணம் இருக்கா, ராதிகா? உனக்கும், ரிஷிக்கும் எதுவும் பிரச்னையா?'' என்று வினவினார் கூர்பார்வையைச் செலுத்தியபடி.

''பிரச்சனையில்லை, மாமா.''

''அப்போ வேற ஏதோ ஒரு காரணமிருக்கு. அப் படித்தானே?'' என்று பெரியவர் வினவ, இல்லை யென்று மறுக்க இயலாமல் அமைதியாக உட்கார்ந் திருந்தாள்.

''என்ன காரணம், ராதிகா? சொல்லலாம் என்றால் சொல்லு. இல்லாட்டி ரிஷியிடமாவது...'' என்று சொல்லி முடிப்பதற்கு முன்பே, ''உங்களிடமே சொல்லிடறேன்'' என்றாள்.

அவர் தலையை அசைக்கவும், ''ரிஷிக்குக் கொடுத் துட்டதா சொன்ன ஒரு கோடி ரூபாயை யக்னேஷ் கொடுக்கவேயில்லை, மாமா. ஆனால் எனக்காக... என் மெஸ்ஸுக்காக செலவு செய்ததா அவர் பொய் சொல்லியிருக்கிறார்'' என்று சுருக்கமாகச் சொல்ல, அதைக் கேட்டுக் கொண்டிருந்த ராமநாதனின் முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சி வெளிப்பட்டது.

அவர் எதுவும் பேச முடியாமல் இருந்ததைப் புரிந்து கொண்டவள், ''ஆனால் எத்தனை நாளைக்கு பொய் நிலைச்சு நிற்க முடியும்? யக்னேஷும் பணம் தந்துட் டார்... நானும் அந்தப் பணத்தை வாங்கலை... லோன் தொகையும் குறையலை... அந்தப் பணம் எங்கே



போச்சுன்னு ரிஷி கேட்க ஆரம்பிச்சுட்டார். உண்மையை அவரிடம் சொல்லவும் பயமா இருக்கு'' எனக் கலக்கத்தோடு விவரம் சொன்னாள்.

''ஏன்? உண்மையைச் சொல்லிட...'' என்று கேட்கும் பொழுதே ராமநாதனுக்கும் ராதிகா தயங்குவதற்கானக் காரணம் புரிந்தது.

''ரிஷிக்கு எல்லா விஷயத்திலும் சந்தேகம் வந்துடும். மற்றவர்கள் பேச்சில் நம்பிக்கை வர்றது கஷ்டம்னு யோசிக்கிறியா, ராதிகா?''

''ஆமாம்! நம்பர்ஸை நம்பறதை விட மனுஷங்க மேலே நம்பிக்கை வைச்சுட்டு இருந்தவர் அவர். அதனால் தான் மாமா... என்னைப் பற்றிய நினைவு எதுவும் இல்லாமல் இருந்த பொழுது கூட, 'நான் அவருடைய மனைவி' என்றதும் அநாவசியமாக எந்தக் கேள்வியும் கேட்காமல் அதை அப்படியே நம்பினார். ஆனால் இப்போ அவரை ஒருத்தர் ஏமாத்துறாங்க... அதுவும் தன்னுடைய மெடிக்கல் கண்டிஷனால் ஏமாத்தறாங்க என்றால்... தன்னைச் சுற்றி இருக்கிறவங்க எல்லோர் மேலேயும் அந்த அவநம்பிக்கை வரத்தானே செய்யும்?''

''இல்லைமா. அப்படி எடுத்துக்காதே. உன்னுடைய நிலையை என்னால் புரிஞ்சுக்க முடியுது. ஆனால் இந்த விஷயத்தை இப்போதைக்கு ஆற போடும்மா. நானும் யோசிக்கிறேன். இதற்காக நீ ஊருக்குப் போக வேண் டாம், ராதிகா. அதுவும் இந்த நேரத்தில் நீ ஊருக்குப் போறேன்னு சொன்னால், நீ என்ன காரணம் சொன் னாலும் சுதா மேலே தான்மா ரிஷி கோபப்படுவான்.

அத்தை அப்படி பேசியதை மனசில் வைச்சு தான் நீ கிளம்பறே என்று நினைப்பான்.''

ராதிகாவின் கலக்கமான பார்வையைப் பார்த்தவர், ''நீங்க அத்தைக்காக பார்க்கறீங்க... ஆனால் எனக்காகப் பார்க்கலையே மாமான்னு கேட்கிறியாம்மா? சுதா ஏதாவது வஞ்சம் வைச்சு பேசினால் நான் கண்டிப்பா அவளுக்கு ஆதரவா இருக்க மாட்டேன். ஆனால் ரிஷி மேலே அவள் எவ்வளவு அன்பு வைச்சிருக்கான்னு எனக்குத் தெரிஞ்சதால் தான் உன்னிடம் இப்படியொரு கோரிக்கையை வைக்கிறேன்'' என்று சொல்லி மருமகள் ஊருக்குப் போகும் முடிவிற்கு அப்போதைக்கு முட்டுக் கட்டை போட்டார்.

ஆனால் ராதிகா தன் பயணத்தைத் தற்காலிகமாக ஒத்தி வைத்தாளே தவிர ரத்து செய்யவில்லை.

# 16



'தனக்குத் தெரிந்த உண்மையை மறைப்பதும் பொய்-க்கு சமமான ஒன்றே' என்ற குற்ற உணர்வில் இருந்த ராதிகாவிற்குத் தன் மாமனாரிடம் எல்லா வற்றையும் பேசியதில் மனதிலிருந்த பாரம் இறங்கி, லேசானது போன்றதொரு உணர்வு.

ரிஷியின் சுகக்கேடு அறிந்து வந்த பெரியவர்கள் இருவருமே மீண்டும் பென்ஸில்வேனியாவிற்குத் திரும்பாமல், இங்கே நியூஜெர்ஸியிலேயே தங்கியது



ராதிகா மற்றும் ரிஷியின் உறவை மேலும் பலப்படுத்த உதவியது.

இரண்டு-மூன்று நாட்கள் ஓய்வுக்குப் பிறகு ரிஷி மறுபடியும் பணிக்குச் செல்ல துவங்கினான்.

அவன் பணி முடிந்து திரும்பியதும் தினமும் மாலை வேளைகளில் எங்கேயாவது மகனையும், மருமகளையும் வெளியில் அனுப்பி வைத்துவிடுவார் சுதா.

ஒரே மாதிரியான காரணங்களைச் சொல்லாமல் அன்றாடம் ஒவ்வொரு விதமானக் காரணம்!

''நம்ம கம்யூனிட்டியில் இருக்க பார்க் ஸ்ப்ரிங் ஸீசனில் நல்லாயிருக்கும். அங்கே போயிட்டு வாங்க.''

''அந்தப் படம் நல்லாயிருக்குன்னு சிங் ஃபேமிலி சொல்லிட்டு இருந்தாங்க. நீங்க பார்த்துட்டு வந்து, எப்படியிருக்குன்னு சொல்லுங்க.''

''குருவாயூர் கிருஷ்ணர் கோவிலில் இன்றைக்கு சிறப்பு அபிஷேகம் இருக்காம். நீயும், ரிஷியும் போயிட்டு வாங்களேன்.''

''எடிசனில் திறந்திருக்கிற புது இண்டியன் ரெஸ்டா ரண்ட் நல்லாயிருந்தது, ரிஷி. நேற்றைக்கு நானும், உங்க அப்பாவும் போயிட்டு வந்தோம். நீங்க போயிட்டு வாங்க'' - இப்படிப் பல்வேறு காரணங்கள் சொல்லப் படும்.

முன்பு பெரும்பான்மையான நேரம் மடிகணினி சகிதம் அமர்ந்திருந்தவனுக்கு, இப்படி வெளியில் ஒன்றாக நேரம் செலவு செய்தது ராதிகாவின் மீதான புரிதல் ஏற்பட மேலும் உதவியது.

ராதிகாவிற்குப் பிடித்தமான மழலைச் செல்வங்களை அவளுடன் சேர்ந்து இவனும் ரசித்தான்.

அவளுடன் கை கோர்த்தபடி வெகுதூரம் நடைப் பயில்வதில் விருப்பம் கொண்டான்.

ராதிகாவை சந்தோஷப்படுத்திப் பார்ப்பதில் அவனுக் கொரு தனி சந்தோஷம் ஏற்படத் துவங்கியது.

அதனாலேயே ராமநாதன் மூலமாக மரகதம் பாட்டி யின், 'மரபு சமையல்' புத்தக வெளியீட்டு விழாவைப் பற்றி அறிந்தவன், அதை ராதிகாவிற்காக, அவளுடைய மகிழ்ச்சிக்காக நியூஜெர்ஸியில் இருந்த படியே வெப்கேம் மூலம் கண்டு ரசிக்க ஏற்பாடு செய்தான்.

அவனுடைய ஏற்பாடு ராதிகாவிற்கு எதிர்பாராத ஆனந்தத்தை அளிக்க மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப் போனாள்.

அதுவும் தனக்காக... தன்னுடைய சந்தோஷத்திற்காக ரிஷிவர்மன் இத்தனை யோசித்து செயல்படுகிறான் என்ற பொழுது அவளின் உற்சாகத்திற்குக் கேட்கவா வேண்டும்?!

''எப்படி ரிஷி? எப்படி? ஸோ ஸ்வீட் ஆஃப் யூ!'' எனப் பாராட்டிவிட்டு அவ்விழாவில் தனக்குத் தெரிந்த நபர்களை கணவனுக்கு அடையாளம் காட்டினாள்.

மரகதம் பாட்டியைக் கண்ட பொழுது அவளது கண்களில் தேங்கிய கண்ணீரை இதமாய் துடைத்து விட்டவனிடம் விழா முடிந்த பிறகு, ''இந்த லைவ் டெலிகாஸ்ட் பற்றி என்கிட்டே கூட நீங்க ஒரு வார்த்தை சொல்லவேயில்லை?!'' என உரிமையுடன் மெல்லிய கோபமும் கொண்டாள்.



''இந்த ஃபங்க்ஷனுக்குப் போகணும்னு அப்பாகிட்ட சொன்னியாமே? என்கிட்டே ஒரு வார்த்தை சொன் னியா நீ? அதற்கு நான் கோபப்படவா?''

ரிஷியின் குரலில் அவளை விட கோபம்... இல்லை... உரிமை அதிகமிருந்தது.

ரிஷியின் கோபம் அவளுக்குச் சிரிப்பை வரவழைக்க, உதட்டில் கையை வைத்து மூடிக் கொண்டு நகைத்தாள்.

''என்ன சிரிப்பு? உன் மேல் கோபமா இருந்தாலும் உனக்கு அங்கே நடப்பதை, 'லைவ் டெலிகாஸ்ட்' செய்ய ஏற்பாடு செய்து சர்ப்ரைஸ் கொடுத்திருக் கேனாக்கும். ஆனால் நீ என்னடா என்றால் என்னைப் பார்த்து இப்படிச் சிரிச்சு வெறுப்பேத்திட்டு இருக்கே!'' ரிஷி சலிப்பாய் சொன்னாலும் அவனது கண்களில் காதல் நிரம்பி வழிந்தது.

இதுநாள் வரையில் தன்னைத் தொலைவில் நிறுத்தி வைத்திருந்தவனின் பார்வைக்கும், இப்பொழுது அவன் பார்க்கும் பார்வைக்கும் வேறுபாட்டை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

ரிஷியை அவளுடைய ரிஷியாக உணர முடிந்தது.

தன்னால் உணர முடியும் காதலை, அவனும் இந்தக் கணத்தில் உணர்கிறானா இல்லையா?

இமைக்காமல் தன்னையே பார்த்திருந்தவளின் கரத்தைத் தன் கரத்தோடு இணைத்துக் கொண்டவன், மெல்ல அவளது முகத்தின் அருகில் சென்று, அவளது விழிகளை நோக்கி, ''எனக்கெதுவும் சர்ப்ரைஸ் இல் லையா, ராதிகா?'' என வினவினான்.

அவள் மனதிலிருந்த பூரிப்பு, காதல், நெகிழ்ச்சி போன்ற உணர்ச்சிக் கலவைகளின் விளைவாக, ''ஐ லவ் யூ ரிஷி!'' என்று ஒவ்வொரு வார்த்தையையும் நிறுத்தி நிதானமாகச் சொன்னதோடு அவனிடமும் அதற்கானப் பிரதிபலிப்பை ஆவலுடன் எதிர்நோக்கி காத்திருந்த வளையே சில கணங்கள் பார்த்திருந்தவன்,

''தேங்க்ஸ்! இட் மீன்ஸ் எ லாட் டு மீ!'' என்றான் காதல் ததும்பிய குரலில்.

ராதிகா, 'அவ்வளவு தானா?' என்பது போன்று அவனைப் பரிதாபமாகப் பாரகக, அப்பார்வையை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறினான் ரிஷிவர்மன்.

'ஐ டூ லவ் யூ!' என்று அவளிடம் சொல்வதில் அவன் மனதில் ஒரு சின்னத் தயக்கம்.

அது எதனால் என்ற காரணம் தான் அவனுக்கு விளங்க வில்லை.

அவனுக்கு ராதிகாவிடம் நம்பிக்கை இருந்தது. அவளது சின்ன ஆசையைக் கூட நிறைவேற்றிவிட வேண்டும் என்ற அபிலாஷை இருந்தது.

மற்றவர்களிடம் தான் திருமணமானவன்... இவள் என் மனைவி என்று அறிமுகப்படுத்த முடிந்தது.

தன் பெற்றோர் உட்பட யாரும் அவளை எந்தக் குறையும் சொல்லிவிடக் கூடாது என்ற எண்ணம் இருந்தது.

அவளை எப்பொழுதுமே சந்தோஷப்படுத்திப் பார்க்க வேண்டுமென்ற ப்ரியம் இருந்தது.



இத்தனையிருந்தும் இன்னமும் அவனால் திருமண வாழ்க்கையை ஏனோ இயல்பாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அவனது மௌனத்தைப் பார்த்தவளுக்கு, சற்று முன் பாட்டியைப் பார்த்த பொழுது இருந்த பூரிப்பெல்லாம் இப்பொழுது துணிகொண்டு துடைத்தது போன்று மறைந்தது.

ரிஷியால் மட்டுமே அவளைக் குஷிப்படுத்தவும், சங்கடப்படுத்தவும் முடிந்தது.

இந்தக் காதல் தான், எல்லாவற்றுக்கும் துணை தேடிய ராதிகாவைத் தனிச்சையாகச் செயல்பட வைக்க பலத்தையும் தந்தது; ரிஷியை மட்டுமே சார்ந்து அவள் உலகத்தை சிருஷ்டிக்க வைத்து அவளைப் பலவீன மாகவும் ஆக்கியது.

அவர்களது உறவில் ஏதாவது முன்னேற்றம் தோன் றும் போதெல்லாம், அவளுக்கு மிஞ்சுவது ஏமாறறம் மட்டுமே.

அப்படித் தோன்றுவதெல்லாம் வெறும் அவளது கற்பனையே என்று கூட அவள் நினைக்கலானாள்.

முன்னேறுவது மாதிரி தோற்றம் இருந்தாலும் போதும், ரிஷி மேலும் அவனது கூட்டுக்குள் புகுந்து கொள்வது போன்றிருந்தது.

அடுத்து வந்த நாட்களிலும் அவளுக்கு ஏமாற்றமே காத்திருக்க, ராதிகா ஏக்கத்தில் மிகவும் சோர்ந்து போனாள்.

அந்த ஏக்கமே அவளது அமெரிக்க டூரிஸ்ட் விசா காலத்தை மேலும் ஆறு மாத காலம் நீட்டிக்க ரிஷிவர்மன்

ஏற்பாடு செய்யும் பொழுது, 'வேண்டாம்' என்று அவளை நேரடியாகச் சொல்ல வைத்தது.

அவள் மறுத்ததில் அதிர்ச்சியடைந்த ரிஷி, ''ஏன்? ஏன் வேண்டாம்னு சொல்றே? உனக்கு இங்கே இருக்க பிடிக்கலையா, ராதிகா?'' என்று கேள்விகளை அடுக்கினான்.

''அப்படியில்லை, ரிஷி. அங்கே பாட்டி தனியா இருக்காங்க. பாட்டி இப்போ காலுக்கு குச்சி வைச்சு நடக்க ஆரம்பிச்சிருக்காங்க. இந்த நேரம் நர்ஸ் வேற அடுத்த மாசத்திலிருந்து வேலைக்கு வரலைன்னு சொல்லிட்டாங்க. நான் அங்கேயிருந்தால் அவங்களுக்கு கொஞ்சம் உதவியா இருக்கும்' என்று அவள் பட்டியலிட்ட காரணங்கள் யாவும் உண்மையான (கா)ரணத்தை மறைப்பதற்காக உதவின.

# 17



ஒரு மனிதனின் மனசாட்சியை உறங்க வைத்து அவனை சுயநலமாய் செயல்பட துணிச்சல் அளிக்கும் வல்லமை படைத்தது பணம்.

உண்மை, நட்பு, நம்பிக்கை போன்ற காரணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் யக்னேஷ் போன்ற மனிதர்களுக்கு, மனநிம்மதியை விலை கொடுத்து வாங்க முடியாது



என்கிற உண்மையை, வாழ்க்கையின் அனுபவம் கற்றுக் கொடுக்கிறது.

ரிஷியைப் பண விஷயத்தில் ஏமாற்றிய பிறகு இயல்பான் அவனிடம் மனம் விட்டு யக்னேஷால் பேச முடியவில்லை. முன்பு வாரத்திற்கு ஒருமுறையாவது மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருந்ததெல்லாம் ஏதோ முன்ஜென்ம நிகழ்வு போல இருந்தது அவனுக்கு.

தனக்கென்று ஏதாவது இக்கட்டு வந்தால் தோள் கொடுக்க தோழர்கள் இருக்கிறார்கள் என்றிருந்த நம்பிக்கை இப்பொழுது இல்லை.

மாறாக, தன்னைச் சுற்றி உள்ளவர்கள் தன்னை ஏமாற்றிவிடுவார்களோ என்ற பதட்டம் தான் அவளை ஆட்கொண்டது. தான் திருடன் பிறரை நம்பான் கதை தான்.

திருட்டு வேலை செய்த ஒருவன், போலீசிடம் பிடிபட்டாலும், பிடிபடவில்லையென்றாலும் திருடன் தான்!

ரிஷியிடம் சகஜமாய்ப் பேச முடியாததாலேயே அவனிடம் தொழில் வளர்ச்சிக்கானக் குறிப்புகளைப் பெற முடியாத நிலையும் அவனுக்கு ஏற்பட்டது. எந்தப் பணத்திற்காக நண்பனுக்கு துரோகம் இழைத்தானோ, அதே பணம் தான் அவனது நிம்மதியை 'ஸ்லோ பாய்சன்' மாதிரி சிறிது சிறிதாக காவு வாங்கியது.

ரிஷியிடமிருந்து அழைப்பு வந்தாலே மகிழ்ச்சி அடைபவன், இப்பொழுது அவனது எண்ணில் இருந்து அழைப்பு வந்தாலே, 'ஒருவேளை இது ராதிகாவோ?' என்று பதட்டம் கொண்டான்.

நண்பன் அழைக்கவில்லையென்றால் அதற்கும், 'ரிஷியிடம் ராதிகா உண்மையைச் சொல்லிவிட் டாளோ?' எனப் பயமடைந்தான்.

ஏமாற்று, பொய், பித்தலாட்டம் என்று ஒன்றன்பின் ஒன் றாய் அணிவகுக்கும் பொழுது ஒரு கட்டத்தில் தன்னையே வெறுக்கும் நிலைக்குச் சென்றான். அதனாலேயே ரிஷி மற்றும் அவன் தொடர்புடைய யாரிடமிருந்து அழைப்பு வந்தாலும், உண்மையைச் சந்திக்க திராணியற்று அழைப்பை எடுக்காமலே விடுத்தான்.

சுயமதிப்பை இழந்தவனுக்கு அழிவு பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம் என்று விளங்கி னாலும் அதிலிருந்து மீளும் வழி தெரியவில்லை.

ஆனால் யக்னேஷைத் தொடர்பு கொள்வதற்கான முயற்சியை மனம் தளராது தொடர்ந்தார் ரிஷியின் தந்தை ராமநாதன். அதற்கான வழியும் அவருக்குக் கூடிய விரைவிலேயே கிட்டியது.

ராதிகா இந்தியா கிளம்புவதற்கு இன்னமும் நான்கே நாட்களிருந்த நிலையில், தருண் அவனது பணி தொடர் பான கப்பல் பிரயாணத்தை வெற்றிகரமாக முடித்து திரும்பியிருந்தான்.

ராமநாதனுடன் பேசிக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்த வனைக் கண்ட ராதிகா, ''அண்ணா! வாங்க! வாங்க! எப்படியிருக்கீங்க? வேலையெல்லாம் நல்லபடியா முடிஞ்சதா?'' கண்களில் ஜீவனற்று இருந்தாலும் குரலில் உற்சாகத்தோடு தருணை வரவேற்று விசாரித்தாள்.

அவளது வரவேற்பைத் தலையை அசைத்து ஏற்ற தருண், ''இன்றைக்கு காலையில தான் க்ரூஸ் வேலை முடிச்சு வந்தேன், ராதிகா. ரிஷியைப் பார்க்க வரலாம்னு



இங்கே போன் பண்ணும் போது, ரிஷி இல்லாத நேரமா பார்த்து வரச் சொன்னார் அங்கிள். எதுக்கு இப்படிச் சொன்னார்னு குழப்பத்தோடு வந்தேன். இங்கே வந்த பிறகு தான், அங்கிள் எல்லா விவரமும் சொன்னாங்க'' என்று நடந்தவற்றைச் சுருக்கமாகச் சொன்னான்.

தன்னுடைய அலைபேசியைப் பார்த்தபடியே, ''நீங்க பேசிட்டு இருங்க. இதோ வந்திடறேன்'' என்று நகர்ந்தார் ராமநாதன்.

தருண் வந்த இடத்தில், தன் மனக்கவலையை அவனுக்கு வெளிக்காட்டாமல் மறைக்க முயன்ற ராதிகா, ''உட்காருங்க, அண்ணா! உங்களுக்கு காபி எடுத்துட்டு வரவா? டீ-யா?'' என அவனைப் பண்புடன் உபசரித்தான்.

ராதிகாவின் மெலிந்த தேகத்தைக் கண்ட தருண், ''என்னம்மா, ராதிகா? இப்படி பாதியா ஆகிட்டே? ஒழுங்கா சாப்பிடறியா? இல்லையா?'' சகோதர வாத் சல்யத்தோடு அக்கறை கொண்டான்.

விரக்தியானப் புன்னகையை மட்டும் உதிர்த்துவிட்டு தன் தேகத்தை ஒருமுறை குனிந்து பார்த்தவள், ''ம். இருக்கேன், அண்ணா! எனக்கென்ன? பூமிக்கு பாரமா ஏதோ இருக்கேன்!'' என்று பெருமூச்செறிந்தாள்.

அவள் பேசியதைக் கண்டு சீற்றம் கொண்டவன், ''இதென்ன பேச்சு, சிஸ்டர்? எல்லா கஷ்டங்களுக்கும் ஒரு முடிவு இருக்கும். அதுவரையில் நம்பிக்கையும், பொறுமையும் ரொம்ப அவசியம். இதெல்லாம் நல் லாவே தெரிஞ்ச உனக்கு நான் எதுவுமே சொல்ல வேண்டியதே இல்லை'' என்று ஆறுதல் தர முயன்றான்.

எதுவும் பேசாமல் நின்றிருந்தவளிடம், ''ஏன்மா? நான் இல்லையா உனக்கு? சிஸ்டர் வாழ்க்கையையும்,

என் பிரண்ட் வாழ்க்கையையும் கேள்விக்குறியாக விட்டுடுவேனா?'' என்று கேட்க, அவனது குரலிலிருந்த அன்பு ராதிகாவிற்குக் கண்ணீரை வரவழைத்தது.

தனக்காக, தன்னுடைய நலத்திற்காகப் பரிந்து பேசும் ஒரு ஜீவன்! சோர்வுற்றிருந்த மனதிற்கு ஆறுதல் தரும் விதமாய்ப் பேசும் அவர்களது நலன் விரும்பி!

எரிகின்ற வீட்டில் பிடுங்கியது வரை லாபம் என்று சுயநலமாய் செயல்படாத ஒருவன் என்று நினைக்கும் பொழுது அவளது மனதில் ஒரு இதம் பரவியது.

அவனது கண்களை நேராக நோக்கிய ராதிகா, ''ரிஷியிடம் நான் தான் இந்த ஜென்மத்தில் உங்கள் மனைவி... என் கூட தான் நீங்க வாழ்ந்தாகணும்னு அவர் சட்டையைப் பிடிச்சு சண்டை போடறதுக்கோ... அவருடைய காலில் விழுந்து எனக்கு உங்களை விட்டால் எதுவுமே இல்லைன்னு சொல்லி அழுதோ... நிரந்தரமா அவர் கூடவே இருப்பதற்கு எனக்கு எவ்வளவு நேரம் ஆகப் போகுது?'' என்ற கேள்விகளை முன் வைக்க,

'நீ சொல்வது உண்மை தான்' என்பது போல் அவளைச் சங்கடத்துடன் ஏறிட்டான் அவன்.

''காதலை யாசகம் கேட்க முடியாது; காதலைக் கட்டாயப்படுத்த முடியாது; காதல் என்ற பெயரில் ரிஷியை இக்கட்டில் நிறுத்தவும் முடியாது. ஆனால் இதையெல்லாம் கொஞ்ச நாளில் என்னையும் மீறி செய்துடுவேனோன்னு எனக்கே பயமா இருக்குண்ணா.''

கடைசி வாக்கியத்தை உதிர்க்கும் பொழுது அவளது குரல் உடைந்தது.

''சிஸ்டர்! கூடிய சீக்கிரம் எல்லாம் சரியாகிடும்.''



ஆறுதலும் நம்பிக்கையும் அளிக்கும் வகையில் தருண்; சந்தர்ப்பவசமாய் நடந்து கொள்ளும் யக்னேஷ்! மனிதர்களில் தான் எத்தனை நிறங்கள்?

சூழ்நிலைக்கும், சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப தங்களுடைய நிறத்தை மாற்றிக் கொள்ளும் பச்சோந்தி குணம் படைத்தவர்களைக் கண்டறிய ஒரே வழி அனுபவம் தான்!

**'அனுபவித்தேதான் அறிவது வாழ்க்கையெனில்**
**ஆண்டவனே நீ ஏன்' எனக் கேட்டேன்!**
**ஆண்டவன் சற்றே அருகில் நெருங்கி**
**'அனுபவம் என்பதே நான்தான்' என்றான்!!**

கவியரசர் கண்ணதாசன் சொன்ன வார்த்தைகள் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டியவை!

''ஏன் சிஸ்டர் அப்படி பார்க்கறே? என் மேல் உனக்கு நம்பிக்கையில்லையா? கட்டாயம் நான் ரிஷியிடம் பேசறேன். உன்னை வேணாம்னு சொல்றதுக்கு அவனுக்கு என்ன காரணம் இருக்க முடியும்?'' என்றவனின் வாக்கில் துளியும் போலித்தனமில்லை.

''எனக்காக நீங்க அவரிடம் சென்று பேச வேண்டாம், அண்ணா! ப்ளீஸ்!'' என்ற ராதிகாவின் கோரிக்கையையும் தாண்டி அவளைப் பற்றி ரிஷியிடம் பேசினான்.

ஆனால் ராதிகா சார்பாகப் பேசுவது போல இல்லாமல் நண்பனின் மனநிலையை அறிந்து கொள்ளும் வகையில், ''ஏன் நீ ராதிகாவை இந்தியாவுக்கு அனுப்பறே, ரிஷி?'' என்று வினவினான்.

''ப்ச்! நான் அனுப்பலை, தருண்!''

''நீ இங்கேயே இருன்னு சொல்லவும் இல்லை.''

குத்தலாகச் சொன்ன தருணை முறைத்தவன், ''ஏன்டா நீயும் புரிஞ்சுக்காமல் பேசறே? நான் ஆரம்பத்திலேயே எனக்கு ஒரு வருஷம் டைம் வேணும்னு சொல்லியிருந்தேன். அப்போ சரி... சரின்னு சொல்லிட்டு... இப்போ பாட்டியைப் பார்க்கணும், வேலையிருக்கு... இந்தியா என்னை அழைக்குதுன்னு சொல்றவளிடம் நான் என்னன்னு சொல்றது? இருன்னு சொல்றதுக்கு உனக்கென்ன உரிமையிருக்குன்னு ராதிகா திருப்பிக் கேட்டுட்டால் நான் என்ன பதில் சொல்றதுன்னே தெரியலை, தருண்!'' ஆவேசமாக பேசியவனின் குரல் அவன் முடிக்கும்பொழுது கரகரத்தது.

''ஒரு வருஷம் தாண்டியும், 'நீ என்னை ஏற்றுப்பாய்-ன்னு என்ன நிச்சயம்?' என்று சிஸ்டர் அன்றைக்கு உன்கிட்ட கேள்வி கேட்டாங்களா? ஆனால் இப்போ இருன்னு சொன்னால் மட்டும் உன்னிடம் கேள்வி கேட்பாங்கன்னு எப்படி சொல்றே, ரிஷி? அவாய்ட் பண்ணனும்னு நினைக்கிறியா?''

''கட்டாயமா அவாய்ட் பண்ண நினைக்கலை!'' என்று உறுதியாக சொன்ன ரிஷிவர்மன்.

''அன்றைக்கும் நான் எதுவும் உத்திரவாதம் கொடுக்கலையேன்னு கேட்டாள் தான். அப்படிக் கேட்க அவளுக்கு எல்லா உரிமையும் இருக்கு. அவளிடம் சொன்னதே தான் உனக்கும் சொல்றேன். லைஃப் டஸ் நாட் கம் வித் காரண்டீஸ், தருண். ஆனால்...'' என்றுவிட்டு அவனது நகக்கண்களை ஆராய்ந்தான்.

''அன்றைக்கு ஒரு வருஷம் என் கூட இருன்னு சொன்ன பொழுது அவளைக் கஷ்டப்படுத்துவேன்னு நினைக்கவேயில்லைடா! ஆனால் இந்த ஆறு மாசத்தில்



ஒவ்வொரு நாளும் ராதிகாவுடைய முகத்தில் ஏமாற்றத்தையும், ஏக்கத்தையும் பார்க்கும் பொழுது எனக்கே என் மேலே கோபம் வருது. தொடர்ந்து அவளைக் கஷ்டப்படுத்த வேண்டாம் என்ற எண்ணத்தில் தான் அவளை இங்கேயே இருன்னு சொல்லலை...''

''...''

''நீயே சொல்லு! கல்யாணத்தில் பார்த்த ராதிகாவுக்கும், இப்போ நேரில் பார்க்கிற ராதிகாவிற்கும் எத்தனை வித்தியாசம்னு? அவளைக் காலம் முழுக்க சந்தோஷமா பார்க்கணும் என்ற ஆசையில் தான் நான் அவளைக் கல்யாணம் செய்திருப்பேன். ஆனால் நானே அவளைக் கவலையில் கரைச்சுட்டு இருக்கேன்டா. அவளைச் சந்தோஷமா வைச்சுக்க முடியாட்டியும் பரவாயில்லை... கவலைப்பட வைக்க வேண்டாம்னு தான் அவள் இந்தியா போறேன்னு சொன்ன பொழுது எதுவும் சொல்லலை.''

''.....''

''அவளுடைய பாட்டிகிட்டே இங்கே நடக்கிற எதையுமே ராதிகா சொல்றதில்லை. ஒவ்வொரு தடவையும் போன் பேசி வைக்கும் பொழுதும், அவளுடைய முகத்தில் இருக்கிற வேதனையையும், பொய் சொல்கிறோமே என்ற குற்ற உணர்வையும் என்னால் சகிக்க முடியலை, தருண். என்னுடைய சுயநலத்துக்காக அவளை நான் கஷ்டப்படுத்த நினைக்கலை.''

''சிஸ்டருக்காக இவ்வளவு பார்க்கிற நீ... இன்னமும் எதுக்குடா ஆறு மாசம்னு காத்திட்டு இருக்கே?''

''உண்மையைச் சொல்லணும்னா நான் ராதிகாவைப் பார்த்து பரிதாபப்படறேனா... பிரியப்படறேனான்னே

தெரியலை, தருண். எதையும் என்னால் தெளிவா யோசிக்க முடியலை'' என்று முடித்தான்.

''யோசிச்சு யோசிச்சே வீணாப் போகாதே! சீக்கிரமே நல்ல முடிவா எடுடா!''

எந்த அளவிற்கு ரிஷி, ராதிகாவை நேசித்தான் என்பதை அறிந்தவன் என்பதாலேயே தருணின் மனதிற்குள் தோழனின் காதல் வெற்றியடைய வேண்டும் என்ற எண்ணம் வலுத்தது.

## 18



ராதிகா இந்தியாவிற்குப் புறப்பட இன்னும் இரண்டு நாட்களிருந்த நிலையில் அவளுடன் நேரம் செலவிடுவதற்காக பணிக்கு விடுமுறை சொல்லியிருந்தான் ரிஷிவர்மன்.

கடைசி நிமிட பரபரப்பு இல்லாமல் பெட்டியில் பொருட்களை எடுத்து வைத்துவிடலாம் என்ற எண்ணத்தில் முதல் வேலையாக அவளது பெட்டியில் பொருட்களை அடுக்கலானான்.

''இப்போ எதுக்கு ரிஷி பெட்டியை அடுக்கிட்டு? நான் ஹேண்ட் லக்கேஜ் மட்டும் தான் கொண்டு வந்தேன். அதை அடுக்கி வைக்க எவ்வளவு நேரம் ஆகப் போகுது? நானே பார்த்துக்கிறேன். நீங்க ரெஸ்ட் எடுங்க'' என்று அவள் சொல்லும் எதையும் காதில் வாங்காமல் தன்னுடைய வேலையைத் தொடர்ந்தபடியே,

''என்னுடைய பெட்டியை எடுத்துட்டு போ, ராதிகா! நான் பாட்டிக்கு கொஞ்சம் திங்க்ஸ் வாங்கி வைச்சிருக்கேன். அதை அவங்களுக்குக் கொண்டு போய்



கொடு'' என்று ஒவ்வொன்றையும் கவனமாகப் பார்த்து அவனது பெட்டியில் மாற்றி வைத்து அடுக்கிக் கொண்டிருந்தான்.

கணவன் தீவிரமாகப் பணியில் ஈடுபடவும், ''சரி! நீங்க இந்த வேலையைப் பாருங்க. மாமா எங்கேயோ போகணும்னு சொல்லி, என்னையும் கூப்பிட்டார். போயிட்டு வந்துடறேன்'' என்று சொல்லி ரிஷியின் சம்மதத்தோடு பொறுப்பை அவனிடத்தில் விட்டு விட்டு கிளம்பினாள்.

அவளின் காலடி ஓசை மறையுமட்டும் உணர்ச்சியைக் காட்டாமல் மறைத்தவன், நீண்ட பெருமூச்சை வெளியிட்டான். கண்கள் அவன் எடுத்து வைத்துக் கொண்டிருந்த அவளது புடவையிலேயே நிலைக்க, மெல்ல அதை வருடியவனுக்கு பெட்டியை எடுத்து தூர வீசமாட்டோமாவென இருந்தது.

தலையை அழுந்தக் கோதிக் கொண்டவன், மனதைக் கல்லாக்கிக் கொண்டு, அவனுடைய வேலையைத் தொடர்ந்தான்.

அவள் வெளியே சென்று திரும்பி வருவதற்குள் பெட்டியின் எடையை சரி பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு பெட்டியை நகர்த்த உதவி செய்தவளிடம், ''உன்னை ஏர்போர்ட்டில் இருந்து பிக் அப் செய்ய சொல்லி யக்னேஷிடம் சொல்லவா?'' என்றதும் ஒருவித எரிச்சலுடன்,

''யக்னேஷா? வேண்டவே வேண்டாம்!'' என்று மறுத்தாள்.

''ஏன் அவன் மேல் இவ்வளவு கோபம்?'' என்று ரிஷியின் கேள்விக்கு விடையாக தோள்களை மட்டும் குலுக்கினாள்.

அதைத் தொடர்ந்து சில நிமிடங்கள் நிலவிய மௌனத்தைக் கலைத்தபடி, ''எனக்கு அதற்கான காரணம் தெரியும்!'' என்றான் அமர்த்தலாக.

புருவம் உயர்த்தி நம்ப முடியாத பாவனை செலுத்திய வளிடம், ''உன்னுடைய டெலிபோன் டைரியில், காஸ்ட் அனாலிசிஸ் சாப்ட்வேர் பாஸ்வேர்ட் இருந்தது'' என்று சொல்லி தன்னுடைய ஷார்ட்ஸ் பாக்கெட்டில் பத்திரப்படுத்தி வைத்திருந்த சின்ன டைரியை அவளிடம் நீட்டினான்.

'என்ன சொல்லிச் சமாளிப்பது?' என்று தவித்தவளிடம், ''ஒருவேளை இதில் பாஸ்வேர்ட் போட்டு வைச்சிருக் கிறது உனக்கே தெரியாதோ என்னவோ?'' என அவள் சமாளிப்பதற்கானக் குறிப்பை அவனே எடுத்துக் கொடுக்க,

'தன் மடியில் கனமில்லை' என்பதைப் பறைசாற்றும் விதமாக அவன் கண்களை நேருக்கு நேராய் சந்தித் தவள், ''நீங்க அதில் பாஸ்வேர்ட் எழுதி செய்து வைச்சு இருந்தீங்கன்னு எனக்குத் தெரியும், ரிஷி'' என உண் மையை ஒப்புக் கொண்டாள்.

''அப்போ யக்னேஷ் சொன்னது பொய் என்று கூட உனக்குத் தெரியும். அப்படித்தானே?'' என்று அவன் வினவி யதற்கு, ஆமோதிப்பதாய் மெல்ல தலையசைத்தாள்.

முகத்தில் அப்பட்டமான ஏமாற்றத்தை வெளிக்காட்டி, ''ஏன் முன்னாடியே என்கிட்டே சொல்லலை, ராதிகா?'' என்று கேள்வியெழுப்பினான்.

''நான் சொன்னதை நீங்க நம்பியிருப்பீங்களா, ரிஷி? யக்னேஷ் சொல்லித்தான், 'நான் உங்கள் மனைவி' என்று எல்லாருக்கும் தெரிஞ்சுது. அவர் சொன்ன வார்த்தையில் நம்பிக்கை இருந்ததால் தான் என்னை யாருமே எந்தக் கேள்வியும் கேட்காமல் ஏத்துக்கிட்டீங்க.



ஆனால் மனசார ஏத்துக்கிட்டீங்களா என்று கேட்டால் இல்லைன்னு தான் ரிஷி சொல்ல முடியும். அதை நான் தப்பு சொல்லலை. அது யதார்த்தம் தான்.''

ஆதியோடு அந்தமாக அனைத்தையும் கொட்டி விட வேண்டுமென்றே துடிப்பில் தொடர்ந்து பேசினாள்.

''என்னை ஒரு வார்த்தைக் கேட்காமல் யக்னேஷ் சொன்னதை அத்தை அப்படியே நம்பிட்டாங்க.''

''அவங்க நம்பிட்டாங்கன்னு எப்படிச் சொல்றே?''

''அதை எப்படி என்கிட்டே கேட்கிறதுன்னு அவங்களுக்கு தயக்கமா இருந்திருக்கலாம். ஆனால் ஆளை அனுப்பி அங்கே மெஸ்ஸில் விசாரிச்சிருக்காங்க என்ற விவரம் மட் டும் வேலை செய்றவங்க மூலமா தெரிஞ்சது. அதுவும் ராஜம்மாவுக்கு ஏதோ சந்தேகமா இருக்க மாதிரி மனதில் பட்டதாலே என்கிட்டே இதைச் சொன்னாங்க.''

''ஓ.. !''

''யக்னேஷ் மூலமாவே உங்களிடம் சொல்ல வைக்கலாம்னு நினைச்சு செய்த முயற்சிகளுக்கும் எந்தப் பலனுமில்லை, ரிஷி.''

''....''

''கொஞ்சம் உங்க உடம்பு சரியானதும்... நீங்களே 'காஸ்ட் அனாலிசிஸ்' மூலமா உண்மையைக் கண்டு பிடிக்கலாமேன்னு நினைச்சு தான் உங்ககிட்ட அது பற்றி பேசினேன். அப்போதைக்கு என்கிட்டே பாஸ்வேர்ட் இருக்கிற விஷயத்தை சுத்தமா மறந்துட்டு, மெஸ் கஸ்டமர் கிட்டே உதவி கேட்டிருந்தேன். நியூயார்க் போன பொழுது யக்னேஷ் வீடு விற்றதைப் பற்றி பேசினதும் கூட உண்மையைச் சொல்ல, நல்லதொரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து தான். ஆனால், அன்றைக்கு அதற்கான சூழ்நிலை அமையலை, ரிஷி.''

"....."

"உங்க ஹெல்த் கண்டிஷன் என்னை பயமுறுத்துச்சு. டாக்டர் பழைய விஷயங்களை யோசிக்காதேன்னு கண்டிப்பாய் சொன்ன பிறகு, கையில் கிடைச்ச பாஸ் வேர்ட்-க்கு வேலையே இல்லைன்னு தான் விட்டுட் டேன். அதனால் தான்... சொல்லலை... ஐ அம் சாரி!" என தன் செய்கைகளுக்கான விளக்கங்களுடன் மன்னிப்பு வேண்டினாள்.

"ஒருவேளை நீ அப்போவே உண்மையை சொல்லி யிருந்தால்... நம்பியிருப்பதும் கஷ்டம் தான், ராதிகா. நீ யக்னேஷையும், அவன் உன்னையும் கை காண்பிச் சிருந்தால், உண்மையிலேயே எனக்கு குழப்பமும், அவநம்பிக்கையும் தான் மிஞ்சியிருக்கும். எல்லா விஷயத்திலும் இது உண்மையா... பொய்யான்னு பயம் வந்திருக்கும்" என்று அவள் மனதில் எண்ணியிருந்த காரணங்களை ரிஷியும் ஒப்புக் கொண்டான்.

"இன்னொரு விஷயம் உனக்குச் சொல்லவா? உன்கிட்டே பாஸ்வோர்ட் இருந்தும், அதை நீ மறைச்சு இருக்கிறே என்றால் கண்டிப்பா ஏதாவது காரண மிருக்கும் என்ற நம்பிக்கையில் நான் அதை யூஸ் பண்ணவேயில்லை. ஐ ட்ரஸ்ட் யூ, ஐ ட்ரஸ்ட் யூ கம்ப்லீட்லி!" என ஆத்மார்த்தமாக மொழிந்தான்.

அவன் கூறியதில் அகம் மகிழ்ந்தவள், "அப்புறம்... எப்படி யக்னேஷ் என்று தெரிஞ்சுது? போட்டு வாங் கினீங்களா?" என்றாள் கேள்வியாக.

"இல்லை... அவன் தான் இன்றைக்கு நீ வெளியில் போயிருக்கும் பொழுது போன் செய்தான். தருண் அவனைக் கூப்பிட்டு திட்டியிருப்பான் போல..."



"ஓ!"

"அவனுக்கே தான் செய்யறது தப்புன்னு நினைச்சு போன் செய்திருந்தால் கூட ஒருவேளை அவ்வளவு கோபப்பட்டிருக்க மாட்டேனோ என்னவோ..." என்று நிராசையுடன் பெருமூச்செறிந்துவிட்டு,

கம்மிய குரலில், "எனக்கு மனசே கேட்கலை, ராதிகா. இப்போதைக்கு இதற்கு மேல் இந்தப் பிரச்சனையை பேச வேண்டாமே, ப்ளீஸ்!" என்ற கோரிக்கையுடன் முடித்தான்.

அவள் மீது ஒருவன் அபாண்டமாய் பழி போட்ட பின்பும் கூட கூச்சம் போடாமல், ஆர்ப்பாட்டமில்லாமல் தனது நலனைக் கருத்தில் கொண்டு, ராதிகா செயல்பட்ட வித மறிந்து உண்மையிலேயே வியந்து போனான் அவன்.

'என்னைப் பற்றி எப்படி விசாரிக்கலாம்?' என்று தாய் மீது புகார் வாசிக்காமல், 'இது தான் யதார்த்தம்' என்று ஏற்றுக் கொண்ட அவளது மனமுதிர்ச்சியையும், பெருந் தன்மையையும் எண்ணி சிலாகித்தான்.

"சரி, ரிஷி. நீங்க இதையே யோசிச்சுட்டு இருக்கா தீங்க" என அக்கறை கொண்டவளிடம்,

ரிஷிவர்மன், "ம். ஏற்கனவே ரெண்டு மாத்திரை எடுத்தாச்சு. தூக்கமா வருது..." என்று சொல்லி அவளைக் கவலை கொள்ள செய்தான்.

அந்தக் கவலை அவளை யோசனையில் ஆழ்த்தியது.

நாட்கள் நெருங்க நெருங்க, 'சென்னைக்குப் பயணப்படலாமா... வேண்டாமா?' என்று முடிவெடுக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தவளை உறுதி யுடன் ஒரு முடிவெடுக்க வைத்தது.

ஆனால் அந்த முடிவு அவளை மட்டுமல்ல... ரிஷிக்குமே கவலையளித்தது.

## 19



"என்ன, ரிஷி? நாங்க சொல்றது சரி தானே?"

அர்ஜுன் கேட்க, எங்கேயோ... இல்லை எங்கேயோ இருக்கும் யாரிடமோ... கவனத்தைப் பறிகொடுத்திருந்த ரிஷிவர்மன் திடுக்கிட்டு விழித்தான்.

ராமநாதன், சுதா, அர்ஜுன் மற்றும் ஆஷா என அனைவரும் அவனைச் சுற்றி அமர்ந்து பேசி சிரித்துக் கொண்டிருந்தாலும் ஏதோ தான் மட்டும் தனி தீவில் இருப்பதைப் போன்று உணர்ந்தவனின் மனம், ஆயிரம் பேர் சூழ இருந்தாலும் அங்கேயில்லாத நபரின் அருகாமைக்காகவே பெரிதும் ஏங்கியது.

மற்றவர்களின் பேச்சில் கலந்து கொள்ளாமல் தன்னுள்ளே புதைந்து போனவனை அர்ஜுனின் கேள்வி விழித்தெழ செய்ய, "ஹான்... என்ன கேட்டே, அர்ஜுன்?" என்றவனின் கவனம், தம்பியிடமிருந்து வரும் பதிலுக்காகக் காத்திருக்காமல் மீண்டும் சிதறலானது.

"சம்மர் நல்லா ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடியே நாம எங்கேயாவது சின்ன ட்ரிப் போயிட்டு வந்துடலாம்னு அப்பாக்கிட்ட சொல்லிட்டு இருந்தேன்."

"நான் எங்கேயும் வரலை, அர்ஜுன். நீங்க போயிட்டு வாங்க!"

சுரத்தின்றி கூறிவிட்டு, அதற்கு மேல் அந்தக் கலகலப்பான சூழலில் உட்கார முடியாமல் எழுந்தவன்,



வெளியே தோட்டத்திற்குச் சென்று வெண்ணிலாவை வெறிக்கலானான்.

வானில் தெரிந்த வெண்ணிலாவிலும் அவனின் நினைவில் நீக்கமற நிறைந்திருந்தவளின் நிலா முகமே தெரிய, கண்களை அழுந்த மூடி, ஆழ மூச்செடுத்தான்.

எந்த உணவுண்டாலும் அவளின் கை மணத்தை எதிர்பார்க்கும் நாக்கு, அவளுக்கே உரிய நறுமணத்தை முகர துடிக்கும் நாசி, அவளின் குரல் கேட்க கூர் தீட்டி காத்திருக்கும் செவி, ஆசையை நிரப்பிக் கொண்டு அவளைக் காண ஏங்கும் கண்கள், அவளின் மிருதுவான சருமத்தைத் தீண்ட தவிக்கும் கரங்கள் என அவளின் ஐம்புலன்களும் ராதிகாவிற்காகவே ஏங்க... அவனது ஆறறிவும் செயலிழந்து போய் நின்றான் ரிஷிவர்மன்.

முன்பு உண்டது எதுவும் இப்பொழுது அவனுக்கு ருசிக்கவில்லை.

வசந்த காலத்தில் பச்சை பசேலென புத்தம்புது இலைகள் துளிர்ப்பதையும், புது பூக்கள் மலர்வதையும் பார்க்க எப்பொழுதும் விரும்புபவனின் கண்களுக்கு இப்பொழுது எந்த நிறமும் ரசிக்கவில்லை.

மழையின் வாசத்தை ஆழ மூச்செடுத்து அனுபவித்து முகர்பவனின் நாசி எந்த வாசத்தையும் இப்பொழுது உணரவில்லை.

எல்லாவற்றிலும் இன்னிசையை கேட்கும் அவனது செவிகள் இப்பொழுது செவிடாகிப் போனது.

ராதிகா சென்னைக்குக் கிளம்பி இரண்டு நாள் தான் ஆகிறது.

அதற்குள் இரண்டு யுகங்களாக அவளைப் பிரிந்திருப்பதைப் போன்ற இந்த உணர்வுக்குப் பெயர் காதல் இல்லையென்றால் வேறெது காதல்?

என்ன வேலை செய்தாலும், யாரிடம் பேசினாலும் அவனின் எண்ணமும் மனமும் அவளைச் சுற்றியே இருப்பதற்கு பெயர் காதல் இல்லையென்றால் வேறெது காதல்?

அவள் சென்னைக்குக் கிளம்புகிறேன் என்று சொன்ன பொழுதே போகாதே என்று தடுத்திருக்கலாம்.

அதுவும் அவள் கிளம்பும் நாள் நெருங்க நெருங்க தடுக்கத் தான் தோன்றியது. எப்படிக் கட்டுப்படுத்திக் கொண்டு இருந்தானோ அது அந்த ஆண்டவனுக்கும் அவனுக்குமே வெளிச்சம்!

ஆனால் அவனுக்கும் சில சந்தேகங்கள் தீர்க்கப்பட வேண்டியிருந்தது. அதற்கு இந்தப் பிரிவு உதவுமென நினைத்து தான் மிகவும் கஷ்டப்பட்டு அவன் வாயை மூடிக் கொண்டிருந்தது.

ஆனால் இப்பொழுது, அவள் மீது தனக்கு இருப்பது வெறும் ஈர்ப்பா இல்லை காதலா என்ற சந்தேகத்திற்கு இதற்கு மேல் தெள்ளத் தெளிவாக விடை கிடைக்க முடியுமா என்ன?

இதற்கு மேல் தாமதம் ஏன் என யோசித்தவன் அந்த யோசனை முடியுமட்டும் கூட காத்திருக்கவில்லை.

நேரே தன்னறைக்கு விரைந்தவாறே ட்ராவல் ஏஜெண்டை அழைத்து, சென்னைக்கு அடுத்து இருக்கும் விமானத்தில் பயணச் சீட்டை வாங்கினான்.

உடைகளை எடுத்து வைத்துக் கொண்டிருக்கையிலேயே அவனது அறைக் கதவு தட்டும் ஒலி கேட்டு திரும்பிப் பார்க்க, சுதாவும் ராமநாதனும் நின்றிருப்பதைக் கண்டவன், ''சாரிப்பா! இப்போ எனக்குப் பேச நேரமில்லை. சென்னைக்குக் கிளம்பறேன். அங்கே போய் சேர்ந்ததும் பேசறேன்'' என அவசரமாகச் சொல்ல, இருவரும் முகம் மலர்ந்தனர்.



''கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருக்கு, ரிஷி.'' ராமநாதன் கூற,

சுதா, ''உன்னிடம் சொல்ல என்ன, ரிஷி? ராதிகா இங்கே இருக்கும் போது எனக்கு இப்படியோ அப்படியோன்னு பல யோசனை இருந்தது என்னவோ உண்மை தான். ஆனால் அவள் எப்போ உனக்காக... உன்னை விட்டுட்டு திரும்பிப் போனாளோ... அப்பொழுதே அவள் அன்பு நிஜம்னு எனக்குப் புரிஞ்சது'' என்றார் ஆத்மார்த்தமாக.

''நீயும் என்ன நினைக்கிறேன்னு தெரியாமல், நான் என்னையே குழப்பிக்கிட்டதும் இல்லாமல் எல்லோரையும் குழப்பி விட்டதும் போதும்னு நினைச்சு தான் பேசாமல் இருந்தேன். ஆனால் எப்போ உன் மனசு இங்கேயில்லைன்னு தெரிஞ்சதோ, அதுக்குப் பிறகும் என்னால் பேசாமல் இருக்க முடியலை'' என்றவர் அதுவரை அவர் நினைத்தது, நினைத்து செயல்பட்டது என ஒன்று விடாமல் மகனிடம் ஒப்பித்து முடித்து,

''போ... போய் எங்க மருமகளைக் கூட்டிகிட்டு வா!'' என்றார் மனநிறைவுடன்.

ராதிகா சிலவற்றைச் சொல்லியிருந்தாலும், இப்பொழுது எல்லாவற்றையும் முழுமையாக கேட்டவனுக்கு அவர் மீது எந்தக் கோபமும் எழவில்லை.

அவனுடைய உணர்வுகளை முழுதும் ராதிகா ஆக்கிரமித்திருக்க, அங்கே எந்த எதிர்மறை எண்ணங்களுக்கும் இருக்க இடமுமில்லை.

''ஒன்றையும் மனசில் வைச்சுக்காதீங்கம்மா. ராதிகாவைப் பற்றி எனக்கு ரொம்ப நல்லா தெரியும். அவளும் ஒன்றும் நினைக்க மாட்டாள். அவளோட வரேன்'' என்றவாறே சுதாவையும் ராமநாதனையும் கட்டியணைத்து

ஆறுதல் கூறியவன், எல்லோரிடமும் விடைபெற்று தன் இணையுடன் இணைய கிளம்பினான்.

* * *

சோபாவில் சாய்ந்து அமர்ந்து, ஜீவனற்ற கண்களால் இலக்கின்றி எங்கேயோ வெறித்து கொண்டிருந்த ராதிகா, சென்னை வந்த இந்த மூன்று நாட்களாக செய்யும் வேலை இது ஒன்று தான்.

இலக்கின்றி வெறிப்பதும், வீட்டின் நான்கு சுவற்றுக்குள்ளேயே இலக்கின்றி நடப்பதும் மட்டுமே இப்பொழுது அவளது சக்திக்கு உட்பட்டது.

இங்கு வந்த நாள் முதலாய், தான் ஏதோ ஒரு அவசரத்தில், ஆதங்கத்தில் தவறாக முடிவெடுத்து கிளம்பி வந்து விட்டோமோவென அவள் நினைக்காத நொடியே இல்லை எனலாம்.

மீண்டும் அங்கேயே திரும்பி போய் விடலாமா என்று கூட யோசித்துவிட்டாள்.

ரிஷிக்காக திரும்ப போக எண்ணியவள், ஒவ்வொரு முறையும் அதற்கு எதிர்மறையாக யோசிப்பதும் ரிஷியை முன்னிட்டே தான்.

அவள் கண் முன்னேயே அவனை வைத்துக் கொண்டு யாரோ மாதிரி தள்ளியிருப்பதைத் தாங்க முடியாமல் வந்து விட்டது எவ்வளவு நிஜமோ அதேயளவு நிஜம் தன்னால் அவன் உடல் உபாதைக்கு ஆளாவதைக் காண சகியாததும் தான்.

யக்னேஷ் பற்றிய விவரம் மட்டும் ரிஷிவர்மனுக்கு ஐயம் திரிபற தெரிந்தால் போதும். அதன்பின் வேறு



பிரச்சனையில்லை என நினைத்திருந்தவளுக்கு, அவள் கிளம்பி வருவதற்கு முன் ரிஷி, 'ரெண்டு மாத்திரை போட்டிருக்கேன், தலையை வலிக்குது' என சொன்னதும் நடுங்கி விட்டது.

ஆக... அது தெரிந்தால் மட்டுமே அவனுக்குப் போதாது!

மனிதனுக்கு இருக்கும் இயற்கை குணம், ஒரு விஷயம் நமக்குத் தெரிந்தே தெரியாமல் இருப்பதை அப்படியே விட மனம் வராது.

ஏன் தெரியவில்லை? அப்படியென்ன ரகசியம்? ஏன்? எப்படி? எதற்கு? என்று ஆயிரத்தெட்டு கேள்விகள் மண்டையைக் குடையும்.

அதே தான் ரிஷிவர்மனின் நிலையும். ஒன்றன் பின் ஒன்றாக அவனுக்குக் கேள்விகள் அணிவகுத்த வண்ணமே தான் இருக்கப் போகிறது.

அந்தக் கேள்விகளைக் கேட்க வைக்கும் தூண்டுகோலாக அவள் அங்கு இருக்கும் வரைக்கும்!

அவளே அங்கு இல்லாதிருந்தால் எதையாவது எண்ணி தன்னைத் தானே வருத்திக் கொள்ள மாட்டானே என்று நினைத்துத் தான் பல்லைக் கடித்து, கஷ்டத்தைப் பொறுத்து அவள் அங்கிருந்து கிளம்பியது.

இப்பொழுது அவள் திரும்ப போனால், அதே பழைய நிலை தானே அவனுக்கு?

மனைவியின் நினைவின்றி இருப்பவனுக்கு எப்பொழுது அவள் நினைவு வருகிறதோ அப்பொழுது அவளைத் தேடி வரட்டும்.

ஆனால்... அவன் பழக்கப்பட்ட இடம், பொருள் என்று உடன் இருந்தால் தானே நினைவு திரும்ப வாய்ப்பு அதிகம் இருப்பதாக மருத்துவர் கூறினார்?

கண்களை மூடி பெருமூச்சுடன் யோசித்தவளுக்கு தான் மட்டுமே அவனைப் பற்றிய ஏக்கத்துடன் இருக்க, 'கிளம்புகிறேன்' என்றவளை, "இங்கேயே இரு, ராதிகா!" என்று சொல்லக் கூட அவனுக்கு வாய் வரவில்லையே என நினைத்த மாத்திரத்தில், அவளின் கண்ணோரங்களிலிருந்து சூடான கண்ணீர் ஒற்றைக் கோடாக அவள் கன்னங்களில் வழிந்தது.

அவளை, அவளின் நினைவுகளோடு கூட நிம்மதியாக இருக்க விடாமல் கதவு அதிவேகமாக தட்டப்பட, அதைச் சட்டை செய்யாது அப்படியே அமர்ந்திருந்தாள் அவள்.

மீண்டும் மீண்டும் கதவுக்கு அப்புறம் இருப்பவர் தட்டிக் கொண்டேயிருக்க, வெறுப்புடன் கதவைத் திறந்தவள் தரையோடு ஆணி அடித்தது போன்று அப்படியே சிலையாக நின்றாள்.

ஆனால் திறந்த கதவிற்கு அப்புறம் நின்றவனுக்கு அம்மாதிரி எதுவும் இல்லை போல!

ராதிகா கதவைத் திறந்த அடுத்த நொடியே புயல் போன்று உள்ளே நுழைந்தான் ரிஷிவர்மன்.

கதவைக் காலால் தள்ளி அடைத்தவன், அவளை ஒரு கையால் வளைத்து அணைத்து அவனோடு இறுக்கினான். ஒரு வேகத்தோடு அவள் முகமெங்கும் முத்தங்களால் நனைத்து, அவளது இதழ்களில் வந்து



முடித்தான்... இல்லையில்லை... மீண்டும் தொடங்கினான்.

# 20



திடுமென அங்கே, அவள் கண் முன்னே வந்த ரிஷிவர்மனைப் பார்த்த அதிர்ச்சியில் ராதிகா செயலிழந்து போனாள் என்றால், அடுத்து தொடர்ந்த அவனின் இறுகிய அணைப்பிலும் அவன் பொழிந்த முத்தங்களிலும் தன் வசம் முழுதுமே இழந்து நின்றாள்.

ஆனால், கைத்தேர்ந்த சிற்பியின் உளி பட்டு கற்சிலைக்கும் கூட உயிர் வருவது உண்டே!

அது போன்றே, ரிஷிவர்மனின் இதழ் அமுதத்தைப் பெற்ற ராதிகா எனும் சிலைக்கும் உயிர் வந்தது.

என்னவென்று யோசிக்கக் கூட முடியாமல் செயலற்று அவள் இருந்தது சிறிது நேரமே. அதன் பிறகு அங்கு கொடுக்கலும் வாங்கலும் இரு தரப்பிலிருந்த கணக்கின்றி பரிமாறிக் கொள்ளப்பட்டது.

கைக்கெட்டிய பொக்கிஷத்தை இனி விடவே மாட்டேன் என்பது போன்றே இருவரும் ஒருவரை ஒருவர் பற்றிக் கொண்டிருந்தனர்.

இருவரின் கண்களிலிருந்தும் வழிந்த கண்ணீர் அவர்களின் இதழ்களில் பட, மெல்ல மெல்ல சுய உணர்வு பெற்றவர்கள், ஒருவரின் நெற்றியில் மற்றவரின்

நெற்றி அழுந்த, அந்த நெகிழ்ச்சியும் இனிமையுமான தருணத்தை அனுபவித்தபடியே நின்றனர்.

இருவரின் மனத்திலும் ஆயிரமாயிரம் கேள்விகள், சமாதானங்கள், பதில்கள் என பலதும் இருந்தாலும் அதையெல்லாம் அப்போதைக்கு ஒத்தி வைத்தவர்கள், ஒருவரின் அருகாமையையும் நெருக்கத்தையும் மற்றவரின் மனம் முழுக்க நிரப்பிக் கொண்டு மோன நிலையில் இருந்தனர்.

எத்தனை நேரம் அப்படியே நின்ற நிலையிலேயே இருந்தனரோ?

மெல்ல தலையை உயர்த்திய ரிஷி, ராதிகாவின் முகவாயைப் பற்றி நிமிர்த்தி, பெருவிரலால் அவளது கண்ணீர் சுவடுகளை மெல்ல துடைத்தெறிந்து, அவளது மூடிய இமைகளில மென்மையாக இதழ்ப் பதிக்க, மெல்ல இமைக் கதவுகளைத் திறந்தாள் அவள்.

அவளின் விழிகள் நீரில் பளபளத்தாலும், அவை உவகையிலும் சந்தோஷத்திலும் பூரித்திருந்தது.

ராதிகாவின் கன்னத்தை ரசனையுடன் வருடியவன், அவளைத் தன் விழிகளால் பருகிக் கொண்டே, அவளை இடையோடு அணைத்தவாறே நடத்தி சென்று, சோபா வில் தானும் அமர்ந்து, அவளையும் தன் மடியிலேயே அமர வைத்துக் கொண்டான்.

மீண்டும் மீண்டும் அவனை அழைத்த அவளது சிவந்த உதடுகளைச் சிறை செய்தவன், மெல்ல நிமிர்ந்து, ''ஐ லவ் யூ, ஸ்வீட் ஹார்ட்!'' என்றான் தன் காதலையெல்லாம் குரலில் நிரப்பி.



கணவனை நெருக்கிக் கொண்டு உட்கார்ந்திருந் தவளுக்கு அப்பொழுது தான் நின்றிருந்த கண்ணீர் திரும்பவும் கண்களை நிரப்ப, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு ஒரு மூச்சு அழுது தீர்த்தாள்.

பேச்சின்றி அவளது முதுகை வருடிக் கொடுத்தவன் கண்களிலும் ஈரம்.

அழுகை ஓரளவிற்கு குறையவும், விடவே மாட்டாள் என்பது போன்று இறுக கட்டிக் கொண்டிருந்த அவனது முதுகில் சிலபல அடிகளைத் தெம்பின்றி வைத்தவள், ''இதை நீ... நீங்க சொல்லிக் கேட்கணும்னு எவ்... எவ்வளவு நாள் காத்திருந்தேன்? ஏன் சொல்லலை?'' என்று கேட்டவளின் மனமும் அதிலிருந்த பயமும், ஏக்கமும், தாபமும் அவனுக்கும் புரிய, வார்த்தைகளின்றி அவளுக்குச் சமாதானம் சொல்லலானான் அவன்.

தானே ஒருவாறு சமாதானம் ஆகி மெல்ல தலையை உயர்த்திய ராதிகா, கணவனின் ஒரு நாள் தாடியுடன் கூடிய கன்னத்தைப் புறங்கையால் மிருதுவாக வருடிய படிய, ''என்னை நினைவு வந்துடுச்சா, ரிஷி?'' என்றாள் ஆர்வமும் ஆசையுமாக.

''ம்ம். வந்துடுச்சு.''

தன் உள்ளங்கையில் இதழ்ப் பதித்தவாறே சொல்லிய வனின் முகத்தைப் பிடித்து, ''என்னவெல்லாம் நினைவு வந்தது? எல்லாமே வந்துடுச்சா? எப்போ வந்தது? ப்ளீஸ் சொல்லுங்களேன், கண்ணா'' என எல்லா வற்றையும் அறிந்து கொள்ளும் பரபரப்பில் கொஞ்ச லுடன் கேட்டாள்.

ராதிகாவின் கண்களுக்குள் ஊடுருவியவாறே, ''ஜென்ம ஜென்மமா உடன் வர்ற உறவு நம்மோடதுன்னு நினைவு வந்தது. என்னோட பாதி நீ-ன்னு நினைவு வந்தது, ரதி'' என ரிஷி உணர்ச்சியுடன் கூற,

கணவனின் குரலிலும், அவனது அழைப்பிலும், அவனது காதல் கனிந்த பார்வையிலும், அவனது தீண்டலிலும் உருகினாள் அவன் மனைவி.

''நல்லாவே வசனம் பேசறீங்க!'' என்று கிண்டல் செய்ய முயன்றவளின் குரல் அவளுக்கே ஒத்துழைக்காமல் கிசுகிசுப்பாக வெளி வந்தது.

''நானே இருந்து, இருந்து என்னோட ஃபீலிங்க்ஸை கொட்றேன். அது உனக்கு சினிமா வசனம் மாதிரி இருக்கா? உன்னை...'' அவளைப் பொய்யாக முறைத்தபடி, ராதிகாவின் கன்னக் கதுப்பை வலிக்காமல் கடித்தான் அவளது கணவன்.

சிரிப்புடன் அவனுடன் ஒன்றியவளின் காதோர கேசத்தை ஒதுக்கிவிட்டவாறே, ''ஆனால்... இந்த ஜென்மத்தில் நடந்தது மட்டும் இன்னமும் நினைவில்லை, ஸ்வீட்ஹார்ட்!'' என்று கூறியவனைப் புரியாமல் பார்த்தாள் அவள்.

என்ன சொல்ல வருகிறான்?

பின்பு, 'ஐ லவ் யூ'வும், 'ரதி' என்ற அவனின் பிரத்யேக அழைப்பும் எப்படி?

''என்ன சொல்றீங்க, ரிஷி? நினைவில்லை என்றால் எப்படி...?''



''பழசெல்லாம் நினைவு வந்தால் தான் என்னோட அன்பை ஏத்துக்குவியா? இல்லைன்னா இப்படியே என்னை அமெரிக்கா திருப்பி அனுப்பிடுவியா நீ?'' அவளது கூர் மூக்கைப் பிடித்து விளையாட்டாக ஆட்டிய ரிஷிவர்மன், அவளின் கன்னத்தில் தன் கன்னத்தை வைத்து இழைத்தபடியே கொஞ்சினான்.

அந்த விளையாட்டை உடனேயே கைவிட்டவன், ''நான் உன்னை விரும்புறதுக்கு நம்மளோட கடந்த கால வாழ்க்கை கண்டிப்பா நினைவு வரணுமா, ரதி? பழைய நினைவு இல்லாமலே நான் உன்னை புதுசா விரும்பக் கூடாதா?'' என்று ஆழ்ந்த குரலில் வினவினான்.

''ரிஷி...!'' மெல்லிய குரலில் அழைத்தவளின் விரிந்த விழிகள் காதலிலும், பெருமையிலும் பெருமிதத்திலும் குளித்திருந்தது.

''எல்லாரும் காதல் ஒரு தடவை தான் வரும்னு சொல்லுவாங்க. ஆனால் அது உண்மையில்லை. ஒவ்வொரு தடவை உன் குரலைக் கேட்கும் போதும், ஒவ்வொரு முறை உன்னைப் பார்க்கும் போதும், எனக்கு மறுபடியும்... மறுபடியும் உன் மேல் காதல் வருது, கண்ணம்மா!'' என்றவனைக் கண்களில் பெருகிய நீரோடு வாரி தன்னோடு அணைத்துக் கொண்டவள், அவன் முகமெங்கும் முத்தங்களால் நிறைத்தாள்.

ரிஷிவர்மனுக்கு தன்னுடைய நினைவு வர வேண்டும், தங்களைப் பற்றிய நினைவு வர வேண்டும், தங்களின் திருமணம் பற்றிய நினைவு வர வேண்டுமென தினமும் ஆயிரம் முறை வேண்டியவளுக்கு... இது

தாங்க முடியாத ஆச்சரியத்தையும், வார்த்தையில் வடிக்க முடியாத மகிழ்ச்சியையும் அள்ளி அள்ளித் தந்தது.

கணவன் இப்படிச் சொல்வதைக் கேட்ட பிறகு வேறென்ன வேண்டும் அவளுக்கு?

''ஐ டூ லவ் யூ, ரிஷி!'' எனக் காதலுடன் கூறியவள், அவனது கன்னத்தைத் தன் இரு கரங்களிலும் தாங்கி,

''இனி எப்பவும் இதை நீங்க சொல்லும் போது உங்களைக் கேலி செய்யவே மாட்டேன்'' என்றாள் உறுதியுடன்.

அழுத்தமும் உறுதியுமாக சொன்னவளை என்ன வென்பது போல் பார்த்தவனிடம் ராதிகா விளக்க, அதை ஆர்வமுடன் கேட்டவள், ''அடிப்பாவி! நான் அவ்வளவு ஃபீலிங்க்ஸ் உடன் சொல்லியிருந்திருக்கேன். நீ என்னைக் கேலி செய்திருக்கே?'' என அவளது கன்னத்தைப் பிடித்து கிள்ளினான்.

கிளுகிளுத்து சிரித்தபடி, ''தப்பு தான். இனி செய்ய மாட்டேன்'' என்று விட்டு,

அவன் மார்பில் வாகாக சாய்ந்து, பார்வையை மட்டும் உயர்த்தி, ''எப்போ என் மேலே திரும்ப லவ்ஸ் வந்துச்சு, ரிஷி?'' என்றாள் குறுகுறுப்புடன்.

ஒரு கணம் யோசனையில் ஆழ்ந்தவன், ''தெரியலைடா. முதலேயே வந்திருக்கணும். அப்போ தான் நாம முதன் முதலில் சந்திச்சுக்கிறோம் என்றால் உடனேயே சொல்லியிருந்திருப்பேனோ என்னவோ?'' எனவும்,



''உண்மை தான். நீங்க முதல் முறை யோசிக்கவே இல்லை. உடனேயே சொல்லிட்டீங்க'' என்றாள்.

''ம்ம். எந்த baggage-ம் இல்லாமல் இருந்திருந்தால் இந்த முறையும் முதலிலேயே சொல்லியிருந்திருப் பேனோ என்னவோ? ஆனால்... எனக்குள்ளே ஒரே குழப்பம். முதலில் வெறும் ஈர்ப்பா, இல்லை காதலா என்று தெரியலை. அப்புறம் அந்த உணர்வு... நீ மனைவி என்று வந்ததினாலா இல்லை நீ யாரா இருந்தாலும் வந்திருக்குமான்னு சந்தேகம், கேள்வி. சில கேள்விகளுக்கு விடையே கிடையாது. விடை தேட நினைப்பதும் முட்டாள்தனம் என்று நீ இங்கே வந்த பிறகு தான் எனக்குப் புரிஞ்சது'' என்றவன்,

''லைஃப் டஸ் நாட் கம் வித் காரண்டீஸ் என்று உன்னிடம் சொன்னவன் நான். அதே மாதிரி வாழ்க்கை எல்லா ரெடிமேட் பதில்களோடும் வர்றதில்லை. சிலதை அப்படியே தான் ஏற்றுக்கணும் என்றும் புரிஞ்சது'' என்றான்.

அவனது தாடையில் முத்தமிட்டு, ''நீங்களும் உங்க குழப்பமும்! இதை முதலிலேயே நீங்க சொல்லி யிருந்தால் ரெண்டு ஃப்ளைட் டிக்கெட் மிஞ்சியிருக்கும், இல்ல?'' என அவனைக் கேலி செய்தவள்,

''என் சமத்துக்குட்டி! என் பட்டுக் குட்டி! என் புஜ்ஜி குட்டி!'' என்று அவனைக் கொஞ்சியும் கொண்டாள்.

பதிலுக்கு அவனும் ஒரு இதழ் ஒற்றலை அவளது தாடையில் பதிக்க, பதிலுக்கு பதில் என ஆரம்பித்த கேலி, இனிமையும் காதலுமாக முடிவின்றி நீண்டது.

நிமிடங்கள் அர்த்தமுள்ள மௌனத்தில் கரைய, ''ஆனாலும் உன் மேலே எனக்குக் கொஞ்சமே கொஞ்சம் வருத்தம், கோபம் தான். என்னைத் தனியா விட்டுட்டு கிளம்பி வந்துட்டே, இல்ல? ராட்சசி!'' என்றான் மனத்தாங்கலுடன்.

'' 'Love is the condition in which the happiness of another person is essential to your own' - இது முன்னாடி நீங்க சொன்னது தான், ரிஷி!'' புன்னகையுடன் இயம்பியவளின் தலையில் வலிக்காமல் கொட்டு வைத்தவன்,

''நீ கிளம்பி வந்துட்டால் நான் ஹாப்பியா இருப்பேன்னு உன்னிடம் சொன்னேனா?'' எனக் கேட்க,

''நான் கிளம்பினால் நீங்க வருத்தப்படுவீங்க என்றும் சொல்லலை தானே?'' என வார்த்தையாலேயே அவனுக்கு கொட்டும் வைத்தவளிடம் அவனது அன்றைய மனநிலையை எடுத்துரைத்தான் ரிஷிவர்மன்.

''ஹ்ம்ம். நீங்களும் எனக்காகத் தான் பார்த்து இருக்கீங்க. சிலதை விட்டுக் கொடுத்தால் தான் அன்பு, ரிஷி. சில சமயங்களில் நாம் அன்பு செலுத்துறவங்களைக் கூட அதே அன்பிற்காக விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கலாம். எனக்கு மட்டும் உங்களை விட்டுட்டு வரணும்னு ஆசையா என்ன? நான் அங்கேயே இருந்தால் நம்மைப் பற்றி யோசிச்சு, யோசிச்சு உங்களுக்கு இன்னமும் மோசமானால்...? அது வேண்டாம்னு தான் கிளம்பிட்டேன்'' என்று விளக்கமளித்தவளைத் தன்னோடு இறுக்கிக் கொண்டவனுக்கு, 'அவளுக்குத் தன் மீது இப்படியொரு சுயநலமற்ற காதலா?'' என்றிருந்தது.



அதில் அவனுக்கு சிறு கர்வமும் கூட!

பழைய மாதிரி வளர்ந்து விட்டிருந்த அவனது கேசத்தில் கைகளை விட்டு அளந்தவாறே, ''பழசெல்லாம் இன்னமும் நினைவு வரலை என்று உங்களுக்கு கஷ்டமா இருக்கா, ரிஷி?'' என்றாள் மெதுவாக.

எங்கே அதற்காக அவன் இனியும் தன்னை வருத்திக் கொள்வானோ என்ற கவலை அவளுக்கு.

தன் மடியில் பூ மாலையாக சாய்ந்திருந்தவளின் கலைந்திருந்த கேசத்தை ஒதுக்கியவன், ''கொஞ்சமே கொஞ்சம் இருக்கு... ஆனால் எத்தனை பேருக்கு திரும்ப திரும்ப, ஒரே நபரோட காதலில் விழ வாய்ப்பு கிடைக்கும், சொல்லு? எனக்கு கிடைச்சு இருக்குன்னு நான் சந்தோஷப்பட்டுகிட்டேன். திரும்ப புதுசா கல்யாணமானவங்க மாதிரி வாழ்க்கையை அனுபவிக்கணும்'' என்று ரகசியமாகச் சொல்லி கண்சிமிட்டினான்.

கன்னங்களில் சிவப்பேற அவனின் இடுப்பைக் கட்டிக் கொண்டு, அவனது வயிற்றில் தன் முகத்தை மறைத்துக் கொண்டவள் மெல்ல சிரித்தாள்.

''என்ன சிரிப்பு? திரும்ப ஹனிமூன் பீரியட்க்கு போகலாம்னு சொன்னது உங்களுக்கு அவ்வளவு சிரிப்பு வருதா, மேடம்? அந்தளவிற்கு காமெடியாவா இருந்தது நம்ம ஃபர்ஸ்ட் ஹனிமூன் பீரியட்?'' தீவிரமாக கேட்பது போன்று பாவனை செய்தவனின் இடுப்பை கிள்ளியவள்,

''ப்ச்! அதெல்லாமில்லை. நல்லாத்தான் இருந்தது'' என்றாள் படு தீவிரமாக.

கண்ணோரங்கள் கள்ளச் சிரிப்பில் சுருங்க, அவளின் இதழ்களை மிருதுவாக வருடியவாறே, ''அப்படியா சொல்றே? எப்படி? விவரமா சொல்லு. கேட்போம்!'' என்றான் கிசுகிசுப்பாக.

வருடிவிட்டுக் கொண்டிருந்த அவனது பெரு விரலைக் கடித்து, அதில் முத்தமொன்றையும் வைத்தவள், ''திரும்பவும் அனுபவிக்கிற வாய்ப்பு யாருக்கு வரும்னு கேட்டீங்க இல்ல? அப்போ தெரிஞ்சுக்கோங்க'' என்று பந்தாவாக கூறி, அவனுக்கு அழகு காட்டிச் சிரித்தாள்.

''அதுவும் சரி தான். விடு. நானே தெரிஞ்சுக்கிறேன். இப்போ எதுக்கு சிரிச்சே? சொல்லு!''

''நீங்கள் ஹாஸ்பிடலில் திரும்ப எழுந்துக்கும் போது, 'ஹூ ஆர் யூ'ன்னு கேட்டதும், நீங்க மற்றவங்களைத் தான் கேட்கறீங்கன்னு நினைச்சு பதில் சொன்னதை நினைச்சுக்கிட்டேன்'' என இதழ்களில் மென்மையுடன் ராதிகா கூற, அவளைக் கண்களில் வலியுடன் ஏறிட்டான் ரிஷி.

''நான் உன்னை ரொம்ப வருத்திட்டேனா, ரதி? ரொம்ப கஷ்டப்பட்டிருப்பே இல்ல? சாரிடா.''

கமறிய குரலில் கேட்டவனின் வருத்தம் பொறுக்காமல் எழுந்து அமர்ந்தவள், ''விடுங்க, ரிஷி! நீங்க தான் எனக்கு திரும்பவும் கிடைச்சுட்டீங்களே? எதுக்கு அதைப் பற்றி பேசிட்டு? பழசையெல்லாம் மறந்துடுங்க'' என்றவள்,



உதட்டைக் கடித்து பேச்சை நிறுத்தி, ''சாரி!'' என்றாள் சின்னக் குரலில்.

''என்னைச் சொல்லிட்டு இப்போ நீ சாரி கேட்கிறே? ரெண்டு பேருமே நடந்ததை மறந்துடுவோம்'' என்றவன்,

''பழசெல்லாம் எனக்கு நினைவு வராதது எனக்குக் கஷ்டமா இல்லையான்னு என்னைக் கேட்டியே? உனக்கு இல்லையா?'' என மெல்ல வினவினான்.

''கண்டிப்பா இல்லை, ரிஷி. நிகழ் காலம் தான் முக்கியம். ஆனால், அப்பப்போ நீங்க பழைய விஷயங்களை நினைவுப்படுத்துற மாதிரி... வாசனைப் பற்றி பேசும் போதும், டி-ஷர்ட் போட்டிருந்த போதும் ரொம்ப கஷ்டமா இருந்தது என்னவோ உண்மை'' என்றவள் அவளது அன்றைய மனநிலையை அவனுக்கு விளக்க,

''சாரிம்மா. எனக்குத் தெரியாமலே உன்னை ரொம்பவே நோகடிச்சு இருக்கேன், இல்ல?'' எனத் தன் மீதே கோபம் கொண்டான்.

''ஹே! அதை விடுங்க. அதெல்லாம் போயி போச்சு! இப்போ பாருங்க... அய்யா ஜம்முனு 'RR' டி-ஷர்ட்டில் வந்து இறங்குனதும் அதெல்லாம் போயிந்தே!'' கணவனின் மனம் இலகுவாக்க அவள் சொல்ல, சங்கோஜத்துடன் புன்னகைத்தவனைக் குறுகுறுப்புடன் பார்த்தாள் ராதிகா.

என்னவென்று கேட்டவளிடம், ''நீ கிளம்பி வந்ததிலிருந்து இதையே துவைச்சு துவைச்சு போட்டுட்டு

இருக்கேன். ஏதோ நீயே என் பக்கத்தில் இருக்க மாதிரி ஃபீல்!'' எனக் கூச்ச சிரிப்போடு கூறியவனைக் காதலுடன் பார்த்து கண் நிறைய நிறைத்துக் கொண்டாள் ராதிகா.

''என்ன அப்படியொரு பார்வை? கொஞ்ச நேரம் கண்ணை மூடிக்கோ. நான் சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லிடறேன். அதுக்கு பிறகு இந்தப் பார்வைக்கான முக்கியமான வேலையைப் பார்க்கலாம்'' ஒற்றை விரலால் அவளின் முகத்தை வருடியபடியே ரிஷி உல்லாசமாக கூறவும்,

அவன் கழுத்து வளைவிலேயே தன் சிவந்த முகத்தைப் புதைத்துக் கொண்டவளின் செவிகளை அவனது சிரிப்பும், அவனது இதழ்களும் மெல்ல, மிருதுவாகத் தீண்ட, சிலிர்த்து கணவனிடம் இன்னமும் ஒன்றினாள் அவள்.

சில இனிமையான தருணங்களுக்குப் பின், ''யக்னேஷ் திரும்ப கூப்பிட்டு பேசினான்'' எனவும் சட்டென்று தலையை உயர்த்தியவளைத் திரும்ப அங்கேயே சாய்த்தவன்

''அப்படியே இருந்து கதை கேளு'' என மிரட்டிவிட்டு மீண்டும் தொடர்ந்தான்.

''நம்பிக்கை வைத்த நண்பனே இப்படியான்னு எனக்கு மனசே ஆறலை, ரதி. அதை விட உன்னையும் அதில் இழுத்ததை என்னால் ஜீரணிக்கவே முடியலை. இதைப் பற்றி அப்புறம் பேசலாம்னு போனை கட் செய்துட்டேன்.''



ரிஷிவர்மனின் மார்பை ஆறுதலாக நீவி விட்ட ராதிகா, ''விட்டுடுங்கப்பா. இப்ப தான் அவரே எல்லா உண்மையையும் சொல்லிட்டார், இல்ல? விட்டுடுங்க. நாம சந்தோஷமா திரும்ப நம்ம வாழ்க்கையை ஆரம்பிக்கும் போது எந்த எதிர்மறை எண்ணங்களோடவும் ஆரம்பிக்க வேண்டாம்'' எனச் சமாதானமாகக் கூற,

''கொஞ்ச நாள் போகட்டும், டா. நான் ஒன்றும் புத்தனில்லை. சாதாரண மனுஷன் தான். உடனே பேசினால் திரும்ப எடுக்க முடியாத வார்த்தையைச் சொல்லிடுவோம் என்று தான் அதுக்கு மேலே நான் பேசலை'' என்றவனின் மன உணர்வுகள் புரிய, அதை வலியுறுத்தாது விடுத்தாள்.

''உங்களுக்கு தலைவலி மறுபடியும் வந்ததா, புஜ்ஜி?''

''வாட்? வாட்? புஜ்ஜியா? அப்படினா?'' என்று கண்களை விரித்தவனின் கன்னங்களைக் கிள்ளி முத்தமொன்றை வைத்தவள்,

''நான் தான் முதலில் கேள்வி கேட்டேன்'' என்று செல்லமாய் சிணுங்கினாள்.

''தலைவலி எதுவும் வரலை. உன்னைப் பற்றிய நினைப்பு மட்டும் தான் இருந்தது'' என்று துரிதமாக பதில் தந்தவன், ''புஜ்ஜி-ன்னா என்ன?'' என ஆர்வமானான்.

ரகசியம் சொல்வது போல அவனது காதருகில் சென்றவள், ''புஜ்ஜின்னா... புஜ்ஜின்னா... புஜ்ஜிதான்!'' என்று கிசுகிசுக்க,

''உன்னை...'' என அவளைக் கொஞ்சலுடன் பார்த்தவன், அவளது செல்லச் சீண்டலுக்கு தண்டனையும் வழங்கினான்.

தண்டனைகள் பரிசுகளாக மாறிய இனிமையான சில நொடிகளுக்குப் பின், ''பாட்டி எப்படியிருக்காங்க?'' என்ற ரிஷியின் கேள்விக்கு குற்றம் புரிந்தவள் போன்று பார்வையைத் திருப்பிக் கொண்டவள்,

''நல்லா இருக்காங்கன்னு தான் நினைக்கிறேன்'' என்றாள் உள்ளே போய்விட்ட குரலில்.

''நினைக்கிறியா? அப்படின்னா?''

''நான் இங்கே வந்ததிலிருந்து எங்கேயும் போகலை. பாட்டியை மெஸ்ஸிலும் போய் பார்க்கலை'' என்றவள் அவனது பார்வையில்,

''நான் என்ன செய்ய? இப்படியே அழுது வடிஞ்ச முகத்தோடு போனால், பாட்டி கேட்கிற ஆயிரம் கேள்விகளுக்கும் என்னால் பதில் சொல்ல முடியாதுன்னு தான்...'' என வேகத்துடன் அவள் முடிக்கும் முன்னே, அவளை இழுத்து அணைத்தவன்,

''ஐ லவ் யூ, ரதி!'' என்றான் அவளை உள்ளும் புறமும் தன்னுள் நிறைத்துக் கொண்டு.

இந்தத் தருணத்தை அவள் எதிர்பார்த்து காத்திருந்தாலும், அது இத்தனை சீக்கிரம் தன் கை சேருமென எதிர்பார்த்திராதவளின் நெஞ்சம் மகிழ்ச்சியில் விம்மியது.

கணவனைக் கண்களால் பருகியவள், அவன் கழுத்தைப் பெரு விரலால் லேசாக கீறியபடியே, ''முக்கியமான விஷயமெல்லாம் பேசி முடிச்சாச்சா, ரிஷி?'' எனக் கண்களில் எதிர்பார்ப்புடன் வினவ,



''ம்ம். முடிஞ்சுது. மீதியெல்லாம் அப்புறம் பேசிக்கலாம். நான் இப்போ மெஸ்ஸுக்கு கிளம்பறேன். வீட்டைப் பூட்டிகிட்டு பத்திரமா இரு'' என்றான் சிரிப்பை அடக்கியவாறு.

''வாட்?''

அவளது திகைத்த முகத்தைப் பார்க்காதது போன்று பார்த்து ரசித்தவன், ''நமக்கு கல்யாணம் நடந்தது எனக்கு நினைவில்லை, இல்லையா? அதனாலே இன்னொரு தடவை நியூஜெர்ஜியில் நாம கல்யாணம் செய்துக்கலாம். அம்மா - அப்பாவும் அதை ரொம்ப விரும்புவாங்க; சந்தோஷப்படுவாங்க - அப்புறம் மற்றதெல்லாம்...'' என அவன் முடிக்கும் முன்னே,

திரும்பவும், ''வாட்?!'' என இம்முறை பலமாக அதிர்ந்தவள், ''கொன்னுடுவேன்!'' என்றபடியே அவனது தோள்களிலும் மார்பிலும் சரமாரியாக அடிகளைப் போட ஆரம்பிக்க, சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியாமல் வாய்விட்டு உல்லாசமாக சிரிக்கலானான் ரிஷி.

அவன் முகத்துக்கு நேரே கைகளை வைத்து மறைத்துக் கொண்டே, ''ஹே! ரதி! ராதிகா! பாவம் நான்! அவ்வளவு தூரத்திலிருந்து வந்திருக்கேன்!'' என அவன் சொன்ன எதற்கும் செவி சாய்க்காமல் அடிகள் தொடர்ந்த வண்ணமேயிருந்தன.

அவளிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியைக் கைவிட்டவன், அவளை அடக்கும்

முகமாக அவளது ரோஜா இதழ்களை அழுத்தத்துடன் சிறைப்பிடித்தான்.

சிறைப்பிடிக்க சென்றவனே சிறையானது அங்கே ஆச்சரியமேயில்லை. அந்த நோக்கத்துடனேயே செயல்பட்டவனுக்கு ஆச்சரியம் எங்கேயிருந்து வரப் போகிறது?

அவன் கரங்களில் துவண்டு தொய்ந்த ராதிகாவை, எந்நிலையிலும் அவன் நெஞ்சில் நீக்கமற நிறைந்தவளை, அவனது கரங்களில் ஏந்திக் கொண்டு படுக்கை அறையை நோக்கி உல்லாச நடையுடன் முன்னேறலானான் ரிஷிவர்மன்.

''ஹாப்பி?''

''படவா! என்னைப் படுத்துறதே வேலையா போச்சு உங்களுக்கு!'' புகார் சொல்லும் தொனியில் ஆரம்பிக்க நினைத்தவளின் குரலில் ஏன் அத்தனை கொஞ்சல், ஏன் அத்தனை சிணுங்கல்?

''திருடா!'' என்று கிசுகிசுப்புடன் கூறியவள், அத் திருட்டில் தனக்கும் சமபங்கு இருக்கிறது எனச் சொல்லாமல் சொல்வதுபோன்ற அவனது கன்னத்தில் அழுந்த இதழ்ப் பதித்தாள்.

பழைய நினைவுகள் மறந்திருந்தாலும், புதுப் புது கனவுகளை நனவாகச் செய்ய அங்கே இரண்டு கருத்தொருமித்த காதலர்கள் தங்களது வாழ்க்கையை ஆனந்தத்துடன் திரும்ப ஆரம்பித்தனர்.



# 21



✸ மூன்று மாதங்களுக்குப் பிறகு ✸

நியூஜெர்ஸி பிரிட்ஜ்வாட்டர் வெங்கடேஸ்வரா கோவிலில் சுபயோக சுப தினத்தில், எளிமையாக, எந்த ஆடம்பரமுமில்லாமல், குடும்பத்தினரையும் தருணையும் மட்டுமே வைத்து, ரிஷிவர்மன்-ராதிகா திருமணம் சம்பிரதாய முறைப்படி இன்னொரு முறை நல்லபடியாக நடந்தேறியது.

முதலில் தன் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிய மணமக்களின் தலையில் கை வைத்து, ''எல்லா நலனும் பெற்று பெரு வாழ்வு வாழணும்! எப்பவும் ஒருத்தருக்கு ஒருத்தர் விட்டுக் கொடுத்து, சந்தோஷமா இருங்க'' என ஆசீர்வதித்த மரகதம் பாட்டியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் தழும்பி நின்றது.

ராமநாதனையும் சுதாவையும் பற்றிக் கேட்க வேண்டியதே இல்லை.

தங்களுக்காக இன்னொரு முறை திருமணச் சடங்குகளுக்கு ஒப்புக் கொண்ட மகன், மருமகள் இருவரையும் அணைத்து உச்சி முகர்ந்தவர்கள், ''மனசு நிறைஞ்சு போய் இருக்குப்பா! இன்றைக்கு இருக்கிறதை விட இன்னமும் சந்தோஷமா, சகல சௌபாக்கியத்தோட இருக்கணும்'' என்று மனமார வாழ்த்தினார்கள்.

''எங்களுக்கும் இது சந்தோஷம் தான்மா. சந் தோஷத்தைப் பங்கு போட்டுகிட்டால் அது இரட்டிப் பாகும்னு சும்மாவா சொல்றாங்க?'' மனநிறைவுடன் சொன்ன ரிஷியை ஆமோதித்தாள் ராதிகா.

''ரிஷி சொல்றது ரொம்ப சரி, அத்தை'' என்றவளுக்கு கடந்து மூன்று மாதங்களாக தங்கள் வாழ்வில் நிகழ்ந்தவை ஒரு நிழற்படமாக கண் முன்னே வந்து போனது.

ரிஷி இப்பொழுது திரும்பவும் யக்னேஷுடன் பேச ஆரம்பித்துவிட்டிருந்தான்.

அவனுக்கும் யக்னேஷுக்கும் நடுவில் மிக லேசான மனவருத்தங்கள் இருந்தாலும் நாளடைவில் அது சரியாகிப் போகும் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு இருந்தது.

Unborn Tomorrow, and dead Yesterday, Why fret about them if Today be sweet! - என்ற ஓமர் கயாமின் வார்த்தைகளுக்கு விசிறி ஆகிப் போனான் ரிஷி வர்மன்.

வாழ்க்கை, நாளை, அடுத்த வினாடி, யாருக்கு என்ன கொண்டு வருமென யாருக்கும் தெரிந்திராத நிலையில், கோப தாபங்களும் மனவருத்தங்களும் ஏன்?

அதுவும் தன் நினைவை இழந்து, மீண்டும் கிடைக்கப் பெற்ற சொர்க்கம் என்பதனாலோ என்னவோ, இன்று... இந்த நிமிடம்... இந்த நொடி... என்று வாழ்வை, கசப்புகள் இன்றி அனுபவிக்கப் பழகிக் கொண்டான் ரிஷி.



கூடவே, மகிழ்ச்சியாகவும் நிறைவாகவும் தாங்கள் இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் யார் மனதும் தங்களால் புண்பட கூடாது என்பதில் உறுதியாக இருந்த கண வனை நினைத்து அவளுக்கு பெருமை தான்!

கணவனுடன் சந்தோஷமாக இருந்த ராதிகாவின் மனத்திலும் வேறு எதிர்மறை எண்ணங்கள் இல் லாததினால் அது அவளுக்கும் இயல்பாகவே இருந்தது.

இதற்கு நடுவில், பழைய நினைவு அவனுக்கு வரவில்லையே என கணவன் மனைவி இருவருமே வருந்துவதேயில்லை.

ஒருவருடன் ஒருவர் முன்பை விட காதலும் பரஸ்பர நம்பிக்கையும் மரியாதையும் கொண்டு வாழும் இந்த நிமிடம், மிகவும் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷம் என்று இருவருமே உணர்ந்தேயிருந்தனர்.

கடந்த மூன்று மாதங்களில் நடந்தவற்றை அசைப் போட்டுக் கொண்டிருந்த ராதிகா தன்னருகில் அர்ஜு னுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்த தருணை வாஸ் தல்யத்துடன் திரும்பி பார்த்தாள்.

நண்பர்கள் ஒன்று சேர்ந்ததில் தருணுக்கும் பெரும் பங்கு உண்டு!

ராதிகா வாய் வார்த்தையாக தருணை, 'அண்ணா!' என்று சொன்னது போய் அவனை நிஜத்திலுமே தமையனாக்கிக் கொண்டாள்.

மனைவி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்று அவளது முகத்திலிருந்தே யூகித்தறிந்த ரிஷிவர்மன்

புன்னகையுடன் அவளைப் பார்த்து அவளுக்குப் பதில் சொல்லும் விதமாக,

''நான் எப்போ தப்பா சொல்லியிருக்கேன், ராதிகா?'' என்று கேட்டு, அவளிடமிருந்து அவனது விலா எலும்பில் ஒரு இடியை வாங்கிக் கொண்டவன், ரோஜா நிற பட்டுப் புடவையில் தானே ஒரு புத்தம் புது ரோஜா மலராக காட்சியளித்தவளை ரசனையுடன் ரசித்துப் பார்த்தான்.

கரங்களில் புடவைக்கு பொருத்தமாக ரோஜா நிற வளையல்கள்; கூந்தலில் மல்லிகைச் சரம்; காதிலும் கழுத்திலும் சேலைக்கும் அவளுக்கும் பொருத்தமான எளிமையான நகைகள்.

எல்லாவற்றுக்கும் மேலாக முகத்தில் எப்பொழுதும் நிலைத்து நிற்கும் புன்னகை எனத் துடைத்து வைத்த வெள்ளி குத்து விளக்கென மினுமினுத்த மனைவியை, எப்பொழுது தனிமையில் சந்திப்போமென்ற ஏக்கமும் ஆசையும் அவனது கண்களில் தெரிய, சூழ இருந் தோரின் நினைவின்றி, ராதிகாவையே வைத்த விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் ரிஷிவர்மன்.

கணவனின் பார்வையில் லேசாக சிவந்தவள் மீண்டும் அவனது விலா எலும்பில் இடிக்க, வெளியே தெரியாமல் பெருமூச்சு விட்ட ரிஷியிடம், ''ரிஷி! எல்லாம் சரியா தான் சொல்றே! ஆனால், எனக்கு சீனியர் நீ! அதுக்குத் தக்கப்படி தான் நடந்துக்க மாட்டேங்குறே!'' என்று முறையிட்டவாறே அர்ஜுன் அலுத்துக் கொள்ள, ராதிகாவும் ஆஷாவும் ஒருவரை ஒருவர் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டனர்.



''என்ன அர்ஜுன் சொல்றீங்க? சீனியர் என்றால் எப்படி நடந்துக்கணும்?'' எனக் கேட்டாள் ஆஷா.

''நீயே சொல்லு, ஆஷா! எனக்கு முன்னே படிச்சு பட்டம் வாங்கினான்; எனக்கு முன்னே அவனுக்குத் தான் கல்யாணம் நடந்துச்சு. இப்போ அவனுக்கு முன்னே நமக்கு குழந்தைப் பிறந்தால் நல்லாவா இருக்கும்?'' மனைவியிடம் புகார் பட்டியலை நீட்டி முழக்கிய அர்ஜுன்,

''உங்க மூத்த மகனுக்கு எடுத்து சொல்லுங்க, மம்மி! அவன் தானே என்னோட ரோல் மாடல் என்று சொல்லுவீங்க? முன்னோர் செல்லும் வழி தானே பின்னோர் செல்லும்? அவன் இப்படியிருந்தால் எப்படி?'' கண்சிமிட்டி சுதாவிடம் சலுகையுடன் சிபாரிசுக்குச் செல்லவும்,

ஆஷா, ''அர்ஜுன்! உங்களை...! கோவிலில் வைச்சு...!'' எனச் சிரிப்புடன் அவனது கையை நறுக் கென்று கிள்ள, அவர்கள் இருந்த இடமே சிரிப்பில் கல கலத்தது.

''இதேதுடா வம்பா போச்சு! நல்ல விஷயம் தானே பேசினேன்! பாரு, ரிஷி!''

''சரி! சரி! பாவம்... பக்கத்து இலைக்கு பாயசம் தேடறான் என் தம்பி! ஏற்பாடு செய்துடுவோம்!'' என்று துணைக்குத் தமையனைத் தேடிய தம்பிக்கு ரிஷி அருள் பாலிக்க, இம்முறை ராதிகா, ஆஷா இருவருமே தத்தம் கணவன்மார்களைப் பொய்யாக முறைக்க முயன்று தோற்றனர்.

சிரிப்பும் சந்தோஷமுமாக அந்நாள் முழுதும் கழிய, ரிஷிவர்மன் எதிர்பார்த்திருந்த தனிமையும் வந்து சேர்ந்தது.

அவர்களது அறை கட்டிலில் சாய்ந்து படுத்திருந்த ரிஷி, ''கல்யாணம் செய்துட்டு தான் இப்படி செகண்ட் ஃபர்ஸ்ட் நைட் என்று திடமா இருந்தேன். அமெரிக்காவில் இருந்தாலும் நல்ல பையனா எங்க அம்மா - அப்பா என்னை வளர்த்து வைச்சு இருந்தாங்க. எல்லாம் நீ வந்து கெடுத்துட்டே, ரதி!'' தன் மார்பில் தாடையை வைத்து அழுத்திக் கொண்டிருந்தவளின் முக வடிவை ஒற்றை விரலால் அளந்தவாறே பொய்யாக அலுத்துக் கொண்டான்.

அவள் உதட்டில் விளையாடிக் கொண்டிருந்தவனின் விரலை நறுக்கென்று கடித்த ராதிகா, ''ஏன் சொல்ல மாட்டீங்க? உங்களைக் காயப் போட்டிருக்கணும். ச்சே... சான்ஸ்'ஐ மிஸ் செய்துட்டேன்'' என்று விட்டு,

''இப்பவும் ஒன்றும் கெட்டுப்போகலை, கண்ணா. திரும்பவும் சென்னை போய் அங்கே இருக்க மற்ற பிரெண்ட்ஸுக்காக இன்னொரு கல்யாணம் செய்துட்டே மீதியை வைச்சுக்கலாம்'' என்று திரும்பிப் படுக்க,

''ஹைய்யயோ! நான் சும்மா சொன்னேன், ரதி! உனக்குத் தெரியாதா, செல்லம்? என் கண்ணில்லை, என் மூக்கில்லை?'' என்று குழைந்தபடியே, அவன் கொஞ்சிய அவளின் ஒவ்வொரு முக அங்கங்களிலும் இதழை ஒற்றி ஒற்றியெடுக்க,



''இல்லை! இது என் கண்ணு; என் மூக்கு!'' சிரிப்பை அடக்கியபடி அதிகாரமாக சொல்லியவள், தலையணையை இறுக அணைத்து விழிகளை மூடிக் கொண்டாள்.

''ம்ஹூம்! இது என் கண்ணு; இது என் மூக்கு; என் வாய்! எனக்குப் போக தான் உனக்கு!'' என அவள் கன்னத்தில் தன் கன்னத்தை வைத்து இழைந்தபடி ரிஷிவர்மன் மேலும் அவளுடன் இழைய, சிறிது நேரம் பிகு செய்தவள் கணவனது கரம் எல்லை மீறவும் தாக்குப் பிடிக்க முடியாமல் அவன் இழுத்த இழுப்புக்கு வந்தாள்.

அவனிடம் கிறங்கி மயங்கியவள், ''அது! அந்த பயம் இருக்கணும்!'' என்று மிரட்டலாகச் சொல்ல முயல, அவளின் குரல் கொஞ்சலாக வெளி வந்தது.

''ம்ம். ரொம்ப பயமா இருக்கு, பேபி! எங்கே... என்னை இறுக்கி பிடிச்சிக்கோ, பார்க்கலாம்!'' கிசுகிசுப்பாய் சொல்லி விட்டு, அவளை தன்னோடு இறுக்கி, அவளின் உச்சியில் தன் தலையை அழுத்திக் கொண்டான் ரிஷிவர்மன்.

சிரிப்புடன் காற்று கூட நுழைய முடியாத அளவிற்கு கணவனை இறுக்கிக் கொண்டவள், ''ரொம்ப தான் பயந்த பிள்ளை!'' என அவனை விட ரகசியக் குரலில் கொஞ்சி, அவள் கன்னத்தை ரிஷியின் மார்பில் வைத்து மெல்ல தேய்த்தாள்.

''உல்லாசமாகச் சிரித்தவாறே, ''பின்னே?'' என்றவன்,

''உனக்கு நான் வெட்டிங் கிஃப்ட் கொடுத்தேன். எனக்கு ஒரு பரிசும் இல்லையாடா?'' மனைவிக்குச் சந்தோஷமும் ஆனந்த அதிர்ச்சியும் அளிப்பதற்காக மரகதம் பாட்டியை இங்கே தருவித்ததைச் சுட்டிக் காட்டி கேட்க,

மரகதம் பாட்டியைப் பார்த்த பொழுது அகமகிழ்ந்து கணவனை எப்படிக் கவனித்துக் கொண்டாளோ அதை கவனிப்பைத் திரும்பவும் அவனுக்குப் பலமடங்காக திருப்பிக் கொடுத்தாள் அவனது மனைவி.

அவளது அன்பிலும் கவனிப்பிலும் திக்குமுக்காடிப் போனவன் அவளையும் திக்குமுக்காடச் செய்தான்.

மூச்சு வாங்க சற்றே விலகியவர்கள், கண்களாலும் விரல்களாலும் தங்களது வருடலைக் காதலுடன் மெல்ல தொடர்ந்த வண்ணமிருந்தனர்.

பெருமிதத்துடன் அவனைப் பார்த்தவள் ''சரியான கல்லுள்ளி மங்கன் நீங்க! எனக்குத் தெரியாமலே எல்லா வேலையும் செய்துட்டு...! திருடா! கள்ளா!'' என்று செல்லமாக கொஞ்சி, அவன் கன்னத்தைக் கிள்ளி அவள் உதட்டில் பொருத்திக் கொண்டாள்.

அவளது நெற்றியில் முட்டியவன், 'இதெல்லாம் செல்லாது, செல்லாது! இதெல்லாம் தினமும் கிடைப்பது தான். எனக்கு ஸ்பெஷல் கிஃப்ட் வேண்டுமாக்கும்'' என,

''அப்போ இது ஸ்பெஷல் இல்லையா?'' என்று சண்டைக்கு வந்தாள் மனைவி.



''டாபிக்கை டைவர்ட் செய்யாதே. முதலில் கிஃப்ட் என்னன்னு சொல்லு!''

''சரியான விடாக்கொண்டான்! நானும் ஒரு கிஃப்ட் வைச்சு இருக்கேன்! அதை கேட்டவுடன் உங்க கிஃப்ட்-ஐ பார்த்துட்டு நான் சந்தோஷப்பட்டதை விட, நீங்க இன்னமும் சந்தோஷப்படுவீங்க, தெரியுமா?'' என்று அவனின் கழுத்தில் தன் கட்டை விரலால் லேசாக கீறியபடி அமர்த்தலாகக் கூறியவளின் குரல் ரகசியமாக வெளி வந்தது.

''சஸ்பென்ஸ் தாங்க முடியலையே, ரதி. எங்கே காட்டுப் பார்ப்போம்?''

''அதை இப்போ காட்ட முடியாதாக்கும்...''

''ம்ம். இப்போ காட்ட முடியாதளவிற்கு அப்படி என்ன பரிசோ?'' கண்களில் விஷமச் சிரிப்புடனும் ஆர்வமுடனும் கேட்டவனைச் சந்தேகமாகப் பார்த்தவள்,

''சரியான திருடன்டா நீ! உங்களுக்கு தெரியும் தானே?'' என்று உதட்டைப் பிதுக்கிச் சிணுங்கினாள்.

முகத்தை அப்பாவியாக வைத்துக் கொண்ட ரிஷி வர்மன், ''இல்லையே, பேபி! உன்னோட சர்ப்ரைஸ் எனக்கு எப்படிடா தெரியும்?'' என்றான்.

''நிஜமா தெரியாது?'' என்று பலமுறை கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டவள்,

மெல்ல அவனை மேலும் நெருங்கி, ''இன்னமும் ஒரு ஏழெட்டு மாசம் கழிச்சு உங்களுக்கே உங்களுக்கான

என்னோட பரிசு உங்க கையில் தவழும்'' என்று அவனது காதுக்குள் பரம ரகசியமாகச் சொல்லிவிட்டு, அவனது கழுத்து வளைவிலேயே தன் சிவந்த முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

அவள் சொன்ன விஷயத்தைக் கேட்டு துள்ளிக் குதித்தவன், ''செல்லக்குட்ட்ட்ட்டி!'' என்று கூவி அவளது இரண்டு கன்னத்திலும் அழுந்த முத்தமிட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, ''நான் எவ்வளவு சந்தோஷமா இருக்கேன் தெரியுமா?'' என உல்லாசமாய் வினவினான்.

''அதான் தெரியுதே! கன்னத்தில் குழியே விழுந் துடுச்சு.''

''விழும்! விழும்!'' என்று அவளது கன்னத்தை மிருதுவாக வருடிவிட்டவாறே, ''அர்ஜுனிடம் சொல் லணும். அவனோட லைன் கிளியர்னு!'' எனக் கண் சிமிட்டி சிரித்தவன், அன்று நடந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களைப் பற்றி சிறிது நேரம் பேசிக் கொண் டிருந்தான்.

''நாம மறுபடியும் சேர்ந்ததில் ரொம்ப ரொம்ப சந் தோஷப்பட்டது தருண் தான், ரதி! இன்றைக்கு அவன் கண்ணே கலங்கிடுச்சு!'' எனத் தோழனைப் பற்றி பெருமிதமாய் சொன்னான்.

''ம். கஷ்டப்படும் பொழுது தள்ளியிருந்து வேடிக்கைப் பார்க்காமல் தன்னால் முடிஞ்சதை செய்து ஆதரவா



தருண் அண்ணா நடந்துக்கிட்டார், ரிஷி. ரொம்ப நல்ல மாதிரி.''

''அண்ணனும், தங்கச்சியும் மாறி மாறி தாஜா செய்து, மறுபடியும் யக்னேஷ்கிட்டே என்னைப் பேச வைச்சுட்டீங்க. சரியான ஆளுங்க!'' என்று எழுந்து அவள் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டு அவளது மணி வயிற்றில் முத்தமொன்றைக் கொடுத் தான்.

அவனது நெற்றி கேசத்தைக் கோதிக் கொடுத்த ராதிகா, ''யக்னேஷ் செய்தது தப்பு தான். இல்லைன்னு சொல் லலை. பங்கு பணத்துடன் அந்த ஒரு கோடியையும் திருப்பி கொடுத்ததோடு, எத்தனை முறை மன்னிப்பு கேட்டுட்டார்? அவரே அதை உணர்ந்த பிறகு அவரைத் தண்டிக்கிறதில் எந்த நியாயமுமில்லை, ரிஷி. அதோட, நீங்க மட்டும் என்ன அவருடன் பேசாமல் சந்தோஷமாவா இருந்தீங்க? 'கொஞ்ச காலம் அம்மா - அப்பா கூட கோபத்தில் இருந்தேன்; ஒரு கட்டத்தில் உன்னை மறந்தேன்; அப்புறம் யக்னேஷுடன் பேசற தில்லை'ன்னு புலம்பிட்டு தானே இருந்தீங்க? அப்புறம் என்ன?'' என்று வினவினாள்.

அவள் சொல்வதை ஆமோதிப்பதாய்த் தலை யசைத்து ஏற்றுக்கொண்டவன், ''எல்லா நேரத்திலும் நீ தான் எனக்கு எப்பொழுதும் உறுதுணையாய் இருந் திருக்கே, ரதி! கோபம், மறதி, சண்டை என்று எதுவுமே என்னில் குடிபுகுந்து சந்தோஷத்தைக் கெடுக்காமல்... நீ

என் மனசில் நீக்கமற நிறைஞ்சு அன்பை மட்டுமே கொடுக்க வைக்கிறாய். ஐ லவ் யு! ஐ லவ் யூ, ரதிம்மா!'' என்று அவளது மடியிலேயே முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

''ஐ லவ் யூ, ரிஷி!'' என்றவளின் மனதை உவகை நிறைத்தது.

ராதிகா-ரிஷி இருவரும் ஒருவர் மீது மற்றொருவர் வைத்திருக்கும் நேசம் குறையாமல் அவர்கள் வாழ்வில் என்றும், என்றென்றும் அன்பும், ஆனந்தமும் நிலைத் திருக்கும் என்பதில் ஐயமில்லை!